துள்ளுவதோ
இளமை
புஷ்பா தங்கதுரை

துள்ளுவதோ இளமை

புஷ்பா தங்கதுரை

பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.
தொலைபேசி : 25267543

தமிழ்நேசன் மின்நூலகம்

www.tamilnesan1981.blogspot.in

என்னுரை

முப்பது நாற்பது வருடங்களுக்கு முன் பெர்ரி மேஸன் நாவல்கள் பிரசித்தம்.

அவற்றை நிறைய பேர் வாங்கி விழுந்து விழுந்து படிப்பார்கள். அந்த நாட்களில் நல்ல ஆங்கில அறிவு உள்ளவர்கள் அதிகம்.

அந்த நாவல்களை நான் தொட்டது இல்லை. துப்பறியும் கதைகள் மீது அத்தனை வெறுப்பு.

. . . போதும்! என்ன எழுதுகிறார்கள்! புதிர் போடுவது போல் ஒரு கொலை முடிச்சுப் போட வேண்டியது! பிறகு அதை சாமர்த்தியமாக அவிழ்க்க வேண்டியது. இதெல்லாம் கதைகளா? என்று நினைத்துப் பேசியவன் நான்.

ஆனால் பிற்காலத்தில் நானும் இந்த எழுத்துக்களை எழுதப் போகிறேன் என்று தெரியாது.

1960களில் பிரபலமாக இருந்த BLITZ பத்திரிகையைப் படிக்க நேர்ந்தது.

அதில் கைதிகளின் கதைகள் எழுதப்பட்டு வந்தன. அவைகளைப் படித்த போது ஒரே விறுவிறுப்பும் சஸ்பென்ஸும் இருப்பதைப் பார்த்தேன்.

நானும் இதுபோல் உண்மைக் கதைகள் எழுத விரும்பினேன். அதற்காக சிறைக்குள் சென்று கைதிகளைப் பேட்டி கண்டு எழுதினேன்.

அப்படி எழுதும் போது கதையின் சஸ்பென்ஸ் வைத்து கடைசி வரை சுவாரஸ்யமாக எழுதினேன்.

அப்போது கேட்ட ஒரு ஹைதராபாத் கொலையை சற்று நீட்டித்துப் பல வாரங்கள் எழுத நேர்ந்தது.

இந்தக் கதை வாரா வாரம் வந்தது. வாசகரிடையே நல்ல எதிர்பார்ப்பைக் கொடுத்தது.

இந்த அனுபவமே மேலும் இதைப் போல் கொலைக் கதைகளை நீள நாவல்களாக எழுத வைத்தது.

இந்த விதம்தான் நானும் சஸ்பென்ஸ் த்ரில்லர் கதை எழுதும் நிலைக்கு வந்தேன்.

இது எனக்கு நல்ல பெயரைக் கொடுத்ததால், இதிலே நிறையவே எழுத நேரிட்டது.

ஆயிரம் நாவல்களுக்கு மேல் எழுதி இருப்பேன்.

இதில் இன்னொரு விஷயம் சொல்ல வேண்டும்.

சமூகக் கதைகள் எடுத்துக் கொண்டால் அதிலும் சஸ்பென்ஸ் என்பது முக்கியம்.

“வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு சாரதா அந்த நள்ளிரவில் வெளியே கிளம்பினாள்”

என்று ஆரம்பித்தும், சாரதா எங்கே போகிறாள்? என்ன ஆகப் போகிறாள்? ஏன் சண்டை போட்டாள்? என்பது எல்லாமே சஸ்பென்ஸ்தான்!

இந்த சஸ்பென்ஸை விரித்துவிட்டு அதற்கு விடை கொடுப்பதுதான் சமூகக் கதை.

எனவே, ஒரு சமூகக் கதையிலும், க்ரைம் நாவலைப் போல் ஒரு சஸ்பென்ஸ்தான் உருவாக்கப்படுகிறது. அதற்கான விடையும் கொடுக்கப்படுகிறது என்பதுதான் உண்மை.

ஒரு விஷயம் கேளுங்கள்! மேல் நாட்டில் இந்த க்ரைம் த்ரில்லர்கள் பிரபலமாகி நிறைய மக்களை

கவர்ந்துவிடவே, இலக்கியவாதிகள் தங்கள் புருவத்தைச் சுளித்தார்கள்.

“இதெல்லாம் ஒரு இலக்கியமா?” என்று கேட்டார்கள். ஆனால் இந்தத் த்ரில்லர்கள் கொடிகட்டிப் பறக்க ஆரம்பிக்கவே இலக்கியவாதிகள் மெள்ள மெள்ளத் திரும்ப ஆரம்பித்தார்கள்.

த்ரில்லர் கதைகளும் இலக்கியமே என்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

இன்னும் ஒரு விஷயம்! நம் நாட்டில் அந்தக் காலத்திலேயே இலக்கியம் என்பது என்ன என்பதை விளக்கி எழுதிவிட்டார்கள்.

காதல் தொடங்கி ஒன்பது ரசங்கள் அதில் இருக்க வேண்டும்!

அந்த ரசங்களில் ‘பயம்’ ஒன்று! படித்தல் ‘பயம்’ என்னும் சுவையைத் தருகிறது. ஆக Ghost Stories, Thrillers எல்லாமே இதில் அடங்கிவிட்டன.

எனவே இதில் அயல் நாட்டுக்காரர்களின் இலக்கியம் பற்றிய விளக்க உரைகளே நமக்குத் தேவையில்லை.

இந்த ‘துள்ளுவதோ இளமை’ என்ற கதை ராணியில் தொடராக வந்து நல்ல பெயர் பெற்றது.

பிரசத்தி பெற்ற ‘பூம்புகார்’ பதிப்பகத்தார் இதைப் பிரசுரித்திருக்கிறார்கள்.

இந்தப் புத்தகம் நல்ல ரசனையைக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

– **புஷ்பா தங்கதுரை.**

பதிப்புரை

திரு. புஷ்பா தங்கதுரை அவர்களைப்பற்றி நாங்கள் சொல்லி, கண்டுகொள்ள வேண்டியதில்லை. பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை.

புஷ்பா தங்கதுரை என்றாலே தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் எல்லோரும் உற்சாக மிகுதியால் அவரது நாவலை கரங்களில் அள்ளிக் கொள்வார்கள்.

இனியதொரு துள்ளல்நடை, புத்தம் புதிய பாணி, கற்பனை வளம் செறிந்த கதை. இவையே புஷ்பா தங்கதுரை.

பொதுவாக புஷ்பா தங்கதுரை கதை என்றால் ஆபாசம் என்பார்கள், விவரமறியாதவர்கள்.

"ஆபாசம், ஆபாசம்" என்று கூச்சலிடுபவர்களுக்கு "எது ஆபாசம்" என்றதொரு வினா அவர்களுக்கே தெரியாது.

அவரவர் மனப்பாங்கைப் பொறுத்துதான் ஆபாசமும், ஆபாசமில்லாததும். கோவில்களிலும், தேர்களிலும், மிதுன சிற்பங்கள் ஏன் நம் முன்னோர்கள் செதுக்கி வைத்தனர். ஆண், பெண் உறவை ஆபாசமென்று கருதினால் புனிதமான கோவில்களிலும், தேர்களிலும் செதுக்கி வைத்தது ஏன்? ஆண், பெண் உறவே ஆபாசம் என்றாகிவிட்டால், நீங்களுமில்லை, யாவருமில்லை. ஆனால் அவை எல்லாம் ஒரு வரம்புக்குள், கட்டுக்குள் இருக்கப்பட வேண்டியவை. இருக்கப்பட வேண்டும். ஆபாசம் விளம்பரமானால் விபசாரமாகிவிடும்.

புஷ்பா தங்கதுரை அவர்களுக்கு, கதை என்றால் துள்ளும் நடையும், துவளும் இளமையும், அங்கங்கே மயக்க வைக்கும் வர்ணனைகளும் அமைய எழுதுவது கை வந்த கலை. மின்மினிக் காடுகளில் பூத்த நட்சத்திரக் கூட்டங்களை ஒன்றாகக் கூட்டி நம் கரங்களில் அள்ளித் தந்துவிடுவார். வான் நிலவையும் அழைத்துவந்து நம்முன் நிறுத்துவார்.

அவர் நாவல்களை வாசிக்கும்போது, நம் மனம் சுருங்கியும்விடாது, தூங்கியும்விடாது, கண்ணீர்விடாது, கவலைப்படாது. காரணம் மனம் உற்சாகத்தில் குதூகலிக்கும். சந்தோஷத்தில் பொங்கிவிடும். மகிழ்ச்சியில் மனம் நிறைந்துவிடும். நாவலை முடிக்கும்போது புதுமனிதனாய் உவகையில் உயிர்த்தெழுவோம்.

காதல் என்ற போர்வையில் காமவிகாரத்தை எழுதும் இன்றைய கால கட்டத்தில், மனித சமுதாயத்தில் இன்னமும் ஜடமாகவும், முடமாகவும் இருக்கின்ற விகாரங்களை, விவஸ்தைகெட்ட விஸ்வரூபங்களை அளந்து காட்டும் அடையாளச் சீட்டாக புஷ்பா தங்கதுரை இருக்கிறார்.

அவரது நாவல்களைத் தொடர்ந்து வெளியிடுவதில் பெருமையடைகின்றோம். வாசகர்கள் இந்நூலை வரவேற்பார்கள் என்று நம்புகின்றோம்.

– **பூம்புகார் பதிப்பகம்.**

பொருளடக்கம்

1. சிறையில் ஒரு சிட்டு 11
2. துள்ளுவதோ இளமை 20
3. செதுக்காத சிலை 28
4. சந்தேகக் கோடு 38
5. தடயம் சிக்கியது 47
6. பெண்மை சொன்ன உண்மை 57
7. அதோ. . . என்னவோ தெரியுது! 67
8. காதலிக்கத் தெரியாத காளை! 78
9. மயக்கும் மங்கைகள்! 86
10. 'மர்ம' சாவிக்கொத்து 94
11. என்ன அழகு. . . எத்தனை அழகு? 103
12. புவனா ஒரு கேள்விக்குறி! 113
13. புரியாத புதிர்! 121
14. பார்த்தாலும் பார்க்காத போலீஸ் 129
15. மீண்டும் ஆபத்து 138
16. நிழல் மனிதன்! 146
17. காணாமல் போன அழகி! 154
18. மீண்டும் அதிர்ச்சி 162
19. வந்தது வினை! 172

20. ரகசிய டைரி! 181

21. நிழல் மனிதர்கள்! 190

22. அதிரடித் தாக்குதல்! 199

23. முடிச்சு அவிழ்ந்தது! 207

24. அதிர்ச்சி மேல் அதிர்ச்சி 214

25. அவசர அழைப்பு! 222

26. மயங்கினாள் மாது! 231

27. காதல் விபத்து! 240

28. திகில் காட்சி! 249

29. துப்பாக்கி பேசியது! 257

30. போலீஸ் முற்றுகை! 265

1

சிறையில் ஒரு சிட்டு

ஒன்பதாவது மாடி 'கீர்த்தி' அபார்ட்மெண்ட்சில் 'மேஜர் மாணிக் இண்டர்நேஷனல் டிடெக்டிவ் ஏஜென்சிஸ்' என்று 'பெத்த' பெயர் நெற்றியில் சூட்டிக்கொண்டு, ஆறாவது அவென்யுவில் நடுநாயகமாகத் திகழ்கிறது.

ஏஜென்சியின் 'டாப்' மனிதர் மேஜர் மாணிக். அவர் பற்றி சிறுகுறிப்பு:

மேஜர் மாணிக்க வாசகம் முழுநீளப் பெயருடன் இரண்டாவது உலகப் போரைச் சந்தித்தவர். பர்மா போர் முனையில் வேவு பார்த்தவர். அந்த சாமர்த்தியங்களைக் கொண்டு, இங்கே 'டிடெக்டிவ் ஏஜென்சி' நடத்துகிறார்.

மாணிக்கின் தோற்றம் பற்றி இரண்டு வரி.

வால்ட் டிஸ்னியில் 'டோனால்டு டக்'கின் தோற்றம். அதே குட்டை. கையில் அதே கைத்தடி. அதே மூக்குக் கண்ணாடி.

வயது எழுபது ஆனாலும், சிங்கார ரசனை தேயாது இருப்பவர்.

அவரது கம்பெனி அறைக்குள் நம் கதை நுழைகிறது.

காலையில் பதினொரு மணிக்கு ஒரு போனைக் கவனித்துவிட்டு, கொஞ்ச நேரம் முனகிக்கொண்டிருந்தார்.

தன் வசனம் சொல்வது அவரது பொழுதுபோக்கு. தெரியாதவர்களுக்கு மந்திரம் சொல்வதுபோல இருக்கும்.

போனை வைத்து, தன் வசனம் கொஞ்சம் பேசி, பிறகு மணியைத் 'தட் தட்' என்று அடித்து, "வினோத்!" என்றார்.

"எஸ் சார்!" என்று சுருட்டி அடித்து வினோத் உள்ளே நுழைய. . .

மேஜர் மாணிக், கண்ணை மூடி, 'டி. எம்.' தியானத்தில் இருப்பதுபோல் இருந்து, கை விரல்களைப் பின்னிக் கொண்டிருந்தார்.

கைத்தடி மேசை மேல் இருப்பதைப் பார்த்ததும் அவனுக்குப் புரிந்துவிட்டது.

கேஸ் ஒன்று முளைத்திருக்கிறது.

"பேராசிரியர் நமசிவாயம் தெரியுமா?" என்றார், திடீரென்று, கண்ணைத் திறக்காமலே!

வினோத் தலையைப் பெரிய ஆட்டாக ஆட்டினான். தெரியாவிட்டாலும் அப்படித்தான் ஆட்டுவான்!

"நமசிவாயம் இறந்தாச்சு! அவர் மனைவி லெட்சுமி பிரியா இருக்கிறாங்க. அவங்க வீட்டிலே என்னவோ நடந்திருக்கு. கொஞ்சம் போய் விசாரி!"

மாணிக், செய்தி வாசிப்பதை முடித்தார்.

"புரிஞ்சுதா?"

"புரிஞ்சுது!"

"எனக்கு சீக்கிரம் ரிப்போர்ட் வேணும்! பிரச்சினையைச் சீக்கிரம் முடிச்சு, அவங்க முகத்திலே புன்னகை வரவழைக்கணும். ஓ. கே.?"

தடியை எடுத்தார். தலையைச் சுற்றி ஒரு சுழற்று சுழற்றினார்.

ஆபீஸ் கதவைத் திறந்து, அப்படியே மறைந்து போனார்.

அடியும் இல்லா நுனியும் இல்லா வழக்கில் மாட்டி வைப்பாரே என்று மனசில் மட்டும் முணுமுணுத்து, தலைகுனிந்து, அடுத்த அறைக்கு வினோத் வந்தான்.

தாரா 'களுக்' என்று சிரித்தாள். ஆபீசின் பி. ஏ.

"இந்தா தாரா! எப்போ பார்த்தாலும் இளிக்காதே! ஆமாம். . ." என்று கோபத்தோடு கூறி, தொப்பென்று எதிர் இருக்கையில் விழுந்தான்.

"பிரமாத இடத்துக்குப் போகப் போறீங்க! பிரமாத வரவேற்பு கிடைக்கும்!" என்று சொல்லி, கம்ப்யூட்டர் பிரிண்டரில் வெளியே தலைநீட்டி ஊசலாடும் அந்தக் காகிதத்தை உருவி, அவன் பக்கம் நீட்டினாள்.

வினோத் அதை வாங்கினான்.

அவசரப் பார்வை பார்த்தான்.

"போங்க! லெட்சுமிபிரியா உங்களை வரவேற்பாங்க!" என்றாள், குறும்புப் புன்னகையில்.

வினோத்துக்கு இன்னும் கோபம். பெரிய பெரிய இடங்கள் என்றால் ஒரு அலர்ஜி. எல்லாம் தோரணையாக இருக்கும். அவனைத் துச்சமாகப் பார்ப்பார்கள். மாணிக் சொல்வதைப் பார்த்தால், லெட்சுமிபிரியா ஒரு 'கினா மூனா வினா'வாக இருக்க வேண்டும்.

ஒரு பெருமூச்சு விட்டான்.

"உம். . . நமக்கு கேஸ் வேணும்ன்னா இப்படியா ஒரு உப்புச் சப்பு இல்லாததா கிடைக்கணும்?"

தாரா தந்த முகவரிப் பேப்பரை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

❖ ❖ ❖

ஆனந்த் எக்ஸ்டென்ஷன், சென்னை நகரத்தின் தெற்கு விளிம்பில் இருந்தது. வினோத் போனபோது மாலை நேரம். ஊதா மேகம் ஒன்று ராட்சசப் பருமனில் மேல்வானத்தில் படுத்திருந்தது.

மனசில் உற்சாகமே எழவில்லை. அத்துவானத்தில் திடீர் திடீர் போர்டுகளுடன் முளைக்கும் ஒற்றைத்தெரு எக்ஸ்டென்ஷன்கள் அவை.

மத்திய தரக் குடும்பங்கள். வயிற்றை - வாயைக் கட்டி ஒரு தனி நிழலுக்காக எல்லாம் செலவழித்து, பிறகு அந்தச் செலவுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திண்டாடும் பரிதாப வளர்ச்சிகள் அவை.

ஏதோ பங்களாவில் நுழையலாம் என்று நினைத்தால் ஆயிரம் சதுர அடி வீட்டில் நுழைய வேண்டி வந்தது.

கட்டடம் தெரு ஓரம் இருந்தது. பெரிய காம்பவுண்ட் அதை வளைத்தது.

மணிகூட அடிக்கத் தேவையில்லை. கதவு திறந் திருந்தது. வாயிலுக்குப் போய், "சார். . . சார். . . !" என்றான்.

நேரம் 'டிக்' அடித்து ஓட, ஒரு பருத்த அம்மாள் உள்ளிருந்து தோன்றினாள். "என்ன வேணும்?" என்று கைகளை டவலில் துடைத்துக்கொண்டு கேட்டாள்.

'உம். . . இந்த வீட்டை யாராவது தூக்கிட்டுப் போயிட்டாலும் பெரிய கேஸ் ஆயிராது. என்ன விஷயம் சொல்லப் போறாங்களோ' என்று வினோத் மனதில் எண்ணங்கள் ஓட. . .

"மேஜர் மாணிக் அனுப்பிச்சார்" என்றான்.

"அப்படின்னா?" என்று சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டு, "உட்காருங்க" என்றாள்.

உட்கார்ந்தான்.

கீழே சிவப்பு 'மொசைக்' தரை. சுவரில் குட்டையும் நெட்டையுமாய் காலண்டர்கள்! தலைப்பாகை கட்டி, மீசை வைத்திருந்த கனத்த ஆசாமி, ஒரு கண்ணாடி பிரேமுக்குள் அடங்கிக் கிடந்தார். இவர்தான் பேராசிரியர் நமசிவாயமாக இருக்க வேண்டும். எல்லாம் பழைய பெருங்காயந்தான்.

அந்த அம்மாள் உள்ளே போய், யாரிடமோ பேசிவிட்டு, இன்னும் அதிக சாவதானமாக வந்தாள்.

"காப்பி சாப்பிடறீங்களா?" என்று முதல் குசலம் விசாரித்தாள்.

அவனுக்கு எரிச்சல் சீறிக்கொண்டு வந்தது.

"எதுவும் வேணாம்மா! விஷயத்தைச் சீக்கிரம் சொல்லுங்க."

"மன்னிக்கணும். உங்களுக்கு அவசரம் இருக்கு மின்னு தெரியாது. என் பொண்ணுதான் விஷயத்தைச் சொல்லணும்."

"அவங்களைக் கூப்பிடுங்க."

"அவங்க இங்கே இல்லை."

"எங்கே இருக்காங்க?"

"ஜெயில்லே!"

"ஜெயிலா?"

"ஆமாங்க! ஜெயில்லேதான். இன்னும் ரெண்டு நாளிலே திரும்புவாங்க. வெள்ளிக்கிழமை வந்தா பார்க்கலாம்."

"ஏன் ஜெயில்லே இருக்காங்க?"

"கேஸ் ஒண்ணுங்க. . ."

"என்ன கேஸ்?"

"எனக்குச் சொல்லத் தெரியாதுங்க! நான் பழைய காலத்து மனுசி. இருங்க, ரதிபிரியாவைக் கூப்பிடறேன்!"

எழுந்து மாடிப் படிக்கட்டின் கீழே நின்று அண்ணாந்து, "ரதீ. . ." என்றாள். பெயரில் 'தீ'யை வளர்த்துக் கொண்டு.

"வரேன்!" என்ற தூரத்துக் குரல் கேட்டது.

சில விநாடிகளில் படிகளில் காலடிகள் கேட்டன.

அவை வரும் துள்ளலில் இளமை ஜலதரங்கம் அடித்தது.

வினோத், திரும்பிப் பார்க்க, ஒரு அழகு தேவதை அங்கே பிரசன்னமானாள்.

படிகளில் நர்த்தனமாக இறங்கி, அந்தப் பதினைந்து அல்லது பதினாறு வயதுப் பெண் சொகுசாக வந்தாள்.

கடைசிப் படியின் கைப்பிடிக் குமிழைப் பிடித்து, ஒரு தட்டாமாலை சுற்றிவிட்டு, கூடத்துத் தரையில் மிருதுவாக இறங்கினாள்.

மினி டாப்சும் - ஜீன்சும் அணிந்து, அபார அமைப்பைக் காட்டினாள்.

வினோத்துக்குச் சில மூச்சுகள் தவறிப்போயின.

கண்களில் சுறுசுறு என்று ஒளி. கன்னங்களில் இளசான சிவப்பு. நிழல் இழைகள் போல் பிடரி. வளைந்த வட்டத்தில் இரண்டு கச்சித மார்புகள்! கழுத்தையும் கையையும் வெறுமையாக்கி, தன் சொந்த எழிலையே நம்புபவள் போல் துடிப்புடன் வந்து உட்கார்ந்தாள்.

"இவள் என் ரெண்டாவது பெண் ரதிபிரியா. உங்க கிட்டே பேசுவா" என்று அந்த அம்மாள் நீண்ட மூச்சு சகிதம் உள்ளே போனாள்.

ரதிபிரியா, எதிரே தோரணக் கால்போட, அவனுக்குக் கஷ்டமாக இருந்தது.

"உங்க அக்காதான் சிறையிலே இருக்காங்களா?"

"சிம்பிள் தண்டனை சார்! சப்-இன்ஸ்பெக்டரை கன்னாபின்னான்னு பேசிட்டாங்க. அவர் கேஸ் போட்டுட்டாரு! அபராதம் போட்டாங்க. இவள் கட்டலை. சிறையிலே இருக்காங்க."

''இன்ஸ்பெக்டர் ஒரு பொது ஊழியராச்சே, அவரைப்போய் கண்டபடி பேசலாமா?"

"சார்! அக்காவை வம்புக்காரின்னு நினைச்சுடாதீங்க. ரொம்ப நிதானமானவள். ரொம்ப நல்லவள்."

"அப்போ ஏன் இன்ஸ்பெக்டர்கிட்டே சண்டை போட்டாங்க?"

"அது. . . ஒரு அல்ப விஷயம், மற்றவங்களுக்கு! ஆனா அவளுக்குப் பெரிய விஷயம்."

"என்னது, சொல்லுங்க."

"அதிலே அவள் காதலே மறைஞ்சிருக்கு."

"காதலா!"

"ஆமாம். சாதாரணக் காதல் இல்லை. அடி ஆழமா யாருக்கும் புலனாகாமல் மறைஞ்சு ஓடுமே, அதுபோல ஒரு காதல்."

வினோத் சற்று நிமிர்ந்தான்.

"யார் மேலே?"

"சுதாகர்னு ஒருத்தர் மேலே."

"அதனாலே?"

"சுதாகர் சம்பந்தமா இவள் ஒரு புகார் கொடுத்தா போலீசுலே."

"உம். . . உம். . . உம். . ." என்று புருவத்தை நெரித்தான், வினோத்.

"அதை போலீஸ் பொருட்படுத்தவே இல்லை."

"ஏன்?"

"தெரியாது. பலமுறை சொல்லியும் பொருட் படுத்தாததாலே இவள் இன்ஸ்பெக்டரை திட்டிட்டா."

"என்னங்க இது; சுதாகர் மேலே காதல் என்கிறீங்க. அப்புறம் அவர் சம்பந்தமா புகார் என்கிறீங்க?"

"ஆமாம். சொன்னதிலே தப்பு எதுவுமில்லை! சுதாகர் இறந்துட்டாரு."

"எப்போ?"

"நாலு வாரம் முன்னாடி."

"எப்படி இறந்தார்?"

"இயற்கையா இல்லை. . . விபத்திலே. . ."

"விபத்திலா?"

"ஆமாம். அந்த விபத்தைப் பற்றித்தான் அவள் புகார் கொடுத்திருக்கா."

"என்ன புகார்?"

அம்மா அதற்குள் காப்பி கொண்டுவர,

இருவரும் எடுத்துப் பருகினார்கள்.

வினோத்துக்கு இப்போது சூடு தட்டியிருந்தது. காரணம், எதிரே இருந்த அந்த இளம்பெண் மட்டுமல்ல, அவள் சொன்ன விஷயமும்.

"விபத்துக்கும் போலீசுக்கும் என்ன சம்பந்தம்?" அவன் மேலே தொடர்ந்தான்.

"இருக்கு! அதுதானே முக்கியம்!" அவள் துடிப்பாகச் சொன்னாள்.

2

துள்ளுவதோ இளமை

வினோத்தின் சுவாரஸ்யம், உச்ச டிகிரியில் ஏறியது.

ரதிபிரியா மீது பார்வை விழும் போதெல்லாம், மனசில் சங்கீத சப்தங்கள் ஒலித்தன.

இப்போது வழக்கில் 100 சதம் பிரியம் வந்துவிட்டது.

"உங்களுக்கு ஒண்ணு சொல்றேன். விஜயபிரியாவின் காதல் கொஞ்சம் தெய்வீக வர்க்கம்!" என்றாள் ரதிபிரியா.

"ஓ! அப்படி ஒரு காதலா!"

"ஆமாம். வெறும் பஸ் ஸ்டாண்ட், கல்லூரி காதல் அல்ல. . . அதைவிட ஆழமான காதல். . ."

நட்சத்திரம் ஒன்று அவள் கண்ணில் அடித்தது. அந்தக் கணத்தில் மனத்துள் அவள் காதலைப் பற்றி கவிதை படிக்கிறாள் என்று தெரிந்தது. காதலைப் பற்றிச் சொல்லும்போதே இப்படி பரவசமாகிறாளே!

இன்னும் ஓராண்டு இவளிடம் மலராதவை எல்லாம் மலர்ந்து பிருந்தாவனமாகிவிடுவாள்.

ரதிபிரியா சட்டென்று எழுந்தாள்.

'சிக் சிக்' என்று நடந்தாள்.

மாடிப்படி நுனியில் கால் வைத்துத் திரும்பினாள்.

“வாங்க!” என்பதுபோல் அந்தப் புன்னகையால் அழைத்தாள்.

வினோத் எழுந்தான்.

பிரமையில் நடந்தான்.

அவள் அருகே 'ரவ்லான்' மணம் வீச-

ஒவ்வொரு படியாக அவளைப் பின்பற்றினான்.

மாடித் தளம் வந்தார்கள்.

விசாலமான வராந்தா. அதைத் தாண்டி வானம், பெரிய விதானமாகப் பரவி கிடந்தது.

“என் அக்காவின் அறை!” என்று ஒரு அறையைத் திறந்து உள்ளே சென்றாள்.

சுவிட்சுகளைத் தட்ட, மெல்லிய சந்திரஒளி போல நான்கு விளக்குகள் பால் பொழிந்தன.

ஜன்னல் அருகே சுவரில் ஒரு புகைப்படம் மாட்டப் பட்டு இருந்தது.

“இது, அக்கா விஜயபிரியா! ஒரு பிரசித்தி பெற்ற புகைப்படக்காரர் இதை எடுத்தார்!” என்றாள் ரதி.

ரதி, மொட்டு என்றால். . . விஜயா, மலர்!

இவளுக்கு என்ன கஷ்டம்?

“இவங்கதானே ஜெயில்லே இருக்காங்க!”

“ஆமாம்! நாளைக்கு வெளியே வந்துடுவாங்க. . .”

“ஏன் ஜெயிலுக்குப் போனாங்க?”

“ஒரு இன்ஸ்பெக்டரை ரொம்பத் திட்டிட்டா. . .”

“என் [illegible] ?”

''அவள் காதலர் சுதாகர் ஒரு கார் விபத்திலே போயிட்டார் இல்லே!''

"நீங்க சொன்னீங்க. . ."

"அது விபத்து இல்லைன்னு அக்கா வாதம். . ."

"ஏன். . . ?"

"சுதாகர், சாலை விதிமுறைகளைத் தட்டமாட்டார். . ."

"சரி!"

''அதனால் அவர் நடைபாதையிலேதான் போயிருக்கணும். ஒரு கார் அவரை இடிச்சுத் தள்ளிட்டுப் போயிருக்கு. அது வேணும்னே செஞ்சிருக்கணும்!'' என்றாள் அக்கா.

"நிரூபிக்க முடியுமா?"

"சிலதை நிரூபிக்கவே வேணாம். ஊகத்திலேயே தெரியும்னு அக்கா சொன்னா!"

"ஊகத்தை நம்ப முடியுமா?"

"சார்! ஊகம்னு ஒரு சாதாரண வார்த்தை போட்டுச் சொன்னேன். உண்மையிலே அக்காவுக்கு இது ஒரு டெலிபதி விஷயம். . ."

"டெலிபதியா?"

''ஆமாம். ஒருவர் மனசிலேர்ந்து நினைவு இன்னொருத்தருக்கு தாவிப்போகும். அதுதான் டெலிபதி"

"கேள்விப்பட்டிருக்கேன். . . அதெல்லாம். . ."

''உண்மைக் காதல் இருந்தா, இந்த டெலிபதி தானாகவே வரும்."

"அப்படியா?"

“அதுல காதலன் நினைச்சா. . . அந்த நினைப்பு காதலிக்குத் தானா வந்துடும். என் அக்காவுக்கும் அப்படித்தான்.”

“அப்போ உங்க அக்கா டெலிபதியிலே விபத்தைப் பார்த்தாளா?”

“ஆமாம். சுதாகரைக் கார் மோத வரும்போது, அக்காவோட மனசு அவன் மனசோடு சுவிட்சாயிடுத்து சார்!”

“என் பெயர் வினோத். . .”

“சாரி, மிஸ்டர் வினோத்! அந்தக் கார் வேணுமின்னே ரோட்டைவிட்டு விலகி அவர் மேலே மோதணும்னே அலைபாய்ஞ்சுகிட்டு வருது. அதை அக்கா மனக்கண்ணிலே பார்த்துட்டாங்க!” சொன்னவள், கண்ணை மூடினாள்.

அந்த நிகழ்ச்சியை இவளே அனுபவிப்பது போலிருந்தது.

“மோதிடுச்சா?” என்றான் அவன்.

“ஆமாம்! அதுக்கு முன்னாடி கடைசியா அவர் ‘விஜயா. . . விஜயா’ன்னு உச்சரிக்கிறதுகூட எங்க அக்கா மனசிலே விழுந்தது. கார் மோதின பிறகு அக்கா மனசிலே சுவிட்ச் அணைஞ்சுபோச்சு.”

வினோத் யோசித்தான்.

“உங்க அக்கா அந்தக் காரைப் பார்த்தாங்க இல்லையா?”

“ஆமாம்.”

“அதன் நம்பர் தெரியுமா?”

“இதைத்தான் நானும் கேட்டேன். நம்பர் தெரியாதுன்னு சொன்னாங்க.”

"என்ன கார்?"

"அதையும் கேட்டேன். யோசனை பண்ணி சொன்னா. வெள்ளை அம்பாசிடர்."

"சரி! மனசிலே அக்கா இந்தக் காட்சியைப் பார்த்த போது யாராவது பக்கத்திலே இருந்தாங்களா?"

"அன்னிக்குப் பார்த்து நான் இல்லை. இன்ஸ்டிடியூட் போயிட்டேன். அம்மா பின்னாடி துணி உலர்த்திக் கிட்டிருந்தாங்க! சத்தம் கேட்டிருக்கு. உள்ளே ஓடிவந்து பார்த்தாங்க. அக்கா அழுதிட்டிருந்தா! 'என்ன. . . என்ன'ன்னு அம்மா கேட்டா, கொஞ்சநாழிக்குப் பதில் சொல்லலை. அப்புறம் தெளிஞ்சு, 'சுதாகருக்கு ஏதோ நடந்திருக்கு'ன்னு புலம்பி இருக்கா. . ."

"அம்மா சமாதானப்படுத்தினாங்களா?"

"ஆமாம்! பக்கத்திலே உட்கார்ந்து சமாதானப் படுத்தினாங்க. 'மனப்பிரமைகளை' நம்பாதே! சுதாகர் பூரண ஆயுசோடு இருப்பான்னு சொன்னாங்க. 'நான் இப்போதே அவரைப் பார்க்கணும்'னு அக்கா அடம்பிடிச்சா! ஆனா, அன்னிக்குப் பார்த்து எங்க குலதெய்வ வழிபாட்டுக்காக வேப்பங்குளம் கிராமம் வரை போகணும். ஏற்பாடு எல்லாம் பண்ணி வச்சிருக்கு. அம்மா விடலை. வலுக் கட்டாயமா இழுத்துக்கிட்டுப் போனாங்க."

"அப்போ அன்னிக்கு சுதாகரைப் பார்க்கப் போகலை?"

"ஆமாம். அடுத்த நாள் காலையிலே பத்திரிகையைப் பார்த்தா செய்தி வந்திருக்கு."

ரதிபிரியாவின் வார்த்தையின் தீவிரம், அதன் அழுத்தம் இரண்டும் அவனைப் பிரமிக்க வைத்தன.

"அப்புறம்?"

"ரெண்டு மூணு நாள் அழுதிட்டே இருந்தா. . . இதுக்குள்ளே சுதாகர் வழக்கைப் போலீசார் ஒரு மாதிரி முடிச்சுட்டாங்க."

"எப்படி?"

"அடிக்கடி நடக்கிற விபத்து மாதிரி, யாரோ மோதிட்டுப் போயிட்டாங்கன்னு நினைச்சாங்க. அல்லது தற்கொலையா இருக்குமோன்னுகூட போலீசுக்குச் சந்தேகம் வந்திடிச்சு."

"உம். . ."

"கடைசியிலே தற்கொலைன்னு வழக்கை முடிச்சுட்டாங்க."

"அநியாயமா இருக்கே!"

"ஆமா. அதான் அக்கா வெகுண்டு எழுந்துட்டா! போலீஸ் நிலையத்துக்குப் பலமுறை படையெடுத்தா. . . விவரத்தைச் சொன்னா."

"போலீஸ் என்ன சொன்னாங்க?"

"போலீஸ்காரங்க எல்லாரும் சிரிச்சாங்களாம். 'அதெல்லாம் வழக்கில் எடுபடாதம்மா'ன்னு இன்ஸ்பெக்டர் சொல்லிட்டாராம்."

"அக்கா பதில் சொன்னாளா?"

"சொன்னா. நான் சொல்ற மாதிரி எடுத்துக்க வேண்டாம். 'ஆனா, கார் மோதின வழக்கா எடுத்துக்குங்க! [illegible]த் தேடுங்கன்னு சொல்லியிருக்கா. அதை அவங்க [illegible]த்துக்கிடலை. இதனாலே அக்கா அவங்களைத் [illegible]டா! ஒரு வாட்டி இல்லை, இரண்டு மூணு வாட்டி [illegible]லே போய் நல்லா பேசிட்டா! இன்ஸ்பெக்டர் [illegible]டு அக்கா மேலே வேறு வழக்குப் [illegible]ரு. அபராதம் போட்டாச்சு. அக்காவுக்கு

வைராக்கியம் - அபராதம் கட்டமாட்டேன்னு ஜெயிலுக்குப் போயிட்டா."

வினோத்துக்கு ஒரு பெருமூச்சு வந்தது.

வினோத் நினைத்தான் - 'ஒரு பெண் தனியாக நியாயத்துக்குப் போரார்டியிருக்கிறாள். அது தோல்வியாகி விட்டது.'

"இப்போ நான் என்ன செய்யணும்?"

"அந்தக் காரைக் கண்டுபிடிக்கணும் சார்! அதை ஓட்டினவனைப் பிடிச்சு தண்டனை வாங்கிக் கொடுக்கணும். இல்லாட்டி அக்கா மனசு ஆறவே ஆறாது. இப்பவே ஒரு விதவை மாதிரி ஆயிட்டா!"

"வருத்தமா இருக்கு."

"ஒண்ணு சொல்றேன் கேளுங்க. நாளைக்கு அக்கா வந்துடுவா! அவகிட்டே நேரிலே பேசிட்டுக் காரியத்திலே இறங்குங்க."

❖ ❖ ❖

மறுநாள்.

ஒரு உணர்ச்சி மயமான சினிமாவைப் பார்த்தால் மறுநாளும் மனம் அதில் மறுகி நிற்கும்.

அப்படி ஒரு உணர்வு வினோத்தின் உள்ளே எழுந்தது. 'ஓ. . . ரதிபிரியாவின் பேச்சும் வனப்பும் இப்படி மனதை ஆட்டிவிட்டதா?' என்று நினைத்தான்.

அரை மணியில் மேஜர் மாணிக் செல்போனில் பேசினார்.

"வழக்கு என்ன ஆச்சு?"

"விசாரிச்சாச்சு! நேரில் வந்து சொல்றேன்."

"அது இருக்கட்டும். இப்போ ஒரு அவசரம். . . நீ உடனே. . ."

வேறு ஒரு வழக்கு பற்றி அவர் சொல்ல, அன்று முழுதும் அதில் அலைய வேண்டி வந்தது.

அடுத்த நாள்தான் அயர்வோடு அலுவலகம் போனான், வினோத்.

நாற்காலியில் 'பொத்' என்று அழுந்த உட்கார்ந்தான்.

"என்ன ரொம்ப களைப்பா?" என்று தாரா, குதர்க்கமாகக் குசலம் விசாரித்தாள்.

"போதும்! நேற்று ஊரெல்லாம் சுத்தி சுண்ணாம் பாயிட்டேன்."

"அதை விடுங்க! அதுக்கு முந்தின வழக்கு. . . அதிலே களைப்பே இருக்காதே. . ."

அவளின் கேலி, அவனுக்குப் புரிந்தது.

அவளைச் சாட முற்படுமுன் அவனது பார்வை மேசை மீது உள்ள காலைப் பத்திரிகையில் விழுந்தது.

'கார் மோதி இளம்பெண் சாவு' என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்பு.

அசிரத்தையுடன் கவனிக்க, 'விஜயபிரியா' என்ற வார்த்தை அவனை இழுத்தது.

திடுக்கிட்டுப் படித்தான். 'நேற்று காலை விஜயபிரியா என்ற இளம்பெண், கார் மோதி மரணம் அடைந்தாள்.'

அவள் சற்று முன்தான் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்திருந்தாள்.

அதன் விவரங்களைப் படித்த பிறகு, வினோத், நாற்காலி பின்னால் கனமாக அழுந்தினான்.

ஃஃஃ

3

செதுக்காத சிலை!

வினோத்தின் கண்கள் மூடின.

அவனை அறியாமல் மெல்லிய இமையில் நீர் அரும்பியது.

திடுக்கிட்ட தாரா, "வினோத்" என்றாள்.

கண்களைக் கொட்டி நீரை உள்ளே அழுத்தி, அவன் விழித்தான்.

முகத்தில் கனமான சோகம் ஒட்டியிருந்தது.

"என்ன விஷயம்?" என்றாள், தாரா.

அவள் குரலும் கனிந்திருந்தது.

"இன்னொரு விபத்து" என்றான் வினோத், கரகரக் குரலில்.

"எங்கே?"

"நான் போனேனே, லெட்சுமிபிரியா வீட்டிலே."

இன்னும் துக்கம் தொண்டையை மூடியது.

"அங்கே யாருக்கு என்ன விபத்து?"

''விஜயபிரியான்னு அவங்க பெண்...'' என்று தொடங்கி, நடந்தவைகளை எல்லாம் மெள்ள மெள்ளக் கூறினான்.

''அந்த விஜயபிரியா, ஜெயில்லேர்ந்து திரும்பி வரும்போது விபத்து" என்று முடித்தான்.

"என்ன?" என்று கம்ப்யூட்டர் கீ-போர்டிலிருந்து கையை விலக்கினாள், தாரா. "அவ காதலன்கூட விபத்திலே தானே இறந்தாங்க."

"ஆமா."

"அந்த விபத்தை டெலிபதியிலே அந்தப் பெண் பார்த்திருக்கா இல்லே?"

"ஆமாம். அப்படி விபத்தைப் பார்த்தவளே, இப்போ விபத்திலே இறந்திருக்கா."

மேசை மீது காற்றில் நடுங்கிக்கொண்டிருந்த தினப் பத்திரிகையை தாரா எடுத்தாள்.

செய்திகளைக் கண்ணோட்டமிட்டாள்.

''வினோத்! இந்த வழக்குல ஏன் ஒரு மாதிரி ஆயிட்டீங்க?" தாரா கேட்க, வினோத் தலை குனிந்தான்.

"எனக்கு ஒரு குற்ற உணர்வு."

"ஏன்?"

"அந்தப் பெண் விஜயபிரியாவை சிறைக்கு வெளியிலேயே சந்திக்கலாம்னு நினைச்சிருந்தேன்."

"அவள் விடுதலை ஆகி வரும்போதா?"

"ஆமா. ஆனா முடியாமப்போச்சு. இன்னிக்குப் போய் அந்தப் பெண்கிட்டே பேசலாம்னு நினைச்சேன். அவள் வழக்கு எனக்குப் 'பெக்யூலியரா' தோணித்து. முற்றிலும் புதுமை. ஆனா. . . இப்போ அவளே இறந்துட்டதனாலே மெகா புதுமை."

தாராவுக்கு கண்கள் தயங்கி பத்திரிகையில் லயித்தன.

"நிச்சயமா தாரா. . . அவளும் சாலை விபத்திலே இறந்ததாலே இந்த வழக்கு ரொம்ப முக்கியமாயிடுச்சு. மனசு சங்கடப்படுது. . ."

"இப்போ போய்ப் பார்க்கிறீங்களா?"

வினோத் ஒரு துக்க மூச்சுடன் சொன்னான் - "இல்லை. . . இப்போ அவங்க வீடு ஒரே சோகமா இருக்கும். ரதிபிரியா என்னைப் பார்த்தால். . . இல்லை. . . அவள் அழுகையை என்னாலே பார்க்கமுடியாது. நான் ஓய்வு எடுக்கிறேன். யாரையும் தொந்தரவுபடுத்த விடாதே."

❖ ❖ ❖

மறுநாள் பதினொரு மணிக்கு "எம். 8" காவல் நிலையத்தை வினோத் அடைந்தான்.

புதியவர்களை உள்ளே விடுவதில் கொஞ்சம் கட்டுப்பாடு இருந்தது.

முதலில் அவனது 'விசிட்டிங் கார்டு' உள்ளே போயிற்று. பிறகு, "வாங்க" என்று ஒரு காவலர் அழைத்து இன்ஸ்பெக்டர் முன்னால் உட்கார வைத்தார்.

இன்ஸ்பெக்டர், ஒரு கோப்பில் ரொம்பவும் அவசரத்திலும், தீவிரத்திலும் ஈடுபட்டிருந்தார். அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை.

இன்ஸ்பெக்டர் புதுசு! கல்லூரியைவிட்ட வாலிபத் தனம் இன்னும் அவரிடம் ஒட்டியிருந்தது.

மார்பில் பெயர் வாசித்ததில், 'டி. ஈ. அருள்' என்று எழுதியிருந்தது. 'ஈ' என்பது என்ன பெயராக இருக்கும்?

மூன்று பெரிய நிமிடங்களை முழுதாக எடுத்துக் கொண்ட பிறகே, "உம். . . என்ன வேணும்?" என்று தலையைத் தூக்கினார்.

"இண்டர்நேஷனல் டிடெக்டிவ் ஏஜென்சியிலிருந்து வந்திருக்கிறேன்."

"என்ன விஷயம்?"

எதையும் பொருட்படுத்தாத குரல்.

"விஜயபிரியா இறந்துட்டாங்களே?"

"ஆமாம்" என்று இரண்டு கையையும் மார்பு மேல் கோர்த்து, நாற்காலி முதுகில் சாய்ந்தார், இன்ஸ்பெக்டர்.

"விசாரிச்சுட்டீங்க இல்லே?" என்று கேட்டான், வினோத்.

"ஆமாம்."

"ஏதாவது தெரிஞ்சுதா?"

"அதை உங்ககிட்டே சொல்லணுமா?"

"சொல்ல வேண்டியதில்லை. சொல்லிட்டா பின்னாடி சங்கடம் வர சந்தர்ப்பம் இருக்காது."

"சங்கடமா...?" வாயைக் கோணினார், இன்ஸ்பெக்டர். "என்ன சங்கடம்? எங்களுக்கு எதுவும் வராது. உங்களுக்கு வராமல் பார்த்துக்குங்க."

"எங்களுக்கு அபரிமித எச்சரிக்கை உண்டு இன்ஸ்பெக்டர். உங்க பக்கத்தைக் கவனிச்சுக்கிட்டா நல்லாயிருக்கும்."

"உங்க புத்திமதிக்கு நன்றி! ஆனா, அது தேவை யில்லைன்னு தோணுது. எங்களைப் பற்றி அதிக கவலைப்படாதீங்க."

"நிச்சயம் படமாட்டோம்! நாளைக்கே நாங்க சுதாகர் வழக்கைத் திறக்கும்படி இருக்கும்."

"ஒகோ..." என்றார், சற்று ஏளனக் குரலில்.

"சுதாகர் வழக்கு அது இதோட 'லிங்க்' ஆயிட்டு இருக்குமே!" என்று நிறுத்தினான், வினோத்.

இன்ஸ்பெக்டர், முன்னால் சாய்ந்தார்.

"அதுவா. . . எல்லாம் நாங்க பார்த்துப்போம்."

திரும்பவும் அவரிடம் ஒரு அலட்சியம்.

"அப்போ நான் வரேன்."

"வாங்க."

வினோத் எழுந்தான். படிகளில் மெல்லிதாக அடிவைத்து, ஸ்கூட்டரை நிறுத்தி இருந்த நிழலுக்கு வந்தான்.

'விஜயபிரியா இவனோட சண்டை போட்டாள்னா, அது சரிதான். இப்போ அடுத்த முடிவு என்ன?' யோசித்தான்.

'நேற்று நடந்த சம்பவம் பற்றி ஒரு சின்னத் துரும்புகூடத் தெரியாது. விஜயபிரியா இறந்தது மட்டும் தெரியும். விபத்து எங்கே, எப்படி, எந்த விதத்தில் நடந்தது? ரதிபிரியா வீட்டுக்குப் போகலாமா?'

'இப்போது கூடாது. அது ஒரு துக்க வீடாக இருக்கும். உடல் சவக்கிடங்கிலிருந்து வந்தபிறகு தகனம் செய்யத்தான் நேரம் சரியாக இருக்கும். இப்போது பிரேத பரிசோதனை நடக்கும். பிரேத பரிசோதனை செய்த டாக்டருடன் உடனே மோதினால் என்ன?'

ஸ்கூட்டரில் விரைந்தான்.

❖ ❖ ❖

அவன் அனுமானம் சரி.

மேசையில், சடலம் கிடந்தது. அதன் முன்னே டாக்டர் சாகர் அப்போதுதான் வந்திருந்தார்.

வினோத்தைப் பார்த்ததும் பெரிய “அலோ” போட்டார்.

வினோத், பவ்யமாகக் குனிந்து, “நான் வரலாமா?” என்றான்.

“வாங்க, என்ன யோசனை. . .” என்றார், சாகர்.

“அப்படியில்லை சார். . .” என்று சொல்லி, தமக்கும் இன்ஸ்பெக்டருக்கும் நடந்த உரையாடலை விவரித்தான்.

“அந்த அமெச்சூர் இன்ஸ்பெக்டர் இங்கேயும் விறைப்பாத்தான் இருக்கார். . . ரெண்டு சூடுபடணும். அப்புறம் சரியாயிடுவார்.”

“அதுக்கு இப்போ நேரம் வந்தாச்சு. அது, இந்த வழக்குதான்.”

“நீங்க கவலைப்படாதீங்க வினோத்! உங்களுக்கு வேணுங்கிற விவரத்தை நான் சொந்த முறையிலே கொடுக்கிறேன். வெளியில் காட்டிக்காதீங்க! நீங்க இந்த வழக்குலே எதுக்காக நுழையுறீங்க? உண்மையைக் கண்டு பிடிக்கத்தானே! அது புரிஞ்சுக்கத் தெரியல்லையே இவங்களுக்கு.”

“மேஜர் மாணிக் இதைக் குறிப்பா விசாரிக்கச் சொன்னார்!” என்றவாறு வினோத், மேசை முன்னால் வந்தான்.

சடலத்தின் மேல் போர்த்தியிருந்த துணியை டாக்டர் விலக்கினார்.

அரை விநாடி மனம் தவித்து விட்டது.

மேசையில் கிடந்தது, பெண்ணா அல்லது சிலையா?

ரதிபிரியா கூறியது அத்தனையும் உண்மை.

விஜயபிரியா, ஒரு சொர்க்கத்துப் பதுமை!

மானிடம் இல்லாத அமானுட அழகு அவளிடம்!

மரணத்தில் அந்த அழகு அல்பமாவது குறைந்திருக்க வேண்டுமே? இல்லை.

முகத்தில் ஒரு கனிவும், அமைதியும். . .

டாக்டர்கூட கண்ணைத் திருப்பவில்லை. அவரது அனைத்துச் சுறுசுறுப்பும் திடீர் என்று அணைந்து விட்டன. அவரே அந்த உடலை அப்போதுதான் பார்க்கிறார்.

"இவள் மீதா கார் ஏறிச்சு? பாவிகளா?"

டாக்டர் வாயிலிருந்து மெல்லியதாக வார்த்தை, மனதை மீறி வந்தது.

வினோத்தின் குரல் அடைத்திருந்தது.

உடம்பை முழுவதுமாகத் திறந்தார், டாக்டர்.

சிராய்ப்புகள் தெரிந்தன.

மற்றபடி உடல் ஒரு சலவைக்கல் பதுமை.

பிறகு அவர் சைகை செய்ய, அருகில் இருந்த உதவியாள், சடலத்தை லேசாகப் புரட்டினார்.

வினோத்தின் கண்களும் அங்கே வியப்போடு பார்த்தன.

பின்னால் விலாவில் நல்ல அடி! தசைகள் சிதைந்து பிசிறு பிசிறாகத் தெரிந்தன.

சாகர், நிமிர்ந்தார். ஒரு நீண்ட மூச்சு வந்தது.

தொலைபேசி ஒலிக்க, சுதந்திரமாக டாக்டர் அதை எடுத்தார்.

"அலோ. . ."

"சரி. . ."

". . . . ."

"என்னாலே முடியறவரை பார்க்கிறேன்."

". . . . ."

"சரி. . ."

சாகர் சிந்தனையோடு திரும்பி வந்தார். "இன்ஸ்பெக்டர்தான் பேசுறார். எப்போ முடியும்னு தோரணையாகக் கேட்கிறார்!" என்றார்.

மேசை விளிம்பைப் பிடித்து சற்றே யோசனையில் இருந்தார், டாக்டர். பிறகு வினோத்தைப் பார்த்து, "வினோத்! எப்படியும் பரிசோதனை முடிய மூணு மணி நேரமாகும். அதுவரை நீங்க இங்கே இருக்க வேண்டாம். நீங்க போய் வேறு வேலையைப் பாருங்க! நாளைக்கு போன் பண்ணுங்க! நான் விவரம் சொல்றேன்!" என்றார்.

"சரி சார். . . அதுவும் நல்லதுதான். . ."

வினோத், விடைபெற்றுக் கிளம்பினான்.

❖ ❖ ❖

வெளியில் வந்து யோசித்ததும் விபத்து நடந்த இடத்தைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது.

ஆமாம், ரதிபிரியா வீட்டுக்குப் போவதில் பலன் இல்லை. எல்லோரும் அழுதுகொண்டிருப்பார்கள். சவக் கிடங்கிலிருந்து உடல் வருவதற்காகக் காத்திருப்பார்கள்.

காலையில் எல்லாப் பத்திரிகையிலும் சுருக்கமாக செய்தி வந்துவிட்டன. அதிக விவரங்கள் வெளிவரவில்லை! ஆனால், ஒரே ஒரு பத்திரிகை மட்டும், படம் ஒன்றைப் பிரசுரித்திருந்தது. அது, சாலையில் விஜயபிரியா இறந்துகிடந்த படம்.

❖ ❖ ❖

அந்த பத்திரிகை அலுவலக வாசலில் வினோத்தின் ஸ்கூட்டர் நின்றது. மாடிப்படிகளில் வினோத், ஏறினான்.

செய்தியாளர் அறையில் யாருமில்லை.

தவித்து நிற்கும்போது ஒரு சிப்பந்தி அவரை அணுகி, "யார் வேணும்?" என்றார்.

"நிருபர்கள் யாரும் இல்லையா?"

''இன்னும் அரை மணியிலே வந்துடுவாங்க! உட்காருங்க!"

உட்கார்ந்தான்.

அந்த அரை மணி அரையுகமான நேரம்! ஒவ்வொரு வினாடியும் மிகவும் தாமதமாக நகர்ந்து போயிருந்தது.

35 நிமிடத்திற்குப் பிறகுதான் சலனமே ஏற்பட்டது. முதலில் ஒருவர் வந்தார். பிறகு சத்தமாக பேசிக் கொண்டு இருவர்.

கடைசியில் ஆறு பேர் வந்து சேர்ந்தபிறகு, வினோத் அந்த அறைக்குள் நுழைந்தான்.

பெரிய மேசையைச் சுற்றிலும் நாற்காலிகளாக இரைந்துகிடந்தன. கிட்டத்து நாற்காலியில் இருந்த நிருபரை அணுகி, வினோத் தன்னை அறிமுகம் செய்தான்.

அந்த நிருபர் நெற்றியில் ஒரு கேள்வி ஏறியது.

"உட்காருங்க. . . ! என்ன வேணும்?" என்றார்.

"நேத்திக்கு நடந்த கார் விபத்து படத்தை உங்க பத்திரிகை மட்டுந்தான் போட்டிருந்திச்சு. . ."

நிருபருக்குப் பெருமை இரண்டு கன்னங்களிலும் வழிந்தது.

"அந்தப் படத்தை எடுத்தது யாரு. . . ?"

"அவர்தான். . . பெயர் செந்தில். . . !" என்று பதில் கிடைக்க, அவரிடம் போனான்.

விவரம் சொன்னான்.

பிறகு வினோத் தயங்கினான். "சார். . . எனக்கு ஒரு உதவி பண்ண முடியுமா?"

"சொல்லுங்க. . ."

"ஸ்கூட்டர் கொண்டு வந்திருக்கேன். என்னோட வந்து விபத்து நடந்த அந்த இடத்தைக் காட்ட முடியுமா?"

"இருங்க. . . சொல்லிவிட்டு வரேன். . ."

ஐந்து நிமிடம்.

இருவரும் புறப்பட்டார்கள்.

தலத்தை அடைய 20 நிமிடம் ஆகியது. போக்கு வரத்து அதிகமில்லாத இடம்.

அங்கே போய் இறங்கி பார்வையைத் திருப்பியதும் வினோத்தின் கண்கள் துள்ளின.

4

சந்தேகக் கோடு!

பிளாட்பாரத்தின் ஓரத்தில் யோசனையில் மூழ்கி நின்றிருந்தாள், ரதிபிரியா.

அவள் முகம் வெளிறி சோகித்திருந்தது. இடுப்பில் கைகள் வைத்து தரையை வெறிக்கப் பார்த்தாள்.

வினோத், ஆச்சரிய விழிகளை அவள் மேல் பதித்தான். மெல்ல அடி எடுத்து வந்தான்.

அவள் கண்களின் ஓரத்தில் அவன் உருவம் விழ,

திரும்பினாள்.

சின்ன ஒளி ஒன்று கண்ணில் பூத்தது. சீக்கிரம் அணைந்தது. "வந்துட்டீங்களா?" என்று கரகரப்பாகக் கேட்டாள்.

"இங்கே இருப்பீங்கன்னு எதிர்பார்க்கலை" என்றான், வினோத்.

அவள் அரை நிமிடம் பேசவில்லை. இன்னும் தரையை பல கூறுகளாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சொன்னாள் : "நீங்க வீட்டுக்கு வந்தா இங்கே அழைச்சுட்டு வர்றதா இருந்தேன்... நான் பழிவாங்கணும்..."

அதிக நடமாட்டமில்லா இடம். அந்த ரோட்டைப் பார்த்து வரிசையாகப் பல கட்டிடங்களின் பின்புறங்கள் இருந்தன.

அவைகளின் சாரமற்ற காம்பவுண்டுச் சுவர் சாலைக்கு இணையாக நெடுந்தூரம் ஓடியது.

தார்ச்சரல் பரப்பிய கறுப்பு பிளாட்பாரம்.

வினோத், தன்னுடன் வந்த பத்திரிகையாளரிடம் திரும்பினான்.

“உடல் எங்கே இருந்திச்சு?”

செந்தில் காட்டினார் - “இதோ. . . இந்த இடத்தில் தான்.”

அந்த இடத்தில் மங்கிய சாக்பீஸ் வரைகோடு தெரிந்தது.

ரதிபிரியா பார்த்தாள்.

“பிளாட்பார ஸ்லாப் இதோ இருக்கே. . . இதை ஒட்டி உடம்பு கிடந்திச்சு!”

உடலின் கை - கால் இருந்த விதத்தை செந்தில் விவரித்தார்..

“இங்கே பாருங்க, ரத்தம் உறைஞ்சு கிடக்கு.”

ரதிபிரியா அதுவரை அதைக் கவனிக்கவில்லை. அதைப் பார்த்ததுதான் தாமதம், விசித்திர ஒலியில் ஒரு விம்மல் எகிறியது. மறுவிநாடி முகத்தைக் கைகளில் மறைத்து அவள் தேம்பிக் கொண்டிருந்தாள்.

கொடுமையாக அந்த ரத்தத்தில் சில ஈக்கள் சுவாரஸ்யப்பட்டிருந்தன.

“மிஸ் ரதிபிரியா. . . அழாதீங்க. . . இது விதி! அதுக்கு மேலே எதையும் நினைக்காதீங்க. . . நீங்க இங்கே வந்திருக்கக் கூடாது” என்றான்.

அவள் அவசரமாக அழுகையை அடக்கினாள். அவனது கடைசி வார்த்தைகள் அவளைச் சீண்டியிருக்க வேண்டும்.

"வினோத். . ." என்றாள்.

". . . . ."

"சாரி. . . இந்த இடத்திலே நான் இப்படி அழுதிருக்க வேண்டாம். இருந்தாலும், ரத்தபாசம்னு ஒண்ணு உண்டு இல்லையா? என் ரத்தம்தான் அங்கே சிந்தியிருக்குன்னு தோணிச்சு" என்றாள்.

ஒருகணம் அந்த வார்த்தை அவனைத் துயரப் படுத்தியது.

"என்னால் புரிஞ்சுக்க முடியுது" என்றான், வினோத் தணிந்த குரலில்.

"யாரும் சம்பவத்தை நேரில் பார்க்கலையாமா?" என்றான், பத்திரிகையாளரை நோக்கி.

"பார்க்கலைன்னு போலீஸ் சொல்றாங்க! விபத்து நடந்து முடிஞ்சப்புறந்தான் யாரோ பார்த்து போன் பண்ணியிருக்காங்க. . ."

"சரி."

"எந்தக் கார் மோதிச்சுன்னு கண்டுபிடிக்க முடியலை. . ."

"அநியாயம்!"

"வினோத். . ." என்றாள், ரதிபிரியா.

"அக்கா நடந்து வருகிற திசை இது. கார் மோதின பிறகு அவள் ரோட்டின் இடது விளிம்பிலே விழுந் திருக்கா. . . கவனிச்சீங்களா?"

"கவனிச்சேன்."

"ஆனா, உடம்பிலே எங்கே கார் மோதியிருக்கு தெரியுமா?"

அதை இன்னும் வினோத் கவனிக்கவில்லை.

மருத்துவமனையில் பார்த்த உடலை நினைத்துப் பார்த்தான்.

''இடது விலாவிலே மோதியிருக்கு'' என்றாள் ரதிபிரியா.

"ஓ. . ." என்றான், வினோத்.

"ஆமா! இடது விலாவிலே மோதினா அந்த உடல் வலதுபக்கமாகத்தான் தூக்கி எறியப்படணும். ஆனா, இங்கே பார்த்தீங்களா? இடது விலாவிலே பட்டு இடது ஓரமே உடல் விழுந்திருக்கு."

"அதிலே முக்கியத்துவம் ஏதாவது இருக்கா?"

"இருக்கு வினோத்!"

"என்ன சொல்றீங்க?"

"கார் பிளாட்பாரத்திலே ஏறி என் அக்காவைத் தேடி மோதியிருக்கு!"

"அப்படித்தான் நினைக்கிறீங்களா?"

''ஆமாம்! அக்கா எப்பவும் ஒழுங்கா பிளாட் பாரத்திலேதான் நடப்பா. இங்கே பாருங்க! தார் - சரல் கலவையையே பிளாட்பாரத்துக்கும் போட்டிருக்கு."

அவளுக்கு ஓர் ஆராய்ச்சிப் புலன் இருந்தது. வினோத்துக்கு, அது விநோதமாய் தெரிந்தது.

''உங்க அக்கா நிச்சயம் பிளாட்பாரத்தைவிட்டு இறங்கி இருக்கமாட்டாங்கன்னு சொல்றீங்க?"

"நிச்சயமா. . . இங்கே பிளாட்பாரம் நல்லாவே இருக்கு! அவள் ரோட்டைக் கடக்க வேண்டிய இடம்

அதோ அங்கே பாருங்க, இன்னும் ரொம்ப தூரத்திலே இருக்கு."

அவள் கூறியது, வினோத் மனதில் நன்றாகப் பதிந்தது.

"ஆனால், ஒரு கார் பிளாட்பாரத்தில் ஏறி ஒரு பெண்ணை மோத வேண்டுமானால் அதற்கு வலுவான காரணம் இருக்கணும். . ."

"அப்போ விஜயபிரியாவைக் கொன்னுடணுங்கிற நோக்கத்தோடுதான் கார், பிளாட்பாரத்திலே ஏறி அவங்களை மோதியிருக்கு!"

"ஆமா."

"அது ஏன்? காரணம் ஏதாவது. . . ?"

"இருக்கணும்."

"என்னவாக இருக்கும்?"

"அதைத்தான் உங்களை கண்டுபிடிக்கச் சொல்கிறேன். இதுக்கும், அந்த சுதாகர் இறந்து போனதுக்கும் ஒரே காரணமாகத்தான் இருக்கணும்."

வினோத் அவளது ஊகத்தை ஆராய விரைந்தான்.

'பிளாட்பாரத்தில் ஏதாவது தடயம் இருக்கிறதா?' தனது நுட்பப் பார்வையை ஒவ்வொரு சதுர அடியாகப் பாயவிட்டான்.

நல்ல அகலமான பிளாட்பாரம். நகரத்தில் அதைப் போல அபூர்வமாகத்தான் பார்க்க முடியும்.

ஒரு கார் இதில் தாராளமாகப் போகலாம். மரமோ, குப்பைத் தொட்டியோ, பேருந்து நிறுத்தமோ எதுவுமில்லை.

ஆனால். . . துரதிருஷ்டம்! இந்தத் தார்க் கலவை போட்ட பிளாட்பாரத்தில் தடம் எதுவும் கிடைக்க வில்லை.

காரின் டயர் பதிந்த சுவடோ, வேறு ஏதாவது தடயமோ அங்கே தென்படவில்லை.

பிளாட்பாரத்து நிறமும் அதன் கடினமும் ஒரு தடயமும் பதியாதபடி செய்துவிட்டன.

பிளாட்பாரத்தில் தடயம் இல்லை. ஆனால் ஒரு கார் பிளாட்பாரத்தில் ஏறவேண்டுமானால், எங்கேயாவது அந்த பிளாட்பாரத்து ஓரத்து 'ஸ்லாப்' உடைத்திருக்க வேண்டும்...

சாலையிலிருந்து பிளாட்பார மேடை அரை அடிக்கு மேல் உயரம் இருக்கிறது.

பிளாட்பார விளிம்புகளைப் பார்த்துக் கொண்டு சிறிது தூரம் நடந்தான்.

ஸ்லாப் புதிதாக பதிக்கப்பட்டவைதான். ஒவ்வொன்றும் முழுமையாக இருந்தன.

ஒருவேளை டயரில் போதுமான காற்றுடன் நல்ல வேகத்துடனும் ஏறினால் ஸ்லாபில் எந்தத் தடமும் இல்லாமல் ஏறி இருக்குமோ?

'பிளாட்பாரத்தைச் சோதித்தாகிவிட்டது. வேறு என்ன செய்யலாம்?' ஒரு யோசனை.

கார் வந்த திசையை நோக்கி நடந்து போனான்.

ஒரு நூறடி தூரம் நடந்தபின் திரும்பினான்.

தூரத்தில் ரதிபிரியா நின்று அவனை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

இவ்வளவு தூரம் வந்ததில் அவனுக்கு அந்தக் காட்சி பல எண்ணங்களைத் தோற்றுவித்தது.

இவ்வளவு தூரத்திலிருந்தே பிளாட்பாரத்தில் நடந்து செல்லும் நபரை கண்டுபிடித்துவிடலாம்.

அடுத்து இங்கே பிளாட்பாரத்தில் ஏறினால்கூட அந்த நபர் இருக்கும் தூரம் வரை எந்தவிதத் தடங்கலும் இன்றி காரை வேகமாக ஓட்ட முடியும்.

அப்படியானால், கார் இங்கே பிளாட்பாரத்தில் ஏறிய தடயம் ஏதாவது இருக்கிறதா?

வினோத் ஒவ்வொரு அடியாகக் கவனித்தான்.

அவனது ஊகம் வீண்போகவில்லை!

ஒரு இடத்திலுள்ள ஸ்லாபில் நுனி மீது கறுப்பாக ஒரு சிறு சிராய்ப்பு தெரிந்தது.

அதன் பக்கத்தில் உட்கார்ந்தான், குனிந்து அதைக் கவனித்தான்.

'டக்'கென்று மனம் தெளிவாகியது.

கார் டயரின் சிராய்ப்பான தீற்றல்தான் அது.

ரப்பரின் உராய்வு.

அதனால் ஏற்பட்ட ரப்பரின் தேய்வு அதில் ஒட்டியிருந்தது.

இது நிச்சயம் அந்தக் காரின் டயராக இருக்க வேண்டும்.

அந்தக் காரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யலாம்.

இந்தத் தடயம் நிறைய உதவும். நினைத்தவன், எழுந்து வந்தான்.

கற்பனையில் அந்தக் கார் பிளாட்பாரத்தில் ஏறி அவ்வளவு தூரம் பிரயாணிப்பதை எண்ணினான்.

'கார் அப்படி ஓடியிருந்தால்...?' அந்த கார்க்காரனின் வஞ்சத்தை அறிந்தான்.

இந்த தூரத்தில் ஏறினால்தான் அந்தப் பெண்ணைத் தப்பவிடாமல் மோத முடியும்!

அந்த விலாக்காயமும் இடதுபுறம் பட்டிருக்கிறது.

இந்த ஊகத்துக்கு அது ஒத்துப்போகிறது. . .

அவன் வருவதை ரதிபிரியா ஆவலோடு பார்த்தாள்.

அருகில் வந்ததும் முகத்தை ஏறிட்டாள்.

வினோத் எதுவும் பேசவில்லை.

செந்திலை நோக்கினான்.

"ரொம்ப நன்றி! நீங்க வந்தது எனக்குப் பெரிய உதவி."

"இது என் கடமைதானே" என்றார் அவர்.

"மேடம்! நீங்க ஸ்கூட்டர்லேதானே வந்திருக்கீங்க?" என்றான், ரதிபிரியாவைப் பார்த்து.

"ஆமாம்."

"என்னைப் பின்தொடர்ந்து வர்றீங்களா?"

தலையை ஆட்டினாள்.

முதலில் செந்திலை அலுவலகத்தில் கொண்டு விட்டார்கள்.

நன்றி தெரிவிப்புகள் நடந்தன. பிறகு வினோத்தும், ரதிபிரியாவும் புறப்பட்டார்கள்.

"காப்பி சாப்பிடுறீங்களா?" என்றான் அவன்.

"சாரி, இன்னிக்கு எதுவும் சாப்பிட மாட்டேன்."

"வெரி சாரி! உங்க துக்கத்தைப் புரிஞ்சுக்காமப் பேசிட்டேன். எங்கேயாவது கொஞ்சம் உட்கார்ந்து பேசணும்."

"நேரு பூங்கா போகலாம்."

போனார்கள். உட்கார்ந்தார்கள்.

வினோத் செருப்பில் நீளமான ஒரு காகிதம் ஒட்டி யிருந்தது.

செருப்பைக் கழற்றினான். மறுபக்கம் திருப்பிப் பார்க்க, அதிர்ச்சி ஏற்பட்டது.

அங்கே நிறைய 'தார்' ஒட்டியிருந்தது.

பிளாட்பாரத்து தார்.

"அடடா, பார்த்தீங்களா!" என்று அவளிடம் செருப்பைக் காட்டினான்.

அவள் பார்த்தாள்.

பிறகு அவள் தனது துணிப்பையைத் திறந்தாள்.

"இதைப் பார்த்தீங்களா?" என்று சொல்லி அவள் கையை வெளியில் எடுக்க, அவன் திடுக்கிட்டான். . .

ஜ்ஜ்

5

தடயம் சிக்கியது!

அது ஒரு அழகிய தனிமைப் பூங்கா. நிசப்தம் அதன் நிரந்தர செல்வம்!

சின்ன சப்தம் எழுந்தால்கூட, உளி அடித்தாற்போல் பொழியும்.

அந்தப் பூங்காவிலுள்ள பெஞ்சில் ஊடுருவி விழுந்தன நிழற்சித்திரங்கள். நடுவில் ரதிபிரியா அமர்ந்து தனது கைப்பையின் வாயைத் திறந்து ஒரு பொட்டலத்தை எடுத்தாள்.

அரைச் சுற்று சுற்றிய காகிதம் ஒரு மூலையில் இடம் கொடுத்து ஏதோ ஒரு பொருளைப் பகிரங்கப்படுத்தியது.

"என்னது அது?"

ரதிபிரியா தொடர்ந்து பிரித்தாள்.

ஒரு செருப்பு இருந்தது.

"அக்காவோட செருப்பு!" என்றாள்.

"ரோட்டுல கிடந்திச்சா?" என்றான் வினோத்.

"ஆமா. . . அக்கா உடல் கிடந்த இடத்திலேருந்து ரொம்ப தள்ளி. . .!"

"போலீஸ் கண்ணிலே படலையா?"

"பிளாட்பாரமும், ரோடும் சேருகிற ஓரத்திலே கிடந்திச்சு. இது மேலே ஒரு பேப்பர் மூடிக்கிடந்திச்சு. . . கொஞ்சம் சிரத்தை எடுத்துப் பார்த்திருந்தா கிடைச்சிருக்கும்."

வினோத், செருப்பை வாங்கிப் பார்த்தான்.

சுத்தமாக இருந்தது.

மறுபுறம் திருப்பியபோது கண் சுருங்கியது.

செருப்பின் அடிபாகத்தில் நிறைய தார் இருந்தது.

"ரதிபிரியா, இது ஒரு நல்ல தடயம்!"

"எது?"

"தார். . ."

"அதைத்தான் நானும் சொல்றேன். அக்கா, பிளாட்பாரத்து மேலே நடந்திருக்கான்னு நல்லாத் தெரியுது."

"போலீஸ் என்ன சொன்னாங்க?"

"இதுவரை ஒண்ணும் சொல்லலை. விபத்து ரோட்லே நடந்ததுன்னு சொல்லப் போறாங்க."

"இன்னொரு செருப்பு கிடைச்சுதா?"

"இல்லை."

"ஒருவேளை போலீசுக்குக் கிடைச்சிருக்குமோ?"

"கிடைச்சிருக்கலாம். நான் விசாரிக்கலை."

"இன்னும் வேறு ஏதாவது கிடைச்சுதா?"

"இல்லை. நல்லா சுத்திப் பார்த்துட்டேன். நீங்க ஏதாவது கண்டுபிடிச்சீங்களா?"

"ஆமாம்."

"என்ன?" ஆத்திரமாய், அவசரமாய் கேட்டாள் அவள்.

"யார்கிட்டேயும் சொல்லிடக் கூடாது."

"சொல்லமாட்டேன்!"

"அந்தக் கார் பிளாட்பாரத்திலே ஏறி இருந்தா அதுக்கு ஏதாவது தடயம் இருக்குமேன்னு பார்த்தேன்."

ரதிபிரியா, பொறுமை இல்லாமல் துள்ளினாள். "நானுந்தான் பார்த்தேன். எனக்கு எதுவும் கிடைக்கலியே!"

"கொஞ்சம் கூர்ந்து பார்த்தா கிடைச்சிருக்கும். ஒரு இடத்திலே சிராய்ச்சி இருக்கு."

"அது வழக்குக்கு உதவுமா?"

"நிச்சயம் உதவும். ராத்திரி போய் சிராய்ப்பு இருந்த கல்லை எடுத்திட்டுப் போயிடபோறேன்."

"வேற ஏதாவது?"

"இல்லை ரதிபிரியா! ஆனா இந்த ரெண்டும் போதும், வழக்கை வலுவாக்க. . ."

"அப்போ நான் சொன்னதை நீங்க நம்பறீங்களா?"

"நிச்சயமா. இதிலே சந்தேகமே கிடையாது."

"ஒரு மர்மமோ, இல்லை ஒரு மர்ம ஆசாமியோ இதிலே ஒளிஞ்சிருக்கணும்."

"அதை நான் கவனிச்சுக்கிறேன். நீ முதல்ல வீட்டுக்குப் போ. அம்மா அழுதுகிட்டிருப்பாங்க."

அவள் எழுந்தாள். "நன்றி" என்றாள். விரைவாக நடந்தாள்.

போகும்போது கண்களைத் துடைத்தவாறு போனாள்.

வினோத் மனம் சற்றுநேரம் சூன்யமாக இருந்தது.

உண்மையில் இந்த வழக்கு அவனை எங்கேயோ, எப்படியோ பாதித்துவிட்டது.

ஆனால், கண்ணைக் கட்டிவிட்டாற்போல இருக்கிறது. யாரிடம் போய் எதைக் கேட்பது?

இருந்தாலும் எதையாவது செய்தாக வேண்டும். . . எங்கே போவது?

சட்டென்று நினைவுக்கு வந்தவர், டாக்டர் சாகர். அவரைப்போய் பார்த்தால் என்ன?

நேராக அரசாங்க ஆஸ்பத்திரிக்கு ஸ்கூட்டரில் கிளம்பினான்.

❖ ❖ ❖

பிரேத பரிசோதனை அறைக்குச் சென்று பார்த்த போது ஒரு பிணத்திடம் சாகர் அல்லாடிக் கொண்டிருந்தார்.

மூக்கைச் சுற்றி உறை போட்டிருந்தார். சுற்றிலும் பலமாய் வாடை வீசியது. மேஜையிலிருந்து ஒருவித நீர்த் திரவம் சொட்டுச் சொட்டாக உதிர்ந்து கொண்டிருந்தது.

ஈக்கள், அறையில் உள்ளே நுழைந்து இருந்தன.

"இந்தா வீராசாமி! குடலைப் பாரு! நுரையீரலும் வேணும்" என்று கூறிவிட்டு, அவசரமாக மூச்சை வாங்கு வதற்காகத் தள்ளி நகர்ந்தார், அவர்.

கை கழுவிவிட்டு, முகமூடியைக் கழற்றியவர்... "என்ன மிஸ்டர் வினோத்?" என்றார்.

"இந்த நாற்றம் நாறுதே சார்!" என்றான் வினோத்.

"நீயும் நானும்கூட இப்படித்தான் ஆகப்போறோம். எப்படி நாறுது பாரு! பொடிப் பையன் இன்ஸ்பெக்டர் அருள் உடனே பரிசோதனை அறிக்கை வேணுங்கிறாரு!"

"விரட்டுறாராக்கும்?"

"ஆமாம்! இளம் காளை ஆச்சே! அப்படித்தான் இருப்பாரு."

"அப்புறம் அந்த அறிக்கை என்னாச்சு?"

"அந்தப் [illegible] தானே?"

"ஆமா."

"முதல்லே இப்படி வாங்க!"

அவனை அழை[illegible] அறைகளைத் தாண்டிப் போனார். [illegible] மேஜையைத் திறந்து ஒரு பொட்டலத்தை எடுத்தார்.

District Central Library

"முதல்லே உட்காருங்க வினோத்!"

அவன் உட்கார அவரும் எதிரில் உட்கார்ந்தார்.

பொட்டலத்தைப் பிரித்து முன்னால் நீட்டினார்.

"இதென்ன கற்கள்?" - ஆச்சரியமாய் பார்த்த வினோத். "வைரமா?" என்றான்.

சிரித்தார், சாகர்.

"இல்லை. வெறும் கண்ணாடித் துண்டுகள்."

"இது எதுக்கு?"

"அந்தப் பெண்ணின் பின்கழுத்து இடது விலாவிலே காயம் இருந்திச்சு இல்லே?"

"ஆமா."

"அதிலே இருந்திச்சு!"

வினோத்தின் உதடுகள் மடிந்தன. [illegible]லையை மட்டும் ஆட்டினான்.

"சார்! அப்போ என் ஊகம் சரியாயிருக்கும்" என்றான்.

"கார் மோதியிருக்கு! அதுதானே?"

"ஆமாம்."

"அதைத்தான் இன்ஸ்பெக்டரும் ஒத்துக்கிறாரே! ஆனா, இதை வெறும் விபத்து என்கிறார்."

"இப்பவும் அப்படிச் சொல்றாரா?" என்றான் வினோத்.

"ஆமா."

"நீங்க என்ன செய்யப் போறீங்க?"

"இதை எடுத்துக் காட்டியதோடு எங்க வேலை முடிந்தது. இனிமே இதை ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பிடப் போறேன்."

"சரி சார்! அனுப்புங்க. அப்பவும் இன்ஸ்பெக்டருக்கு அந்தக் காரைத் தேடிப் பிடிக்கணுமின்னு ஆர்வம் இருக்கணுமே?"

"அவர் என்ன சொல்றார் தெரியுமா?"

"என்ன?"

"வளையல் உடைஞ்சிருக்கப் போகுதுன்னு சொல்றார்."

"அப்படியா? இது திட்டமிட்ட கொலைன்னு நம்ப மாட்டார் போல இருக்கே. . ."

"பரிசோதனையில இது வளையல் கண்ணாடியா, வேற கண்ணாடியான்னு சொல்லிடுவாங்க. அப்புறம் இன்ஸ்பெக்டர் என்னவும் செஞ்சுக்கட்டும்!"

"சரி சார்! இது போதும்."

பொட்டலத்தைத் திரும்பவும் பார்த்தான். துகள்கள் பருமனாக இருந்தன. நன்றாகக் கவனித்துவிட்டு அவரிடம் திருப்பிக் கொடுத்தான்.

"சார். . . வேறே ஏதாவது?"

"உள்ளே நிறைய ரத்தம் ஒழுகியிருக்கு!"

"வேறு தடயங்கள்?"

"எதுவுமே இல்லை."

"ரொம்ப நன்றி சார். நான் வர்றேன்."

வினோத் வெளியேறினான்.

மனசில் புதுத்தடம் ஒன்று ஓடியது. ஆனால், அதை வைத்து உண்மையைக் கண்டுபிடிக்க நாளாகும்.

அந்தக் கண்ணாடி நிச்சயம் ஒரு காரின் முகப்பு விளக்குக் கண்ணாடியாக இருக்க வேண்டும்.

அப்படியானால், ஏதோ ஒரு காரின் விளக்கு உடைந்திருக்க வேண்டும்.

❖ ❖ ❖

மாலையில் அலுவலகம் போனபோது மேஜர் வெளியே போயிருந்தார். தாரா கணினியில் ஈடு பட்டிருந்தாள்.

"என்னாச்சு, பேராசிரியர் நமசிவாயம் விஷயம்?" என்றாள், அவள்.

"இப்போ சுவாரஸ்யம் வந்திருக்கு."

"அப்போ அதிலே ஒரு இளம்பெண் நிச்சயம் இருக்கணுமே" என்றாள், தாரா.

அவனுக்குக் கோபமான புன்னகை வந்தது. "தாரா!

அதெல்லாம் தெரிஞ்சுக்க நான் அவ்வளவு கீழ்த் தரமானவன் இல்லை."

"அடேயப்பா! உடனே கோபம்! உங்களை யார் கீழ்த் தரம்னு சொன்னா? ஒரு வழக்கைச் சொன்னா, பொதுவா ஒரு பெண் வந்தா சுவாரஸ்யமா இருக்குமில்லே! அதான் சொன்னேன். இப்போ என்ன ஆச்சு சொல்லுங்க?"

"ஒரு வழக்கு இரண்டாவது வழக்கில கொண்டு விட்டுடுச்சு" என்று சொல்லி, மேலே நடந்தவைகளை சுருக்கமாகக் கூறினான். . .

தாரா, பின்புறமாகச் சாய்ந்தாள்.

இடுப்பில் இரண்டு வளைவும், மார்பின் நிமிர்வும் அவளிடம் தனி அழகு!

"வழக்கு ரொம்ப வலுவாயிடுத்து" என்றாள்.

"நீ சொல்ல வேண்டாம்! அது எனக்கே தெரியும்" என்றான்.

"அப்போ என்கிட்டே ஏன் சொல்றீங்க? என்னை விடுங்க" என்று சொல்லி கம்ப்யூட்டரில் முனைந்தாள், வேகமாக.

"பிளீஸ். . . பிளீஸ். . ." என்று மானிட்டரை கையால் மறைத்தான் வினோத்.

பொய்க் கோபமாக அவள் ஒரு பார்வை பார்த்தாள்.

"நான் என்ன செய்யணும்?" என்றாள்.

"வழக்கம் போல ரிப்போர்ட் அடிச்சு மேஜர் மாணிக்குக்கு அனுப்பிடு!"

"சரி."

"இப்போ எனக்கு ஒரு 'க்ளு' கொடு."

"'க்ளுவா?' நானா வழக்கை விசாரித்தேன்?"

"நான்தான் விசாரித்தேன்! நான் இனிமே என்ன செய்யலாம்னு சொல்லு?"

மேஜர் மாணிக்கிடம் தாரா கடந்த ஆறு ஆண்டாக வேலை பார்க்கிறாள்.

எத்தனையோ வழக்குகளைப் பார்த்திருப்பாள். அல்லது மேஜரிடமிருந்து கேட்டிருப்பாள். இதில் பழகிப் பழகி அவளுக்கும் நுட்பமான அறிவு உண்டாகியிருந்தது.

சில விஷயங்களில் அபூர்வமாகத் 'தடம்' காட்டுவாள்.

"அப்படி வாங்க வழிக்கு!" என்று திரும்பவும் தாரா புன்னகை புரிந்தாள்.

வினோத், அவளை ஆவலோடு பார்த்தான்.

"சுதாகர் வழக்குக்குப் பிறகுதானே இந்த வழக்கு?"

"ஆமாம்."

"இந்த ரெண்டாவது விபத்துக்கே முதல் விபத்துதான் காரணமா இருக்கும். அதனால முதல்லே சுதாகர் வழக்கைத் தொடங்குங்க."

"எனக்கும் அதுதான் யோசனை."

"அதேநேரம் இந்தக் கார் எங்கே இருக்கு என்கிறதையும் கவனிச்சிட்டுப் போங்க!"

"சரி."

"எங்கேயாவது 'நுனி' கிடைக்கும்" என்றாள், அவள்.

வினோத் எழுந்து நன்றி சொல்லி வெளியே வந்து ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

பிரதான சாலைக்கு வந்து அடுத்த தெரு ஒன்றில் திரும்பினான்.

அந்த இடத்தில் அந்த நேரத்தில் யாரையும் பார்க்க முடியாது.

ஒரு மரத்தடியில் நின்ற பெண் அவனுக்கு அதிசய மாகத் தோன்றியது.

ஸ்கூட்டரின் வேகத்தை மெதுவாக்கி சுற்றிப் பார்க்கும்போது -

பக்கத்து சந்து ஒன்றில் கார் பழுது பார்க்கும் கூடம் ஒன்று தெரிந்தது.

6

பெண்மை சொன்ன உண்மை!

சற்று நேரம் அந்தச் சந்தின் ஓரமே கால்கள் ஒட்டியதுபோல நின்றான், வினோத். கண்கள் மட்டும் துருதுருத்தன.

மனசில் ஏன் அப்படி கவன ஈர்ப்பு நடக்கிறது?

திரும்பவும் நோட்டமிட்டான்.

சந்துக்குள் அடக்கமாக இருந்த ‘கார் பழுதுபார்க்கும் கூடம்’தான் அவன் பார்வையை இன்னும் சுழித்து இழுத்தது.

வெளியே டயர் வர்க்கங்கள். கார் அவயங்கள் சிதறிக் கிடந்தன.

‘ஊகம் தானாக வந்தால் அதை விட்டுவிடாதே!’

இது அவனது தலைவர் மேஜர் மாணிக்கின் பொன்மொழி.

அந்த இடம் ஏன் அவனைக் கவர்ந்தது?

சந்துக்குள் நுழைந்தான். கூடம் முன் நின்றான்.

கரி உடுப்பு தரித்த பையன் காலை அகட்டி உட்கார்ந்து ஏதோ காரை ‘லொட் லொட்’ என்று தட்டிக் கொண்டிருந்தான்.

“இந்தா. . . பையா!” என்றான், வினோத்.

பெரிய மனிதத்தனத்தோடு பையன் பார்த்தான். பார்வையில், 'இன்னா வேணும்?' என்பதுபோல் கேள்வி கேட்டான்.

"முதலாளி இருக்காரா?"

"எந்த முதலாளி?"

"இந்த தொழில்க்கூட முதலாளி!"

அதற்குள் உள்ளேயிருந்து, பெண் குரல் கேட்க, கோணினான் பையன்.

"யாரு அங்கே?"

பையன் பதில் சொல்லவில்லை.

அதற்குப் பதிலாகத் திரும்பி, "நீ போ சார். . . கூப்பிடுறாங்க" என்றான்.

வினோத் உள்ளே நழுவினான். எதிரே விஸ்தாரக் கூடம். இருட்டும் அழுக்கும் சேர்ந்து அதைக் கறுப்பாக்கி இருந்தன. யந்திரமும், எண்ணெயும் கலந்த ஒருகடை வாடை வீசியது.

"வாங்க!" என்றது பெண் குரல்.

அது கூப்பிட்ட பிறகுதான் அந்தப் பகுதி கண்ணில் விழுந்தது. கையில் கத்தியைப் பிடித்து அதற்குச் சாணை தீட்டிக் கொண்டிருந்தாள் ஒரு இளம்பெண்!

கோதுமை நிறம், அவள். கிழங்குகளாக அவயங்கள். முகத்திலும் சட்டையிலும் கரிப்பூச்சு! சிறிது பூனை விழி.

அவள் நிமிர்ந்தபோதுதான், மார்பின் வளர்த்தி தெரிந்தது. சட்டையைத் தள்ளிக்கொண்டு அது கூர்ச்சியாகத் தெரிந்தது.

"என்னா வேணும்?" என்றாள் அவள்.

"முதலாளி இல்லே?"

"நான்தான் முதலாளி!"

"இங்கே கொஞ்சநாள் முன்னாடி போலீஸ் வந்தாங்களா?"

"போலீஸா?" என்று நிமிர்ந்தாள்.

கழுத்தைச் சுற்றும் பொடி வியர்ப்பு தெரிந்தது. "உட்காருங்க!" என்றாள்.

அவன் உட்கார்ந்தான்.

"போலீஸ் வரலையே? நீங்க யாரு?"

"நான் துப்பறிகிறவன்."

அந்த வார்த்தை அவளிடம் ஒரு மாயம் செய்தது.

கத்தியைக் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். சட்டை அவள் உடம்பை இழுத்துப் பிடித்தது. என்ன வனப்பு! கடின உழைப்பு செய்த மினுப்பு!

"நீங்கதான் இதை நடத்துறீங்களா?"

"இல்லை. . . எங்க அப்பா. . ."

"அவர் எங்கே?"

"உடம்பு சரியில்லாம படுத்திருக்காரு."

"இங்கே கார் ரிப்பேர் பார்க்கிறீங்களா?"

"ஆமாம். பழுது பார்ப்போம். வர்ணம் அடிப்போம். எல்லாம் செய்வோம்."

"ஒரு வாரத்துக்குள்ளே எத்தனை கார் வந்திருக்கு?"

யோசித்தாள். "ஒரு இருபது, இருபத்தைஞ்சு இருக்கும்."

"அதுக்கு ஏதாவது குறிப்பு எழுதுவீங்களா?"

"அதெல்லாம் எழுத முடியுமா சார்?"

"என்னென்ன ரிப்பேருக்கு வந்தது?"

உதட்டின் ஓரமாக ஒரு புன்னகை விரிந்தது.

"அதெல்லாம் நினைவு வச்சிருக்கமாட்டோம் சார்!"

"குறிப்பா ஏதாவது நினைவு இருக்கணுமே?"

"பெரிய வேலை எதுவும் செய்யவில்லை. ஒரு காருக்கு பெயிண்டு அடிச்சோம்"

"என்ன கார்?"

"அம்பாசிடர்!"

"என்ன நிறம் அடிச்சிங்க?"

"சாக்லேட்."

"அது முதல்ல என்ன நிறத்தில் இருந்திச்சு. . . ?"

"கறுப்பு நிறம்."

"வேற என்ன ரிப்பேர்?"

"எதுவும் இல்லை."

"காரிலே ஏதாவது விசேஷமா கவனிச்சீங்களா?"

யோசித்தாள்.

"எந்த மாதிரி கேட்குறீங்க?"

"ஏதாவது பளிச்சுன்னு பட்டிருக்குமே. . . முன்னாடி 'பானெட்' வளைஞ்சு கிளைஞ்சு. . ."

"அத மாதிரி எதுவுமில்லை. ஆனா. . . ஒரு பக்க விளக்கிலே கண்ணாடி உடைஞ்சிருந்தது."

வினோத் ஒரு விரலை, தரையில் அழுத்தினான்.

"முன்விளக்குதானே?"

"ஆமா!"

"எப்படி உடைஞ்சிருந்திச்சு? கீறி இருந்திச்சா?"

"அப்படி இல்லை. . ."

"அப்போ. . . ?"

"மேல் ஓரத்திலே உடைஞ்சு போனாப் போலே. . ."

வினோத் நாற்காலியைத் தட்டினான்.

"அதை யார் கொண்டு விட்டாங்க?"

"ஒரு டிரைவர் சார்!"

"அவர்தான் கார் சொந்தக்காரரா?"

"இல்லை. . ."

"டிரைவர் பேர் என்னது தெரியுமா?"

"முருகன்னு சொன்னார்."

"நிறத்தை ஏன் மாத்துறீங்கன்னு கேட்டீங்களா?"

"கார் சொந்தக்காரர் அடிக்கடி நிறத்தை மாத்து வாராம்."

"ஏன்?"

"தெரியாது."

"அவர் முகவரி தெரியுமா?"

"தெரியாது சார்."

"என்னம்மா தெரியாது என்கிறீங்க?"

சிரித்தாள் அவள். "சார்! எங்களுக்கு அது தேவையில்லையே!"

"பணம் கிணம் கேட்கப் போகவேண்டாமா?"

"வேண்டாம் சார்! எல்லாமே முன்பணம்."

"டிரைவர் முருகனை அப்புறம் பார்த்தீங்களா?"

"இல்லை சார்."

"ஆள் எப்படி இருந்தார்?"

"முப்பது வயசு இருக்கும். தலைமுடி எண்ணெய் இல்லாத மாதிரி இருக்கும்."

"நிறம்?"

"இளம் கறுப்பு."

"மீசை உண்டா?"

"உண்டு."

"வேறு அடையாளம்?"

"நெற்றியிலே சின்ன கீறல் இருக்கும்."

"வேறே?"

"அஞ்சு நிமிஷத்துக்கு ஒருமுறை ஒத்தைத் தும்மல் போடுவார்."

"ஓகோ. . . அடிக்கடி வருமாக்கும்?"

"ஆமாம். தும்மல் முடிஞ்சவுடனேயே 'முருகா'ன்னு சொல்லுவார்."

"சரி, வேறு அடையாளம்?"

பலமாய் யோசித்தாள்.

"குறிப்பிடும்படியா எதுவுமில்லை."

"இப்போ பார்த்தா அடையாளம் கண்டுப் பீங்களா?"

"முடியும்."

"அந்த ஆளை திரும்பிப் பார்த்தாலோ, அல்லது காரைப் பார்த்தாலோ உடனே எனக்குப் போன் பண்ண முடியுமா?"

"செய்யறேன் சார்!"

வினோத் ஒரு காகிதத்தில் தன் தொலைபேசி எண்ணை எழுதிக் கொடுத்தான்.

"உங்க பேர் என்னம்மா?"

"சாந்தி."

"சரி. . . நான் வர்றேன்."

❖ ❖ ❖

வினோத்தின் மனம் சுழன்றது. 'அடுத்து என்ன செய்ய?'

அலுவலகத்தில் தாரா பேசியது நினைவுக்கு வந்தது.

'சுதாகர் வழக்குக்குப் பிறகுதானே விஜயபிரியா வழக்கு. அதனாலே சுதாகர் வழக்கை முதல்லே தொடங்குங்க.'

வினோத் ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

❖ ❖ ❖

சுதாகர் வீடு ஒரு மோசமான தெருவில் இருந்தது. வாசல் ஓரங்களில் சாக்கடை தேங்கி நின்றது. வீடுகள் ஒவ்வொன்றும் தெருவை நெரிசல் ஆக்கி இருந்தன.

'அவுட் அவுஸ்' மாதிரி இருந்தது வீடு! வாசலில் கயிற்றுக் கொடி தொங்கியது.

உள்ளே இரண்டு அறைகள்.

"சார். . ." என்று அழைத்தபிறகு, உள்ளே இருந்து ஒருவர் வந்தார். பனியன் போட்டிருந்தார். மெலிந்த உடம்பு. பாதி தலை நரைத்திருந்தது.

வந்த விசயத்தை வினோத் சொன்னதுதான் தாமதம், சுள்ளென்று கோபம் மூக்கில் தொற்றியது.

"சார். . . உங்களுக்கு எல்லாம் வேறு வேலை இல்லையா? நாங்க மறந்துபோகணுமின்னு நினைக்கிறதை நீங்க திரும்பத் திரும்பக் கிளப்பிவிடுறீங்களே?" என்று பொரிந்தார்.

இதே ரீதியில் வார்த்தைகளைத் தொடர்ந்தார். கிட்டத்தட்ட அவனை வெளியே தள்ளும் நிலை.

வீட்டுக்காரர் உணர்ச்சிப் பெருக்கில் இருந்தார். வார்த்தைகள் கொந்தளித்துத் தப்பும் தவறுமாய் வந்தன.

உச்சமாய் திட்டிவிட்டு, பெரிய மூச்சுடன் நாற்காலியில் சாய்ந்தார்.

நெற்றியைத் துடைத்தார்.

வினோத் இதை எதிர்பார்த்தான். அவர் முன்னே சற்றுத் தள்ளி அமர்ந்து கொண்டான்.

"சார். . . கோபிச்சுக்காதீங்க! உங்களை நான் புண்படுத்தியதுக்கு மன்னிச்சுடுங்க."

அவர் இன்னும் மூச்சு இறைத்துக் கொண்டிருந்தார்.

"ஏழைகளுக்காக வாதாடும் வக்கீல் சங்கம் இருக்கு தெரியுமா? அவங்க என்னை இங்கே அனுப்பிச்சி இருக்காங்க."

அவர் மெதுவாக நிமிர்ந்தார்.

"நீங்க போலீஸ்லே இருந்து வரலையா?"

"இல்லை."

அவர் சிறிது அசை போட்டார். "சங்கம் எதுக்கு அனுப்பியிருக்கு?"

"உங்களுக்கு நஷ்டஈடு வாங்கிக் கொடுக்கணுமின்னு."

"அது ஒண்ணுதான் பாக்கி!"

"அப்படிச் சொல்லாதீங்க. நீங்க விரும்புறீங்களோ இல்லையோ! நஷ்டஈடு வாங்கிக் கொடுக்க வேண்டியது எங்க பொறுப்பு."

உள்ளே நிழல் தெரிந்தது.

ஒரு நொடியில் அவள் அந்த வீட்டுப் பெண்மணி என்று தெளிவாயிற்று.

"இந்தாங்க!" என்று அவள் குரல்.

"இவர்கிட்டே பேசிட்டு வரேன்" என்றார்.

வினோத்திடம் கேட்டார் - "காரைக் கண்டுபிடிச்சிடுவீங்களா?"

"அதைக் கண்டுபிடிக்கத்தான் முயற்சி நடக்குது. இது ஒரு அநியாயக் காரியம் சார்! அக்கிரமக்காரன் எவனோ சுதாகர் மேலே இடிச்சுட்டுப் போயிட்டான். அவனைக் கண்டுபிடிச்சு, நஷ்டஈடு வாங்கி, அப்புறம் தண்டனையும் வாங்கிக் கொடுக்கப் போறோம். சொல்லுங்கோ? உங்க பையன் சுதாகர். . ."

"பையன் இல்லை, தம்பி."

"சரி, தம்பி சுதாகர்."

"சார். . . அந்தக் காரைக் கண்டுபிடிச்சாகணும். அவன் என்ன சொல்வான்? சுதாகர் சாலை ஓரமா நடக்கலைன்னு சொல்லுவான்."

"அவன் அப்படிச் சொன்னாலும் கேட்கிறவன் முட்டாளா?"

"சார். . . அதிலே உண்மை உண்டு. சுதாகர் மனப்போக்கு சரியில்லை. . . சோகம் அவனை அழுத்தி இருக்கணும். அதனாலே. . ." அவர் சொல்ல, வினோத்துக்கு அதிர்ச்சி. 'அப்படியானால். . . ?' என்று அவன் மனதிலும் கேள்வி எழுந்தது.

7

அதோ... என்னவோ தெரியுது!

வீட்டில், வினோத் தத்தளிப்பில் இருந்தான்.

சுதாகரின் அண்ணன் ராமநாதன் முகத்தில் எந்த வரவேற்பும் தெரியவில்லை. அதைவிடுத்து ஒரு விரோதம் தான் தெரிந்தது.

தவிர ஒரு 'போடா போ' அலட்சியமும் வெளிப் பட்டது.

'சுதாகருக்கு மனப்போக்கு சரியில்லை' என்று ராமநாதன் சொன்னதும் வினோத்துக்கு எல்லாமே 'சப்' என்று ஆயிற்று.

கார் மோதி சுதாகர் இறந்து போனதில் ஒரு காரணம் காணலாம் என்று நினைத்திருந்த வினோத்தின் சுரத்து 'விர்' ரென்று குறைந்தது.

"மனப்போக்கு ஏன் சரியில்லை?" என்றான் வினோத்.

"அவன் ஒரு மாதிரி சார். அவனைப் பற்றிப் பேசாதீங்க!"

வினோத் திகைத்தான்.

"சார்! நீங்க சொல்றதைப் பார்த்தா அந்த விபத்துக்கு அவனேதான் காரணமா இருந்திருப்பானோ?"

"நல்லா கேட்டீங்க! எனக்கும் அப்படித்தான் தோணுது! ஆனா நீங்க விசாரிச்சுக்குங்க!"

"சரி சார்! சுதாகருக்கு அப்படியொரு மனப்போக்கு ஏன் வந்திச்சு?"

"எனக்கு என்ன தெரியும்?"

"ஏதாவது தெரிஞ்சிருக்கணுமே?"

"சார்! உங்களுக்கு வேறு வேலை எதுவும் கிடையாது போலிருக்கு. . . திரும்பத் திரும்ப இதைக் கேட்டாச்சு. . . எனக்குத் தெரியாதுன்னு சொல்லியாச்சு! ஆளை விடுங்க!"

அவர் கோபமாக எழுந்து உள்ளே போனார். அப்போதுதான் வினோத்தின் கண் அந்த அறைக் கதவின் மீது விழுந்தது. அதில் 'ராமநாதன் பி. ஏ.' என சாக்பீசில் எழுதி இருந்தது.

❖ ❖ ❖

'சுதாகருக்கு வீட்டில் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. அப்படியானால் சுதாகரின் சிநேகிதர்கள் யார் யார்?' வினோத் விசாரித்தான்.

இரண்டு பேர் பெயர்கள் பிரதானமாக வந்தன. சீதாராம் என்று ஒருத்தன்! பிரானேஷ் என்று மற்றொருத்தன்!

சீதாராம் ஒரு மருத்துவமனையில் வேலையில் இருந்தான்.

ஆய்வகத்தில் வெள்ளைக்கோட்டு அணிந்து பணியில் இருந்த அவன், வினோத்துக்குப் பதில் அளிக்க வந்தான்.

"சுதாகரா சார்?" என்று வினோத்திடம் கூறிவிட்டு, 'மள மள' என்று பேசத் தொடங்கினான்.

"அவன் இறந்தது துரதிருஷ்டம். ஒரு பெரிய மேதையாக வந்திருப்பான். எந்தக் களத்திலும் சோபித்திருப்பான்.

ஆனால் வாழ்க்கை அவனை ரொம்ப சோதித்துவிட்டது. முதலில் அவர்கள் குடும்பத்தின் ஏழ்மையே ஒரு முட்டுக் கட்டை! சுதாகரின் வாழ்க்கையை அது பல விஷயங்களிலே பாதிச்சிடுச்சி. . . !"

"அறிவு ரொம்ப முத்திடுச்சுன்னா மனம் பிரமை பிடிச்சாப்பல மாறும் என்பாங்க! இவனுக்கும் அப்படி ஆயிடுச்சா?"

"மனப்பிரமையா?"

"ஆமாங்க. சுதாகரின் மனப்போக்கு சரியில்லைனு சொன்னாங்களே?"

"யார் சொன்னாங்க?"

"இல்லை. . . கேள்விப்பட்டேன்!" என்று இழுத்தான், வினோத்.

"ஒன்றுமில்லை சார். அவன் எப்போதும் தீவிர யோசனையிலே இருப்பான். முகம் இறுக்கமாவே இருக்கும். அதை வச்சு கதை கட்டி இருப்பாங்க."

"ஏன்?"

"அவன் பெரிய அறிவாளி சார்! எப்போதும் ஏதாவது சிந்திச்சுக்கிட்டே இருப்பான். அதனாலேதான் அப்படி ஒரு தோற்றம்!"

"சரி, அப்போ மனப்போக்கே இந்த விபத்தை உண்டாக்கி இருக்குமோ?"

"அதெப்படிச் சொல்ல முடியும்?"

"சரி. . . சுதாகருக்கு காதல் தோல்வி உண்டா? ரொம்பவும் இறுக்கமா ஒருத்தன் இருந்தா, ஒருவேளை காதல்லே தோல்வியாகி. . ."

"தோல்வின்னு இல்லை. . ."

"சுதாகருக்கு காதலி கிடைப்பது கஷ்டம்! அவன் இறுக்கத்தை பார்த்து யாரும் காதல் பண்ணியிருக்க மாட்டாங்களே. . . ?"

"சார்! வாங்க இப்படி. . . போய் காப்பி சாப்பிடலாம்!" என்று வினோத்தை அழைத்துப் போனான், சீதாராம்.

சுத்தமான தேநீர்கடை. தனியாக பேசுவதற்கு ஏற்ப வசதி. காற்று, அலைந்தவண்ணம் இருந்தது.

"சார்! இறுக்கமா இருந்தவனை யார் காதலிப்பான்னு கேட்டீங்க? செல்றேன்?"

"சொல்லுங்க!"

"சார். . . முதல்ல இந்த விஜயபிரியாவோட காதலைக் கேளுங்க. சுதாகர் அபூர்வ ரத்தவகையைச் சேர்ந்தவன். ஒரு தடவை ரத்ததானம் கொடுத்தான். அதனாலே அவன் பெயரை ரத்த வங்கியிலே குறிச்சுக்கிட்டாங்க. இந்த விஜய பிரியாவுக்குத் தெரிஞ்சவங்க யாரோ ஒரு பெண்ணுக்கு ஆபரேஷன் பண்ணவேண்டி வந்திச்சு. அவளுக்கும் இதே அபூர்வ ரத்தம். ஆஸ்பத்திரியில் சேமிப்பில் இல்லை. சுதாகரைத் தேடி வந்தாங்க. சுதாகர் சம்மதிச்சான்அப்புறம் விஜயபிரியா, அவன் வீட்டுக்கு போயிருக்காங்க. ஏழ்மை நிலையைப் பார்த்திருக்காங்க. . ."

"ஓ! அதுதான் தொடக்கமா?" என்றான், வினோத்.

"அவனைப் பார்த்து, விஜயபிரியா, இரக்கப் பட்டாங்க. . . அவனுக்கு உதவிகள் பண்ணி கொடுத் திருக்காங்க! சுதாகர் அதை ஏற்றுக்கவேண்டிய நிர்பந்தம் வந்துடுச்சு. . . இது அன்பா மாறி காதலாகப் பின்னாலே வளர்ந்தாச்சு. . ."

"உங்களுக்குத் தெரியுமா?" என்றான், வினோத்.

"ரொம்ப நாள் மானசீகமாக இருந்திச்சு! அப்புறம் ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் வெளிப்படுத்தின

பிறகுகூட மற்றவங்க மாதிரி பூங்கா, சினிமா, கடற்கரை காதலாக இல்லை. ரொம்ப உன்னதமான காதல். . ."

இருவரும் காப்பி குடித்தார்கள்.

"சார்! சாதாரணமா காதல் வந்தாச்சுன்னா முகம் நல்ல பிரகாசமா ஒளிவீசுமே!" என்றான், வினோத்.

"நீங்க சொல்றது சரிதான். ஆனா சுதாகர் விஷயத்திலே அந்தஸ்து வித்தியாசம் இருந்திருக்கு. விஜயபிரியா வசதியான குடும்பம். இவன் அப்படி இல்லை. அதனாலே இந்தக் காதல் நிறைவேறாதேன்னு அவனுக்கு தோணியிருக்கலாம்! அதுவே அவனைக் கவலைப்பட வச்சிருக்கும்!"

"அப்படி உங்ககிட்டே சொன்னாரா?" என்றான், வினோத்.

"சாதாரணமாகத்தான் சொன்னான். ஆனா இன்னொரு விஷயம் சொன்னான்!"

"என்ன?"

"என்கிட்டே ஒரு ரகசியம் இருக்கு. . . அதை உனக்கு சொல்லணும்னு சொன்னான்."

"ஓ!" என்று தீவிரமானான், வினோத்.

"நானும் அவனும் காந்தி பூங்காவிலே போய் உட்கார்ந்தோம்.! பேசத் தொடங்கினான். திடீரென திரும்பிப் பார்த்தான்."

"ஏன். . . ?"

"யாராவது அதைக் கேட்கக் கூடாதுன்னு நினைத்து இருப்பான். அப்போ பின்பெஞ்சிலே அவனோட அண்ணன் ராமநாதன் இருக்கிறதைப் பார்த்துட்டான்."

"சரி. . . அப்புறம்?"

"பேச வந்தவன் நிறுத்திட்டான்."

"அப்புறம் சொல்லவே இல்லையா?"

"இல்லை சார்! சந்தர்ப்பம் கிடைக்கலை!"

"இந்த ராமநாதன் அங்கே ஏன் வந்தாரு?" என்றான், வினோத்.

"எதேச்சையா வந்திருக்கலாம்!"

"அப்போ, அந்த விஷயம் கடைசிவரை உங்களுக்குத் தெரியவே இல்லை" என்றான், வினோத்.

"இல்லை. . . சார்!"

"சரி, நீங்க சுதாகர் மரணத்தை ஒரு விபத்தா எடுத்துக்கறீங்களா?"

"இல்லை. எனக்குச் சந்தேகமா இருக்கு. அதுவும் விஜயபிரியாவும் அதே மாதிரி விபத்துலே இறந்ததாலே. . ."

வினோத்தின் நெற்றி சுருங்கியது.

"அப்போ உங்களாலே ஏதாவது ஒரு விஷயத்தைக் கண்டுபிடிச்சுச் சொல்ல முடியுமே?" என்றான் வினோத்.

சீதாராம், கையை விரித்தான்.

"சரி, இந்த ராமநாதன் எங்கே வேலை பார்க்கிறார்?" - வினோத்.

"சூப்பர் மார்க்கெட்டுலே."

"எப்போ வேலைக்குப் போவார்?"

"காலையிலே எட்டு மணிக்குப் புறப்படுவார். ராத்திரி பத்துக்குத்தான் வருவார். நீங்க அவரையே, இன்னும் விசாரிக்கலாமே?"

"அவரையா?" என்று வெறுப்போடு கேட்டான், வினோத்.

❖ ❖ ❖

வினோத் யோசனையோடு அலுவலகத்துக்குத் திரும்பினான்.

தாரா, அவனுக்காகக் காத்திருந்தாள்.

"என்ன களைச்சுப்போய் வர்றீங்க?" என்றாள்.

"சுதாகர் வழக்குதான்! விசாரிக்கிறேன்."

"தகவல் ஏதாவது கிடைச்சுதா?"

"எதுவுமில்லே! விசாரணை அங்கங்கேயே நிற்குது. ஏதாவது ஒரு வழி கிடைச்சாதானே!"

"சரி, ரதிபிரியா யாரு? என்ன புதுப்பெண் உதயமா?" தளுக்காகக் கேட்டாள், தாரா.

"இந்தா! இந்த மாதிரி பேசாதே! அந்த சுதாகர் வழக்கை அவள்தான் இப்போ நடத்துறா."

"சரி, அவள் ரெண்டு முறை போன் செய்தா" என்று விட்டேத்தியாக கூறினாள், தாரா.

"போன் செய்தாங்களா?" என்று பரபரத்துக் கேட்டான், வினோத்.

பதிலே சொல்லாமல் கணினியைப் பார்த்தாள், தாரா.

வினோத்தின் தவிப்பு அப்படியே அந்தரத்தில் நின்றது.

"அப்புறம் சாந்தி என்கிறது யாரு? ரொம்ப அவசரமா கூப்பிட்டாங்க" என்று சொல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டாள், தாரா.

"ஐயோ. . . கூப்பிட்டாங்களா?"

"மூணுவாட்டி."

"ரொம்ப சாதாரணமா சொல்றியே?"

"எனக்கென்ன தெரியும்? ரதிபிரியா போன் செய்தான்னு சொன்னா பரபரக்கிறீங்க! சாந்தி கூப்பிட்டான்னா 'ஐயோ' என்கிறீங்க? ஒவ்வொன்னுக்கும் ஒவ்வொரு விதமா பேசுறீங்க. அதனாலே நான் பொதுப் படையா சொல்லிட்டு நிறுத்தலாமில்லே! அதுதானே சரி?"

"இல்லை" என்று ஏதோ சொல்ல வந்தவன், அவள் சொல்வதில் உண்மை இருப்பது தெரிந்து நிறுத்தினான்.

விருட்டென்று எழுந்தான். இரண்டடி வைத்தவன் திரும்பி, "ஐயோ! நான் சொல்லாட்டி திரும்பவும் ஏதாவது நையாண்டி சொல்லப் போறீங்க. ஒர்க்ஷாப் சொந்தக்காரி தான் சாந்தி."

தாரா மேலே நிமிர்ந்தாள்.

"ஓகோ!" என்று கண்ணோரமாகப் பார்த்தாள், தாரா. முகத்தில் புன்னகை மெல்ல நெளிந்தது.

❖ ❖ ❖

வினோத் வெளியே வந்தான். மறைந்தான். எட்டு நிமிடம் எடுத்திருப்பான். ஒர்க்ஷாப்பை எட்டிவிட்டான்.

சாந்தி பரபரப்புடன் ஓடிவந்தாள்.

"எத்தனை வாட்டி போன் செய்தேன். அந்தக் காரை நான் கண்டுபிடிச்சுட்டேன்."

வினோத் துள்ளினான்.

"எங்கே?"

"சிதம்பரம் ரோட்லே மத்தியானம் மூணு மணியிலே ருந்து நாலு மணி வரை நின்னுது. பார்த்தேன். உங்களுக்கு மூணு வாட்டி போன் செஞ்சேன்."

ஒரு பெரிய வருத்த ரேகை முகத்தில் மண்டியது.

"ரொம்ப கஷ்டமா இருக்கு! ஒரு பெரிய தடயம் போச்சு. எங்க தலைவருக்குத் தெரிஞ்சா அப்படியே என்னைத் தூள் பண்ணிடுவார். காரை நல்லா பார்த்தீங்களா?" என்றான், வினோத்.

"நல்லா பார்த்தேன். அதே கார்தான். முன் வலது விளக்கிலே கண்ணாடி உடைஞ்சிருக்கு! மேல் ஓரமா!"

கையைப் பலமுறை உதறி 'சூச்சூ' என்றான் வினோத். அவனுக்கு அந்த இழப்பு, பெரிதாகத் தோன்றியது.

"சரி, அதிலே யாரு இருந்தாங்கன்னு கவனிச்சீங்களா?"

"யாருமில்லை! இறங்கிப் போயிருப்பாங்க."

"பக்கத்திலே எங்கேயாவதுதானே போயிருக்கணும். அப்புறம் காத்திருந்து பார்த்தீங்களா?"

"அதுகூட செஞ்சு பார்த்தேன் சார்! நான் கடைசியாய் பார்த்தது வரை யாரும் வரல்லை."

வினோத் கண்ணை மூடி மூடி திறந்தான்.

"சரி, அந்த இடத்தையாவது காட்டுங்க!"

❖ ❖ ❖

அந்தி நேரம்! அவனது ஸ்கூட்டர் பின்னால் சாந்தி ஏறினாள்.

சாலையில் பறந்தார்கள்.

லேசாக இருட்டியது. காற்று மெதுவாக வீசியது.

அவள் திசை காட்டிக்கொண்டுபோக, 12 நிமிடத்தில் சிதம்பரம் சாலைக்கு வந்துவிட்டார்கள்.

சாலையில் இருட்டு நன்றாக விழுந்திருந்தது.

விளக்குகளில் பிரகாசம் இல்லை.

சாந்தி, அவன் தோள் வழியே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

கடைசியில் சாந்தி பரபரப்பாக "வினோத்! அதோ அந்த காரே நிக்குது."

"அதுதானா?"

"ஆமாம்."

அவ்வளவுதான்... காரின் அருகே ஸ்கூட்டர் சறுக்கி நின்றது. இருவரும் இறங்கினார்கள். வினோத்திற்குள் பரவசம் நுரைத்தது. அவசரமாய் போய் முன் விளக்கைப் பார்த்தான்.

சாந்தி சொன்னது சரி! அதில் கண்ணாடிச் சில் பெயர்ந்திருந்தது.

காரை ஐந்து நிமிடம் வினோத் நோட்டமிட்டான். உள்ளே பார்க்க போதுமான வெளிச்சம் போதாது.

சாந்தி அவனருகில் புதையல் கண்டெடுத்த குழந்தை போல நின்றாள்.

பலமுறை சுற்றிவிட்டு சாலையின் இருபுறமும் பார்த்தான். பக்கத்து கட்டடங்களை ஏறிட்டான்.

"சாந்தி" என்றான்.

"சார்... ஆளுங்க காரை விட்டுட்டுப் போயிட் டாங்களா?"

"அதான் தெரியலை. பெட்ரோல் இல்லாமல் போயிருக்கும். இல்லாட்டி, இங்கே பக்கத்திலே போனவங்க திரும்பி வராம இருக்கணும்."

"எங்கே போயிருப்பாங்க?"

"கொஞ்சம் இரு! அதோ என்னவோ தெரியுது!" என்றான் வினோத்.

சாந்தியும், அந்த திசை நோக்கிப் பார்த்தாள்.

8

காதலிக்கத் தெரியாத காளை!

தூரத்தில் தெரிந்தது என்ன?

வினோத்தின் கண்கள், ஏவுகணைப் போல் பாய்ந்தன.

அவன் கூர்மைக் கண்கள், 'லேசர்' கதிர்போல் பார்வையிட்டன.

அருகில் நின்ற சாந்தி, அவனையும், அந்த தூரத்து இருட்டையும் மாறி மாறிப் பார்த்தாள்.

தெருமுனை ஓரமாக ஒரு நிழலின் சலனம். வினோத்துக்குப் புரிந்துவிட்டது. எந்த நுட்பமான சலனமாக இருந்தாலும், வினோத்தின் உறைப்பான உணர்வில் அது பதிந்துவிடும்! அதில் பழக்கப்பட்டவன் அவன்!

"சாந்தி! வண்டியிலே ஏறுங்க!" என்றான் வேகமாக.

சீறிக்கொண்டு, தெருமுனைக்குப் பறந்தான். 'பிரேக்' போட்டு கீழே தாவி பார்க்க, முனையும் காலி, அதை ஒட்டித் திரும்பிய அடுத்த தெருவும் காலி!

''சாந்தி! நீங்க அந்த வரிசை வீடுகளைப் பார்த்துக்கிட்டே போங்க! காம்பவுண்டுக்குள்ளே பதுங்கி இருப்பாங்க!"

இருவரும் இரு சாரிகளில் பரிசோதித்துச் சென்றார்கள். தெரு முடிவு வரை வந்துவிட்டார்கள். யாரையும் காணவில்லை.

திரும்பி வந்தபோது, முனைப் பக்கத்தில் குப்பைத் தொட்டி ஓரம் ஒருவர் நின்று சிகரெட்டு உறிஞ்சிக் கொண்டிருப்பது தெரிந்தது.

வியர்வை பொங்க வந்த வினோத்தை அவர் வினோதமாகப் பார்த்தார்.

ஏதோ ஒரு காரிய அவசரத்தில் இருக்கிறான் என்பதை சிகரெட்டு நபர் அறிந்திருக்க வேண்டும்.

"சாருக்கு என்ன வேணும்?" என்று கேட்டார்.

வினோத் பின்னால் சாந்தி ஒண்டிக்கொண்டாள்.

அவளது அந்த சுவாதீனம் வினோத்துக்குப் பிடித்தது.

"நீங்க யாரு சார்?" என்றான் அவன் வினயமாக, அந்த சிகரெட்டு நபரைப் பார்த்து.

"எதிர்வீட்டுக்காரன்" என்று வீட்டைச் சுட்டிக் காண்பித்தார், அந்த நபர்.

"ஓ... சிகரெட்டு பிடிக்க வெளியிலே வந்திருக்கீங்களா?"

"ரெண்டு காரியமாக" என்று இன்னொரு கையால் சைகை காட்ட, வினோத் திரும்பிப் பார்த்தான்.

ஒரு ஐந்து வயது சிறுவன் பிளாட்பார ஓரத்தில் நிர்வாணமாகக் குந்தியிட்டு உட்கார்ந்து, தன் சங்கடத்தை நிவர்த்தி செய்துகொண்டிருந்தான். அவன், அவரது மகனாக இருக்க வேண்டும்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இங்கே யாரேனும் இருந்தாங்களா?" என்றான், வினோத்.

"இல்லையே!" என்று ஓரமாக உமிழ்ந்த அவர், யோசனையோடு, "ஒரு செருப்புத் தைக்கிற ஆசாமி இருந்தாரு" என்றார்.

பட்டென்று வினோத் மூளையில் ஒரு பூட்டு திறந்தது. அது என்னவென்று புரிந்துவிட்டது. இருந்தாலும் கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ள விருப்பம்.

"இங்கேதானே இருந்தாரு?"

"ஆமா."

"என்ன பண்ணிட்டிருந்தாரு?"

"வேலை செஞ்சிட்டிருந்தாரு."

"இங்கே ரொம்ப நாளா தொழில் செய்யுறாரா?"

"இல்லை! இன்னிக்குத்தான் புதுசா வந்து உட்கார்ந்திருந்தாரு."

மற்றொரு வெளிச்சப் புள்ளி வினோத்தின் கண்ணில் துள்ளியது.

"இந்நேரம் வரைக்குமா இருந்தாரு?"

"ஆமாங்க! நானும் ஆச்சரியப்பட்டேன். இங்கே கடை விரிக்கிறாரே, சந்தடி அதிகம் இல்லாத இடமாச்சே... அப்புறம் இவ்வளவு நேரம் வரை இருந்ததுகூட ஆச்சரியமாக இருந்தது. நீங்க ஏன் கேட்கிறீங்க?"

"இல்லை. . . நாங்க ஒரு ஆளைத் தேடிக்கிட்டு வர்றோம்! அவரு சித்தபிரமை உள்ளவரு!"

"அப்படி யாரையும் பார்க்கலையே?"

"வாங்க, சாந்தி."

ஸ்கூட்டரை உதைத்தான். இருவரும் ஏறினார்கள். சில விநாடிகளில் கார் நிற்கும் இடத்தை அடைந்தார்கள்.

"சாந்தி! அந்த ஆளுங்க நம்மைக் கண்டுபிடிச்சிட்டாங்க!"

"யாரு?" என்றாள், அவள்.

"ரெண்டு பேரை காரைவிட்டு மோதிக் கொன்னிருக் காங்களே. . . அந்த ஆளுங்க!"

"அவங்க ஏன் மோதினாங்க?"

"அதுதான் என் கேள்வி! அதைத்தான் கண்டுபிடிக்கப் பார்க்கிறேன்."

காரை நெருங்கினார்கள்.

"கார், ஓடுற நிலையில் இருக்கா பாருங்க, சாந்தி."

கதவைத் திறந்து ஏறினாள். காரைக் கிளப்பிப் பார்த்தாள். இக்னிஷன் பற்றவில்லை. இரண்டு முறை சுமாராகப் பற்றி விட்டுவிட்டது. முதல் முறை 'ஸ்டார்ட்' ஆனபோது பானெட் திறந்துகொண்டது.

சாந்தி கீழே இறங்கினாள்.

"பானெட்டை ரிலீஸ் செய்தீங்களா?"

"இல்லை! அதிர்ச்சியிலே திறந்திடுச்சு."

"அப்படியா?"

சாந்தி முன்பக்கம் போய்ப் பார்த்தாள்.

"இங்கே பிடிப்பு அவ்வளவு சரியா இல்லை."

"மூடுங்க."

மூடினாள்.

வினோத் பின்புறத்தில் போய் டிக்கியைத் திறந்தான்.

துப்புரவாக இருந்தது.

"சரி, வாங்க போவோம்."

சாந்தியின் ஒர்க்ஷாப்புக்குப் போனார்கள். "நான் ஒரு போன் பண்ணிக்கட்டுமா?" என்றான், வினோத்.

"தாராளமாக!" என்றாள் சாந்தி.

சுழற்றினான். ரிசீவரைக் காதில் வைத்தான்.

"அலோ! வணக்கங்க! நான் டிடெக்டிவ் வினோத் பேசுறேங்க! இன்ஸ்பெக்டர் இருக்காருங்களா?"

"இல்லைங்க! வெளியூர் போயிருக்கார். . ."

"நீங்க யார் சார் பேசுறீங்க. . . ?"

"ஏட்டு கந்தசாமி."

"விஜயபிரியான்னு ஒரு பெண் மேலே ஒரு கார் ஏறி விபத்து நடந்திச்சே. . . தெரிஞ்சிருக்குமே!"

"நல்லாத் தெரியும்! அந்த அம்மாதான் நம்ப சார்கிட்டே ரொம்ப தகராறு செஞ்சாங்களே. . . !"

"மோதிய அந்தக் கார் இங்கே 'அம்போ'ன்னு நிக்கிது."

"எங்கே?"

வினோத் விவரங்களைச் சொன்னான்.

"சார்! அதுதான் அந்தக் கார்னு எப்படி சொல்றீங்க?"

"அதை இப்போ சொல்றதுக்கு இல்லை. இன்னும் முழுவிவரத்தையும் நாங்க சேகரிச்சுக்கிட்டு இருக்கோம். இந்தக் கார்தான் அதுன்னு எனக்கு நிச்சயமான ஊகம்! அதனாலே காரை நீங்க, பாதுகாப்பிலே வைக்கணும்."

"அப்படிங்களா. . ." என்று இழுத்தார் கந்தசாமி.

"நான் சொல்றதைச் சொல்லியாச்சு! அப்புறம் உங்க இஷ்டம்! நான் வச்சுடுறேன்!" என்று ரிசீவரை கீழே வைத்தான், வினோத்.

பிறகு சாந்தியைப் பார்த்து, "அந்தக் காரின் விளக்குக் கண்ணாடியை யாராவது ஏதாவது செய்யாம இருக்கணும். . . இந்தக் கீறலும் சில்லு பெயர்ப்பும் மேலோரமாக

இருக்கிறதனாலே, யாரும் இதை சுலபமாகக் கண்டு பிடிச்சிருக்கமாட்டாங்க! எதிராளிகளும் கண்டு பிடிக்கலைன்னு தோணுது. இல்லாட்டி இப்படி அப்பட்டமா நடுத்தெருவிலே காரை நிறுத்திட்டுப் போயிருக்கமாட்டாங்க. . ."

"என்ன காரணத்தாலே நிறுத்தி இருப்பாங்க. . . ?"

''முதல்லே இந்தக் கார் திருட்டுக் காராக இருக்கணும்."

"ஓ!" என்று பளிச்சிட்டாள், சாந்தி.

"இதை எதிராளிங்க பயன்படுத்தி, தங்கள் வேலை முடிஞ்சதும் தெருவிலே கடாசி இருக்கணும். . . இப்போ சாந்தி, நீங்க அந்த ஆளை நல்லா ஞாபகப் படுத்திப் பார்க்க முடியுமா?"

''இங்கே வர்ணம் மாத்த வந்தாங்களே. . . அவங்களையா?"

"ஆமா."

"சார், ஓரளவு நினைவு இருக்கு. . . ஆளைப் பார்த்தா கண்டுபிடிச்சுடுவேன்!"

"சரி, அதுபோதும்!"

❖ ❖ ❖

வினோத் விடைபெற்றுக் கிளம்பினான்.

போலீசார் நடவடிக்கை எடுக்கிறார்களா? என்று பார்க்க வேண்டும். நடவடிக்கை எடுக்காவிட்டால் கார் என்ன ஆகப்போகிறது என்று தெரியாது!

நிச்சயம் அனாதைக் காரை போலீஸ் கொண்டு போவார்கள் என்று தெரியும். காரணம், இது திருட்டுபோன காராக இருக்கலாம். சொந்தக்காரர்

போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார். காரைக் கொண்டு போனால் ஒரு வழக்காவது தீருமே!

❖ ❖ ❖

மறுநாள் வினோத், ராமநாதன் வீட்டுக்குப் புறப்பட்டான். பத்து மணிக்கு மேல் புறப்பட்டான்.

ராமநாதன் இதற்குள் அலுவலகத்துக்குப் போயிருப்பார் என்று தெரியும்.

போய்க் கதவைத் தட்டினான்.

கதவு திறந்தது.

ராமநாதன் மனைவி பிரசன்னமானாள்.

"அவர் இல்லை" என்றாள், மெல்லிய குரலில்.

"அப்படீங்களா? நான் அன்னிக்கு வந்தேனே... நினைவு இருக்குலே?"

"இருக்கு. . . !"

"ரெண்டே கேள்வி! அப்போ கேட்க மறந்துட்டேன்! உங்களுக்குத் தெரிஞ்சா. . ."

தயங்கினாள், அவள்.

"சரி, பரவாயில்லை கேளுங்க!"

அதுவரை குனிந்திருந்த வினோத், மெல்ல நிமிர்ந்தான்.

ராமநாதன் மனைவி அகிலா, களையாக இருந்தாள்.

பார்வை கீழே தரை மீது பரவியிருந்தது.

"வந்து. . ." என்று தொடங்கியவன், மேலே திரும்பிப் பார்த்தான்.

"நீங்க உட்காருங்க. . . !" என்றான்.

அவள் ஒரு நாற்காலியில் அமர்ந்தாள்.

“சில விஷயங்கள் தெரியணும். சின்ன விஷயந்தான். இதுக்காக இன்னொரு தடவை நடக்க வேண்டாம். . . சுதாகர் ஏதாவது வேலையில் இருந்தாரா?'' என்று சாதாரண கேள்வியை முதலில் விடுத்தான்.

“இல்லை! படிச்சிட்டிருந்தார்!”

“எங்கே படிச்சார்?”

கல்லூரிப் பெயரைச் சொன்னாள்.

“வீட்டிலே எப்படி இருப்பார்? நல்ல பிள்ளைதானே?”

“நல்லவர்தான்.”

அவள் சிறிது சிறிதாக சகஜமாக வருகிறாள் என்று நினைத்தான். அதற்காகவே சாதாரணக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

பிறகு, “அவருக்கு கல்யாண யோசனை ஏதாவது இருந்திச்சா?” என்றான், வினோத்.

நிமிர்ந்து பார்த்தபோது அகிலாவின் கண்களில் தோன்றிய குறுகுறுப்பு ஆச்சரியமாக இருந்தது.

அதன் வசீகரம் அழகாக இருந்தது.

''சின்னப்பையன் மாதிரி, சுதாகருக்குக் காதல் பண்ணக்கூடத் தெரியாது” என்றாள் அவள்.

அந்த வார்த்தை, வினோத்தைச் சுற்றியது.

9

மயக்கும் மங்கைகள்!

சின்னதாக அமைந்த அந்த வீட்டின் முன் அறையில் வினோத் அமர்ந்து இருந்தான். ராமநாதனின் மனைவி அகிலா இரண்டே அடி தூரத்தில் இருந்தாள்.

மனம் சலனமிட்டது.

கணவன் இல்லாத நேரத்தில் அவளிடம் இப்படி பேசலாமா? அதுவும் அவள் கணவன் இருக்கமாட்டார் என்பதை அறிந்து கொண்டே இங்கே வரலாமா? அதில் ஏதோ நேர்மை இல்லை என்று தோன்றியது.

ஏற்கனவே வரும்போதே அவளைப் பார்த்து விட்டான்.

நல்ல களையான தோற்றம்.

இப்போது அவள் பேசியதும், சுதாகருக்கு 'காதல்' பண்ணக்கூடத் தெரியாது என்று கூறியதும், வினோத்துக்குத் தைரியம் கொடுத்தன.

நிமிர்ந்து ஒரு வினாடி அவளைப் பார்க்கலாம் என்று தோன்றியது. பார்த்தான்.

ஒரு மூச்சு தவறியது.

அகிலா, அழகிய சித்திரம்! களை மட்டும் அல்ல; அமர்ந்திருக்கும் கலையுமே நேர்த்தி!

"அதெப்படி 'காதல்' பண்ணத் தெரியாதுன்னு சொல்றீங்க?" என்றான் வினோத்.

மெல்லியதாக முணுமுணுத்தாள், அகிலா. வார்த்தையைத் தவறவிட்ட உணர்ச்சி முகத்தில் தெரிந்தது. தயக்கம் காட்டினாள்.

"பரவாயில்லை... வெளிப்படையாகச் சொல்லுங்க.." என்றான்.

துருதுரு என்று கண்கள் சுழன்றன. அதில் அத்தனை பொறியும் அவள் அறிவு என்று தெரிந்தது.

"சுதாகர் ஒரு மாதிரி இழுத்தா இழுபடுவானே தவிர, தானாக முன்னால போகமாட்டான். அப்படிப்பட்டவர்கள் 'காதல்'லே ஈடுபடுவது அபூர்வம். இது ஒரு மனோதத்துவம். அவ்வளவுதான்!" என்றாள்.

"சூத்திரம் மாதிரி சொல்லிட்டீங்க!" என்றான்.

"ஆமாங்க! அவன் நிறைய வெட்கப் படுகிறவன்! அதனால்தான் சொன்னேன்."

"இதை எப்படிக் கண்டுபிடிச்சீங்க. . . ?"

நாவின் நுனியால் உதட்டைத் தடவினாள். நாக்கு சிவந்து துளிர்போல் இருந்தது. அதில் ஒரு பொட்டுக் கவர்ச்சி விழுந்தது.

"வெறும் ஊகம்தான்!" என்றாள்.

அறிவுத்தனமாக அவள் பேசுவது ஆச்சரியம் கொடுத்தது.

"விஜயபிரியாவுக்கு முன்னாடி யாரையாவது காதல் பண்ணினானா?" என்றான் அவன்.

"இல்லை. . . ஒரு பெண்தான் அவனைக் காதல் பண்ணிச்சி. . ."

"இவன் பண்ணலையா?"

"உம். . . பண்ணினான்."

"உங்ககிட்டே சொன்னானா. . . ?"

"இல்லை. . . அரசல் புரசலாத் தெரிஞ்சது. . ."

"யார் அவள்?" என்றான், அவன்.

"எங்கேயோ சந்திச்சான்! விபத்திலே மாதிரி தோணுது!"

"ஓ! அதுவும் விபத்துதானா? இங்கே விஜயபிரியாவை சந்தித்ததும் விபத்துதான்."

"ஆமாம். ஆச்சரியமா இல்லே?" என்றாள், அவள்.

"நீங்க சொன்னது சரியாப் போச்சு! விபத்து நடந்தா தான் சுதாகர் மாதிரி ஆள் ஒருத்தரைக் காதலிக்க முடியும்."

"அப்போ அந்த முதல் காதலுக்கு நேர்ந்த விபத்து என்ன?"

"எனக்குத் தெரியாது! என்கிட்டே அவன் சொல்லலை! கேள்விப்பட்டதைச் சொன்னேன்."

"விபத்திலே சந்திப்பு ஏற்பட்டா பேசுறதுக்கு சுலபமா வாய்ப்பு ஏற்படுவது உண்டு!" என்று இழுத்தான் வினோத்.

"அப்படித்தான் வச்சுக்குங்க. . . !"

"ஓ! அப்படி ஏற்பட்ட நெருக்கத்திலே காதல் உண்டாயிருக்கணும்."

"அப்படித்தான் இருக்கும். அவனது அடக்க சுபாவத்தை மீறியே காதல் உண்டாகி இருக்கலாம்."

"நல்ல ஆராய்ச்சியோடு சொல்றீங்க. . ."

"ஆராய்ச்சின்னு பெரிய வார்த்தை போடாதீங்க! எனக்குத் தெரிஞ்சதை சொன்னேன். முதல்லே காதல்

வளர்ந்திருக்கும். அப்புறம் அது வளராமத் தானாகப் பட்டுப் போயிருக்கும்."

வினோத்தின் நினைப்புகள் எழுந்து உட்கார்ந்தன. அந்தப் பெண் ஆழமாக சிந்திப்பவள் என்று தெரிந்தது.

"ஓ. . . அப்போ அந்தக் காதல் முறிஞ்சுபோச்சா?"

"முறிஞ்சு போயிருக்கும். இயற்கைதானே?"

"ஏன்?"

"எனக்கு என்ன தெரியும்? ஏதாவது அந்தஸ்து வித்தியாசமா இருந்திருக்கும். அல்லது. . . ஏதாவது காரணம் இருந்திருக்கும்னு வச்சுக்குங்க!"

"சரி! இந்த விஜயபிரியா எப்படி?" என்றான், வினோத்.

"இதுவும் எனக்கு அதிகம் தெரியாது!"

"இதிலேயும் விஜயபிரியாதான் காதலை தொடங்கி வச்சிருப்பா இல்லே?"

"அப்படித்தான் இருக்கணும்."

"ஆமாம். சந்திச்சவங்களெல்லாம் காதலிக்க சுதாகர்கிட்டே அப்படி ஒரு வசியம் இருந்திச்சா?" என்று கேள்வியைத் தூக்கினான், வினோத்.

"எல்லார்கிட்டேயும் வசியம் இருக்கு சார்! சிலபேர் வசியம் சில பேருக்குப் பிடிக்கும். சிலருக்குப் பிடிக்காது. அவ்வளவுதான்!"

மனோதத்துவ ரீதியிலான அவளது பேச்சை வினோத் ரசித்தான்.

"சரி மேடம்! விஜயபிரியா விஷயத்தில் அவர்களது காதல் யாருடைய பொறாமையையாவது தூண்டி விட்டிருக்குமோ?"

"எனக்குத் தெரிஞ்சு யாருக்கும் தூண்டலை."

"பொறாமை ஒருத்தருக்கு வந்ததுன்னு வச்சுக் கிடுவோம். அப்போ அந்தப் பொறாமைகூட சுதாகர் கொலையாவதற்குக் காரணமா இருந்திருக்கலாம் இல்லே?"

"இருக்கலாம்."

"அப்போ, அது யாரை விசாரிச்சா தெரியும்?"

அகிலா சிரித்தாள். ஒரு நியான் 'பளிச்', முகத்தில் பரவியது. பல வயசு சின்னவளாக அவளைக் காட்டியது.

"நீங்கதான் அதை விசாரிச்சுக் கண்டுபிடிக்கணும்! எனக்கு எப்படித் தெரியும்?" என்றாள்.

வினோத் எழுந்தான்.

ஒருமுறை சுற்றும் முற்றும் பார்த்தான்.

"சுதாகரோட துணி, பொருள்கள் எல்லாம் எங்கே இருக்குங்க?"

"அதைப் பார்க்கணுமா?"

"ஆமாம்."

அடுத்த அறைக்கு அழைத்தாள். ஒரு அலமாரியைக் காட்டினாள். சாவியை எடுத்து வந்து திறந்து கொடுத்தாள்.

உள்ளே புத்தகம், காகிதங்கள், சில மருந்து விவகாரங்கள்!

"சில காகிதங்களிலே என்னவோ எழுதியிருக்கு. படித்துவிட்டுக் கொண்டுவரலாமா?" அவன் கேட்க, அவள் தயங்கினாள்.

"எண்ணி எடுத்திட்டுப் போறேன். திருப்பிக் கொடுத்திடுறேன்."

"அப்படியா?" என்று இழுத்தாள்.

"என்ன இழுக்கிறீங்க?"

"இல்லை. . . அவனோட நினைவா வச்சிருக்கோம். என் கணவர்கிட்டே கேட்டுட்டு தரலாமேன்னு நினைச்சேன்."

"சரி. . . அப்ப இங்கேயே அவசரமாப் பார்த்துட்டுப் போயிடுறேன்."

காகிதங்களைப் பார்வையிட்டான்.

படிக்கத் தொடங்கினான்.

நேரம் ஓடுவது அவனுக்கே கஷ்டமாக இருந்தது.

மேலும் நேரமாகக் கூடாது என்று நினைத்தான்.

திடீரென்று நிறுத்திவிட்டு, வினோத் கிளம்பினான்.

❖ ❖ ❖

காலை அலுவலகத்துக்குப் புறப்பட்டபோது வினோத்தின் மனம் முழுவதும் முறுவலாக மிதந்தது.

ஸ்கூட்டர் மிதந்து ஓடியது.

சாலையின் இருபக்கத்துக்கும் அழகு சேர்த்த மரங்கள் அவனைப் பிரமித்து பார்த்து விருட்டென்று ஓடின.

அதே நினைவோட்டத்தில் அதுபோன்ற சாலையில் வாழ்நாள் முழுவதுமே போய்க்கொண்டிருக்கலாம் என்று தோன்றியது.

அப்பா. . . காற்றுகூட என்ன பரவசமாக வீசுகிறது!

கண்ணை மூடிக் கொண்டுகூட ஓட்டலாம் என்று தோன்றியது. அவ்வளவு உல்லாசமாக உணர்வுகள் அவன் மீது வந்து பரவின.

இதெல்லாம் என்ன?

மனம், காரணத்தை நினைத்தது.

முதலில் இந்த வழக்கு அவனுக்குப் புதுமை!

ஏதோ வேண்டா வெறுப்பாக இதில் ஈடுபடப்போக, வரிசையாக எத்தனை இளமைகள் அவனைத் தொட்டு விட்டுச் செல்கின்றன.

ஆமாம்!

அத்தனையும் துள்ளும் இளமைகள்!

முதலில் ரதிபிரியா.

அடுத்து - சாந்தி. அவளும் துள்ளும் இளமைதான்.

மூன்றாவது - இந்த அகிலா!

ரதிபிரியா, 'பாப்' இசை என்றால் சாந்தி, தெம்மாங்கு.

அகிலா. . . அவள் அழகிய காவிய கவிதை!

இதுமாதிரி துள்ளும் இளமைகள் எதிர்பட்டால் எத்தனை வழக்குகளையும்கூட எடுத்துக்கொள்ளலாம்.

❖ ❖ ❖

அலுவலகத்திற்குள் நுழைந்து இருக்கையில் உட்கார்ந்தான்.

அருகில் தாரா இல்லை.

அவள் இருந்தால், அவனது பரவசங்களை அவள் கண்டிருப்பாள்.

அவள்தான் சூட்சும அறிவுக்காரி ஆயிற்றே!

ஏதாவது குதர்க்கமாகச் சொல்லி சிரித்திருப்பாள்.

அவள் அப்படிச் சொல்வதும் அழகுதானே.

திடீர் என்று இன்னொரு நினைவு ஓடியது.

அந்த சுதாகர் எழுதிய வரிகள்!

அத்தனையும் கவிதை வரிகள்.

அவைகளை இங்கே எடுத்து வந்து ஆற அமரப் படித்திருக்கலாம்.

ஆனால், அதற்கு வசதி இல்லாமல் போய்விட்டது.

எனினும், அவனுக்குக் கவலை இல்லை.

சுதாகர் எழுதிய கவிதை வரிகள் அவன் மனதுள் நிலைகுத்தி நின்றுவிட்டன.

ஒருவேளை அந்த வரிகளும்கூட தற்போது அவன் காணும் பரவசங்களுக்குக் காரணமோ?

சத்தம் கேட்டது.

திரும்பினான்.

அருகில் ஒரு உருவம் நின்றது அவனுக்குத் தெரியாது.

“தொந்தரவு பண்ணுகிறேனா?” என்றது இனிய குரல்.

திரும்பினான்.

ரதிபிரியா நின்றாள். அவள் கண்கள் கலங்கி இருந்தன.

“உட்காருங்க” என்றான் அவன்.

அவள் விழிகளிலிருந்து நீர் பொல பொல என்று உதிரத் தொடங்கியது.

10

'மர்ம' சாவிக்கொத்து

வினோத், காலையில் அலுவலகம் வந்தான். தாரா இல்லாதது ஏதோபோல் இருந்தது.

ஒன்று புரிந்தது. அன்றாட வாழ்வில் அதது இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால்தான் மனம் நிம்மதி அடைகிறது.

தாரா இப்போது இல்லாததை நினைத்தால் வருத்தம் படர்ந்தது.

திடீரென்று கால் அரவங்கள் கேட்டுத் திரும்பிப் பார்க்க, எதிரே ரதிபிரியா.

ரதிபிரியாவின் கண்களில் முத்துகள் போல நீர் உதிர்ந்தது.

வினோத்தின் மனம் தடுமாறியது.

"என்ன ரதிபிரியா! உட்காரு!" என்றான்.

அவள் உட்கார்ந்தாள். ஆனால் ஆசுவாசமாக சற்று நேரமானது.

இன்னும் அழுகைக்குறி முகத்தைவிட்டு நீங்கவில்லை. பையிலிருந்து எடுத்து, ஒரு உறையை அவனிடம் கொடுத்தாள்.

வினோத், அதன் உள்ளிருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தான். படித்தான்.

"அக்காவைத் தொடராதே! ஆபத்து!" என்று நீலநிறத்து டைப் எழுத்துகள் ஒரு வரியில் மினுங்கியது.

ஒருமுறைக்கு இருமுறை படித்தான். பிறகு, கடித உறையை எடுத்துப் பார்த்தான். ரதிபிரியாவின் விலாசம் இருந்தது.

தபால் முத்திரையைப் பார்த்தான். எதுவும் தெரியாமல் கலைந்து கிடந்தது.

கொஞ்சம் வற்புறுத்தலுக்குப் பிறகு ரதிபிரியா பேசினாள்.

"வீட்டைச் சுற்றி இரவில் அரவங்கள் கேட்கின்றன. நேற்று நடுஇரவில் சிகரெட்டு நெடி, தோட்டத்தில் காலடியோசை கேட்டது. கதவுகூட லேசாகத் தட்டப்படும் சத்தம் கேட்டது." ரதிபிரியா, பதற்றத்துடன் திக்கியவாறு கூறினாள்.

மொத்த சாராம்சத்தையும் புரிந்து கொண்டான், வினோத்.

"இந்த நேரத்தில் நீங்கள் எங்க வீட்டுக்கு வராதது வருத்தத்தைத் தருகிறது. அம்மா ஒரே புலம்பலாக இருக்கிறாள்" ரதிபிரியா கூறினாள்.

"இதோ வாரேன்" என்று எழுந்தான்.

வீட்டை அடைந்தார்கள்.

எங்கும் ஒருமுறை பார்வையிட்டான்.

சுற்றிவர ஆராய்ந்தான்.

முக்கியமாக தரைப் பகுதியில் அதிகக் கவனம் செலுத்தினான்.

வெகுநேரம் சிந்தனை வசமாக இருந்தான்.

ரதிபிரியா குடும்பத்தினர் கலவரம் அடைவதற்கு நியாயம் இருந்தது.

உள்ளேபோய் அவளது தாயாரைச் சமாதானப் படுத்தினான்.

தாயார் இன்னும் பதற்ற நிலையில்தான் இருந்தாள்.

"பயப்படாதீங்க! உங்களுக்கு ராத்திரி பாதுகாப்புத் தானே வேணும்? ஆள் அனுப்புறேன்!" என்றான்.

"ராத்திரி சரி. . . பகல்லே ஏதாவது நடந்துச்சுன்னா?"

"பயப்படாம இருங்க. . . அதையும் கவனிக்க ஏற்பாடு பண்ணுறேன். . ."

தாயாருக்கு ரத்த அழுத்தம் கூடியது. அறையில் படுத்துவிட்டாள்.

வினோத் உட்கார்ந்தான். எதிரே ரதிபிரியா. அவள் ஒரு நிலையில் இல்லை. கண் ஓரம் சோகம் தேங்கி இருந்தது.

வீட்டுக்குள் ஒரு பய உணர்ச்சி ஓடியது. அதன் துடிப்பை அவனால் உணர முடிந்தது.

வீட்டின் உணர்ச்சிக்கு ரதிபிரியாதான் தெர்மாமீட்டர்! முதலில் பார்த்தபோது எவ்வளவு சுறுசுறுப்பாக இருந்தாள்? இப்போது எப்படி ஆகிவிட்டாள். . .

இதற்கு ஏதாவது செய்ய வேண்டும்!

ஆமாம்! வினோத் அப்படித்தான் நினைத்தான்.

'இந்தக் குடும்பத்தின்மீது விரோதம் கொண்டிருப்பவர் யார்? என்ன காரணத்திற்காக?'

இரண்டு ஆண்டுக்கு முன் எந்தப் பிரச்சினையும் இருந்ததில்லை என்று ரதிபிரியா சொல்லியிருக்கிறாள்.

இப்போது திடீரென்று தொல்லைகள் முளைத்து விட்டன!

சுதாகர் வந்ததிலிருந்து இவை தோன்றத் தொடங்கி விட்டன.

சுதாகர்!

ஆமாம். அவன்தான் காரணம்.

அவனைப் பற்றிய மர்மம் விளங்கினால் போதும். மற்றவை சரியாகிவிடும்!

“ரதிபிரியா!” என்றான்.

மிருதுவாக, “உம். . . !” என்றாள்.

அந்தத் தொனி மிகவும் பலவீனத்தில் இருந்தது. அதன் ஈனமே இரக்கத்தை வரவழைத்தது.

அந்தக் கணத்தில் அவளை அள்ளிச் சீராட்ட மனம் விழைந்தது.

“புறப்படுகிறேன்! இனிமே இந்த வழக்குதான் என் தினசரி மூச்சு!”

“பிளீஸ். . . வினோத்! தினம் ஒருமுறை உங்களைத் தொடர்பு கொண்டாலாவது எங்களுக்கு நிம்மதி வரும்!” என்றாள், அவள்.

வாசலில் இறங்கினான்.

வீட்டின் இருபக்கமும் பார்த்தான்.

கால் மறுகியது. உள் உணர்வு சுற்றிவரப் பார்க்க வைத்தது.

வலதுபக்கத்தில் அந்தப் ‘பளிச்’ ஒளி கண்ணை இழுத்தது.

சூரிய ஒளிபட்டு ஏதோ பிரதிபலிப்பது தெரிந்தது. அருகில் போய் பார்த்தான்.

அந்தப் பிரகாசப் பொருள் அகப்படவில்லை. திரும்பி பழைய இடத்தில் வந்து நின்றான். ஒரு குறிப்பிட்ட கோணத்தில்தான் அந்தப் பொருள் சூரிய ஒளியில் பிரதி பலித்திருக்க வேண்டும்! அந்தப் பளிச் உடனே தெரிய வில்லை.

சற்று பிரயாசைக்குப் பிறகு கண்டுபிடிக்க முடிந்தது. இந்த முறை அதன் இலக்கை மனதில் நன்கு பதித்துக் கொண்டு போய்ப் பார்த்தான்.

ஒரு அடர்த்தியான கொடியிடையில் கொத்துச்சாவி கிடப்பது தெரிந்தது.

எடுத்துப் பார்த்ததில் சிறிது பெரிதாக 18 சாவிகள். அவற்றில் பாதி குரோமியம் சாவிகள். அவைகளில் ஒன்றுதான் சாய்வாக இருந்து மின்னி இருக்கிறது.

ரதிபிரியா அருகில் நிற்க, "இது உங்க வீட்டுச் சாவியா?" என்று கேட்டான்.

வாங்கிப் பார்த்தாள். "இல்லை." என்றாள்.

தொடர்ந்து, "இந்த டாலர்லே ஆர்.எம்.எம். என்று போட்டிருக்கு" என்றாள்.

பிறகு இருவரும் அங்கே செடிகளைத் துழாவினார்கள். ஒரு சிகரெட்டுத் துண்டு கிடைத்தது.

அதைக் காகித உதவியால் சுருட்டி எடுத்தான்.

"நல்ல அயல்நாட்டுச் சரக்கு" என்றான்.

"வினோத்! இந்த நெடி எனக்கு ஞாபகமிருக்கு. இதை யாராவது புகைச்சுக் காண்பிச்சா அடையாளம் கண்டு பிடித்துவிடுவேன்" என்றாள், அவள்.

ரதிபிரியா சொல்வது பிரமை இல்லை என்று புரிந்தது.

உண்மையில் இரவில் அங்கே யாரோ வந்திருக்கிறார்கள்!

வந்த இடத்தில் சாவிக்கொத்தை மறந்து நழுவ விட்டிருக்கிறார்கள்!

சிகரெட்டு துண்டையும் போட்டு இருக்கிறார்கள்.

"வந்ததுக்கு ஒரு விருந்து கிடைச்சிருக்கு!" என்றான், வினோத்.

"இதை வச்சு என்ன செய்வீங்க?" என்றாள், ரதிபிரியா.

"பார்ப்போம்" என்றான், வினோத்.

❖ ❖ ❖

அலுவலகத்துக்கு வந்த பிறகு நிறைய யோசித்தான்.

'சாவி திரும்பிக் கிடைக்கிறதா என்று ஒருவேளை இன்று இரவில், அந்தச் சாவியைத் தேடி வருவானா?'

'வரலாம்! காத்திருந்து பார்த்தால் என்ன?'

❖ ❖ ❖

இரவு பத்து மணிக்கு ஆயத்தங்களுடன் ரதிபிரியா இருக்கும் தெருப்பக்கம் சென்றான்.

அநேகமாக எல்லா வீடுகளுக்கும் காம்பவுண்டு இருந்தன.

பதுங்குவது பிரச்சினையாக இல்லை.

ஒருமுறை தெருவில் கவனத்துடன் சென்று ஆளில்லாத வீடு ஒன்றை குறித்துக் கொண்டான்.

பதினொரு மணி வரை பக்கத்துத் தெருவிலேயே இருந்துவிட்டு, அதற்கு மேல் ரதிபிரியா வீட்டுத் தெருவில்

நுழைந்தான். ஆளில்லாத வீட்டுக் காம்பவுண்டில் நின்று ரதிபிரியா வீட்டைக் கண்காணித்தான்.

நேரம் மெல்ல ஓடியது.

இருள் இறுகி எங்கும் நிசப்தம்.

இரண்டு மணி வரை எந்தச் சலனமும் இல்லை.

அதன்பிறகு ஒரு நிழல் நடமாட்டம் தூரத்தில் புலனாகியது. அந்த நிழல் மனிதன் எச்சரிக்கையோடு பாதி மறைந்து வருவது புரிந்தது.

ரதிபிரியா வீட்டை அடைந்ததும், அதன் கேட்டைத் திறந்து உள்ளே போவது தெரிந்தது.

வினோத், சின்ன பைனாகுலரை எடுத்தான். கண்ணில் பொருத்திப் பார்த்தான்.

அந்தப் பகுதியின் இருட்டு அடர்வை அது சற்று மிதமாக்கியது.

பளிச்சென்று பல அடையாளங்கள் தெரிந்தன. அந்த ஆசாமியின் நடுத்தர உயரமும், சற்று பரந்த தலையும் பார்வையில் பதிவாகின.

அவன் குனிவதிலிருந்து அந்த சாவிக்கொத்தைத் தேடுகிறான் என்பது நிச்சயமாயிற்று.

அவன், சிறிய டார்ச்சை உபயோகிக்கும் வெளிச்சமும் தெரிந்தது. அரைமணி நேரம் அந்த ஆள் தேடியிருப்பான்.

பிறகு வீட்டுக்கு வெளியே ஓரமாக ஒதுங்கி யோசிப்பது தெரிந்தது.

இரு பக்கமும் சந்தேகத்தோடு கண்காணிக்கிறான் என்று தோன்றியது.

பிறகு வந்த வழியே அவன் போக, வினோத், தன் இடத்தைவிட்டு வெளியே வந்து, எச்சரிக்கையாக அவனைப் பின்தொடர்ந்தான்.

அடுத்த தெருவில் அவன் திரும்பியதும் வினோத் வேகமாகச் சென்றான்.

எச்சரிக்கையாக திரும்பிப் பார்த்தான். அந்தத் தெரு சூன்யமாகிவிட்டது. வினோத்துக்கு அதிர்ச்சியாக இருந்தது.

'எங்கே மறைந்திருப்பான்?'

பொறுத்திருந்தான். ஆள் தென்படும் சுவடு இல்லை! இடதுபுறம் திரும்பும் இரண்டு சந்துகளில் ஒன்றில் அவன் புகுந்து போயிருக்க வேண்டும்.

❖ ❖ ❖

அடுத்த இரண்டாம் நாள் தினசரி பத்திரிகையில் விளம்பரம் ஒன்று வெளியாகியது.

ஆர்.எம்.எம். என்று பொறிக்கப்பட்ட எழுத்துக்களுடன், சிவானந்தம் சாலையில் ஒரு கொத்துச்சாவி கிடைத்துள்ளது. சொந்தக்காரர் கீழ்க்கண்ட விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சுந்தர்,
33, பஜனை கோவில் தெரு,
சென்னை - 38.

வினோத், நண்பன் சுந்தர் பெயரில் அந்த விளம்பரத்தைத் தந்திருந்தான்.

இரண்டு நாட்கள் யாரும் வரவில்லை.

மூன்றாம் நாள், இரவு பத்து மணிக்கு சுந்தர் வீட்டுக் கதவை ஒரு ஆள் தட்டினான்.

"சார்... என் சாவிக்கொத்துதான் காணாமப்போச்சு!" என்று உள்ளே நுழைந்தான்.

இந்த மாதிரி சரியான நேரத்தில் மேஜையிலுள்ள ரகசிய பொத்தானை அழுத்த வேண்டும் என்று திட்டம்.

சுந்தர் அதை அழுத்தினான்.

அடுத்த வீட்டில் மணி அடித்தது. அந்த வீட்டுக்காரர் உடனே வினோத்துக்கு போன் பண்ணினார்.

"உம். . . சாவியைக் கொடுங்க! சீக்கிரம்!" என்று அந்த ஆள் கேட்டான்.

''உங்க சாவிக்கொத்து என்பதற்கு என்ன அடையாளம்?" என்றான், சுந்தர்.

"ஆர்.எம்.எம். என்று போட்டிருக்குமே!"

"அதுதான் நாங்க விளம்பரத்திலே கொடுத்திருந் தோமே! வேறு ஏதாவது அடையாளம் சொல்லுங்க. . ."

"என்ன சொல்லணும்?"

"எத்தனை சாவி இருந்ததுன்னு சொல்லுங்க?"

"பதினெட்டு சாவிங்க!"

"என்னென்ன சாவி?"

"அட, கொடுங்க சார். . . இதையெல்லாம் எதுக்கு கேட்கிறீங்க?"

"இந்தாப்பா! அடையாளம் சரியாச் சொன்னாதானே கொடுக்க முடியும்?"

அந்த ஆள் இப்போது விறைத்துப் பார்த்தான்!

அவன் முகத்தில் ஒரு தீவிரம் ஏறியது.

11

என்ன அழகு...
எத்தனை அழகு?

சுந்தரின் மனம் குதிரை ஓட்டம் ஓடியது.

வினோத்தின் ஆத்ம நண்பன் அவன். வினோத்துக்கு உதவி செய்வதற்காக, பத்திரிகையில் கொத்துச் சாவியைப் பற்றி விளம்பரம் கொடுத்துவிட்டான்.

அதைத் தேடி ஆளும் வந்துவிட்டான். அதுவும் இரவு நேரத்தில் வந்திருக்கிறான்.

அவன் பெயர் மன்னாரு.

ஆளின் தோற்றத்தைப் பார்த்ததும்தான் சுந்தருக்கு குளிர் அடித்தது.

ஆள் படித்தவனல்ல; முகம் முண்டும் திண்டுமாக இருந்தது. மீசையில் நரைக் கலவை பாதி. கண்கள் சீறிப் பார்த்தன.

“கொடு மிஸ்டர்! சாவி என் சாவி!” என்றான்.

“கொடுக்கத்தான் போறேன். அதுக்கு முன்னாடி. . .” என்று சுந்தர் இழுத்தான்.

அப்படிச் சொல்லும்போதே அவன் யோசனை சிதறியது. ‘நான் கொடுத்த எச்சரிக்கை மணி அடுத்த

வீட்டு வழியாக வினோத்துக்குப் போய்ச் சேர்ந்திருக்க வேண்டுமே! அவன் சீக்கிரம் வரவேண்டுமே! வந்திருக்கும் ஆள் ஒரு மாதிரியாக இருக்கிறானே! பேச்சும் தோரணையாக. . .'

''மிஸ்டர்! சாவியைக் கொடுன்னா என்னமோ யோசிக்கிறியே? கொடுக்கப் போறியா இல்லையா?" கனத்த குரலில் சவால் விடுத்தான்.

"உம். . . உங்க பேர் என்னங்க? இதிலே விலாசம் எழுதுங்க!" என்றான் சுந்தர்.

"நீ எழுதிக்க!" என்றான் மன்னாரு, கட்டளையாக.

"நானா எழுதணும்?"

சுந்தருக்கு உதறியது.

எந்த விநாடியும் ஆபத்து என்று தெரியும். இன்னும் உதவி வரவில்லையே! அவன் கொடுத்த எச்சரிக்கை மணி அடுத்த வீட்டில் ஒலிக்கவில்லையா?

"பேர் என்ன?"

"மன்னார்சாமி."

"ம...ன்...னா...ர்...சா...மி..."

''நீ என்ன படிக்காதவனா? எழுத்துக்கூட்டி எழுதுறியே. . ."

"இல்லை. . . சரியா எழுத வேண்டாமா? இனிஷியல் என்ன?"

"இன்னாது?"

"இனிஷியல்."

"அதெல்லாம் நமக்குக் கிடையாது."

"சரி! அப்பா பேர் என்ன?"

"ஏய்யா. . ." என்று வார்த்தையை நிறுத்தி கண்ணை வெட்டினான், மன்னாரு. "சாவியைக் கொடுன்னா என் அப்பன் பேரு, பாட்டன் பேரு எல்லாத்தையும் கேட்கிறியே!"

"தெரியணுங்க!"

"நீ என்ன சொத்தையா எழுதிக் கொடுக்கப்போறே?"

"பரவாயில்லை. . . ஊர்ப் பெயரையாவது சொல்லுங்க!"

"பந்தலூர்."

"ப...ந்...த...லூ...ர் எங்கே இருக்கு?"

"என் தலை மேலே!"

சுந்தர் அசந்து பார்த்தான்.

"வீட்டு நம்பராவது சொல்லுங்க!"

"நாற்பத்தெட்டு."

"தெரு பேரு?"

"அசோகன் தெரு, மஸ்தான் தோட்டம், செல்லம்மா நகர்."

"உம். . ." சுந்தர் பேனாவை உருட்டினான்.

"அவ்வளவுதான்! சாவியைக் கொடு!"

மன்னார்சாமியின் ஆத்திரம் 'பட் பட்' என்று வார்த்தையாக வெடித்தது.

சுந்தருக்கு அதுக்குமேல் பொழுதுபோக்கத் தெரியவில்லை.

எழுந்தான். உள்ளே போனான்.

அடுத்த அறையில் நின்று ரொட்டி மாவு பிசைவது போல் கையைப் பிசைந்தான்.

ஜன்னல் வழியாக காதை வைத்தான்.

ஸ்கூட்டர் சத்தம் கேட்கவில்லை? வினோத் ஏன் வரவில்லை?

திகைப்பில் நின்றுகொண்டிருக்க, 'கும்' என்று பிடரி பக்கத்தில் ஒரு இடி இடித்தது. கண்ணுக்குள் மத்தாப்பு சொரிந்தது!

சுந்தர் இரண்டு சிலுக்குச் சிலுக்கி தரைமீது சாய்ந்தான்.

'தொம்' என்று சத்தம்.

கண்கள் பொறி கலங்கின. நடப்பது ஒரு வலை வழியாகத் தெரிவதுபோல் மங்கித் தெரிந்தது.

மன்னாரு உள்ளே வந்திருந்தான்.

அவன்தான் சுந்தர் பிடரியில் முஷ்டியால் மோதியிருந்தான்.

இப்போது அலமாரியைத் திறந்து கொண்டிருந்தான்.

ஒவ்வொரு தட்டிலும் கொத்துச் சாவியைத் தேடிக் கொண்டிருந்தான்.

முதல் தேடலில் கண்டுபிடிக்க முடியவில்லை.

பிறகு ஒவ்வொரு தட்டின் சாமான்களையும் கீழே தூக்கிப் போட்டான்.

அலமாரி எல்லாம் காலி.

கொத்துச்சாவி கண்ணில் படவில்லை.

அலமாரிக்குள் இருட்டு!

மன்னாரு இப்போது கையை விரவித் தேடத் தொடங்கினான்.

ஒன்று இரண்டு நிமிடம் விரயமாகியது.

பிறகு, 'கிலுங்' என்ற உலோக இரைச்சல்! மன்னாருவின் முகம் பளிச்சிட்டது.

கையில் கொத்துச் சாவியை எடுத்தான்.

கீழே சிதறி இருக்கும் பொருள்களைத் தாண்டி வெளியே எகிறினான்.

கண்கள் திறந்திருந்தும், சுந்தர் மனதில் அந்தக் காட்சி மங்கலாகப் பதிந்தது.

உள்ளே மூளை இன்னும் சரியாக வேலை செய்யவில்லை.

அரைத் தூக்கத்தில் இருப்பது போலிருந்தது.

அப்போது. . .

ஏதோ சத்தம் கேட்கிறதே! ஸ்கூட்டரா?

கேட்கும் உணர்வை அதிகரிக்க சுந்தர் முனைந்தான். முடியவில்லை. எல்லாமே மழுங்கிக் கேட்டது.

❖ ❖ ❖

அரை மணிக்குப் பின்தான் முழு நினைவு வந்தது.

கண்களை மலர விழித்தான்.

வினோத் அவன் முன் நின்று ஒரு சோகப் புன்னகையை நழுவவிட்டான்.

"சாரி சுந்தர்! தாமதமாயிடுச்சு."

சுந்தர் எழுந்திருக்க முயன்றான்.

வினோத் அவனை எழுப்பி நாற்காலியில் உட்கார வைத்தான்.

சுந்தரின் பார்வை மூலையில் விழ, அங்கே கயிற்றால் கட்டப்பட்டுக் கிடந்த உருவம் யாருடையது? மன்னாருடையதுதான்.

ஆ. . . ! அகப்பட்டுக்கிட்டானா?

அவனை மேஜர் மாணிக்கின் தோட்ட வீட்டுக்கு அப்புறப்படுத்தினார்கள்.

அங்கே இதுபோன்ற நபர்களை அடைத்து வைக்க, பாதுகாப்பு அறை இருந்தது.

மன்னாருக்கு அங்கே சரியான பூஜை.

அவன் யாருடைய ஆள் - அவனுக்குப் பின்னால் யார் யார் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள எல்லா வழிகளையும் பயன்படுத்த வேண்டி வந்தது.

❖ ❖ ❖

மறுநாள் மாலை - மன்னாரு கொடுத்த விலாசத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, அந்த அசோகன் தெருவில் நாற்பத்தெட்டாம் எண்ணை அணுகினான்.

அப்படி ஒரு நவீன தெரு இருப்பது வினோத்துக்குத் தெரியாது.

வரிசையாக புதுமை வீடுகள்... சுற்றித் தோட்டங்கள்...

48ஆம் எண் தனி ஒயில்! அதன் கட்டிடம் கலை நேர்த்திக்கு அர்ப்பணம்.

வாசலில் அழகிய வீனஸ் சிலை. . . பிரசித்திபெற்ற பிரதிபலிப்பாக இருந்தது

'யார் கண்டார்கள். . . இதுவே கடத்தல் சிலையோ என்னவோ!'

வீனஸ் பெண்ணின் துகில் வழுவி இடைக்குக் கீழே போய்க் கொண்டிருந்தது.

சற்று நின்று பார்த்தால் அந்த ஆடை சிறிது நேரத்தில் வழுவிவிடும்போல் ஒரு பாவனை. அவனை அங்கேயே நிற்கும்படியும் செய்தது.

சலவைக்கல்தான் அது!

அதன் தத்ரூபத்தைப் பார்க்கும்போது, ஏற்கனவே சிற்பி அவளது நிர்வாணத்தைச் செதுக்கிவிட்டு, அதன்பிறகு துகிலைச் செதுக்கியிருக்கிறான் என்று மனம் பைத்தியக்காரத்தனமாய் நினைத்தது.

"என்ன அப்படி ரசிச்சுப் பார்க்கிறீங்க!" என்று ஒரு கனத்த குரல் பின்னால் மோதியது.

திரும்பினான்.

ஒரு பருமன் நின்றிருந்தான்.

வினோத்துக்கு உள்ளே ஒரு எச்சரிக்கை கேட்டது

"பீட்டர் வீடு இதுதாங்களா?" என்றான்.

"பீட்டரா?" என்று இழுத்தார் அந்த பருமன்.

"இது நம்பர் 18 தானே?"

"இல்லை 48."

உண்மையில் அவனுக்கு வேண்டிய முகவரி 48 தான்! இப்போது வேண்டுமென்றே 18 என்று சொல்லி அந்த வீட்டையும், பருமன் ஆசாமியையும் ஒரு நோட்டம் பார்த்துவிட்டு, "சாரி" எனச் சொல்லி வெளியேறினான்.

வாயிலில் தள்ளி நிறுத்தியிருந்த ஸ்கூட்டரைக் கிளப்பி விரைந்து போனான்.

இரண்டு தெருக்களைச் சுற்றினான். திரும்ப அந்த அசோகன் தெரு முனைக்கே வந்து நின்றான்.

அரைமணி நேரம் காத்திருந்தான். 48ஆம் நம்பரி லிருந்து கார் ஒன்று வெளியே வழுவியது. அது சற்று தூரம் போனதும், அதைப் பின்தொடர்ந்தான்.

வெளிச்சத்தை அணைத்து விட்டான்.

அந்தக் கார் எட்டாவது தெருவுக்குச் சென்று, மூன்றாம் குறுக்கு வீதியில் புகுந்து ஒரு வீட்டு ஓரம் நின்றது.

வினோத் தூரத்தில் நின்றுவிட்டான். அங்கேயே வெகுநேரம் காத்திருந்தான்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அந்தக் கார் மீண்டும் புறப்பட்டது. அது போகும்வரை காத்திருந்து, பிறகு ஒரு பொடிநடையில் அந்தக் குறிப்பிட்ட கட்டிடத்தை அணுகினான்.

வாசலில் மங்கிய பெயர்ப் பலகை தொங்கியது.

அந்த இருட்டு நேரத்தில் அதை வாசிப்பது கடினமாக இருந்தது.

'கருணை இல்லம்' என்று பெயரைப் புரிந்து கொண்டான்.

அதன் கீழே 'மன வளர்ச்சி குன்றியவர்கள் இல்லம்' என்று இருந்தது.

பல நினைவுகள் தோன்ற, உள்ளே நுழைந்தான்.

அவன் எதிர்பார்த்ததுபோல் அந்த இல்லம் ஒரு திறந்த வீடு போலக் கிடந்தது.

உள்ளே போனதும் இடதுபுறம் அலுவலக அறை, மின்விசிறி ஓடிக் கொண்டிருந்தது. ஆனால், யாருமில்லை. ஒரு மந்த வெளிச்சம் அறையை லேசாகத் துலக்கியது.

அடுத்த அறை, எல்லாம் காலி!

மையத்தில் நின்று பார்த்ததில் வெகுதூரம் தள்ளி வெளிச்சம் தெரிந்தது.

பின்புறம் இன்னொரு கட்டிடம் இருப்பது தெரிந்தது.

இல்லத்தின் வியாபிப்பு இவ்வளவு பெரியதாக இருக்கும் என்று அவன் நினைக்கவில்லை.

சற்றுநேரம் நிற்க, அந்தக் கட்டிடத்தில் சில சிறுவர் - சிறுமிகளும், ஆயாக்களும் நடமாடுவது தெரிந்தது.

அவன் பார்த்திருக்க, அவன் அருகே திடீரென்று வந்த ஒரு பெண் "யாருங்க?" என்றாள்.

"என் பெயர் சரவணன்! ஒரு அட்மிஷனுக்காக வந்திருக்கேன்" என்றான்.

"அதென்ன இந்த நேரத்திற்கு வந்திருக்கீங்க?" என்று சொன்ன அந்தப் பெண், அலுவலக அறைக்குள் நுழைந்தாள்.

26261

அவளைப் பின்தொடர்ந்தான், வினோத்.

உள்ளே சென்று உட்கார்ந்தான்.

வினோத் அவளை நிமிர்ந்து பார்த்து 30-28-32 இருக்கும் என்று மனக்கணக்குப் போட்டான்.

நல்ல திடமான உடம்பு, கொஞ்சம் மாநிறம், புஷ்டியான மார்புகள் மேல் சேலை விலகி அடிக்கடி தங்கள் பருமனைக் காட்டிக்கொண்டிருந்தன!

இடது கையில் ஒரு சின்ன கடிகாரம்.

மேஜை மேலே பல துண்டுப் பிரசுரங்களை அவள் எடுத்துப் போட்டாள்.

"படிச்சுட்டு நாளைக்கு. ." என்று அவள் முடித்தபோது, போன் ஒலித்தது.

போனை எடுக்கப் போனவள், நிறுத்தினாள்.

"சரி, அப்புறம் பார்க்கலாமா?" என்று அவனைக் கிளப்பினாள்.

அவனும் உடனே வெளியே வந்தான்.

வராந்தாவில் போவதுபோல் போய்விட்டுத் திரும்பி அவள் அறையின் வாசல் ஓரம் நின்றான்.

உள்ளே அவள் போனில் பேசுவது கேட்டது.

வினோத்தின் திகைப்பு விர்ர்ரென்று கூடியது.

ஐ௦௵

12

புவனா ஒரு கேள்விக்குறி!

மனவளர்ச்சி குறைந்தவர்கள் இல்லத்தின் வராந்தாவில் வினோத் நின்றிருந்தான்.

உள்ளே அதன் மானேஜர் புவனா போனில் பேசுவது காதில் கேட்டது.

அதில் உன்னிப்பாகும்போது, வராந்தாவில் 'ஷ்ஷ்...' என்று காலடி ஓசை. திரும்பினான்.

செவிலிப் பெண், தன் சேலை முந்தானை காற்றில் பறக்க வந்து கொண்டிருந்தாள்.

வினோத், விருட்டென்று திரும்பினான். ஏதும் அறியாதவன் போல் வராந்தாவில் நடக்கத் தொடங்கினான்.

செவிலிப் பெண்ணும் தன் வயப்பட்ட பரபரப்பில் இருந்தாள்.

அவள் மானேஜர் அறைக்குப் போனதைப் பார்த்ததும் விருட்டென்று வினோத் வந்தான். அறை வாசலில் மறைவாக நின்றான்.

உள்ளே மானேஜர் புவனா திடுதிடுப்பில், "ஏ. பி. கேட்கிறாங்க?" என்றாள்.

அது இரத்த வகையை குறிப்பது. வினோத்துக்குத் தெரியும்.

"வழியில்லை" என்றாள் செவிலி.

"என்ன இப்படிச் சொல்றீங்க?" என்ற புவனா, பிறகு போனில் பேசுவது கேட்டது.

"அலோ. . ."

". . . . ."

"நாளைக்குத்தானே வேணும்?"

". . . . ."

"இப்பதாங்க எடுத்திருக்கோம். உடனே கிடைக்காது."

". . . . ."

"அத்தனை பாட்டிலும் கிடைக்காது."

". . . . ."

"உடனே உடனே எடுக்கிறது சரி இல்லைங்க."

". . . . ."

"நாளைக்கு வாங்க. காலையில பதினொரு மணிக்கு!"

ரிசீவரை வைத்தாள்.

வினோத் வெளியே வந்தான். ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

பல யோசனைகள் அவனுள் குவிந்தன.

சுதாகர் மரணம் -

விஜயபிரியா மரணம் -

ரதிபிரியாவுக்கு எச்சரிக்கை -

அவள் வீட்டில் கொத்துச் சாவி -

அதை வாங்க வந்த மன்னாரு -

அவன் கொடுத்த விலாசத்தில் அந்தக் கொழுத்த மனிதர். . .

இந்தச் சங்கிலியில் கடைசிக் கண்ணியாக வந்த 'கருணை இல்லம்.'

இத்தனைக்கும் தொடர்பு இருக்கிறதா?

சம்பந்தம் இல்லாதது போல இருக்கிறதே?

ஒருவேளை, ஏதாவது கண்ணி கிடைத்தால், இவை எல்லாமே அதனுடன் ஒட்டிக்கொண்டு விடுமோ. . . ?

❖ ❖ ❖

வழியில் டெலிபோன் பூத் ஒன்று பளிச் வெளிச்சத்தில் கொட்டை எழுத்துகளோடு தெரிந்தது.

ஸ்கூட்டரை சுருக்கென்று நிறுத்தி இறங்கினான்.

அலுவலகத்துக்குப் போன் செய்தான்.

"அலோ. . . தாரா" என்றான்.

"ராத்திரி இத்தனை மணிக்கு சாவகாசமாப் பேசுறீங்க?" என்றாள், தாரா.

"இங்கே நேரமாயிடுச்சு. . ." என்று இழுத்தான், வினோத்.

"உடனே வாங்க! முக்கியமான செய்தி இருக்கு!" என்றாள், தாரா.

அவ்வளவுதான்! ஸ்கூட்டரில் ஏறி இருட்டில் துடிதுடிக்கப் பறந்தான்.

அலுவலகம் முன் இறங்கினான். அவசரமாக மேலே ஏறி இருக்கையில் போய் உட்கார்ந்தான்.

தாராவுக்கு மாடியில்தான் தங்கும் அறை. அவன் வந்ததும் இறங்கி உள்ளே வந்தாள்.

இரவு உடை போட்டிருக்க, காற்று அதில் மெல்லிதாக விளையாட, தாராவின் உள்மேனி அரசல் புரசலாக அங்கே இங்கே ஜாடை காட்டியது.

கம்ப்யூட்டர் எதிரே அவள் உட்கார்ந்தாள்.

"ராமநாதன்னு ஒரு ஆள் இருக்காரா?" என்றாள், அவள்.

"ஆமா."

"அவரைப் பற்றி ஒரு பெண் பேசினா!"

"என்ன விஷயம்?"

"முதல்லே ராமநாதன் யாருன்னு சொல்லுங்க."

"இந்த சுதாகர் வழக்கு தெரியுமில்லே? அவர் அண்ணன்தான் அந்த ராமநாதன்! போன்லே அந்தப் பெண் என்ன சொல்லிச்சு?"

"ராமநாதனுக்கு தம்பியைக் கண்டால் பிடிக்காது! ராமநாதனை சாதுன்னு நினைக்காதீங்க! அவரைப் பற்றி விசாரணை பண்ணுங்கன்னு சொல்லிச்சு."

"யார் அவள்?"

"கேட்டேன். போனை வச்சுடுச்சு."

"அனாமதேயமா?"

"ஆமா."

"எத்தனை வயசு இருக்கும்?"

"இருபது போல இருக்கும்."

"படிச்சதா? படிக்காததா?"

"படிக்காதது மாதிரிப் பேசிச்சு."

"செயற்கையா இருந்திச்சா?"

"கொஞ்சம் கொஞ்சம். . ."

"வேற ஏதாவது குறிப்பிடும்படியா. . . ?"

"அந்தப் பெண் சொல்றது கொஞ்சம் உண்மையாத் தோணுது."

"ஏமாந்துட்டீங்களா?"

"நிச்சயம் இல்லை. நான் ஏன் ஏமாறணும்?" என்றாள், தாரா.

"அவள் பேச்சைப் பதிவு செய்தீங்களா?"

"இல்லை. . . தங்கும் அறையில் இருந்தேன். பதிவு பண்ண முடியலை."

"அடப்பாவமே!"

"நிச்சயம் அந்த ராமநாதனைப் பற்றி விசாரியுங்க! ஏதாவது கிடைக்கலாம்."

"சரி. . . செய்யுறேன்."

❖ ❖ ❖

மறுநாள் காலை -

'கருணை இல்லம்' நினைவுக்கு வந்தது.

காலை பத்து மணிக்கு மானேஜர் புவனா வரச் சொன்னாள்.

முன்னாடி போய்விடுவோம் என்று நினைத்தான்.

போகும்போது தெருவைச் சுற்றி கவனிப்போடு பார்த்துச் சென்றான்.

9-50க்கு 'டாண்' என்று ஆஜர் ஆனான்.

உள்ளே நுழைந்தபோது புவனா பேசிக் கொண்டிருந்தாள்.

அவளது அறை வாசல் பெஞ்சில் வினோத் உட்கார்ந்தான். பார்வையாளர்களில் இரண்டு வயோதிகர்கள் இருந்தார்கள்.

அவர்கள், அவனைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

அவரவர் கவலையில் மூழ்கி இருந்தார்கள்.

வினோத் எழுந்து, மானேஜர் புவனா அறைப் பக்கம் மறைவாக நின்றான்.

உள்ளே அவள் பேச்சு கேட்டது.

"சரிங்க! சரிங்க!" என்று குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

காதில் சீராகக் கேட்கும் தூரத்தில் நின்றான். அவன் பார்வைக்கு அந்தத் தூரத்துக் கட்டிடம் பட்டது. அதில் சிறுவர் - சிறுமியர் இங்கும் அங்கும் அலைவது தெரிந்தது.

அவர்களிடம் ஆயாக்கள் சத்தம் போட்டு கட்டளைகள் வழங்குவது கேட்டது.

"கொத்துச்சாவி இல்லையே!" என்றது புவனாவின் குரல்.

"அது இல்லாமத்தானே ரெண்டு நாளாத் தவிச்சுட்டிருக்கோம். ஏ.சி. அறைக்குள்ளே போக முடியலே. இரத்தம் அங்கேதான் இருக்கு."

"இரத்தம் ரொம்ப அவசரம்!" - இது அவள் முன்னால் நின்ற ஆண் பேசினான்.

"புரியுது! எங்கிட்டே இருப்பு இருக்கு! ஆனா, அதை எடுக்க முடியலியே!"

"சாவி எங்கே போச்சு?"

"சாவியைத் தொலைச்சுட்டாரு."

"யாரு?"

"கிரி!"

"அப்படியா! ஒரு சாவியா இருந்தா இப்படித்தான் தொலைஞ்சு போகும்."

"சார். . . ஒரு சாவி, ரெண்டு சாவி இல்லே சார்! பதினெட்டு சாவி, அந்த கொத்துச் சாவிதான் போயிடுச்சு."

"தொலைச்சுட்டாரா?"

"ஆமாம்! அதைத்தான் சொல்றேன்."

"கிடைச்சுதா?"

"கிடைச்சுரும் கிடைச்சுரும்னு மூணு நாளாச் சொல்லிட்டு இருக்காரு!"

"அப்போ மாற்றுச் சாவி போட வேண்டியதுதானே?"

தொலைபேசி ஒலித்தது.

"கருணை இல்லம்."

". . . . ."

"அந்த குரூப் இரத்தம் எடுக்கலே?"

". . . . ."

"இன்னிக்கு எடுக்கிறோம். நாளைக்குக் காலையில் கொடுக்கிறோம்!"

ரிசீவர் வைக்கப்படும் சத்தம் கேட்டது.

'கொத்துச்சாவி இந்த இல்லத்துடையது என்றால், ஏன் கிரி அதைத் தன் பொறுப்பில் வைத்திருக்கிறார்?'

'அதை எப்படி ரதிபிரியா வீட்டுத் தோட்டத்தில் தொலையவிட்டார்?'

'அந்தச் சாவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏன் மன்னாரை அனுப்பி வைத்தார்?'

வினோத் பலவாறாக யோசித்தான்.

இந்தச் சாவியில் ஏதோ மர்மம் இருக்கிறது.

சாவிக்குச் சொந்தக்காரர் யார் என்று வெளியே தெரியக்கூடாது என்ற எண்ணம் இருக்கலாம்.

ஏன் தெரியக்கூடாது?

இதுதான் ஒருவித "கருணை இல்லம்" ஆயிற்றே! இதில் மறைப்புக்கு என்ன அவசியம்?

"அப்போ நான் என்ன செய்யலாம்?" என்று உள்ளே குரல்.

"நீங்க நாளைக்கு வாங்க! அதுக்குள்ளே என்ன செய்யுறார் பார்ப்போம்."

ஆள் வெளியே வருவது தெரிந்தது. வினோத் அவசர மாக பார்வையாளர் பெஞ்சில் அமர்ந்தான்.

ஒரு நடுவயது ஆள் வெளியேறினார். கண்ணியமாகத் தோன்றினார்.

நேராக வாசலுக்குப் போய் ஒரு மோட்டார் சைக்கிளில் ஏறினார். 'டுர்ர்ர்' என்று சீறிக்கொண்டு போனார்.

இந்த ஆசாமி. . .

வினோத் மனதுக்குள் நினைவுகள் ஓடின.

அடுத்த கணம் சட்டென்று எழுந்தான். வெளியே போக முயல,

"மிஸ்டர்" என்று குரல் கேட்டது. வினோத் திடுக்கிட்டு நின்றான்.

ஜ௦௸

13

புரியாத புதிர்!

மோட்டார் சைக்கிளில் அந்த ஆசாமி புறப்பட்ட நேரம் "மிஸ்டர்!" என்ற குரல் கேட்டு நின்றான், வினோத்.

குரலில் அதிகார வர்க்கத் தொனி மிளிர்ந்தது.

மனநோய் இல்லத்து மானேஜர் புவனா எதிரில் நின்றாள்.

"நீங்க யாரு?" என்றாள்.

திகைப்புடன் வினோத் சொன்னான். "நேத்து வரச்சொல்லி இருந்தீங்க. . ."

"ஓ! வாங்க. . . !"

இருவரும் உள்ளே போனார்கள்.

"விண்ணப்பம் பூர்த்தி செஞ்சீங்களா?"

"ஆமா" என்ற வினோத் தனது கைப்பையிலிருந்து அதை எடுத்துக் கொடுத்தான்.

கவரிலிருந்து விண்ணப்பத்தை உருவிப் பார்த்தாள்.

"உங்க பையனா?"

"ஆமா!"

"சேர்க்கலாங்க. நாளைக்கு பணத்தோட வாங்க!"

"ரொம்ப நன்றிங்க!" தழுதழுக்கக் கூறினான்.

பிறகு தொடர்ந்தான், "அதுக்கு முன்னாடி எனக்கு ஒரு விஷயம் தெரியணும் மேடம். இங்கே சாப்பாடு எல்லாம் எப்படி?"

"சாப்பாடா? ஓ! பாருங்களேன். என்கூட வாங்க" என்றாள்.

"இல்லை. பரவுாயில்லை. . ." என்று இழுத்தான்.

"பரவாயில்லை வாங்க! நீங்க சாப்பிட்டுப் பார்த்தா நாலு பேர்கிட்டே சொல்வீங்க!" என்றவள், உள்ளே உணவகத்துக்கு அழைத்துப் போனாள்.

'கமகம' என்று சமையல் மணம், மனதை இழுத்தது.

உள்ளே நுழைந்து பார்த்ததும் ஏதோ கல்யாணச் சாப்பாடு நடப்பது போல இருந்தது.

"வாங்க இப்படி!"

உள்ளே அவனை மேஜைகளுக்கு இடையே கொண்டு போனாள்.

ஒரு கூட்டு, இரண்டு கறி, வடை, ஜாங்கிரி! அத்தனையும் அவன் கண்ணை வெட்டின.

ஒவ்வொரு சிறுவனிடமும் ஆயாக்கள் பேசி, 'அது வேணுமா. . . இது வேணுமா. . .' என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அங்கே கூடை கூடையாக இருந்த உணவுப் பொருட்கள் அவனை அதிசயத்தில் ஆழ்த்தின.

"நல்ல சுத்தமான எண்ணெய், நெய்யில் செய்த பண்டங்கள் மட்டும்தான் கொடுக்கிறோம். தினம் இனிப்பு, பால் உண்டு."

"பிரமாதம்!"

''இன்னும் பழம்! வெறும் வாழைப்பழம்னு நினைச்சீங்களா?"

"இல்லை. . ."

"ஆப்பிள்களும், ஆரஞ்சும் சர்வ சாதாரணமாகக் கொடுப்போம்."

"இப்படி சாப்பிட்டா உடம்பு என்ன ஆவது?"

"உங்க பையன் இங்கே வரட்டும். . . அப்புறம் அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது!"

உண்மையில் அவன் அந்த சிறுவர் - சிறுமிகளைப் பார்த்தபோது புஷ்டியாக இருப்பதை உணர்ந்தான்.

"தினம் காலை, மாலையிலே தேகப் பயிற்சி."

"அடேயப்பா. . . !"

''அதிக எடை விடுறதில்லே! குறையவும் விடுற தில்லை!"

"அப்படியா?"

"தினம் குழந்தைகளை எடை பார்க்கிறோம். அதைக் கம்ப்யூட்டர்லே கொடுத்து. . ."

"அது என்ன செய்யுது?"

''எந்தக் குழந்தை எடை அதிகம், குறைன்னு காண்பிக்கும். உடனே அந்தப் பையனுக்கு மட்டும் சிறப்பு கவனம்."

வினோத் உள்மனம் ஆர்ப்பரித்தது.

இங்கே அவன் காண்பதெல்லாம் பொய்யா, மெய்யா? இவ்வளவு மெச்சத் தகுந்தவிதத்தில் நடத்துகிறார்களே. . . இவர்கள் உண்மையில் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டுமே!

"அப்புறம் டாக்டர் வருவாரு. . ."

"உம். . ."

"மனநோய் டாக்டரும் வருவாரு. . ."

"அவருமா. . . ?"

"ஆமாம். பசங்க மனநலத்தைக் கவனிச்சுப்பார். அப்புறம் பிரார்த்தனைக்கு ஒரு சுவாமிஜி!"

"என்னாலே நம்பவே முடியலியே. . ."

"முடியாது சார்! இந்த நிறுவனத்தை நடத்துற கிரி அவ்வளவு தாராள மனசு உள்ளவர்."

"ஒத்துக்கிறேன்."

"நீங்க கொடுக்கிற 500 ரூபாய்க்கு ஒருவேளைச் சாப்பாடுகூட போட முடியாது."

"சரி மேடம்! கிரி ஏன் இப்படிச் செய்யுறாரு?"

"சார்! அவர் நிறைய பணம் சம்பாதிச்சுட்டார்!"

"ஓ. . . !"

"அவருக்கு ஒரு புத்திகுறைவான மகன் இருந்தான். ஒரே மகன்!"

"பாவம்!"

"அவன் இறந்துட்டான்."

"அதனாலே இந்த அமைப்பை உண்டாக்கினாரா?"

"ஆமா! அவன் நினைவா உண்டாக்கினார். இன்னும் பலதை உங்களுக்குச் சொல்லணும். நேரமில்லை! நான் வெளியிலே போகணும். . . உங்க பையனை எப்போ அழைச்சிட்டு வர்றீங்க. . ."

"நாளைக்கு. . ."

வினோத் வெளியே வந்தான். தலை கிறுகிறுத்தது. உண்மையில் இவ்வளவு சிறப்பாக ஒரு விஷயம் நடக்கிறதா? நம்பவே முடியவில்லையே?

மனதில் பெரிய மகிழ்ச்சியோடு போக, அதே நேரம் அவனது சந்தேக மனம் அரித்தது.

'ராத்திரி பாரேன்' என்று சீண்டியது.

பார்க்க வேண்டியதுதான்.

ராத்திரி பத்தரைக்குத் திரும்பி வந்து அந்த இல்லத்தின் முகப்பை எட்டினான். பக்கத்துச் சந்தில் பார்வை இழுபட்டது.

ஒரு வேன் சாதுவாக நின்றது. 'அருணா மருத்துவ மனை' என்று அதில் எழுதியிருந்தது.

வேனின் பின்பகுதி அழகிய அலுமினியத்தால் மினுக்கியது.

அந்த இரவு நேரத்தில் ஆள் அரவம் எதுவுமில்லை. வினோத் சந்தடியின்றி உள்ளே நுழைந்தான். படிக்கட்டுகள் வழிகாட்டின. உள்ளே போனதும் மாடிக்கு ஒரு படி வரிசை பிரிந்தது.

இருபுறமும் கவனத்துடன் பார்த்தபிறகு படிகளில் ஏறினான். அவை மாடியில் கொண்டுவிட்டன.

உள்ளே நுழைய அடுத்த கதவு மூடியிருந்தது. அருகே ஜன்னல்! அதில் உட்புறம் திரை! உள்ளே பளிச்சென்று வெளிச்சம் தெரிந்தது.

கண்களை அழுந்தப் பொருத்திப் பார்த்தான். முதலில் எதுவும் தெரியவில்லை. அடுத்த இடுக்கு, ஒரு காட்சியைக் காட்டியது.

'மருத்துவமனையா இது?'

டாக்டர் ஒருவரும், இரண்டு நர்சுகளும் இருந்தார்கள்.

மேஜை மீது ஒரு பையன் படுத்திருந்தான்.

சில விநாடிகளில் அங்கே நடப்பது என்ன என்று தெரிந்தது.

பையனிடமிருந்து ரத்தம் எடுத்துக்கொண்டிருந்தார்கள்.

'ஓகோ! ஏதோ ஒரு நல்ல காரியம் நடக்கிறது' என்று நினைத்தான்.

பார்வை அடுத்த இடுக்கில் மற்றொரு மேஜையில் விழுந்தது.

அங்கேயும் அதே விவகாரம்.

இன்னொரு பையனிடமிருந்தும் ரத்தம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

மனசில் ஒரு 'சுருக்' தைத்தது.

சிறுவர்கள் மனவளர்ச்சியில் குறைந்தவர்கள். எட்டு பத்து என்று வயதுகள் இருந்தாலும், மன வளர்ச்சி ஐந்து வயதுக்குத்தான் இருக்கும். இவற்றில் பலர் உலகத்திலிருந்து சற்றே வேறுபட்டவர்கள்.

இவர்களிடமிருந்து ரத்தம் எடுக்கலாமா? இவர்களது பெற்றோரின் அனுமதி பெற்றிருப்பார்களா?

ஒரு வீச்சில் அத்தனை விஷயங்களும் மனதில் ஓட, சிறிது சிறிதாக எல்லாம் தெளிவாகிவிட்டன.

அந்த 'கருணை இல்லம்' கருணைக்காக நடத்தப்படவில்லை. ரத்த வியாபாரத் தலமாக நடத்தப்படுகிறது.

மனவளர்ச்சி குன்றிய சிறுவர் - சிறுமியர்களை இங்கே சேர்த்துக் கொண்டு, அவர்களுக்குப் புஷ்டியாக

உணவும் பழமும் அளித்து, பிறகு அவர்களிடமிருந்து ரத்தத்தைக் கறந்து கொள்கிறார்கள்.

அதை விற்கிறார்கள் போலும்!

போனில் பேசிய பேச்சு எல்லாம் ரத்த வியாபாரப் பேச்சே!

'என்ன உயர்வாக நினைத்தேன்? எத்தனை தாழ்வாக நடந்து கொள்கிறார்கள்?'

யோசித்தவன், திரும்பினான். படிகளில் இறங்கி வெளியே வந்தான்.

❖ ❖ ❖

காலையில் சீக்கிரமாகவே வினோத் எழுந்தான்.

குளித்து முடித்துவிட்டு வெளியே வந்தான்.

வெளியில் நின்ற உருவம் அவனை நிறுத்தியது.

"ரதிபிரியா. . ." என்றான் மெல்லிதாக.

சலனமில்லாப் பார்வை! முகத்தில் சோகம்!

"பெயராவது நினைவு இருக்கிறதே!" என்றாள்.

"ஏன் ரதிபிரியா. . . எப்படி மறக்க முடியும்?"

"அதனால்தான் ரெண்டு நாளாக ஆளே தலைகாட்டவில்லையா?"

"இல்லை. . . வந்து. . ."

"வினோத்! நீங்க ரொம்பவும் நம்பிக்கையா இருப்பீங்கன்னு எதிர்பார்த்தேன்."

"இப்பவும் இருக்கிறேன்."

"நான் எப்படி நம்புறது? என் வீட்டுலே சந்தேகமான நடமாட்டம் இருந்ததுன்னு தெரியும். நீங்க அதைத்தான்

துப்பறியுறதா நினைச்சேன். ஆனா, ரெண்டு நாளாக எந்தத் தொடர்பும் இல்லை. . ."

மெல்லிய ஈரம் கண்ணில் அரும்பியது.

"கடவுளே! அதிலேதான் நான் முழுமையா ஈடுபட்டிருக்கேன் ரதி! உள்ளே வாங்க. . . வாங்க. . ." வற்புறுத்தி அழைத்துப் போனான். நாற்காலியை இழுத்துப் போட்டான்.

"ரதி! கேளு! பசி, தாகம் மறந்து அதைத்தான் துப்பறிஞ்சுக்கிட்டு இருக்கேன்."

நடந்த சம்பவங்களை வினோத் வரிசையாகச் சொன்னான்.

ரதியின் முகம் மெள்ள மெள்ள சோகம் தளர்ந்து, மென்மையாகி, பிறகு மலரத் தொடங்கியது.

"மன்னிச்சிடுங்க வினோத்! இவ்வளவு நடந்திருக்கே! ஒரு நிமிடமாவது என்கிட்டே பேசியிருக்க வேண்டாமா?"

"புரியுது ரதி! வருத்தப்படுறேன்."

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

கதவுப் பக்கம் போனான்.

மெள்ளத் திறந்தான்.

வெளியே பார்த்தான். விருட்டென்று வெளியே போய்க் கதவை அடைத்தான்.

வினோத் வெளியே அவசரமாக ஓடும் சத்தம் கேட்டது.

ரதிபிரியா சட்டென்று எழுந்தாள்.

௯௦ஞ

14

பார்த்தாலும் பார்க்காத போலீஸ்

வினோத், வாசல் கதவைச் சட்டென்று சாத்தினான். ரதிபிரியா கூர்ந்து கவனித்தாள்.

அவள் புருவங்கள் துள்ளின.

எழுந்தாள். கதவு அருகே வந்து லேசாகத் திறந்தாள்.

வெளியே எதுவும் இல்லை.

முழுவதுமாகத் திறந்தாள்.

திகிலுடன் நிற்க, மாடிப்படியில் காலடிகள். வினோத் வியர்வையுடன் ஏறி வந்தான்.

“ஒரு சந்தேக ஆசாமி! இங்கே வரை வந்திருக்கிறான்! நான் கதவைத் திறந்ததும் இறங்கி ஓடினான். நான் கீழே போறதுக்குள்ளே. . .” என்று மூச்சில்லாமல் பேசினான், வினோத்.

பரபரப்புடன் உள்ளே போனார்கள்.

“வினோத்! இதைச் சரியாவும் எடுத்துக்கலாம். தவறாகவும் எடுத்துக்கலாம். ஆனா, எனக்கு இது புதிராக. . .”

“வா! உடனே போவோம்” என்றான் வினோத்.

❖ ❖ ❖

“என்ன வேணும்?” இன்ஸ்பெக்டர் தோரணையாக கேட்டார்.

“என் பெயர் வினோத். நான் துப்பறியும் நிறுவனத்தைச் சேர்ந்தவன்” என்றான், வினோத்.

“இவங்க?”

“ரதிபிரியா! இவங்களும் எங்ககூட!”

“சரி, என்ன விஷயம்?”

“முன்னாலே ஒருமுறை வந்திருக்கேன்!”

“சரி, சொல்லுங்க.”

“விஜயபிரியா வழக்கு விஷயமா காரை மடக்கச் சொல்லி, உங்க போலீஸ்காரருக்குத் தகவல் கொடுத்தேன்.”

“மிஸ்டர்! உங்க அதிகாரம், கட்டளை, ஆலோசனை எல்லாம் உங்களோடு வச்சுக்குங்க! இங்கே வேணாம்.”

“வெறும் ஆலோசனைதான் சொன்னேன்.”

“தேவை இல்லாம சொல்லாதீங்க! ஆலோசனை விலை அதிகம்!” கிண்டலாகச் சொன்னார், இன்ஸ்பெக்டர்.

வினோத்துக்கு கோபம் பொத்தது. பேசவில்லை.

“அந்தக் காரை மடக்கிப் பார்த்தாச்சு! அதிலே எதுவும் இல்லை” என்றார், இன்ஸ்பெக்டர் அசுவாரஸ்யமாக.

“இருக்கு. டயர். அதே டயர்” என்றான் வினோத் பளிச்சென்று.

“உங்களுக்குத் தெரியுமா?”

“தெரியும்.”

“எப்படித் தெரியும்?”

“அந்தக் கார் நடைபாதையிலே ஏறி இருக்கு! நடைபாதை விளிம்பிலே உரசியிருக்கு!”

"அதனாலே?"

"சிதைஞ்சுபோன ரப்பர் அந்த விளிம்பிலே ஒட்டிக் கிட்டு இருக்கு."

"நீங்க பார்த்தீங்களா?"

"ஆமா."

"அப்ப காட்டுறீங்களா?"

"காட்டுறேன்!"

"வாங்க" என்றார் இன்ஸ்பெக்டர், பொறுமை இழந்து.

வெளியே வந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் மோட்டார் சைக்கிளை ஆத்திரத்துடன் கிளப்பினார்.

அவர் இதயத்தைவிட அது அதிகமாகப் படபடத்தது.

பின்னால் ஸ்கூட்டரில் வினோத்தும், ரதிபிரியாவும் விரைந்தார்கள்.

❖ ❖ ❖

பத்து நிமிடத்தில் தலத்தில் இறங்கினார்கள்.

"எங்கே இருக்கு?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"வாங்க!"

வினோத் முன்னால் போக, பின்னால் மிடுக்கில் இன்ஸ்பெக்டர் வந்தார்.

வினோத் சற்று தூரம் நடந்தான். 'கடவுளே! அந்தத் தடயம் இன்னும் இருக்கணுமே' என்று வேண்டினான் வினோத். இன்ஸ்பெக்டர் உதட்டை மடித்துக்கொண்டு வந்தார்.

வினோத் சிறிது தூரம் வரை எதையும் காட்டவில்லை.

"மிஸ்டர்! காட்டுங்க! எங்க நேரத்தைக் கெடுத்துக்கிட்டு. . ." இன்ஸ்பெக்டர் கத்தினார்.

"இதோ!"

இடத்தைக் காட்டினான் வினோத்.

இன்ஸ்பெக்டர் பார்த்தார்.

பிணம் கிடைத்த இடத்தை அவர் நினைவு வைத்திருந்தார்.

"மிஸ்டர்! அதோ அங்கேயாக்கும் விபத்து நடந்த இடம்!"

"இல்லை. கொலை நடந்த இடம்" என்றான், வினோத்.

இன்ஸ்பெக்டர் விருட்டென்று திரும்பினார். "நான் அதைக் 'கொலை'ன்னு நம்பமாட்டேன்."

"அது உங்க விருப்பம்! இங்கேதான் அந்தக் கார் நடைபாதையிலே ஏறியிருக்கு."

"இங்கே ஏறினா, விபத்து அவ்வளவு தூரத்திலே நடக்குமா?"

"பிளாட்பாரத்திலே அந்தப் பெண்ணைத் துரத்திக் கிட்டே போயிருக்கு!"

"அவ்வளவு தூரம் போய் மோதிட்டதாக்கும்! யார் காதிலே பூ வைக்கிறீங்க! அதுக்கு என்ன ஆதாரம்?" என்றார், இன்ஸ்பெக்டர்.

"அந்தப் பெண் விஜயபிரியா ஓடியிருக்கிறா?"

"ஆமாம், நீங்க அந்தச் சமயத்தில போட்டோ எடுத்தீங்களாக்கும்?"

"நான் எடுக்க வேண்டாம். அவள் கால் செருப்பு எடுத்திருக்கு."

“செருப்பா?”

“ஆமா.”

“எங்களுக்கு ஒரு செருப்பு கிடைச்சிருக்கு, அந்தப் பெண்ணோட ரெண்டாவது செருப்பு.”

“செருப்பிலே என்ன இருக்கு?”

“இருக்கவேண்டிய தடயம் இருக்கு.”

“நான் பார்த்தப்ப எதுவுமே இல்லையே?”

“நீங்க சரியாப் பார்த்திருந்தா இருக்கும்.”

“சும்மா அளக்காதீங்க. எதுவும் இல்லை.”

“இந்த நடைபாதை அப்போதான் போட்டிருந்தாங்க” என்றான், வினோத்.

“அதனால என்ன?”

“தார் கலந்த கல் கலவையைப் போட்டு. . .”

“அதுக்கென்ன?”

“அந்த தாரும் கல்லும் அவள் செருப்பிலே ஒட்டியிருக்கு”

“மெய்யாவா?”

“ஆமா.”

இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டார்.

“இந்தாப் பாருங்க. தடயத்தை எல்லாம் நீங்களா எடுத்து. . .”

“எடுக்கவேண்டிய நீங்க எடுக்கலை. . . அதனாலேதான்” என்றான், வினோத்.

“அதிகப்பிரசங்கித்தனமா பேசுறீங்க! நடைபாதையிலே செருப்பு கிடந்தா அதனால என்ன?”

"பெண் இந்த நடைபாதையிலே ஓடியிருக்கிறான்னு அர்த்தம்! அவளைத் துரத்திக்கிட்டு கார் நடைபாதையிலே ஏறி இருக்கு."

"அதுக்கு ஆதாரம்?"

"அந்த சிறாய்ப்புதான்!"

"அது அந்த குறிப்பிட்ட கார்தான் உராய்ஞ்சுதுன்னு எப்படிச் சொல்றீங்க?"

"அந்தக் கார் டயரையும் நான் பார்த்தாச்சு!"

"என்ன தெரிஞ்சுது?"

"தார் கலந்த பொடிப் பொடி ஜல்லிக்கல் அந்த டயரின் இடுக்கிலே இருந்திச்சு. அதைப் பார்த்துத்தான் அந்தக் காரை மடக்கும்படி உங்களுக்குத் தகவல் கொடுத்தேன்."

சட்டென்று இன்ஸ்பெக்டரின் வாய் அடைத்து விட்டது. அவர் பேசவில்லை.

பிறகு, "உம். . . உம். . . எத்தனையோ இடத்திலேதான் தார் கலந்த ஜல்லி போட்டிருக்காங்க. ." என்று இழுத்தார்.

இன்ஸ்பெக்டர், மோட்டார் சைக்கிளை உதைத்து, வேறு ஒன்றும் சொல்லாமலேயே பறந்தார்.

❖ ❖ ❖

"இன்ஸ்பெக்டர் ஏன் இப்படி எதிராவே பேசுறார்?" என்றாள், ரதிபிரியா.

"சிலர் ஒரு முடிவு எடுத்துட்டா அதைத் தாண்ட மாட்டாங்க. இல்லாட்டி இன்ஸ்பெக்டருக்கு இந்தக் கொலை செஞ்சவங்களோடு ஏதாவது தொடர்பு இருக்கணும்."

ரதிபிரியா யோசித்தாள்.

“ஏதோ ஒன்று அவரை இழுக்குது. நல்லவேளை! நமக்கு விஜயபிரியாவின் ஒரு செருப்பு கிடைச்சது. அதுவே பெரிய தடயம். . . அதை இன்ஸ்பெக்டர் மறுக்க முடியாது” என்றான், வினோத்.

பத்து நிமிடத்தில் அவர்களும் போலீஸ் நிலையத்தை அடைந்தார்கள்.

உள்ளே போகவில்லை. பக்கத்தில் இருக்கும் ஒரு டீக்கடை அருகில் உள்ள மர நிழலில் நின்றார்கள்.

“இப்படி வா ரதி! கொஞ்சம் இங்கே காத்திருக்கணும்! உன்னாலே முடியுமா?”

“ஏன் முடியாது?”

“நீ ஒரு பெண்! வசதியா வளர்ந்திருப்பே! இப்படி. . .”

“வினோத்! இது எங்க அக்கா விஷயந்தானே?”

“ஆமா.”

“இறந்துபோன அவளுக்காக நான் இதெல்லாம் செய்யக் கூடாதா?”

“செய்யணும்!”

“அப்புறம் நீங்களும் இதிலே ஈடுபட்டிருக்கீங்க. உங்களுக்கு உறுதுணையா. . .” என்று இழுத்து நிறுத்தினாள்.

❖ ❖ ❖

கிட்டத்தட்ட அரை மணி போயிருக்கும்.

காவலர் கண்ணுசாமி, டீக்கடைக்கு வந்தார்.

காத்திருந்த வினோத், புன்னகையோடு அவரை நெருங்கினான்.

“சார்! ஒரு கார் பற்றி சொல்லியிருந்தேனே. . . அதை விசாரிச்சீங்களா?” என்றான்.

"ஆமா சார்! கார் கீழ்ப்பாக்கத்தில் உள்ளது. யாரோ திருடிட்டாங்க! இப்போ திருப்பிக் கொடுத்தாச்சு! அதோடு எங்க வழக்கு முடிஞ்சுபோச்சு" என்றார்.

"அப்போ இந்த விஷயம் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கலையா?"

"எடுத்து என்ன பயன்? காரைத் திருடினவன் எவனோ அந்தப் பெண் மேலே மோதிட்டுப் போயிட்டான். அவன் அகப்பட்டாத்தானே. . ."

"சார். . . கார் யாருடையதுன்னு சொல்ல முடியுமா?" என்றான், வினோத்.

அவர் சொன்னார்.

❖ ❖ ❖

அந்த முகவரிக்கு மாலை ஆறு மணிக்கு வினோத்தும், ரதிபிரியாவும் போனார்கள்.

உள்ளே நுழைந்து, ஸ்கூட்டரை நிறுத்தினான்.

சுவரில் பித்தளையில் 'ரெமி ஹால்' என்று பொறிக்கப்பட்டிருந்தது.

அதன் கீழே 'மன சாந்தி நிலையம்' என்று இருந்தது.

"ரதி! இங்கேயே இரு! ஒரு நோட்டம் பார்க்கிறேன். ஏதாவது நடந்தா உடனே கூப்பிடு" என்றான்.

முகப்பின் படிகளில் ஏறினான்.

உள்ளே பல அறைகள் இருந்தன. அவைகளில் ஜன்னல் வழியே உள்ளே பலர் சிரிப்பதும் பேசுவதும் தெரிந்தது.

இங்கே என்ன செய்கிறார்கள்? தியானமா? யோகமா?

சட்டென்று அவன் பார்வை ஒரு அறை வாசல் கதவில் செல்ல,

அவன் கால்கள் மேலே போகாமல் திடுக்கிட்டு நின்றன.

15

மீண்டும் ஆபத்து

வாசல் கதவின் வெளிப்புறம் வினோத்தின் கண்ணோட்டம் விழ, அடுத்த கணம் அது தடுப்பு போட்டு 'சட்'டென்று நின்றது.

கதவு பூட்டப்பட்டிருந்தது.

என்ன இது?

வெளிப்பக்கம் ஏன் பூட்டு?

உள்ளே ஆட்கள் இருக்கிறார்களே!

வினோத்தின் எண்ணங்கள் நாலா பக்கமும் சிதறின.

"இங்கேயும் ஏதாவது. . ." என்று சந்தேகம் எழ, நடந்தான்.

வராந்தாவில் வரிசையாக அறைகள்.

அவைகளின் ஜன்னல் வழியே உள்ளே ஆட்கள் தெரிந்தார்கள்.

அநேகமாக எல்லோரும் மந்தகாசமாக இருந்தார்கள்.

மேலே போக, ஒரு அறையின் ஜன்னலில் முகம் திரும்பியது.

அது ஒரு பெண்ணின் உருவம். ஜன்னல் சட்டத்துள் தெரிந்தது.

அவள் எந்த சிரத்தையும் காட்டாமல் இருந்தாள்.

ஜன்னலை நெருங்கினான்.

அப்போதும் அந்தப் பெண்ணிடம் அசிரத்தைத்தான்.

அவள் உருவத்தை முழுதுமாகப் பார்த்தான்.

நெஞ்சில் ஏன் அந்த நெகிழ்வு?

யார் இவள்?

நினைவுக்குள் சரம்சரமாகப் பழைய நினைவுகள் அவிழ்ந்து வந்தன.

கௌரியா இவள்?

ஆமாம்!

வினோத்திடம் வந்திருந்த எத்தனையோ வழக்குகளில் அதுவும் ஒன்று!

கௌரி காணாமல் போனவள்.

அவள் எப்படி இங்கே வந்தாள்? இங்கே ஏன் இருக்கிறாள்?

அவளைத் தேடிப் பிணக்கிடங்கு வரை பார்த்து விட்டான். நாசூக்காக விசாரித்து சிவப்பு விளக்குப் பகுதி களைக்கூட பார்த்துவிட்டான். அவள் கிடைக்கவில்லை!

எத்தனையோ வழிகளில் தேடிவிட்டான்.

கடைசியில் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அறிக்கை சமர்ப்பித்துவிட்டான்.

ஆனால், அவனது தலைவர் மேஜர் மாணிக்குக்கு அதில் நம்பிக்கை இல்லை.

“இல்லை வினோத்! இதிலே பின்னாடி எப்பவாவது செய்தி வரும்” என்றார்.

இப்போது அது பலித்துவிட்டது.

இவள் கௌரிதான்!

அதே சாயலைக் காணமுடிந்தது.

"மேடம், உங்க பேர் என்ன?" என்று கேட்டான், வினோத்.

"கௌரி!"

இப்போதும் அக்கறை இல்லாமல் எங்கேயோ பார்த்துக் கூறினாள்.

"நீங்க எப்போ இங்கே வந்தீங்க?"

"ஏன் கேட்கிறீங்க?" என்றாள், அவள் தீனக்குரலில்.

"சும்மா தெரிஞ்சுக்கத்தான்."

"நீங்க யாருன்னு தெரியாது. இங்கே உள்ளவரா?" கேட்டாள் அவள்.

"நான் வெளி ஆள், மேடம்!"

"உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லலாமா?" என்றாள், அவள் கொஞ்சம் அக்கறை காட்டி.

"சொல்லுங்க."

மெல்லிதான வெளிச்சத்தில் அவள் உருவம் இப்போது சிறிது தெளிவாகியது.

நடுத்தர வயது. மறைந்துபோன சோபையான முகத்தின் கீற்றுகள் இன்னும் தெரிந்தது.

"என்னை இங்கே அனாவசியமா அடைச்சு வச்சிருக்காங்க!"

"அடைச்சு வச்சிருக்காங்களா?" அதிசயப்பட்டுக் கேட்ட அவன், "இது தியான நிலையம்தானே?" என்றான்.

"ஆமா சார்! தியானம் எல்லாம் கற்றுக்கொடுக்கிறாங்க. மனநோய்க்கும்கூட இங்கே சிகிச்சை செய்யுறாங்க! வசதியான குடும்பத்து நோயாளிகளுக்கு இங்கே நல்ல கவனிப்பு. ஆனா, என்னையும் உள்ளே வச்சிருக்காங்க!"

"உங்களுக்கு மனநோய் இல்லையா?"

"சத்தியமா இல்லை. ஆனா, ஒருத்தர் என்னைப் பிடிக்காம அடைச்சி வச்சிருக்கார்!"

வினோத்தின் எண்ணம் ஓடியது.

ஏற்கனவே மனநோய் மருத்துவமனை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். அதிலுள்ள பல நோயாளிகளும் தங்களுக்கு மனநோய் இல்லை என்று கூறுவார்கள்.

ஆனால், மருத்துவரிடம் விசாரித்தால் சிரித்துக் கொண்டே, 'அவங்க அப்படித்தான் சொல்வாங்க. மன நோயாளிக்குத் தனக்கு மனநோய் பிடிச்சிருக்குன்னு தெரியாது' என்பார்.

வினோத்துக்கு அந்த நினைவுதான் வந்தது.

இருந்தாலும் அவளை விசாரிக்க நினைத்தான்.

"எப்போ இந்த இடத்துக்கு வந்தீங்க?" என்றான்.

"அது மூணு ஆண்டு ஆச்சு. 1999 பிப்ரவரி 6-ந்தேதி!"

தேதி சரியாகப் பொருந்தியது. அந்தத் தேதியும் அவன் மனதில் வந்துவிட்டது.

ஆமாம். யார் இங்கே கொண்டு சேர்த்தார்கள்?

கேட்கத் திரும்பினான்.

அதற்குள் திடீரென்று 'ஆ' என்று ஒரு குரல்!

❖ ❖ ❖

"இதோ. . ." என்று அவளிடம் கூறி, சட்டென்று வெளியே வந்தான்.

குரல், உள் பகுதியிலிருந்து வந்தது.

அவசரமாக உள்ளே நுழைந்தான்.

உள்ளேயும் நீளவராந்தா!

அதில் ஓர் இளம்பெண்ணை சிப்பந்திகள் இருவர் இழுத்து வந்து கொண்டிருந்தார்கள்.

"ஐயோ. . . என்னை விடுங்க! நான் பைத்தியம் இல்லை. . . நான் பைத்தியம் இல்லை" என்றாள், அவள்.

"பயப்படாதே! உன்னை ஒண்ணும் செய்ய மாட்டோம்" என்றான், ஒரு சிப்பந்தி.

சிப்பந்திகள் வினோத்தைக் கவனிக்கவில்லை!

வினோத் பின்தொடர்ந்தான்.

வராந்தாவை அடுத்து அவர்கள் ஓர் அறைக்குள் நுழைந்தார்கள்.

அங்கே இரு வாயில்கள்.

ஒரு வாயில் வழியே செல்ல. . .

ஒரு அறையின் நெற்றியில் 'அதிர்ச்சி சிகிச்சை' என்று கொட்டை எழுத்தில் போடப்பட்டிருந்தது.

அந்தப் பெண்ணை அந்த அறைக்குள் இழுத்துச் சென்றார்கள்.

வினோத்தின் இதயம் நூறு துடிப்பில் அடித்தது.

அறையை நெருங்கினான். உள்ளே எட்டிப் பார்த்தான்.

உள்ளே அடித்த மந்தமான வெளிச்சம் அவனை அச்சப்படுத்தியது.

அறை சிறியது. உள்ளே இருப்பவர்கள் பாதி நிழலாகத் தெரிந்தார்கள்.

மெத்தை விரித்த சின்னக் கட்டில்! அதன் மீது அந்தப் பெண் மல்லாந்த நிலையில் கிடத்தப்பட்டிருந்தாள்.

இருபுறமும் நாலு சிப்பந்திகள் நின்றிருந்தார்கள்.

பெண்ணின் கால், கை, உடம்பை எல்லாம் அவர்கள் பிடித்துக்கொண்டார்கள். அவள் வாயில் ஒரு கட்டை போன்ற ரப்பரை சொருகினார்கள்.

தலையின் இரு பொருத்திலும் 'ஹியரிங் எய்டு' போல் இருமுனைகள் பொருத்தப்பட்டன.

மருத்துவர் நீள சதுரப் பெட்டியிலுள்ள ஒரு 'லிவர்' மேல் கை வைத்திருந்தார்.

பெட்டியில் இரண்டு மூன்று கடிகார டயல்களில் முட்கள் ஆடிக்கொண்டிருந்தன.

அவர் கையைத் தூக்கியதும் நான்கு சிப்பந்திகளும் அந்தப் பெண்ணை அழுத்திப் பிடித்தார்கள்.

மண்டையின் இரு பொருத்திலும், மின்சாரம் ஓர் அரை விநாடிக்கு 'குபுக்' என்று ஓடியிருக்கும்.

உடம்பு தூக்கிப் போட்டது. வெட்டப்பட்ட பிராணி துடிப்பதுபோல் துடித்தாள். நான்கு பேர்களும் தங்கள் வலுவை எல்லாம் சேர்த்து அமுக்க வேண்டி வந்தது.

அதையும் மீறி உடம்பின் துடிப்பு தெரிந்தது.

அது சித்ரவதையின் உச்சமாக இருந்தது.

வினோத்தின் வயிறு சுருண்டது.

இது அநியாயம் என்று நினைத்தான்.

ஒரு நிமிட நேரத்தில் பெண் வாயில் நுரை தள்ளி வீரிட்டுக் கொண்டு வந்தாள்.

அவள் வாயிலிருந்த ரப்பர் கட்டையை நீக்கி, அவளைக் கீழே இறக்கி வைத்தார்கள். அவள் முகத்தில் பயங்கரமான மாறுதல் வந்திருந்தது.

ஏதோ பல பிறவி எடுத்து, திரும்பி வந்தவள் போல் அவ்வளவு களைத்திருந்தாள்.

கண்கள் மிரளப் பார்த்தாள்.

அவளை ஸ்ட்ரெச்சரில் வைத்து அடுத்த கதவு வழியாக கொண்டு போய்விட்டார்கள்.

அதற்குமேல் வினோத் அங்கே இருக்க விரும்பவில்லை. திரும்பினான். நடந்தது அதிர்ச்சி வைத்தியம் என்று தெரியும்.

ரொம்பத் தேவையானால் அன்றி, மனிதாபிமானம் உள்ள மருத்துவர்கள் இதை அனுமதிப்பதில்லை!

காரணம் அது ஒரு கொடுமை என்று அவர்களுக்குத் தெரியும்.

❖ ❖ ❖

வாசலில் ஏதோ சத்தம் கேட்டது.

வினோத்தின் நுட்ப அறிவு எச்சரித்தது.

அதேநேரம் அவனது செல்போன் ஒலித்தது.

ரதிபிரியா அவனைக் கூப்பிடுகிறாள்.

அவசரமாக ஒரு 'தாவு' நடை.

இமைக்கும் நேரத்தில், வெளியில் இருந்தான்.

மெல்லிய வெளிச்சத்தில் சற்று தள்ளி ஒதுக்கமாக அவனது ஸ்கூட்டர் நின்றது.

ரதிபிரியாவைக் காணவில்லை.

ஒரு சின்னத் திகைப்பு.

அங்கும் இங்கும் பார்த்தான். ரதிபிரியா இல்லை.

'அவள் எங்கே?' யோசித்தான். கண்களைப் படர விட்டான்.

வாசலில் மீண்டும் அரவம்!

ஒரு கார் பின்புறத்தைக் காட்டிக்கொண்டு உள்ளே வந்தது.

போர்டிகோவில் நின்றது.

வினோத்தின் பரபரப்பு அவனை வேறுபுறம் திருப்பியது.

'எங்கே ரதிபிரியா?'

கட்டடத்தின் கடைசிவரை சென்று பக்கவாட்டில் திரும்பினான்.

அந்த இடமும் வெறுமை.

எங்கே போயிருப்பாள்?

துணுக்குறும் அடிகளில் நடந்தான்.

சன்னமான இருள் கிலியைக் கொடுத்தது.

நடந்துகொண்டே போக, தோள் மீது ஏதோ விழுந்தது.

சின்னக் கல்லாக இருக்க வேண்டும்.

திரும்பிப் பார்க்க, அருகில் சுழல் ஏணி இருப்பது தெரிந்தது.

அதன் மடிப்பான ஒரு பகுதியின் மறைவிலிருந்து ஒரு தலை வெளியே நீட்டியது.

பார்த்தான். அது ரதிபிரியாதான்!

"வினோத்! ஆபத்து. . . ஆபத்து. . . இங்கே மறைஞ் சுக்குங்க!" என்றாள்.

16

நிழல் மனிதன்!

அமைதியான மெல்லிரவு.

அமைதியில்லா இதயம்.

ரதியின் எச்சரிக்கை அவனது சுவாசத்தைக் கலைத்தது. மெள்ளப் பூனை அடி வைத்து விநோத் ஏணிச் சுழலில் ஏறினான்.

ரதியை ஓரமாகக் கடந்தான். சிறுபடியில் அடக்கத்துடன் அமர்ந்தான்.

அதற்குள் சுவாசம் பீரியது. 'திடுதிடும்' என்று இதயம் தனியாக ஓடியது.

நீண்ட மூச்சுகள் மூலம் தனது படபடப்பைச் சரி செய்தான்.

ஒருவிதமாக எல்லாம் அடங்கிய உணர்ச்சி!

சுழல்படியின் மறைவு, பாதுகாப்பு உணர்வை அளித்தது.

கீழே பார்த்தான்.

இரவு ஓசையில்லாமல் கிடந்தது.

நடைபாதை, அந்தக் காம்பவுண்டு குரோட்டன்ஸ், அங்கங்கு இரு சக்கரவண்டிகள். . . அந்தக் கார்!

ஆமாம்! அதை அவன் அடையாளம் கண்டு கொண்டான். அது கிரியின் 'பயங்கர' வாகனம்.

வினோத்தின் யோசனைகள் படர்ந்தன.

எத்தகைய ஆபத்து?

இதில் அவன் மட்டும் சாகசித்து மீண்டுவிடலாம்.

ஆனால், ரதியால் முடியுமா?

அவளை இதில் ஈடுபட வைப்பது நல்லதா?

ஆனால் அவள் அதை விரும்புகிறாள்.

அவள் மனம் இதில் பாய்ந்து ஈடுபடுகிறது.

"ரதி. . ." என்றான் மெதுவாக.

"வினோத்!"

"இது ரொம்ப ஆபத்தான விஷயம்!"

"உம். . . !"

"இதில் நீ சேருவது சரியல்ல!" ஒருகணம் மௌனம்.

"உங்களுக்கு ஆபத்து இல்லையா?" அவள் மெதுவாகக் கேட்டாள்.

"ஆபத்துதான்!"

"நீங்கள் மட்டும். . ."

"நான் ஆண்!"

"அதனால்?"

"நான் இதில் முரட்டுத்தனம் செய்துகூட மீளமுடியும். நீ இளம்பெண். . ."

"என்றாலும் முரட்டுத்தனம் காட்ட முடியும். கராத்தே தெரியும். . ."

"இருந்தாலும் இதுபோல இருட்டில் அகப்பட்டுக் கிட்டா. . . அது பெண்ணுக்குச் சரியா இருக்காது."

அவள் பேசவில்லை.

அவனுக்கும் யோசனை.

அவளை அனுமதிக்க வேண்டியதுதான் என்று நினைத்தான்.

பல விநாடிகள் ஓடின.

"இந்த கிரி ஏன் இங்கே வந்தான்?" அந்தக் கவலை அவன் மனதில் உறுத்தியது.

"தெரியலை!" என்ற அவள், "வினோத்! உள்ளே போனீங்களே! இங்கே என்ன நடக்கிறது?" என்றாள்.

"தியான மையம் என்கிற பேரிலே மனநோயாளி இல்லம் நடக்கிறது. பணக்கார வீட்டு மனநோயாளிகள்."

"ஓ! இங்கேயும் அநியாயங்கள் உண்டா?"

"தெரியலை! ஆனா ஏதாவது நடக்கணும்!"

"இந்தக் காலத்திலே எதையும் சாதாரணமா எடுத்துக்கிறதுக்கு இல்லை."

"கிரி வேறே வந்திருக்காரே!"

"அதுதான் என்னை உறுத்துது! எப்போ திரும்பிப் போவாரோ?"

அப்போது எதையோ பார்த்த வினோத், அவளைக் கை அமர்த்தினான். இருவரும் நிசப்தமானார்கள்.

மையத்தின் உள்ளிருந்து சீருடை சிப்பந்தி வெளியே வந்தான். திடகாத்திரன்! கிங்கரன் போல் நடந்து எதிர்ப்புறம் சிறிது தூரம் சென்றான்.

பிறகு மறுபுறம் திரும்பி வந்தான்.

கதம் கதம் என்று அவர்களுக்கு அடித்தது.

ஸ்கூட்டரைக் கண்டுபிடித்து விடுவானோ?

சிப்பந்தி அளந்த நடையில் வந்தான். கண்கள் மேற்பார்வை பார்த்தன. இதோ. . . மரத்தின் பக்கம் வந்து விட்டான்.

ரதி, வினோத்தை கெட்டியாகப் பற்றினாள்.

சிப்பந்தி நின்றான்.

இருவரும் சுவாசத்தைப் பிடித்து நிறுத்தினார்கள்.

சிப்பந்தியின் பார்வை இருட்டுப் பகுதிகளில் பாய்ந்தது.

இதோ. . .

அவர்கள் அசையாது பார்த்தார்கள்.

அடுத்த விநாடி. . . சிப்பந்தி திரும்பினான். திரும்பினானா. . . ? ஆமாம் திரும்பி நடந்தான்.

மரத்தின் இடுக்கில் ஒடுங்கி இருந்த ஸ்கூட்டர் கண்ணில் படவில்லை.

'அப்பா!' என்ன நிம்மதி மூச்சு, வினோத்துக்கு.

"வினோத்!" என்று மென்மையில் அழைத்தாள். அவளுக்கு அந்த சந்தர்ப்பங்கள் சற்று அச்சத்தைத் தருவதாக இருந்தன.

மேல்படியின் இடுக்கான இடத்தில் தனது தலையை பெருமூச்சுடன் ரதி சாய்த்துக்கொள்ள முயன்றாள்.

இடம் போதவில்லை.

வினோத் அதை உணர்ந்தான்.

கிட்டத்தட்ட துவண்டு விழும் அவள் தலையை தன் மடியில் ஏந்திக் கொண்டான்.

என்ன இருந்தாலும் ரதி ஒரு பெண்!

பயங்கரச் சூழ்நிலைகளை நேரில் தரிசித்திருக்க மாட்டாள். அவளது இளம் இதயத்திற்கு இது மிக அதிகம்!

அவளும் அவன் மடியில் முகத்தைப் புதைத்தாள்.

"வினோத். . . வினோத். . ." என்று மெல்லிதாக அரற்றினாள்.

"நான் இருக்கேன் பயப்படாதே!" என்றான், அவன்.

அவள் கூந்தல் இழைகளை மிருதுவாக வருடினான்.

அவள் அவன் கைகளைப் பற்றினாள். தனது முகத்தின் இருபுறங்களிலும் குவித்தாள்.

வினோத்துக்கு அது புது உணர்ச்சி!

உள்ளே கவிதை படித்தது போல இனம்புரியாத பரவசம்.

ஒரு நீண்ட இன்ப மூச்சுடன் அவளையே பார்த்தான்.

ரதியின் கண்கள் ஒரு மெய்மறப்பில் கிறங்கின. இமைகள் இறங்கி விழிகள் மெலிதாகப் பார்த்தன.

பார்த்தனவா?

அவள் ஒரு ஆழ்நிலை அமைதியை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

❖ ❖ ❖

வினோத் உறங்கவில்லை. மெள்ள விழிவிரித்துப் பார்த்தான்.

ஆகா! உலகம் இப்போது எவ்வளவு இனிமையாய்த் தெரிகிறது?

சப்தம் இழந்த இரவு!

மேலே கரும்நீலத்தில் ஆகாயம்.

அதில் இரண்டு மினுக்கு நட்சத்திரப் பொட்டுகள்!

பளிங்குபோல் சுத்தக் காற்று!

பூமியில் இல்லாது ஒரு அந்தரத்தில் இருப்பதுபோல் உணர்வு!

சுழல் ஏணிகூட என்ன இனிமையான தனி இடம்!

மெதுவாக ரதியைப் பார்த்தான்.

நிம்மதியாகக் கண்களை மூடி இருந்தாள். அவள் மனதுள்ளும் புது இனிமைகள் பூத்துக் கொண்டிருக்க வேண்டும். அவள் வதனத்தை மெள்ள நீவினான்.

அவள் மேனி தடாகத்தில் விழுந்து நிச்சலமாகக் கிடக்கும் நிலா!

சரம்சரமாக மனதில் இனிய கனவுகள் பூக்க, வினோத்தும் கண்களை மெய்மறந்து மூடினான்.

அவனைப் பொருத்தவரையில் இரவு அப்படியே நின்றுவிட்டது.

❖ ❖ ❖

வெகுநேரம் ஓடியிருக்க வேண்டும்.

கண்கள் விழித்தபோது உதயம் தெரிந்தது.

விடிந்துகொண்டிருக்கிறது.

கீழே பார்த்தான்.

காரைக் காணோம்.

உள்ளே நிம்மதி குதித்து எழுந்தது.

ரதியும் விழித்தாள்.

அவனைப் பார்த்ததும், அவளிடம் ஒரு அருணோதயப் புன்னகை!

"வினோத். . ."

"ரதி. . ."

"கார் இருக்கா?"

"போயாச்சு!"

"போயிடலாமா?" எழ முயன்றாள்.

"முடியாது! வாசல் கேட் பூட்டி இருக்கு!"

"அப்போ. . . ?"

"நல்லா விடியும் வரை காத்திருக்கணும்!"

"அப்புறம்?"

"அப்புறம் வெளியில் போகிறவரை சிக்கல்தான்!"

அதைக் கேட்கப் பிரியம் இல்லாததுபோல் அவள் கண்களை மீண்டும் மடித்தாள்.

யார் கண்டார்கள்?

இப்படி அவனது மடியின் ஸ்பரிசத்திலேயே வாழ்வில் அத்தனை இரவுகளையும், அங்கேயே, அப்போதே கழிக்க விரும்புகிறாளோ என்னவோ?

❖ ❖ ❖

கடைசியில் இரவு கரைந்தது.

வானம் நிறம் மாறியது.

ரதி மெள்ள நிமிர்ந்தாள்.

புதிய வனப்பு அவள் மேனியில் ஓடியிருந்தது.

சாலையில் போக்குவரத்துகள் தொடங்கின.

தியான மையமும் விழித்தது.

அரவங்கள் எங்கும் முளைத்து ஓசைகளாக மாறின.

மையத்தின் ‘கேட்’ திறந்துவிடப்பட்டன.

வாகனங்கள் உள்ளே குமிழிட்டன.

“வா!” என்றான் வினோத்.

ரதி எழுந்தாள்.

அவன் இறங்க, அவள் சுந்தரமாக அவனைத் தொடர்ந்தாள்.

இருவரும் கீழே கூட்டத்துடன் கலந்தனர்.

அவர்களது ஒரே குறி, மையத்தைவிட்டு யாருடைய கண்களையும் சேதப்படுத்தாமல் வெளியாகிவிட வேண்டும்.

ஸ்கூட்டரை வினோத் எடுத்தான்.

மெதுவாகத் தள்ளி சில அடிகள் போயிருக்க மாட்டான்.

“சார். . .” என்று தோரணைக் குரல்.

சீருடை சிப்பந்தி அருகில் வந்து நின்றான்.

எல்லா நாடிகளும் அடங்கின.

17

காணாமல் போன அழகி!

"சார். . ." என்று தோரணைக் குரல் கேட்டு, வினோத் திரும்பிப் பார்த்தான்.

பின்னால் அந்த சிப்பந்தி நிற்க, அவனது நாடிகள் ஒடுங்கின. திகைத்தான்.

"டோக்கன் வாங்கிட்டீங்களா?" என்றான் சிப்பந்தி, சிம்மக் குரலில்.

"இல்லை. . ." வினோத் இழுத்தான்.

"முதல்லே வாங்கிக்குங்க!"

வினோத் பெருமூச்சை அடக்கினான்.

சமாளித்து, "ரதி நீ வேணும்னா வீட்டுக்குப் போலாம். . . நான் இங்கே போயி. . ."

ஸ்கூட்டரை ஒதுக்கிவிட்டு அவள் வாசலை நோக்கி கிளம்பினாள்.

வினோத் ஸ்கூட்டரை ஸ்டாண்டில் நிறுத்திவிட்டு படிக்கட்டில் ஏறினான்.

தியான மையம் உள்ளே யந்திரத்தனமாகச் சென்ற வினோத் திரும்ப ஒருமுறை வாசலைத் திரும்பிப் பார்த்தான்.

அவனை விசாரித்த சிப்பந்தி வாசலில் இன்னும் நின்று, அவன் மேலே ஒரு அழுத்தப் பார்வை பார்த்தான்.

வினோத் எதுவும் அறியாததுபோல் திரும்பினான்.

ஆனால், உள்ளே நெஞ்சு சிறகு அடித்தது.

'இந்த மையத்தைவிட்டு எச்சரிக்கையாகப் போக வேண்டும், எதுவும் நேர்ந்துவிடக்கூடாது' என்று நினைத்தான்.

டோக்கன் வாங்க வரிசையில் வினோத் காத்திருந்தான்.

தனது முறை வந்ததும், அறை உள்ளே போனான்.

அதிகாரி பெரிய வயிறுடன் அமர்ந்திருந்தார். "உட்காருங்க!" என்றார். அவர் முன்னே 'சிவராசன்' என்ற பெயரில் ஒரு முக்கோணக் கட்டை மேஜை மீது உட்கார்ந்திருந்தது.

உட்கார்ந்தான்.

"அப்புறம் சாருக்கு எல்லாம் திருப்திதானே! நாம கவனமாகதான் இருக்கோம்னு காண்பிச்சாச்சு!" நின்றுகொண்டிருந்த குட்டி அதிகாரி இருவரைப் பார்த்துக் கூறினார், சிவராசன்.

"சார், நிச்சயம் அது நம்ம கவனக்குறைவே இல்லை!" என்று அவர்கள் விளம்ப, தப்பித்துப்போன மனநோயாளி பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது வினோத்துக்குத் தெரிந்தது.

"ஒரு விசித்திரமான முறையிலே ஆள் தப்பிச்சுட்டான்!" என்றார், சிவராசன்.

"ஆமாங்க!" கோரஸ் போட்டுச் சொன்னார்கள் குட்டி அதிகாரிகள்.

"கவலையில்லை போங்க!" என்று அவர்களை அனுப்பிவிட்டு, "உங்களுக்கு என்ன சார் வேணும்?" என்றார், வினோத்தைப் பார்த்து.

"ஆமாம்" என்று பாதி விழுங்கினான், வினோத்.

"நீங்க யாரு? என்ன விஷயம்?"

"நம்ம தெருவிலே இருக்கிற ஒரு பொண்ணு. . ."

"அது இருக்கட்டும். . . நீங்க யாரு?"

"என் பேர் பரமசிவம்!"

"என்ன வேலை செய்யுறீங்க. . . ?"

"தனியார் நிறுவனத்துல. . ."

"சரி. . . அந்தப் பொண்ணுக்குப் பெற்றோருங்க யாரு?"

"அப்பா மேஸ்திரி!"

"கட்டட மேஸ்திரியா?"

"ஆமா! ஏழைக் குடும்பம்!"

"பணம் கட்ட முடியாதா?"

"முடியாதுங்க!"

"முடியாதா? நாங்க என்ன இங்கு சத்திரமா நடத்துறோம்?"

"ஏதோ கொஞ்சமாக கேட்டீங்கன்னா கொடுக்க முடியும்."

"பெண்ணுக்கு வயசு என்ன?"

"பதினேழு இருக்கும்!"

சிவராசன் முகத்தில் குறிப்பாக ஒரு சலனம் தெரிந்தது.

"மனநோய்தானே?"

"ஆமா. . ."

"வேறு நோய் ஏதாவது உண்டா?"

"கிடையாதுங்க. . ."

"நாளைக்கு அழைச்சுட்டு வாங்க. . ."

"பணம் எவ்வளவு கொண்டு வரணும்?"

"ஏழைன்னு சொன்னீங்க. . . ?"

"ஆமா!"

"சும்மா வாங்க! பொண்ணு எப்படி இருக்கும்?"

"நல்லா இருக்குமுங்க!"

"நான் அழகைக் கேட்கலை. . . பொதுவா உடம்பு எப்படி?"

"திடகாத்திரமா இருக்கும்."

"சரி! நாளைக்கு வாங்க. . ."

வினோத் 'அப்பாடா' என்று புறப்பட்டான்.

ஏதோ நினைவு வந்தவன் போல் திரும்பி, "சீக்கிரம் குணமாயிடுங்களா?" என்றான்.

"அதை டாக்டர்தான் சொல்லணும். . ."

"ஆஸ்பத்திரியிலே எத்தனை நாள் இருக்கணும்?"

"அதையும் டாக்டர்தான் சொல்லுவாரு!"

❖ ❖ ❖

வினோத் வெளியே வந்தான். ஸ்கூட்டரை எடுத்தான். சிப்பந்தி இருக்கிறானா என்று ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. புறப்பட்டான்.

வீட்டில் ஒரு அவசரக் குளியல் முடித்து, அலுவலகம் பறந்தான்.

ரதிக்குப் போன் அடித்தான்.

"எப்படி இருக்கிறே. . . ?" குரலில் நளினம், லலிதம், மதுரம் மூன்றும் பொங்கி வழியக் கேட்டான்.

"அப்பா! உங்ககிட்டேயிருந்து எப்போ போன் வரும்னு காத்துட்டு இருந்தேன். பத்திரமா திரும்பி வந்தீங்களா?"

"வந்தாச்சு!"

"உள்ளே எதுவும் நடக்கலையே?"

"இல்லை. . . பயமாத்தான் இருந்திச்சு! உன் நல் எண்ணத்திலே தப்பிச்சேன்!"

"ஐஸ் வைக்கிறீங்களா?"

"ஏன் அப்படிச் சொல்றே? என் குரல்லே என் உண்மை மனசைக் கண்டுபிடிக்க முடியலையா?"

"முடியுது. . . சொல்லுங்க. உள்ளே என்ன பார்த்தீங்க?"

"அந்த மையம் மேலே பெரிய ஐயம்தான்!"

"அது புரிஞ்சாச்சு!"

"அந்த மையத்தைப் பார்த்ததிலேர்ந்து ஒரு பழைய வழக்கு திடீர்னு நினைவு வருது. அதை இப்போ கவனிக்கப் போறேன்."

"அப்போ இன்னிக்கு பகல்லே பிசியா?"

"ஆமாம்! திரும்பி வந்ததும் உடனே போன் பண்றேன்."

❖ ❖ ❖

அடுத்து அலமாரிகளைத் திறந்து வினோத், ஒரு கோப்பினைத் தேடத் தொடங்கினான்.

தாரா அவனைக் கவனித்தாள்.

வந்தவுடன் அவளிடம் 'அலோ' சொன்ன வினோத், அதற்குமேல் பேசவில்லை.

முந்தின இரவு முழுவதும் வினோத், ஒரு தேடலில் ஈடுபட்டான் என்பது அவளுக்குத் தெரியும்.

மெள்ளக் கனைத்தாள்.

வினோத் திரும்பினான்.

"என்னது அலமாரிகளைக் கிளறுறீங்க?" என்றாள் ஆதங்கத்துடன்.

வினோத் பதில் சொல்லாமல் பழைய கோப்புகளைக் கிளறினான்.

தாரா கோபமாகக் கேட்டாள் - "ஏன், அலமாரியைக் கலைக்கிறீங்க?"

கம்ப்யூட்டர் முன்னால் இருந்த சுழல் நாற்காலியிலிருந்து திரும்பியவாறு அவனைப் பார்த்தாள்.

"பழைய வ[illegible]கத் தேடுறேன்" என்றான்.

"தோல்வி அடைந்த வழக்கா?"

"ஆமா."

"என்கிட்டே கேளுங்க! நான் எதுக்கு இருக்கேன்" என்றாள், மேலும் கோப நடிப்பில்.

"இதோ கேட்டாச்சு! எங்கே இருக்கு?"

அவள் எழுந்தாள்.

"என்ன வழக்கு?"

"கௌரி."

"காணாமல் போனவளா?"

"ஆமா."

ஒன்றிரண்டு நிமிடங்கள் செலவழித்து எடுத்தாள், நீட்டினாள்.

அதைப் பிடுங்காத குறையாக வாங்கிக்கொண்டான்.

அதைப் புரட்டப் புரட்ட பழைய தடங்கள் நினைவுக்கு வந்தன.

கௌரியின் வழக்கு!

அவள் காணாமல் போய் இரண்டு ஆண்டு ஆகியிருக்கும்.

அவளது பெற்றோர்கள் வந்து மேஜர் மாணிக்கிடம் முறையிட்டது நினைவுக்கு வந்தது.

மாணிக், அந்த வழக்கைத் தன்னிடம் ஒப்படைத்ததும் நினைவுக்கு வந்தது.

தோல்வி அடைந்த பல வழக்குகளில் அதுஒன்று!

வினோத் நகரத்தையே அலசி எடுத்துவிட்டான்.

கடத்தல் கும்பல், திருட்டுக் கோஷ்டி என்று எல்லாரிடமும் தொடர்பு கொண்டு தேடிவிட்டான்.

கௌரியைப் பற்றி எந்தப் புலனும் கிடைக்கவில்லை.

கடைசியில் அந்த வழக்கை அவர்கள் கைவிடுவது தெரிந்ததும், பெண்ணின் தந்தை மாரடைப்பில் இறந்தது நினைவில் வந்து விழுந்தது.

ஒரு நீண்ட மூச்சுடன் வினோத் அடுத்த பக்கங்களைப் புரட்டினான்.

கௌரியின் வீட்டு விலாசத்தைத் தனி காகிதத்தில் குறித்துக் கொண்டான்.

கடைசிப் பக்கத்தில் ஒரு 'கவர்' ஒட்டப்பட்டிருந்தது.

அதில் படங்களை வைப்பது வழக்கம்.

அவை இருக்கிறதா? என்று பார்த்தபோது, இரண்டு படங்கள் கிடைத்தன. எடுத்துக்கொண்டான்.

அதையே அவன் உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க...

"பெண் எப்படி இருக்கிறா?" என்ற அவள், வாங்கிப் பார்த்தாள்.

"ஓ! அதனாலேதான் அவ்வளவு ஆர்வமாய் பார்க்கிறீங்களா?" என்றாள்.

"ஆமாம். . . நேரிலே ஆயிரம் அழகிகளைச் சந்திக்கிறேன். இந்தப் படத்தைப் பார்க்கத்தான் எனக்கு ஆசையாக்கும்!"

"இப்போ என்ன விஷயம்?"

"இந்தப் பெண் இருக்கிற இடம் தெரிஞ்சுபோச்சு!"

"எங்கே?"

"சொல்றேன். . . முதல்லே அது உறுதியாகட்டும். அதுக்கு முன்னாடி அவங்க வீட்டுக்குப் போய் பார்த்துட்டு வந்துடுறேன்."

அவசரமாகப் புறப்பட்டுப் போகும்போது, தெரு மீது பார்வை எதேச்சையாக விழுந்தது. அங்கே ஒரு கார். அந்தக் காரை அவன் எங்கேயோ பார்த்த நினைவு!

எங்கேயுமல்ல; 'மனவளர்ச்சி குறைந்தவர்கள் இல்லம்' வாசலில்தான்.

26261

அது இப்போது நடைபாதை ஓரமாக நின்றது.

அதிலிருந்து யார் இறங்கப் போகிறார்கள் என்று யோசித்து அவன் சிறிது தயங்கி நின்றான்.

கண்கள் சற்று நிலையாக நின்றன.

மனசில் வேண்டாத படபடப்பு ஏறியது!

18

மீண்டும் அதிர்ச்சி

கிரி ஏன் கீழே தென்பட்டார்?

வினோத் உஷார் ஆனான்.

கீழே இறங்கவில்லை.

கிரியைக் கவனிக்கத் தொடங்கினான்.

கிரி சாதுவாய் நடந்து வந்தார். அப்படியே 'ஒழுக்கசீலன்' என்ற பட்டத்தை அளித்துவிடலாம்! அப்படி ஒரு கண்ணியமான தோற்றம்.

தெருவைக் கடந்து நேராக ஏஜென்சி கட்டடத்தை நோக்கி வருவது தெரிந்தது.

திரும்பினான் "தா. . . ரா. . . !" என்று பல சுருதிகளாக இரைந்து, வினோத் ஆபீசுக்குள் விரைந்தான்.

தாராவைக் காணோம்!

தேடினான்.

கழிவறை, கண்ணில் விழுந்தது. உள்ளே தாரா போயிருப்பது தாழ்ப்பாளில் தெரிந்தது.

'லொட் லொட்' என்று தட்டினான்.

உள்ளேயிருந்து சிரிப்பு முகிழ்ந்தது.

அவனுக்கு ஆத்திரம் வீசி வர, வாசலுக்கு ஒருமுறை ஓடினான். மேலே கிரி வந்துவிட்டாரா? இல்லை இன்னும் வரவில்லை.

இங்கேதான் வருவார் என்று ஊகம்.

அதற்குள் அவன் மறைய விரும்பினான்.

"தா. . . ரா. . . தா. . . ரா. . ."

மீண்டும் உள்ளே போய் பலமாய் சங்கீதம் பாடினான்.

தாரா வந்தாள்.

"இது என்ன வேடிக்கையா இருக்கு! ஏன்? என்ன அவசரம்?"

வினோத் விஷயத்தை சைகையால் கூறிவிட்டு மேஜரின் மேசைக்கு அடியில் ஒளிந்துகொள்வதாகக் கூறினான். காரணம் - கிரி அவனைப் பார்த்துவிடக்கூடாது!

அறைக்குள் மறைந்துகொண்டான்!

கிரி உள்ளே வந்தார். தாரா வரவேற்றாள்.

"உட்காருங்க!"

உட்கார்ந்தார்.

வாசனை திரவியத்தின் நறுமணம் மூக்கில் தவழ்ந்தது. கண்களில் ரொம்பக் கனிவை வரவழைத்திருந்தார். மெல்லிய கீறல் அளவில் புன்னகை காட்டினார்.

"உங்க நிறுவனம் பற்றி ரொம்ப கேள்விப் பட்டிருக்கேன்! எனக்கு ஒரு உதவி செய்யணும். . ."

"என்ன?" என்றாள், தாரா.

"அஞ்சு லட்ச ரூபாய் பொருள் தொலைஞ்சு போயிருக்கு. கண்டுபிடிச்சுக் கொடுக்கணும்."

“எங்கே வச்சிருந்தீங்க?”

“வீட்டிலே.”

“திறந்து எடுத்துட்டுப் போயிட்டாங்களா?”

“ஆமா. . .”

“எப்போ?”

“அதுதான் தெரியாது. நேற்று பார்த்தபோது இல்லை.”

“அதுக்கு முன்னாடி எப்போ பார்த்தீங்க?”

“நாற்பது நாள் ஆகியிருக்குமுங்க!”

“யார் பேரிலாவது சந்தேகம் உண்டா?”

“மன்னாருன்னு ஒருவர் இருந்தார். அவர் காணாமல் போயிட்டாரு!”

“ஓ! அவர் எடுத்துப் போயிருப்பாரா?”

“அவர் உண்மையான ஊழியருங்க. ஆனா ஏன் காணாமப் போனாருன்னு தெரியலை.”

“போலீசில் புகார் கொடுத்தீங்களா?”

“இல்லீங்க! எப்படியும் வந்து சேருவாருன்னு நம்பிக்கைதான்!”

“சரி! இந்தாங்க. . . !”

தங்கள் நிறுவனம் பற்றிய அச்சடித்த விதிமுறைகளை அவள் கொடுத்தாள்.

அதை வாங்கி இந்தப்புறமும் அந்தப்புறமும் பார்வை பார்த்தார்.

ஊசிமுனை எழுத்தாக இருந்தன. “இவற்றையெல்லாம் வாசிக்க எங்கே பொறுமை இருக்கப் போகிறது?”

"வழக்கை எடுத்துப்பீங்க இல்லே?"

"எடுத்துப்போம்!"

"அப்போ, என்ன கட்டணம்?"

"அதையெல்லாம் எங்க ஆளுங்க வந்து சொல்வாங்க."

"இப்போ இல்லையா?"

"வெளியிலே வேலையா போயிருக்காங்க."

"ஓ! சரி! வந்தப்புறம் அனுப்பி வைங்க. அவர் பேரு என்ன?"

"ஜோதிராம்."

"என்ன பேரு?"

"ஜோதிராம்."

"ஆம்பளையா. . . பொம்பளையா?"

"ஆண்தான்."

"ஒருத்தர்தான் வேலை செய்கிறாரா?"

"பலபேர் உண்டு. இவர் முதல் விசாரணை விசாரிக்க, அப்புறம் ஒவ்வொருத்தருக்கும் தனித் தனியா பிரிச்சுக் கொடுப்பாரு!"

"அப்போ நான் வரேங்க! நீங்க அவசியம் அனுப்புங்க!"

வலிக்காமல் ஒரு கும்பிடு போட்டு, பாதங்களை மெள்ளமாக தரையில் பதித்து, காற்றிலேகூட உறுத்தல் தெரியாமல் நடந்து போனார்.

அவர் போனபிறகு வினோத் பெரிதாக இழைந்து வெளியே வந்தான்.

"இந்த ஆசாமிதானா?" என்றாள் தாரா.

"ஆமாம்! இவர்கிட்டே சூரியை அனுப்பி வைக்கிறேன். அவர் சொல்ற வழக்கு உண்மையா இருக்காது."

"அப்போ ஏன் இங்கே வந்தார்?"

''என்னைப் பார்க்கத்தான். அவரை யாரோ துப்பறியறான்னு அவருக்குச் சந்தேகம் வந்தாச்சு! நான் யாருன்னு அவருக்குத் தெரியணும். இந்த இடத்தைப் பார்த்துட்டுப் போறார். கூடவே மன்னாருவைக் காணலைங்கிறாரு. மன்னாருவை நாம, தனி அறையில் அடைச்சி வச்சிருக்கோம் தெரியுமில்லே?"

தாராவின் புருவம் ஏறிட்டது.

"அந்த மன்னாருவை என்ன செய்யப் போறீங்க?" என்றாள் கவலையுடன்.

"மேஜர் மாணிக்கிட்டே கேட்கணும்!" என்றான் வினோத் நெற்றியை வருடிக்கொண்டே.

"நானே கேட்டாச்சு! இந்த வழக்குலே ஏதாவது தெரிகிற வரை விடக்கூடாது என்கிறார்!" என்றாள் தாரா.

வினோத் உலாத்தினான். 'ஏதாவது தெரிகிறவரை. . . என்கிறார் மேஜர் மாணிக். எப்போது தெரியும்?'

"தாரா! உன்கிட்டே யோசனை கேட்கிறேன்! இந்த வழக்கில் இதுவரை நான் போயிருக்கிற தூரம் உனக்குத் தெரியுமில்லே?"

"தெரியும். . . சொல்லுங்க!"

"கிரி என்கிற நபர் 'கருணை இல்லம்'னு வச்சிருக்காரு. மனசாந்தி ஹால் இன்னொண்ணு வச்சிருக்காரு. ஒண்ணிலே மனவளர்ச்சி இல்லாத பையன்கள். இன்னொண்ணிலே மனநோயாளிங்க. . ."

தாரா தொடர்ந்தாள். "கருணை இல்லத்து பசங்க கிட்டேயிருந்து 'இரத்தம்' எடுத்து விக்கிறாரு! மன நோயாளிங்க மையத்திலேருந்து. . . என்ன செய்யறாரு?"

"அங்கேயும் ஏதாவது தில்லு முல்லு இருக்கும். அது இருக்கட்டும். இதுக்கும் நம்ம வழக்குக்கும் ஏதாவது தொடர்பு இருக்கா?"

"அதைத்தான் நாம கண்டுபிடிக்கணும்!"

"அதுக்கு எனக்கு ஒரு வழி கிடைச்சிருக்கு!"

"என்ன?"

"கௌரி என்கிற பெண் காணாமல் போயிருக்கிறா! வழக்கு நம்மகிட்டே இருக்கு. இதுவரைக்கும் அதிலே தீர்வு கிடைக்கலை!"

"சரி!"

"இப்போ அவ இருக்கிற இடம் அநேகமா தெரிஞ்சாச்சு! அவளைப் பற்றி விசாரிச்சா ஒருவேளை பிரச்சினை தீர்ந்துபோனாலும் போகலாம்!"

"சரி, உடனே அதிலே இறங்குங்க!"

❖ ❖ ❖

கௌரி வீட்டைத் தேட அரைமணி ஆயிற்று.

ஒரு இளம்பெண் ஸ்கர்ட் போட்டு வாசலில் நின்று பதில் சொன்னாள்.

"அவங்க இங்கே இல்லை!" என்றாள்.

"அந்தக் குடும்பம் எங்கே போச்சுன்னு தெரியுமா?"

"தெரியாது சார்! அந்த அம்மாவும் இறந்துட்டாங்க!"

"கௌரியோட அம்மாவா?"

"ஆமாம்."

"எப்போ இறந்தாங்க?"

"ஒரு ஆண்டுக்கு மேலே இருக்கும்!"

"அந்த அம்மா போனப்புறம்தான் நீங்க வந்தீங்களா?"

“ஆமாம். அவங்க இறந்துபோய் ரெண்டு மாசம் காத்துகிட்டு இருந்தோம்.”

“ஏன்?”

“அவங்க் சாமான்கள் எல்லாம் இங்கே வச்சிருந்தாங்க!”

“ஓ! யாரும் எடுத்துக்கிட்டுப் போகலையா?”

“இல்லை.”

“சொந்தக்காரங்க யாருமில்லையா?”

“இல்லை.”

“அப்புறம் என்னாச்சு?”

“வீட்டுக்காரர், பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தாரு. . .”

“என்ன விளம்பரம்?”

“இந்தப் பெயருடைய அம்மா இறந்துட்டாங்க. அவங்க சொந்தக்காரங்க யாராவது இருந்தா கீழ்க்கண்ட விலாசத்தாரை அணுகவும்னு கொடுத்திருந்தாங்க.”

“யாரும் வரவில்லையா?”

“வரல்லை.”

“அப்புறம் என்ன செஞ்சாங்க?”

“போலீசில் சொல்லி கதவைத் திறந்து சாமான்களை எல்லாம் எடுத்தாங்க. தட்டுமுட்டு சாமான்கள் தவிர எதுவுமில்லே. . . இருந்ததையெல்லாம் ஒரு பெட்டியிலே போட்டு பூட்டி பரண்லே போட்டுட்டாங்க! அதுக்கப்புறம் தான் இந்த வீட்டை எங்களுக்குக் கொடுத்தாங்க!”

விவரங்களைச் சொன்ன அந்தப் பெண்ணுக்குப் பதினைந்து பதினாறு இருக்கும். ஸ்கர்ட் அவள் உடம்போடு

ஒட்டி இருந்தது. பூஞ்சையான தேகம். கீழ்ப்படியில் ஒருகாலும், மேல்படியில் ஒருகாலும் வைத்துப் பதில் சொன்னது வினோத் மனதில் சில வேண்டாத தொல்லை களைக் கொடுத்தது.

"அவங்க பெண் கௌரின்னு இருந்தாளாமே?" என்று கேட்டான், வினோத்.

"ஏன் சார், பெற்றோரைத் தெரியும்னு சொல்றீங்க? பெண்ணைத் தெரியாதா?"

"இல்லை! நான் பார்த்ததில்லை."

"அந்தப் பெண் கௌரி காணாமப் போனதிலேருந்து தான் அந்தக் குடும்பத்துக்கே கெட்ட காலமாப் போச்சுன்னு பலபேர் சொன்னாங்க. . ."

"ஓகோ. . . பொண்ணு காணாமல் போயிட்டாங்களா?"

"ஆமாம்."

"ஏதாவது காதல் சமாசாரம் இருக்குமா?"

"அப்படி இல்லைன்னு சொன்னாங்க. யாரோ கடத்திட்டுப் போயிட்டாங்களாம்!"

"யார் சொன்னாங்க?"

"எனக்கு சங்கரின்னு ஒரு பெண் தெரியும். அவங்களுக்கு அந்தப் பெண் தெரிஞ்சவங்க."

"கடத்தல்னு எப்படித் தெரியும்?"

"சார் அந்தப் பெண் வாட்ட சாட்டமா இருப்பாளாம்! ரெண்டு பேர் இந்தத் தெருவுக்கு அடிக்கடி வந்து அவளையும், அந்த வீட்டையும் கவனிச்சிக்கிட்டி ருந்தாங்களாம்."

"ஓ! அதைச் சங்கரி கவனிச்சிருக்காங்க!"

“ஆமாம்! ஒருநாள் ராத்திரி இந்தப் பொண்ணு கோவிலுக்குப் போறேன்னு போயிருக்கு. வரும்போது மழை. எங்கே நின்னாளோ, எங்கே ஒதுங்கினாளோ, அப்புறம் வீட்டுக்கு வரவே இல்லை!”

“போலீசில் சொல்லலையா?”

“சொன்னாங்க. பிரயோசனம் இல்லை. அவங்களே உடந்தையா இருக்கணும்னு பலபேர் சொல்றாங்க!”

வினோத் விடைபெற்றான்.

அவனுக்கு மனதில் சில அபிப்பிராயங்கள் சூழ்ந்து கொண்டன.

‘ஒரு நலிந்த குடும்பத்துப் பெண் கடத்தப் பட்டிருக்கிறாள். பிறகு அவள் மன சாந்தி ஹாலில் சிக்கி இருக்கிறாள்.’

அது எப்படி?

கௌரியைச் சீக்கிரம் பார்க்க வேண்டும். விசாரிக்க வேண்டும்.

❖ ❖ ❖

நான்கு மணிக்கு பார்வையாளர்கள் மனசாந்தி ஹாலுக்கு போகும் நேரத்தில் வினோத் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டான்.

கேராவிலும், மீசையிலுமாக தோற்றத்தில் சில மாற்றம் செய்தான். தலை வேறு விதமாக வாரப்பட்டிருந்தது.

உள்ளே போனபோது திடும் திடும் என்று இதயம் அதிர்ந்தது.

ஒவ்வொரு பார்வையாளருடன் ஒரு சிப்பந்தியும் கூடவே வந்தான்.

விேனாத்துடன் வந்தவன் காளியண்ணன்.

"கொஞ்சம் அதிகம் நேரம் எடுத்துப் பேசுவேன். நீங்க அனுமதிக்கணும். இந்தாங்க இதை வச்சுக்குங்க" என்றான் வினோத், அவனிடம்.

சிப்பந்தி கையில் 100 ரூபாய் நோட்டை இரகசியமாகக் கொடுத்தான்.

"சரி, முடிச்சுட்டு வாங்க! முதல் அறைப்பக்கம் காத்துட்டு இருக்கேன்" என்றான், காளியண்ணன்.

அவனுக்கு சிகரெட்டு பெட்டி ஒன்றையும் கொடுத்து அனுப்பி, வினோத் ஒவ்வொரு அறையாகத் தாண்டிப் போனான்.

பரபர என்று பார்த்தபோது, ஐந்தாவது அறைக்குள் கௌரி இருந்தாள். கண்ணைக் கண்ணைக் கொட்டிக் கொண்டிருந்தாள்.

"கௌரி!" என்றான்.

திரும்பிப் பார்த்தாள். ஆனால், அவள் எங்கேயோ பார்ப்பதிலிருந்து அவள் கண் தெரியாதவள் என்று தெரிந்தது.

அது அவனுக்கு அதிர்ச்சி!

19

வந்தது வினை!

மனசாந்தி நிலையத்தில் பார்வையாளர்களோடு வினோத்தும் கலந்து உள்ளே போனான். தன் முக அடையாளங்களையும், தனது தலை வாரும் முறையையும் மாற்றி, இருந்தான். எனவே அவன் இப்போது ஒரு புது நபர் என்பதுபோலாகிவிட்டான்.

அறைகளைக் கடந்து, அந்தப் பெண் இருக்கும் அறைக்குள் வந்தான்.

"கௌரி!" என்று அழைக்க அவள் எங்கேயோ பார்த்த படி திரும்ப, வினோத் அவளைப் புரிந்து கொண்டான். அவளுக்குப் பார்வை இல்லை.

அவளது கண்ணாடி, உயிரில்லாத கண்களை மறைத் திருந்தது.

"இந்தா கௌரி!"

அருகில் நெருங்கி நின்றான்.

"யாரு. . . யாரு?" குழந்தைத் தனமாகக் கேட்டாள்.

"நீதானே கௌரி?"

"ஆமா! நீங்க யாரு?"

"உங்க அப்பாவுக்கு நான் தெரிஞ்சவன்."

"அப்படியா. . . ? அப்பா வரலையா?"

வினோத்தின் கண்கள் கொட்டின.

ஓகோ! இந்தப் பெண்ணுக்கு அவளது அப்பா இறந்து போனதுகூட தெரியாதா? யாரும் சொல்லியிருக்க மாட்டார்கள்.

"அப்பா வரலை" என்றான். தயங்கிக்கொண்டு.

"அம்மாவும் வரலையா?"

"வரலை. . ."

"என்னை மறந்துட்டாங்களா?" அவள் துன்பக் குரலில் கேட்டாள்.

"உன்னை மறப்பாங்களா? நினைச்சுக்கிட்டேதான் இருக்காங்க!"

"அப்படிச் சொல்லாதீங்க! சொந்தப் பெண்ணுக்கு மனசு சரியில்லைன்னா இப்படி தள்ளிட்டுப் பேசாம இருப்பாங்களா?"

"உன்னைப் பார்க்க வரவே இல்லையா?"

"இல்லை. . ."

"நீ தகவல் சொல்லிட்டியா?"

"சொல்லியாச்சு! வரவே இல்லை!"

'அவளது பெற்றோர் இறந்ததை நிர்வாகிகள் அவளுக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று இருப்பார்களோ?' அவன் மனம் எண்ணியது.

"நிச்சயம் வந்துடுவாங்க! நான் போய்ச் சொல்றேன். ஏன் கௌரி, மனசு சரியில்லாமல் இருந்தாயா?"

"ஆமா திடீர்னு அப்படி ஆயிப்போச்சு."

"ஏன்?"

"தெரியலை சார்! ஏதோ படார்னு இடிச்சுது! ஒரே இருட்டாகப் போச்சு! அப்புறம் பார்த்தா நினைவு ஒரே குழப்பமா இருந்திச்சு!"

"நீ யாருன்னு உனக்கு நினைவு இருந்துச்சா இல்லையா?"

"அதுகூட குழப்பமா இருந்திச்சு."

"எத்தனை நாளா அப்படி இருந்துச்சு?"

"தெரியலே. . ."

"அப்போ நீ வீட்டுலே இருந்தியா? ஆஸ்பத்திரியிலே இருந்தியா?"

"அதுவும் தெரியலை! ஏதோ மோதிச்சுன்னு சொன்னேனே! அதிலிருந்தே எனக்கு இடம் கிடம், நேரம் கீரம் எதுவும் தெரியலை. . . என்னைப் பற்றியே தெரியலைங்கிறேனே!"

"அப்புறம்?"

"புலம்பிட்டே இருந்தேன். ஊசி போட்டுக்கிட்டே இருந்தாங்க."

"யாரு?"

"டாக்டர்."

"எந்த டாக்டர்?"

"அதுவும் தெரியாது."

"நீ டாக்டரைப் பார்க்கலையா?"

"எனக்குப் பார்த்தா சரியாத் தெரியாது!"

"ஏன்?"

"எனக்கு எல்லாம் குழம்பிப்போச்சு! யாரைப் பார்த்தாலும் கோணல் கோணலா தெரிஞ்சுது!"

'இங்கேதான் தகராறு' என்று நினைத்தான் வினோத். அவளுக்கு என்ன நடந்திருக்க முடியும்? அவன் யோசனைகள் ஓடின.

"எங்கே இருந்தேன்னு கூட சொல்ல முடியாதா?"

"எங்க வீடாகத்தான் இருக்கணும்! சரியாப் புரிஞ்சுக்க முடியலை."

"சரி! உனக்கு மனநிலை சரியில்லைன்னு யார் சொன்னாங்க?" சிரித்தாள், அவள்.

"டாக்டர்தான்."

"உம். . . உனக்கு மனநோய் தெளிஞ்சப்போ இந்த ஆஸ்பத்திரியில் இருந்தியா?"

"ஆமாம்! எங்க அப்பாவும் - அம்மாவும் என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்துட்டதாக இங்கே இருக்கிறவங்க சொன்னாங்க."

"அப்படியா?" என்று சொன்ன வினோத்துக்குள் அவளுக்கு என்னென்ன நடந்திருக்கும் என்று ஊகங்கள் எழத் தொடங்கின.

"அப்போ, உனக்கு மனநிலை தெளிஞ்சப்புறம் உங்க அம்மாவும் அப்பாவும் உன்னைப் பார்க்க வரலை இல்லையா?"

"ஆமா."

"நீ வீட்டுக்குப் போய் பார்க்கிறதுதானே?"

"டாக்டருங்க விடமாட்டாங்க."

வினோத்தின் மனதில் அவளைப் பற்றிய பல சாத்தியக் கூறுகள் தோன்றி, வரைகோடுகள் போட்டுக்கொண்டிருந்தன.

கௌரி சொல்லும் பதில்கள் விசித்திரமாக இருந்தன.

யோசனையில் ஆழ்ந்துவிட்டு வினோத் தொடங்கினான்.

"கௌரி! நான் சொல்றதை நல்லா கவனி. நீ ஒருநாள் ராத்திரி கோவிலுக்குப் போனே! வரும்போது மழை வந்தது. . . நினைவு இருக்கா?"

"நினைவு இருக்கு சார்."

"மழை வந்தப்புறம் என்ன நடந்திச்சு?"

"ஒரு இடத்திலே ஒதுங்கப் போனேன்."

"அதுவும் நினைவு இருக்கா?"

"இருக்கு!"

"அப்புறம் என்ன நடந்திச்சு?"

"படார்னு பின்னாடி என்னவோ வந்து இடிச்சது!"

"என்னது?"

"ஒரு கார் மாதிரி இருந்துச்சு."

"அதைப் பார்த்தியா?"

"நான் பார்க்கலை! அது இடிச்ச உடனே விழுந் துட்டேன். எனக்கு மூளை கலங்கிப்போச்சு."

"அப்புறம் என்ன நடந்துச்சு?"

"மூளை கலங்கியாச்சுன்னா என்ன நடந்ததுன்னு தெரியாது சார்!"

அவள் அவனுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் பேசினாள்.

ஒரு சின்னப் புன்னகையும் அவள் உதட்டோரம் ஓடியது.

வினோத்துக்கு அவள் அப்படிச் சொல்வது பரிதாபமாக தோன்றியது.

இரக்கத்தோடு அவளைப் பார்த்தான்.

அவன் மனம் அவள் சொல்லியதை நினைத்தன.

'கார் இடித்துவிட்டது. ஆமாம்! கார் இடித்து விட்டது.'

இரண்டு முறை மனம் அசை போட்டது.

எண்ணங்கள் பரபரத்தன. கட்டுப்படுத்தினான்.

"சரிம்மா. . . உனக்குக் கண் பார்வை சுத்தமா போயிடுச்சா?"

"அந்த விபத்திலேருந்து கண் சரியா இல்லை."

"முழுசாத் தெரியலையா?"

"பூதம் பூதமா தெரிஞ்சது."

"அப்புறம்?"

"கண்ணை ஏதோ பண்ணிட்டாங்க."

திடுக்கிட்டான், வினோத்.

"எடுத்துட்டாங்களா?" என்று கவலையுடன் கேட்டான்.

"ஆமாம்! இப்போ மங்கலா கொஞ்சம் பார்வை இருக்கு! துளி பார்வை!"

"அப்புறம் வேறு ஏதாவது செஞ்சாங்களா?"

"வயித்திலே என்னவோ ஆகி அங்கேயும் ஆபரேஷன் செய்தாங்க."

"வயித்திலேயா?"

"ஆமா!"

"எங்கே காட்டு!"

அவள் தன் சேலையை இடுப்பு பக்கம் விலக்கித் தழும்பைக் காட்டினாள்.

வினோத்தின் மனக் கற்பனைகள் சிதறின.

விதவிதக் கோணங்களில் ஆராய்ச்சிகள் ஓடின.

அவள் வயிற்றில் தழும்பு பெரிதாகத் தெரிந்தது.

"அது என்ன ஆபரேஷன்?"

"எனக்குத் தெரியாது! இப்போ எல்லாம் குணமாகிப் போச்சு."

"ஆமா. . . உனக்கு எத்தனை ஆபரேஷன்?" என்று தாபத்துடன் கூறினான்.

"நான் துரதிருஷ்டசாலி! நல்லா வாழ்ந்தேன்! திடீர்னு ஒருநாள் எல்லாமே அஸ்தமிச்சுப் போச்சு!"

வாழ்வில் நிகழும் ஒவ்வொன்றையும் அவள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும்விதம் அற்புதமாக இருந்தது.

ஒரு நீண்ட பெருமூச்சு அவனிடம் எழுந்தது.

அப்போது "சார். . ." என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டான்.

இருவர் தூரத்தில் வருவது தெரிந்தது.

"கௌரி! உன்னை அப்புறம் பார்க்கிறேன்!" என்று அவசரமாகக் கூறிய வினோத், வராந்தாவில் பாய்ந்தான்.

விரைவு நடைபோட்டு அலுவலகம் பக்கம் அணுகினான்.

அங்கே முகப்பு அறையில் ஆண்களும் பெண்களுமாக நிற்க, அவர்களுடன் கலந்துகொண்டான்.

யாருடைய கண்ணிலும் பட விரும்பவில்லை.

நேரம் நழுவியது.

அங்கே நிற்பதுகூடச் சரியில்லை என்று மனம் அரித்தது.

திரும்பிப் பார்த்தான். வராந்தாவில் ஒரு மருத்துவரும், சிப்பந்தியும் வருவது தெரிந்தது.

தூண் பக்கம் நின்ற இரண்டு பார்வையாளப் பெண்களிடையே ஒட்டி நின்றான்.

மேலே நிமிரவில்லை.

அவர்கள் அவனைக் கடந்து விடுவார்கள் என்று நினைத்தபோது அவர்கள் பேசுவது நின்றுவிட்டது.

அவன் நின்ற இடுக்குகளில் ஒருவர் புகுந்து வருவது தெரிந்தது.

"மிஸ்டர். . ." என்று குரல்!

திடுக்கிட்டான்.

அவன் அருகில் சிப்பந்தி வந்திருப்பது தெரிந்தது.

வினோத் மனம் படபடத்தது.

திரும்பலாமா? வேண்டாமா?

"மிஸ்டர். . ." அந்தக் குரல் அழுத்தமாய் விழுந்தது.

திரும்பினான். ''என்னைக் கூப்பிடுறீங்களா?'' என்றான்.

"ஆமாம்!"

"என்ன விஷயம்?"

"வாங்க!"

"எங்கே?"

"அதிகாரி கூப்பிடுறாரு!"

"எதுக்கு?"

"தெரியாது."

வினோத்தின் நெஞ்சம் மத்தளம் கொட்ட, கனத்த மூச்சுகளுடன் அடிகளை எடுத்து வைத்தான்.

'தப்புவதற்கு வழி இருக்கிறதா?' நினைத்த வினோத்தை மனம் சுறுசுறு என்று ஏதோ செய்தது.

20

ரகசிய டைரி!

“ஏன் சார், எங்களுக்கு இப்படி தொந்தரவு கொடுக்கிறீங்க?” என்று தொடங்கினார், அதிகாரி நீலகண்டம்.

அவர் மேஜை மீது நீலகண்டம். பொதுநல அதிகாரி என்ற பெயர்ப் பலகை இருந்தது.

“உங்களை ரெண்டு மூணு நாளா கவனிச்சிக்கிட்டு வர்றோம். நீங்க எங்க ஆஸ்பத்திரியை உளவு பார்க்கிறீங்க?” என்றார், நீலகண்டம்.

“நானா?”

“நீங்கதான்!” என்றார், அழுத்தத்துடன்.

“நான் இன்னிக்குத்தான் வர்றேன். . .”

“மிஸ்டர்! இன்னிக்கு வேஷம் மாத்திட்டு வந்திருக்கீங்கன்னு தெரியும்!” என்றார், நீலகண்டம்.

படியில் உருண்ட உணர்ச்சி, வினோத்துக்கு.

“நீங்கதான் மேஜர் மாணிக் நடத்தும் துப்பறியும் நிறுவன துணை அதிகாரி. உங்களை நாங்களும் துப்பறிஞ்சு கிட்டு வர்றோம்! ஒரு விஷயம் தெரிஞ்சுக்குங்க! எங்க மறைவான காமிரா உங்களைக் கண்காணிக்குது!”

‘டக்’கென்று அந்த படத்தைப் போட்டார்.

அதில் வினோத், கௌரியிடம் பேசும் காட்சி தெரிந்தது.

'அகப்பட்டோம்... பொறியில்!' மனதுள்ளே கூக்குரல் எழுந்தது.

எப்படிச் சமாளிப்பது? பந்தய ஓட்டத்தில் நினைவுகள் ஓடின.

"இங்கே மட்டும் இல்லை... கருணை இல்லத்திலேயும் நீங்க வேவு பார்த்தீங்க! நாங்க ரத்தம் எடுத்து விக்கிறதையும் கவனிச்சீங்க!"

வினோத்திடம் பதில் இல்லை. அடித்துக் கீழே போட்ட நிலை.

"புரிஞ்சுக்குங்க! நாங்க பெற்றோர்கிட்டே அனுமதி கேட்டே ரத்தம் எடுக்கிறோம். பெற்றோருங்க இந்தப் பிள்ளைகளை சொந்தம் கொண்டாடுறது கூட அவமானமா நினைக்கிறாங்க! பிள்ளைகளை இங்கே பார்க்க வர்றதுகூட அபூர்வம்!"

நீலகண்டம் மேஜையைத் திறந்தார். ஒரு கோப்பினை எடுத்து முன்னால் வைத்தார்.

பெற்றோரிடம் ஒப்புதல் வாங்கிய கடிதங்கள். அவை சடசடத்தன. வினோத்தின் முன்னால் புரட்டிக் காட்டினார்.

"என்னவோ காணாததைக் கண்டுபிடிச்ச மாதிரி நீங்க நினைச்சிருக்கீங்க! கருணை இல்லம் நடத்துறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? உங்க துப்பறியும் நிறுவனத்தைவிட, கஷ்டம்!"

தொலைபேசி, குறுக்கிட்டு ஒலித்தது. பேசிவிட்டு வைத்தார்.

"அப்புறம் கருணை இல்லத்தை விட்டுட்டீங்க! இந்த மனசாந்தி மையத்துக்கு வந்தீங்க. தியானம், யோகா,

கற்றுக்கொடுக்கிற மையமா இதை உருவாக்கினோம். தொடக்கத்திலே மனநோயாளிகள் ஒன்று ரெண்டு பேரை குணமாக்கிட்டோம். அதிலேருந்து வசதியான வீட்டைச் சேர்ந்தவங்க நோயாளிங்களை இங்கே கொண்டுவந்து சேர்க்கத் தொடங்கிட்டாங்க!"

". . . . ."

"என்ன செய்ய? இதெல்லாம் ஒரு சமூகப் பிரச்சினை. இதை நாங்க ஏற்றுக்கிடவேண்டி வந்திச்சு. இந்த நோயாளிங்களை, வீடுங்கள்லே ரொம்பக் கொடுமைகூட படுத்தியிருக்காங்க. தெரிஞ்சுதா?"

"ஓ!" என்று நிறுத்தினான், வினோத்.

"ஒண்ணு சொல்றேன்! சில நிறுவனங்களும், சில சாமியார்களும் நோயாளிங்களைக் கொடுமைப்படுத்தி சாகடிச்சி இருக்காங்க! சொன்னா நம்பமாட்டீங்க! பெற்றோருங்ககூட இதையே விரும்புறாங்க!"

"கஷ்டமா இருக்கே!" என்றான், வினோத்.

"உங்களுக்கு இன்னும் எங்களைப் பற்றித் தெரிய ணும்னா, ராமநாதன்னு ஒரு சமூகசேவகர் இருக்கிறார் தெரியுமா?"

வினோத் பேசவில்லை.

"சமூக சேவைக்கு அரசு விருதுகூட வாங்கியிருக்கார். அவர் எங்க நிறுவனத்திலே பல ஆண்டா சேவை செய்யுறார்."

"அப்படியா?"

"அவரை விசாரியுங்க!"

அவர் சொல்லவும், அவனுக்கு ராமநாதனைப் பற்றிய நினைவு வந்தது. அவர் தம்பி சுதாகரைப் பற்றி விசாரிக்கப்

போனபோதுதான், அவர் பட்டாசு போல எரிந்து விழுந்தது நினைவுக்கு வந்தது.

"உங்க மாதிரி அறிவாளிங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. நீங்க புரிஞ்சுகிட்டா நாலு பேர்கிட்டே சொல்வீங்க! அது போதும். நீங்க போகலாம். சந்தேகம் ஏதாவது இருந்தா என்னை நேராக அணுகுங்க!" நீலகண்டம், அழுத்தமாய்ச் சொல்லிவிட்டு எழுந்தார்.

❖ ❖ ❖

துப்பறியும் அலுவலகம் வந்து, நடந்த விஷயங்களை எல்லாம் தாராவிடம் கூறினான், வினோத்.

தாரா, உதடு மடித்தாள்.

"வினோத்! மூணு நாளா சேர்ந்தாற்போல போய் காரியத்தை கெடுத்துட்டீங்க! உங்களையே அவங்க கண்டு பிடிச்சுட்டாங்க. அவமானம்!"

"ஆமா. . . தாரா!" என்றான்.

தாரா யோசனையில் ஆழ்ந்தாள்.

"இப்போ அந்தப் பக்கம் போகவேண்டாம். விட்டுடுங்க! பின்னாடி பார்க்கலாம்."

"இப்போ என்ன செய்யலாம்?" என்று ஆதங்கத்தோடு கேட்டான்.

"முன்னாடியே சொன்னேன். அந்த அனாமதேய தகவல் பற்றி! கவனிக்காம மனசாந்தி மையத்துக்கு ஓடினீங்க!"

அனாமதேயத் தொலைபேசி வந்தது தாராவுக்கு தெரியும். யாரோ ஒரு பெண், 'சுதாகர் இறந்ததைப் பற்றி நல்லா விசாரியுங்க!' என்று வற்புறுத்தியிருந்தாள்.

"சரிதான் தாரா! ஒரு யோசனை சொல்லு!" என்றான், வினோத்.

"நெருக்கமாத் தெரிஞ்சவங்களை விசாரியுங்க!"

❖ ❖ ❖

ராமநாதன் குடும்பம் பற்றித் தெரிய வேண்டும்.

அவர் தம்பி சுதாகரின் நெருக்கமான சிநேகிதர்கள் கிடைத்தால் போதும்.

டைரியை எடுத்தான். இரண்டு பெயர்கள் தென்பட்டன.

ஒன்று - சீதாராம். இரண்டாவது - பிரானேஷ்!

ஏற்கனவே சீதாராமை விசாரித்துவிட்டான்.

சுதாகருக்கு முன்னமே ஒரு காதல் உண்டு என்று சீதாராம் சொல்லியிருந்தான். அதற்கு மேல் அவனுக்குத் தெரியாது.

இப்போது இரண்டாவது சிநேகிதன் பிரானேஷ்! அவனை விசாரிக்க வேண்டும்.

வங்கியில் நுழைந்து பிரானேஷ் பெயரைக் கேட்டதும், ஒரு தனி அறையில் கொண்டுவிட்டார்கள். அவன் அதிகாரியாக இருந்தான்.

"ஏழைகளுக்காக வாதாடும் வக்கீல்கள் சங்கம் என்னை அனுப்பி வச்சிருக்கு! சுதாகரைப் பற்றி விசாரிக்க வந்தேன்!" என்றான், வழக்கம்போல.

"ஓ! நீங்க வக்கீலா?"

"இல்லைங்க. . . துப்பறியறவன்! வக்கீல் சங்கம் என்னை விசாரிக்கச் சொல்லியிருக்கு. . ."

பிரானேஷ், பெருமூச்சுவிட்டான். "பாவம்! சுதாகர் விபத்திலே போயிட்டான்!"

"அது விபத்துன்னு நினைக்கிறோம்! உங்களுக்கு சுதாகர் சிநேகிதன்தானே?" என்றான், வினோத்.

"ஆமாம். நல்ல அறிவாளி. ஒண்ணா படிச்சோம். அவனும் வங்கியில் அதிகாரியாக வந்திருக்கணும். ஆனா. . ."

"அவருக்கு என்ன நடந்தது?"

"ரெயில் விபத்து நடந்துபோச்சு!"

"எப்போ? எங்கே?"

"எங்கேயோ. . . கேரளா பக்கம். அதிலே இவன் இடிபாடுகளுக்கு இடையிலே நாலு நாள் அகப்பட்டுக் கிடந்தான்."

"ஓ! 'ஆலப்புழா' பாலம் பக்கத்திலே நடந்த விபத்தா?"

"ஆமா சார்! இடிபாட்டை எடுக்க முடியலை. இடிபாட்டுக்கு அடியிலே யாராவது இருப்பாங்கன்னு யாரும் நினைக்கலை. . ."

"சரி!"

"உதவி கிடைக்காதுன்னு பயத்திலே சுதாகர், மிரண்டு போயிட்டான்!"

"ஓ. . . !"

"ஆனா, அதிசயம்! அது ஒரு இன்ப இடிபாடா மாறிப்போச்சு!"

"அதென்ன இன்ப இடிபாடு?" என்றான், வினோத்!

"ஒரு இளம்பெண்ணும் இதே இடிபாட்டுக்குள் இவன் பக்கத்திலேயே அகப்பட்டுக்கிட்டா. ரெண்டு பேரும் நகரக்கூட முடியாது! ஒரு சமாதிக்குள்ளே அகப்பட்ட மாதிரி. . ."

"ஆச்சரியம்!"

"இதிலே இன்னொரு விஷயம். ரெயில்ல ஒருத்தருக்கொருத்தர் அறிமுகமாகி இருக்காங்க. . . பேசியும் இருக்காங்க. . . பிறகு அப்படி அகப்பட்டுக்கிட்டாங்க!"

"அப்புறம்!"

"இவங்களுக்கு நம்பிக்கை போயிடுச்சு! ஒரே பயம்! ஒருத்தருக்கொருத்தர் தொட்டுக்கொள்ளாதபடி நெருக்கத்திலே இருந்தாங்க!"

வினோத்தின் வாய் பிரிந்தது.

"அப்புறம்?"

"துன்பத்திலேயும் ஒரு இன்பம்! துன்பத்தை நினைக்காம ரெண்டுபேர் மனசும் ஒரு இன்பத்தைத்தான் நாடும்! ரெண்டு பேரும் தங்களை மறந்துட்டாங்க! ஒருவேளை உயிரோடு சமாதி ஆகவேண்டியது இருக்குமோ என்கிற பயத்திலே வாழ்க்கையிலே கடைசி ஆசையா தம்பதியா இறப்போம்னு பேசிக்கிட்டாங்க!"

"ஓ. . . !"

"ஒருவருக்கொருவர் இணைந்து இன்பத்தில். . ."

நிசப்தம்.

"ஆனா பாருங்க அதிருஷ்டம்! விபத்து நடந்த நாலாம் நாள் காலையிலே இடிபாட்டிலே இவங்களை எதேச்சையா கண்டுபிடிச்சுட்டாங்க!"

"நல்லவேளை!"

"பெண்ணோட பெற்றோருங்க ஓடிவந்திருந்தாங்க. . . ஆஸ்பத்திரியிலே பெண்ணைப் பார்த்து அழைச்சுட்டுப் போயிட்டாங்க!"

"அப்புறம் சுதாகர், அவளோடு தொடர்பு கொள்ளலையா?"

“இல்லை சார். . . முகவரி தெரியாமப்போச்சு. அவளும் இவனைத் தொடர்பு கொள்ளலை!”

வினோத் சிறிது நேரம் பேசவில்லை.

“சரி, இதுதான் சுதாகர் மனநிலை மாற்றத்திற்குக் காரணமா?”

“இவ்வளவு விஷயத்தையும் சுதாகரே என்னிடம் சொன்னான். ‘பிரானேஷ்! உனக்குத்தான் இதைச் சொல்லி யிருக்கேன். என் ரகசிய டைரியிலேயும் எழுதி வச்சிருக்கேன். என் மனசு இதை நினைச்சு ஏதாவது ஆயிடுமோன்னு பயமா இருக்கு’ன்னு சொன்னான்.”

“ஓ. . . !”

“அதுமட்டுமல்ல. . . ‘ஒருவேளை என் மனம் கலங்கி சித்தபிரமை வந்துடுச்சுன்னு வச்சுக்க! அந்த நிலையிலே அந்த பொண்ணு என்னைத் தேடி வந்ததுன்னா நீதான் என் ரகசிய டைரியை அவளுக்கு எடுத்துக் கொடுக்கணும்’னு சுதாகர் சொன்னான்!”

“ஒரு அதிசயக் காதல், விநோத சூழ்நிலையில் மலர்ந்திருக்கு!” என்றான், வினோத்.

“இந்த விஷயம் சுதாகரின் அண்ணன் ராமநாதனுக்குத் தெரியுமா?”

“அவரும் சுதாகரின் டைரியைப் படிச்சிருப்பாருன்னு நினைக்கிறேன். இனிமே அதைப்பற்றி என்ன பயன்?” என்று இழுத்து நிறுத்தினான், பிரானேஷ்.

❖ ❖ ❖

வெளியே நடந்தபோது வினோத், யோசித்தவாறு போனான்.

கேட்டதெல்லாம் மனதைச் சஞ்சலப்படுத்தின.

படிகளில் இறங்கியபோது, "சார்!" என்று குரல் கேட்டுத் திரும்பினான்.

"அதோ போறாரே! அவரை நிற்கச் சொல்லுங்க...!" என்று ஒரு வயதான பெண்மணி கூறினாள்.

எட்டத்தில் போகும் மனிதர் யார்? கண்களைக் குறுக்கிப் பார்த்தான், வினோத்.

மனம் குறுகுறுத்தது.

21

நிழல் மனிதர்கள்!

வினோத்திடம், வயதான பெண்மணி, "அதோ அவரை நிறுத்துங்கள்" என்று கேட்டுக் கொண்டதும், அவள் காட்டிய திசையில் பார்த்தான்.

ராமநாதனைக் கண்டதும் பக்கென்றது மனம்.

நல்லவேளை! அந்தப் பெண்மணியின் சைகையைப் பார்த்து, யாரோ ஒருவர் ராமநாதனை நிறுத்திவிட்டார்.

ராமநாதன் விரைந்து வந்தார்.

வினோத், தூண் ஒன்றின் பின்னால் மறைந்தான்.

அந்தப் பெண்மணியிடம் நலம் விசாரித்து நாலு வார்த்தை பேசிவிட்டு ராமநாதன் விடைபெற்றார்.

வினோத் மறைவிலிருந்து வந்தான். பெண்மணி அருகில் நின்றான்.

"மேடம்! அவரைத் தெரியுமா?" என்றான்.

"நல்லாத் தெரியும்? என்கிட்டே படிச்சவன். என் பேரு வசந்தா! கல்லூரிப் பேராசிரியை" என்று கூறினாள்.

"படிக்கும்போது எப்படி இருந்தார்?"

"நல்லாத்தான் இருந்தார். காதல் பண்ணி தோல்வி ஆனவர். . . பாவம்!"

"ஓ! கல்லூரிக் காதலா?"

"ஆமாம்! சாகரின்னு ஒரு பொண்ணு! எல்லாருக்கும் அந்தக் காதல் தெரியும்!"

"திருமணம் பண்ணிக்க முடியலையா?"

"ஒரு நாள் சாகரி இன்னொரு பையனோடு பேசி விட்டு வந்திருக்கா. அது எதேச்சையா நேர்ந்த சம்பவம்! ஆனா இவர் ஒத்துக்கவேமாட்டேன்னுட்டார்! 'மரத்துக்கு மரம் தாவுறியா?' என்று கேட்டு, அவளை விட்டுட்டாரு! ரொம்ப உணர்ச்சிக்காரரு ராமநாதன்" என்றாள்.

"அப்போ வீட்லேகூட அப்படித்தான் இருப்பார் இல்லையா?"

"அப்படி இல்லை! சில ஒழுக்கங்களை எதிர் பார்ப்பாரு! ஒரு முக்கியமான விஷயம்!"

"என்ன?"

"தானே ஏதாவது தவறு பண்ணிட்டாருன்னா அதற்காக வருந்துவாரு! சாதாரண வருத்தம் இல்லை. பிராயச்சித்தமா தன்னையே வருத்திப்பாரு! கோவில் குளம்னு சுத்துவாரு! பட்டினி கிடப்பாரு!"

❖ ❖ ❖

"இளம் வயசுக் காதல் சார். இப்போ அதெல்லாம் அல்பமாத் தோணுது! ராமநாதன் இல்லைன்னா வாழ்க்கை கிடையாதுன்னு நினைச்சேன்!" என்றாள் சாகரி, அலமாரியில் எதையோ தேடிக்கொண்டே.

சாகரிக்கு முப்பது வயசு இருக்கும்.

முகத்தில் களை! செழுமையான கன்னங்கள்! இன்னும் இளமை துள்ளியது!

வினோத்தின் மனம் சுண்டியது.

சாகரி, வக்கீலாகப் பணிபுரிபவள். அவளது கணவன் இரண்டு ஆண்டுக்கு முன் விபத்தில் மறைந்துவிட்டார்.

"பொதுவா ராமநாதன் எப்படிப்பட்டவர்?"

"ஒழுக்கத்தை எதிர்பார்ப்பவர் சார்! சந்தேகம் அடிக்கடி வந்துடும். நல்லவேளை! நான் அவரைத் திருமணம் செய்யாதது நல்லதாப் போச்சு! நான் வழக்கறிஞர். நாலு பேரோடு பேசுறதை அவர் சகிச்சுக்க மாட்டார்! என் வாழ்க்கையை ரணமாக்கி இருப்பார்!"

"அவர் தம்பி சுதாகரைப் பற்றித் தெரியுமா?"

"நான் பார்த்ததா நினைவு இல்லை! ஆனா தம்பியைப் பற்றிச் சொல்லியிருக்கார்! அவ்வளவுதான்!"

❖ ❖ ❖

ராமநாதன் காலையில் வல்லீஸ்வரர் கோவிலுக்குப் போனார்.

வழியில் பிச்சைக்காரர்களுக்கு அன்போடு காசுகளைப் போட்டார்.

கடைக்குச் சென்று பழங்களை வாங்கினார்.

பையில் போட்டு வெவ்வேறு வீடுகளுக்குச் சென்றார்.

வீட்டில் உள்ளவர்களிடம் சில பழங்களைக் கொடுத்தார்.

நான்கு வீடுகளில் அதேபோல் செய்தார்.

ஒவ்வொரு வீட்டிலும் மனநோய் குணமடைந்த ஒருவர் இருந்தார். அவர்களைக் கண்டு நலம் விசாரித்துப் பழங்களைக் கொடுத்தார்.

வேலையிலிருந்து விருப்ப ஓய்வு வாங்கியதால் அவர் இதுபோன்ற சமூக வேலை செய்து வந்தார்.

மாலையில் அவர் மீண்டும் வீட்டைவிட்டுப் புறப்பட்டார். மனச்சாந்தி மையத்துக்குப் போனார்.

வினோத் காலையிலிருந்து அவரைக் கவனித்து வந்தான்.

சாந்தி மையத்துக்கு அவர் போனபோது வினோத், பின்தொடரவில்லை.

இரவு எட்டு மணிக்கு ராமநாதன் திரும்பி வரும்வரை வழியில் காத்திருந்தான். அவர் வந்தபோது குறுக்கிட்டான்.

"நீங்களா?" என்று திடுக்கிட்டது போல் ராமநாதன் கேட்டார்.

நெற்றியில் வியர்வை விட்டுக் களைத்திருந்த அவர், "நான் சாந்தி மையத்தில் மனநோயாளிகளுக்கு சேவை செய்கிறேன்!" என்றார்.

"எவ்வளவு காலமா?"

"நாலு ஆண்டு இருக்கும்!"

வினோத்தின் மனம் குறுகுறுத்தது.

"உங்க தம்பி சுதாகர் இந்த மையத்தில்தானே நோயாளியா இருந்தாரு. . ."

"ஆமாம்! அவன் மனசு சரியில்லை! இந்த மையத்திலே தான் சேர்த்து விட்டேன். எல்லா உதவியும் செஞ்சாங்க! விதி வேறுவிதமா அவனைக் கொன்னுடுத்து. . . விபத்திலே மாட்டவச்சு!"

கண்களைத் துடைத்தார், ராமநாதன்.

❖ ❖ ❖

வினோத் அலுவலகம் போனபோது, மேஜர் மாணிக், கோபத்தோடு எழுந்தார்.

கையிலிருந்த 'கைத்தடி' விர்ர்ரென்று பலமுறை சுழன்றது.

"அநியாயம்! நம்ப ஏஜென்சியிலேருந்து மாறு வேடத்தில் போனா அதை இன்னொருவர் கண்டுபிடிக்கும் படி விடலாமா? மோசம். . . மோசம். . . !"

கைத்தடியைக் கீழே பலமாக அடித்தார்.

அடித்தளம் ஆடியிருக்கும்.

வினோத் 'கப்சிப்' என இருந்தான்.

"வருத்தப்படுகிறேன் சார்! சாதாரண 'மேக்-அப்' போதும்னு நினைச்சேன்!" என்றான் வினோத்.

"எப்படி? போற இடத்தைச் சாதாரண இடமா நினைச்சிருப்பே, சரிதானா?"

"ஆமா சார்! சாதாரண ஆஸ்பத்திரின்னு. . . !"

மேஜர் மாணிக்கின் நெற்றி சுருங்கியது. ஒரு மின்னல் எண்ணம் வந்திருக்க வேண்டும். கைத்தடியை மேசை மீது சாய்த்துவிட்டு உட்கார்ந்தார்.

"வினோத்!" என்றார் தணிவாக.

"ஆஸ்பத்திரியிலே ஏதோ மர்மம் இருக்கு வினோத்! இல்லாட்டி. . . எதுக்கு இவ்வளவு பாதுகாப்பு. . . ?"

வினோத்தின் முகத்தில் பிரகாசம் கூடியது.

"வினோத்! இதை விடக்கூடாது. எப்படியும் கண்டுபிடிச்சாகணும். என்ன ஆபத்து வந்தாலும் சரி. . . !"

"சரி சார்!"

❖ ❖ ❖

"அலோ! ரதிபிரியா இருக்காங்களா?"

"யார் பேசுறீங்க?" என்றாள், ரதியின் தாயார்.

"வினோத் மேடம்!"

"அவ வெளியிலே போயிருக்கா. . . !"

"செல்போன் கொண்டு போனாங்களா?"

"போனா!"

"எப்போ போனாங்க?"

"இரண்டு மணிநேரம் ஆச்சே!"

வினோத் வைத்தான்.

மணியைப் பார்த்தான். மாலை ஆறரை! மெல்ல இருட்டியது.

தனக்கு நடந்ததை எல்லாம் காலையில் ரதியிடம் சொல்லிவிட்டான். அப்படி சொல்லியும் ரதி தனியாகப் போயிருக்க வேண்டியதில்லையே?

எங்கேயாவது மாட்டிக் கொண்டாளா?

இரவு 7.40.

தொலைபேசி சிணுங்கியது.

ரிசீவரை எடுத்தான்.

"வினோத் பேசுறேன்!"

"நான் ரதி!"

"எங்கே இருக்கே?"

"மனநோய் மையம் பக்கம்!"

"ஐயோ! தனியாவா போனே?"

"கவலைப்படாதீங்க! மையத்தின் பின்புறத்திலே டீக்காரர் தெருன்னு இருக்கு. அங்கே இருக்கேன். . . வாங்க!"

"சரி!"

"ஸ்கூட்டர்லே வராதீங்க! உங்க ஆபீஸ் கார்லே வாங்க. வரும்போது பைனாகுலர் கொண்டுவாங்க. . ."

❖ ❖ ❖

வினோத் பத்து நிமிடத்தில் அந்த இடத்துக்கு காரில் வந்து சேர்ந்தான்.

ரதி தாவி ஏறினாள்.

"வினோத்! ஏன் பதற்றம்?"

"உன்னைப் பார்க்கிறவரை பதற்றம்தான். இப்போ என்ன செய்ய போறோம்?"

"அந்த விடுதி இல்லே. . . !"

"ஆமா!"

"அங்கே தங்குறோம்!"

"ஏன்?"

"ஏனா? நாம்ப ஏதாவது கண்டுபிடிச்சாகணும் வினோத். எனக்கு மனசு துடிக்குது. ஆபத்து வந்தாலும் பரவாயில்லை."

"மேஜர் மாணிக்கும் அதுதான் சொல்றார்!"

"அந்த விடுதி, மனநோய் மையத்துக்கு நேர் பின்னாலே இருக்கு!"

எட்டு மணிக்கு வாடகை அறை எடுத்தார்கள்.

வரவேற்பில் இருந்த ஆசாமி, ரதியை ஒரு பார்வை பார்த்தான்.

அது ஒரு மலிவு விடுதி.

மாடிப்படியின் அழுக்குகள் அதிகம் பேசின.

நான்காவது மாடியில் அறை.

அறையில் ஒரு ஒத்துக்கொள்ளாத நெடி! மெத்தை, பிசுக்கு வர்க்கத்தோடு இருந்தது. மூலையில் மேசை. அதன்மேல் அழுக்கோடு தம்ளர்கள். ஒரு மண் கூஜா.

ஆனால், ஒரு விஷயம் பளிச்சிட்டது.

பின்புறத்தை நோக்கி ஜன்னல் எதுவுமில்லை. மொட்டை மாடிக்குத்தான் போயாக வேண்டும்.

அரை மணிநேரம் நோட்டம் விட்டுவிட்டு, பிறகு மொட்டைமாடிக்குப் போனார்கள்.

பின்னால் பார்த்தபோது, மருத்துவமனையின் விஸ்தீரணம் தெரிந்தது. இடையிடையே சிறிய இடைவெளிகள்.

இருவரும் பைனாகுலர் மூலம் மாறி மாறிப் பார்த்தனர்.

“வினோத்! இடது ஓரத்தில் பாருங்க! ஒரு தள்ளு வண்டி நிற்குது தெரியுதா?”

சற்று பிரயாசைக்குப் பிறகு அவன் கண்ணில் பட்டது. “ஆமாம்!” என்றான்.

“அந்தத் தள்ளுவண்டி இருக்கிற இடத்தில்தான் ஏதாவது ஆபரேஷன் தியேட்டர் இருக்கணும். . .”

“ஆபரேஷன் தியேட்டரா?”

கேள்வி முடியவில்லை. பின்னால் சத்தம் கேட்டது. வினோத் திரும்பினான்.

இரண்டு நிழல்கள் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தன.

“என்ன தம்பி பார்க்கிறீங்க?”

ஒரு குரல் மெத்தனமாகக் கேட்டது.

அந்தக் குரலின் அடிவாரத்தில் இருந்த ஆத்திரம் அவனுக்குப் புரிந்தது.

மென்மையாகப் பேசி அவன் பழக்கப்பட்டவனல்ல என்றும் தெரிந்தது.

முரட்டுத்தனமான இருவர் அருகே வந்தார்கள்!

ഇഠരു

22

அதிரடித் தாக்குதல்!

வினோத்தின் கையிலிருந்து பைனாகுலரை ரதிபிரியா அவசரமாய் வாங்கினாள்.

கட்டுமஸ்தான இரண்டு ஆசாமிகளும் தங்கள் முரட்டு உடல்களை மேலும் முறுக்கிக் கொண்டு முன்னால் வந்தனர்.

"அது யாரு தங்கச்சிக்கண்ணு!" என்றான் முதல் ஆசாமி, கடைந்தெடுத்த கரகரப்பில்.

"தங்கச்சிக்கண்ணு உனக்குச் சொந்தமில்லே!" என்றான், வினோத் சூடாக!

"அப்போ ஊருக்கெல்லாம் சொந்தமா?" என்று ஓசையில்லாமல் சிரித்தான் அவன்.

அவன் சிரிப்பை அவனே அனுபவித்தவாறு இரண்டாமவன் பக்கம் திரும்பினான். அவன் இன்னும் முகக் கடுமையை கடுகளவும் மாற்றாமல் இருந்தான்.

முதலாமவன் ரதிபிரியா அருகில் போய் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

"நல்ல சரக்கைத்தான் தள்ளிட்டு வந்திருக்கான்! டிப்டாப்பா இருக்கு! ராத்திரி விளையாடலாம்!" என்றான்.

ரதிபிரியா, அவன் மீது ஒரு அக்னிப் பார்வையை வீசினாள்.

"அடேய்! நல்ல ரோஷமான பொண்ணுடா! என்னமாய் பாக்குது!" என்று சொல்லிவிட்டு, "முதலிரவு பார்க்கப்போகும் பொண்ணே! தங்கச்சிக் கண்ணே. . ." என்று பாட்டை எட்டு கோணலாகப் பாடினான்.

பாட்டை முடிக்கவில்லை. அதற்குள் அவனது தடிமனான கை ரதியின் மீது விழுந்தது.

தோள் மீது விரல் பட்டதுதான் தாமதம்.

ரதிபிரியாவின் வலதுகால் ஓர் ஏவுகணை போல் எழுந்தது. காற்றைச் சீவி பாய்ந்தது.

கண் சிமிட்டும் நேரத்தில் ஒருபாதி வட்டமாகச் சுழன்று அந்த ஆசாமி மீது மோதியது.

ஒரு சப்பட்டைச் சத்தம்.

பற்கள் ஆடின. தலை சுற்றியது.

கண்ணைக் கொட்டிக் கொட்டிப் பார்த்தான்.

எதுவும் தெரியவில்லை. வெறும் இருட்டுதான் தெரிந்தது.

இதற்குள் இரண்டாமவன் வேகமாய்ப் பாய்ந்து தனது இரும்புக் கையால் வினோத்தைப் பற்றிக் கொண்டான். பிறகு 'படக்' திருக்குத் திருக, 'ஆ' என்கிற வலியுடன் வினோத்தின் உடம்பு முழுத் திரும்பு திரும்பியது. முன்பு வயிறு இருந்த இடத்தில் இப்போது முதுகு இருந்தது! கை மேலும் கயிற்றுத் திருகலாக திருகப்பட, வலி அதலபாதாளம் பாய்ந்து வினோத்தின் ஆத்மாவைக் கலக்கியது.

ரதிபிரியா ஒரு மில்லி நொடியில் திரும்பினாள்.

இப்போது இடதுகால் அவளுக்குத் தினவு எடுத்தது.

வினோத் முகம் கோணலிடுவதை இரண்டாமவன் ரசிக்கும்போதே, ரதிபிரியா அவன் பக்கம் பாய்ந்தாள்.

இடதுகாலை ஒரு 'கர்லா' சுழற்றுச் சுழற்றி ஓங்கி அவனது பின்புறத்தைக் குறி வைத்தாள்.

அந்த உலக்கை அடி 'கும்' என்று விழுந்தது.

முதுகுக்குக் கீழே நிறைய கறிசேர்ந்து உருண்டையாகி இருந்த இரண்டாமவனின் பின்புறம், அப்படியே சப்பையாகியது!

வினோத்தைத் திருகிய அவனது கை சுருட்டிய துணி போல தானாக உலைந்து விழுந்தது.

'அம்மா' என்ற ஒரு முக்கலோடு வினோத் தனது திருகிய கையை சுவாதீனமாக்கிக் கொண்டான்.

முதலாமவன் இன்னும் மயக்கத்தில் சுருள, இரண்டாமவனுக்கு சுயநினைவு மிச்சமிருந்தது.

தனது திரளான உடம்பை ரதிபிரியாவை நோக்கித் திருப்பினான்.

இப்போது ரதிபிரியாவின் வலதுகால் வேகம் எடுத்தது.

சின்ன சுழற்றில் அசுரவேகம் காட்டி தொபீர் என்று அவனது மார்பில் மோத வைத்தாள்.

சத்தம் பயங்கரமாக எதிரொலித்தது.

அவன் நினைவில் எங்கும் தீப்பிழம்புகள் எழ, கால் வலுவில்லாமல் வளைய, குடைராட்டுபோல் இரண்டு முறை சுழன்று 'டமார்' என்று கீழே விழுந்தான்.

"ரதிபிரியா!" வினோத் அழைத்தான்.

ரதிபிரியா கீழே கிடந்த இருவரையும் எக்காளப் பார்வை பார்த்துவிட்டு அவனைப் பின்தொடர்ந்தாள்.

இருவரும் அறைக்கு வந்தார்கள்.

பிறகு கீழே இறங்கி, இருட்டுக்குள் மறைந்தார்கள்.

❖ ❖ ❖

மீண்டும் அலுவலகத்தை அடையும்போது மணி பதினொன்று முப்பது.

"பிரமாதம்!" என்றான், வினோத்.

ரதிபிரியா மெல்லியதாகப் புன்னகை காட்டினாள். "வினோத்! என் கராத்தே தாக்குதல் எப்படி? அவங்க உடம்பு சரியாக ஒரு வாரமாகும்!"

வினோத், அலமாரியைத் திறந்து அதிலிருந்து இரண்டு பழ ரசங்களை ஊற்றி வந்தான்.

இருவரும் துளித் துளியாய் பருகினார்கள்.

அந்த ஓய்வு வேண்டி இருந்தது.

"ரதி! உன்னை ரொம்பப் பாராட்டணும்!"

"எதுக்கு?"

"மனநோய் மையத்தை நானே தள்ளிப் போட்டுக் கூட, நீ உடனே இதைக் கண்டுபிடித்துத்தான் ஆகணும்னு கிளம்பிட்டே!"

"கொலையாளிங்களை கண்டுபிடிக்கணும்னு வெறி, வினோத்! இப்போ நான் ஒன்று கண்டுபிடிச்சிருக்கேன்!"

"என்னது?"

ரதிபிரியா இப்போது அபூர்வ அழகில் தெரிந்தாள்.

அறையின் சின்ன விளக்கைப் போட்டதில் அற்பமான வெளிச்சம், பரவியிருந்தது.

அதன் மென்மை ஒளியில் ரதிபிரியாவுக்கு ஒரு வியப்பான மெருகு வந்திருந்தது. கண்கள் மேலும் வசீகரித்தன. உதடுகள் கூடுதல் கவர்ச்சிக் காட்டின. குண்டர்களை மடக்கியதில் மார்புகள் சுயஉருவம் கலைந்து மோகனமாகக் காட்சியளித்தன. அந்தத் தோற்றம் வினோத்தைப் பரவசமாக்கியது.

இவளது துள்ளும் இளமை உண்மையில் ஒரு கொல்லும் இளமை என்று நினைத்தான். 'வினோத்! சொர்க்கம் உன் கையில்!' என்று மனம் அடிக்கடி சொல்லியது.

ரதியைப் பார்த்தான்.

அவள் கண்கள் மறுகலாக மலர்ந்திருந்தன.

'உம். . .' வினோத் பெருமூச்சு விட்டான்.

"என்ன கண்டுபிடிச்சே ரதி?"

"முதல்லே நாம் மோப்பம் பிடிக்கிறோம்னு எதிரிங்க உணர்ந்தாச்சு!"

"அதான் தெரிஞ்சாச்சே!"

"இந்த இரண்டு குண்டர்களும் அவங்க அனுப்பித்தான் வந்திருக்கணும். இனிமே நாம்ப ரொம்ப எச்சரிக்கையாக இருக்கணும். . ."

"புரிஞ்சுக்கிட்டேன்!"

"அடுத்த விஷயம், இந்த மனநல மருத்துவ மையமும் ஒரு மர்மம்தான்."

"அதுவும் தெரிஞ்சாச்சு!"

"அதை நாம பார்க்க விடாம செய்யத்தான் இந்த குண்டர்களை வச்சிருக்காங்க!"

"சரி!"

''இன்னொரு முக்கியமான விஷயம், இந்த ஆஸ்பத்திரிக்குள்ளே போறதுக்கு வேறு வழி இருக்கணும்னு சொன்னேனே, அது பின்னாடி இருக்கிற டீக்காரர் தெருவிலே இருக்கு!"

"அது எப்படித் தெரியும்?"

புன்னகை ஒன்று வீசினாள், ரதிபிரியா!

அதன் நளினத்தில் இளமை துள்ளியது.

"எப்படி கண்டுபிடிச்சே?"

"நீங்க பார்க்கலியா?"

"இல்லையே!"

"ஓட்டல் மேலே இருந்து தெருவைப் பார்த்தீங்களே! ஒரு தள்ளுவண்டியைப் பார்த்தீங்களா?"

"ஆமாம்! தெருவோரம் நின்னுது!"

"அதன் தடம் கறுப்பாத் தெரிஞ்சுது பார்த்தீங்களா?"

"பார்க்கலியே!"

"சாதாரணமாப் பார்த்தா தெரியாது. பைனாகுலர்ல நல்லாத் தெரிஞ்சுது. அதை பார்த்துக்கிட்டே போனா, தெருவிலே ஒரு வீட்டு முன்னாடி போய் நின்னுது. அங்கேதான் ஆஸ்பத்திரிக்கு வழி இருக்கணும், பின்பக்கமா ஒரு வழி! இப்போ நாம்ப அங்கே போறோம்."

"ஆஸ்பத்திரிக்கா?"

"இல்லை. டீக்காரர் தெருவுக்கு!"

"களைப்பா இல்லையா?"

"களைப்பாவது கிளைப்பாவது! கிளம்பு."

பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்டார்கள்.

"கார் வேண்டாம். ஸ்கூட்டரில் போகலாம்!" என்றாள், ரதிபிரியா.

டீக்காரர் தெருவில் ஸ்கூட்டரைத் தனியே நிறுத்தி, இருவரும் நிழல் வழியே நடந்தார்கள்.

தெரு உறங்கிக் கொண்டிருந்தது.

குறிப்பிட்ட தூரம் போனதும் ரதிபிரியா நின்றாள். கண்ணை இடுக்கிப் பார்த்தாள்.

சின்னதும் பெரிதுமாக ஒவ்வொன்றும் ஒட்டியவாறு நிற்கும் வீடுகள்.

எதையும் கண்டுபிடிக்கவில்லை.

வினோத், அவளையும் வீடுகளையும் மாறி மாறிப் பார்த்தான்.

"அதோ!" என்றாள்.

வினோத் பார்த்தான்.

இரண்டு வீடுகளுக்கு நடுவில் அந்தச் சின்னப் பகுதி. கார் நிறுத்தும் இடம் போல இருந்தது.

ரதிபிரியா இருபக்கமும் தெருவைப் பார்த்தாள். சந்தடி இல்லை என்று தெரிந்ததும் அந்த இடத்தின் பக்கம் போனாள்.

வினோத்தும் தொடர்ந்தான்.

பெரிய கதவு இருந்தது. இரட்டைக் கதவுகள்!

ரதிபிரியா இழுத்துப் பார்த்தாள்.

உள்ளே தாழ் போட்டிருந்தது.

'என்ன செய்யலாம்?' சில நிமிடங்கள் யோசனையில் செல்ல. . .

திடீர் என்று 'தடதட'வென சத்தங்கள் கேட்டன.

இருவரும் விலகிக்கொள்ள, சில நுட்பமான 'கிரீச்'களுடன் கதவு திறந்தது.

'அகப்பட்டோம்' என்ற நினைப்பில் அடுத்த வீட்டுச் சுவருடன் ஒட்டினார்கள்.

அந்த மர்ம இடத்தின் உள்ளே வெளிச்சமே இல்லை. 'கும்' இருட்டு. அதைத் தாண்டி மறுபக்கத்தில் கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது.

"பார்த்தீங்களா? பின்புறமும் கதவு. ஆஸ்பத்திரிக்குப் போகிற வழி!" என்று வினோத்தின் காதில் ரதிபிரியா கிசுகிசுத்தாள்.

எட்டத்தில் இன்னும் வெளிச்சம் தெரிய. . .

அவர்கள் கண்ட காட்சி மனதை உலுக்கியது.

கதவைத் திறந்துவிட்ட ஒரு ஆசாமி பின்புறம் ஓடிக் கொண்டிருந்தான்.

23

முடிச்சு அவிழ்ந்தது!

வினோத்தும் ரதிபிரியாவும் பக்கத்து வீட்டுச் சுவரோடு ஒட்டிக்கொண்டு, கார் நிறுத்தும் கூடத்தின் வழியே பின்புறம் பார்த்தார்கள்.

கூடத்தின் முன்புற வாசலும் பின்புற வாசலும் திறந்திருக்க, பார்வை அவை ஊடே பாய்ந்து எட்டத்தில் சென்றது. மனநோய் மையத்தின் பின்புற முகப்பு தெரிந்தது.

அங்கே ஒரு 'ஸ்டிரெச்சர்'. அதைத் தள்ளுவண்டிக்குள் நழுவவிட்டார்கள். சின்ன கிறீச் கிறீச்சுகளுடன் தள்ளுவண்டியைச் சிப்பந்திகள் இருவர் தள்ளினார்கள். அது கார் கூடத்தின் வழியாகத் தெரு வாசலுக்கு வந்தது.

"பேஜாரு பிடிச்ச வேலை" ஒரு சிப்பந்தி முகம் கோணலாக்கிக் கூறினான்.

தெருவில் ஆடிக்கொண்டே அந்த வண்டி சென்றது.

அது போவதற்கும் ஒரு ஆம்புலன்ஸ் வண்டி சீறிக் கொண்டு வந்து அருகே நிற்பதற்கும் சரியாக இருந்தது.

"ஆம்புலன்ஸ்" என்றான், வினோத்.

"அப்போ. . ." என்று ரதிபிரியா யோசித்தாள். ஸ்டிரெச்சரில் போறது சடலம் இல்லை! நோயாளிதான். இங்கே உள்ள மனநோயாளி!

ஆம்புலன்ஸ், ஸ்டிரெச்சரை ஏற்றிக்கொண்டு போக, தள்ளுவண்டி திரும்பி வந்தது.

வினோத், ரதிபிரியா இருவரும் நிழலோடு கலந்து சென்று ஸ்கூட்டரை அவசரமாகக் கிளப்பினார்கள்.

சில்லென்று இரவுக் குளிரில் பறந்தார்கள்.

ஆம்புலன்ஸ் கண்ணடித்துக் கொண்டே ஓடியது.

சத்தமும் புழுதியும் சாலையில் நிறைந்தன.

வினோத்தும் ரதிபிரியாவும் பின்தொடர்ந்தார்கள்.

ஆம்புலன்ஸ் அடுத்த சாலைக்குப் போவதற்குள் அதைப் பிடித்து விட்டார்கள்.

வினோத், ஸ்கூட்டரின் விளக்கை அணைத்தான்.

ரதிபிரியா எச்சரிக்கை செய்தாள். ''ரொம்ப நெருங்கிடாதீங்க!"

வினோத் இரட்டை மடங்கு எச்சரிக்கையைக் கடைப்பிடித்தான்.

ஆம்புலன்ஸ் முக்கிய சாலையில் ஐந்து நிமிடம் பயணித்து மருத்துவமனையை அடைந்தது.

ஸ்கூட்டரை வினோத் எட்டத்தில் நிறுத்தினான்.

"வினோத், நீங்க காவலுக்கு இருங்க. நான் என்னன்னு பார்க்கிறேன்."

"ஆபத்து வரலாம் ரதிபிரியா!"

"பரவாயில்லை!"

"கொஞ்சம் இரு!"

ஸ்கூட்டரை ஒரு தூரத்து நிழலுக்குள் நிறுத்தி வினோத் பூட்டினான்.

ரதிபிரியா முன்னால் விரைந்தாள்.

வினோத் தனது எச்சரிக்கைப் பார்வையை இங்கும் அங்கும் செலுத்தியபடியே சாலையை ஆராய்ந்து நடந்தான்.

மருத்துவமனையை எட்டியபோது ரதிபிரியா உள்ளே போயிருந்தாள்.

'ஆம்புலன்ஸ் எங்கே நிற்கிறது?'

வாசலில் காணவில்லை. பின்புறம் போயிருக்கலாம்.

ரதிபிரியாதான் போயிருக்கிறாளே. . .

வினோத் நின்றான். பிறகு அதுவே சந்தேகத்தைக் கொடுக்கும் என்று நினைத்து உள்ளே போனான்.

ரதிபிரியா இதற்குள் உள்ளே போயிருந்தாள். ஆம்புலன்சிலிருந்து ஸ்டிரெச்சரை இறக்குவதைக் கவனித்தாள்.

ஸ்டிரெச்சர் நகர்ந்து லிப்டில் ஏறியது.

ரதிபிரியா மாடிப்படிகளில் ஏறி விரைந்தாள்.

'லிப்ட்' இரண்டாவது மாடியில் நிற்பது தெரிந்தது.

படிகளில் நின்று தலையை மட்டும் நீட்டி 'என்ன நடக்கிறது?' என்று கவனித்தாள்.

ஸ்டிரெச்சர் மாடி வராந்தாவில் நகர்ந்து, ஆபரேஷன் அறைக்குள் நுழைந்தது.

ரதிபிரியா காத்திருந்தாள். வினோத் கூடவே சேர்ந்து கொண்டான்.

ஸ்டிரெச்சரை கொண்டுபோன ஆசாமிகள் இரண்டாவது நிமிடம் வெளியே வந்தார்கள்.

லிப்ட் கீழே இயங்கும் சத்தம் கேட்டது.

ரதிபிரியாவும் வினோத்தும் வராந்தாவில் விரைந்தார்கள். ஸ்டிரெச்சர் எந்த அறைக்குள் சென்றது என்று பார்த்தார்கள்.

மூன்று ஆபரேஷன் தியேட்டர்கள் இருந்தன.

ஏ, பி, சி என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

'பி'க்கும், 'சி'க்கும் அடுத்தடுத்து கதவுகள்.

ஏதாவது ஒன்றுக்குள்தான் போயிருக்கும்!

யோசனையுடன் வராந்தாவில் நடந்தார்கள்.

இடதுபக்கம் ஒரு பார்வையாளர் பகுதி. அதில் நான்குபேர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

மூன்று ஆண்கள்.

நான்காவது பெண். அவள் சோபாவில் அமர்ந் திருந்தாள்.

சின்ன யோசனை செய்து அவர்களை அணுகினார்கள்.

எல்லோர் முகத்திலும் கவலை ஒட்டியிருந்தது.

அவர்களது உறவினர் யாராவது ஆபரேஷன் அறைக்குள் போயிருக்க வேண்டும்.

அந்தப் பெண்ணுடன் ரதிபிரியா பேச்சு கொடுக்க, வினோத் படபடத்துப் பார்த்தான்.

அவளுக்கு 28 வயது இருக்கும்! நல்ல தோற்றம். மொட்டு போல் முகம்!

கலங்கிய கண்களுடன் இருந்தாள்.

ரதிபிரியா அவளருகில் அமர்ந்தாள்.

"அக்கா!" என்றாள்.

அந்தப் பெண் திரும்பினாள். சுரத்தில்லாமல் "உம்" போட்டாள்.

"உங்க சொந்தக்காரங்க சிகிச்சைக்கு வந்திருக்காங்களா?" ரதிபிரியா கேட்டாள்.

"என் கணவர்!"

"என்ன செய்யுது?"

"சிறுநீரகம் வேலை செய்யலை. . . உள்ளே மாற்று சிறுநீரகம் வைக்கிறாங்க!"

"இப்பவா?"

"ஆமாம். இப்பதான் மாற்று சிறுநீரகம் கிடைச்சதுன்னு சொன்னாங்க!"

ரதிபிரியா மனதில் ஒரு சின்ன 'கிளிக்' அடித்தது.

"அவர் நல்லபடி திரும்பி வருவதற்காக நான் பிரார்த்தனை செய்யிறேன்" என்றாள், ரதிபிரியா கனிவுடன்.

கண்களை மூடி உண்மையாக ரதிபிரியா ஜெபித்தாள்.

பிறகு கண்களைத் திறந்து, "பயப்படாதீங்க! உங்க கணவர் நல்லபடியா வெளியே வருவார்."

ரொம்ப நம்பிக்கையாகக் கூற, அந்தப் பெண்ணுக்கு கண் சற்று மலர்ந்தது. "நன்றி!" என்றாள்.

"யாரம்மா மாற்று சிறுநீரகம் தர்றாங்க? சொந்தக்காரங்களா?" மெல்ல அசைத்தாள், ரதிபிரியா.

"இல்லை! யாரும் கொடுக்க முன்வரலை. ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு காரணம் காட்டி, தரமாட்டேன்னு சொல்லிட்டாங்க!"

"அட கடவுளே! அப்புறம் யார் கொடுத்தாங்க?"

"வெளி ஆள் யாரோ ஒருத்தர்."

"அது யாரு?"

"பெயர் தெரியாது!"

"தெரியாதா? எப்படித் தெரியாம இருக்கும்?"

"இந்த ஆஸ்பத்திரிக்காரங்களே அதுக்கும் ஏற்பாடு பண்ணிட்டாங்க!"

ரதிபிரியாவுக்கு உள்ளே சுருட்டியது.

"அதெப்படி?"

"எப்படியோ. . . அவங்க ஏற்பாடு பண்றாங்க!"

"இலவசமா சிறுநீரகம் தர்றாங்களா?"

"ஐயோ! தனியார் ஆஸ்பத்திரி அதைப்போல செய்யுமா? ரெண்டு லட்சம் வாங்கிட்டாங்க!"

"ஓகோ! அந்தப் பணம் சிறுநீரகம் கொடுக்கிற வங்களுக்குப் போய்ச் சேருமா?"

"தெரியாது."

"சிறுநீரகம் கொடுத்தாங்கன்னு சம்மந்தப்பட்டவங்க வெளியிலே சொல்றதில்லையா?"

"சொல்றதில்லை. . ."

ரதிபிரியாவின் கேள்வி நின்றது. ஒரு பெருமூச்சு வந்தது. அதை அடக்கிக்கொண்டாள்.

ஆபரேஷன் முடிய நேரமாகும் என்று தெரியும். ரதிபிரியா விடைபெற்று எழுந்தாள்.

அடுத்து உட்கார்ந்திருப்பவர்களை அணுகினாள்.

தந்தைக்கு இதய அறுவை! பகலில் நடந்துவிட்டது. நினைவு திரும்புவதற்காக அந்த மூன்று பிள்ளைகளும் காத்திருந்தார்கள்.

ரதிபிரியா எழுந்தாள். விநோத் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். 'என்ன சாமர்த்தியம் இவளுக்கு!' என்று நினைத்தான்.

இருவரும் படிகளில் இறங்கத் தொடங்கினார்கள்.

கீழே முதல் தளம் தெரிந்தது.

அங்கே ஓரமாக ஒரு உருவம். அதன் மீது அவர்களின் பார்வை பாய்ந்தது. அப்படியே நிலைகுத்தி நின்றது.

ஐ௦ஞ

24

அதிர்ச்சி மேல் அதிர்ச்சி

மாடிப்படிகளில் ரதிபிரியா, வினோத் இறங்கினார்கள்.

முதல் தளம் வந்ததும் திடுக்கிட்டு நின்றனர்.

படிகளின் வெளியே வந்து தளத்தில் நடந்துதான் அடுத்த சுற்றுப்படியில் இறங்க வேண்டும்.

ஆனால், முதல் தளத்தில் 'பளபள'த்த பளிங்குத் தரையில் பெரிய உடம்புடன் கிரி நின்று கொண்டிருந்தார்.

அவர் காலுக்குக் கீழே இன்னொரு கிரி தலைகீழாக நின்றார்.

அவரைப் பார்த்தவுடன் ரதிபிரியா தனது முகத்தைச் சட்டென்று உள்ளே இழுத்தாள். 'தப்பித்தோம்' என்று நினைத்து வினோத்தை கையால் தள்ளி மேலே படிகளில் ஏற்றினாள்.

அங்கே படித்திருப்பத்தில் வினோத்திடம் காதோடு விஷயத்தைக் கூறினாள்.

'என்ன நடக்கும்?' என்ற கவலை இருவரையும் வாட்டியது.

காத்திருந்தார்கள்.

விநாடிகள் நத்தைபோல் ஊர்ந்தன.

என்ன நடக்கும், எப்படி வெளியேற வேண்டும் என்று யோசனை ஓட, 'லிப்ட்' கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

மூச்சைத் 'தம்'பிடித்து நின்றார்கள்.

லிப்ட், மேலே ஏறிய...

இரண்டாம் மாடியில் நின்றது.

அங்கே லிப்ட் திறந்து ஆள் நடக்கும் சத்தம்.

"கிரி மேலே போயிட்டார்!"

ரதிபிரியா இப்போது கீழே எட்டிப் பார்த்தாள்.

முதல் தளம் வெறுமை.

வெளியில் வந்து அடுத்த சுற்றுப்படியில் இறங்கினார்கள்.

தெருவில் கலந்தார்கள். இருட்டுப் பிராந்தியத்தில் மறைந்து கொண்டார்கள்.

அங்கே தாராளமாக மூச்சுவிட்டு ஆசுவாசமான பிறகு, ஏதாவது சாப்பிட்டுவிட்டு துப்பறிவதைத் தொடரலாம் என்று நினைத்தார்கள்.

❖ ❖ ❖

ஒரு இரவு உணவகம்.

சுடச்சுட இட்லி, இலையில் பவனி வந்தது. மிளகாய்ப்பொடி, சட்னி வேறு.

சிரமமான வேலைகளுக்குப் பிறகு அவை அமிர்தமாக இருந்தன.

வினோத்துக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி!

இட்லி ஒருவகை சுவை என்றால், ரதிபிரியாவோடு இருப்பது இன்னொருவகை சுவை!

அதுவும் இருட்டில் பதுங்கி ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருப்பது என்றால் அதற்கு இணை ஏது?

சாப்பிட்ட பிறகு திரும்பினார்கள்.

மருத்துவமனை இருக்கும் தெருவில் இணைந்து நிற்க, ரதிபிரியாவின் நெருக்கம் அங்குல இடைவெளியில் இருக்கும் நிலையில், வினோத்துக்குள் துள்ளும் இளமை உணர்வுகள் துடித்தன.

❖ ❖ ❖

1.30 மணிக்கு மேல்தான் கிரியின் கார் தெருவில் போயிற்று.

அதைத் தொடர்ந்து மற்றொரு காரும் பாய்ந்து ஓடியது.

அதற்குமேல் எந்த அறிகுறியும் இல்லை.

மறைவிடத்திலிருந்து விடுபட்டு தெரு ஓரமாக பூனையாய் நடையிட்டார்கள்.

''ரதிபிரியா! உன்னோடு துப்பறியப் போறது பிடிச்சிருக்கு!" என்றான், வினோத்.

"நான் சாதாரண ஆள்! நீங்க. . ." என்று நிறுத்தினாள், அவள்.

"இல்லை ரதிபிரியா! உனக்கு நிறைய மூளை இருக்கு! அதிலே நல்ல யுக்தியும் பிறக்குது!"

மருத்துவமனையை மீண்டும் அடைந்தார்கள்.

சந்தடி இல்லை.

மருத்துவமனை மௌனமாக உறங்கிக்கொண்டிருந்தது.

ஒரு சில விளக்குகள் சுரத்திழந்து எரிந்தன.

கட்டடத்தின் உட்புறத்தில் நிழல்கள் மண்டி, ...லாகத் தெரிந்தன.

உள்ளே நுழைந்தார்கள்.

வெறுமைக்கு எவ்வளவு வலு? அது அவர்கள் ...ளதை அமுக்கியது.

படிகளில் ஏறி முதல் மாடிக்கு வந்தார்கள்.

நோயாளிகளை ஆபரேஷனுக்குப் பிறகு அங்கேதான் ...ண்டுவிடுவார்கள்.

"வாங்க!" என்றாள் ரதிபிரியா. வினோத்தை ...ரியமாக இழுத்தாள்.

முதலில் செவிலியர் அறை!

பாதி மூடி பாதி திறந்திருந்தது.

அடுத்த அறையில் 'அவசர சிகிச்சைப் பிரிவு' பலகை தொங்கியது.

அதை அடுத்து, அறுவைக்கு முன் இருக்கவேண்டிய அறை இருந்தது.

மெல்ல உள்ளே பார்த்தார்கள்.

பல முட்களுடன் கூடிய கருவி ஒன்று அவர்களைக் கவனித்தவாறு சின்ன வெளிச்சங்களுடன் மேஜையில் உட்கார்ந்திருந்தது.

ரதிபிரியா கண்ணைக் காண்பித்தாள்.

'இதுவா?' என்று சைகையில் கேட்டான், வினோத்.

அவள் தலையசைக்க, வினோத் உள்ளே போனான்.

அவள் வெளியே நின்றாள், இருபுறமும் விழிகளைச் செலுத்தி, எச்சரிக்கையுடன் இருந்தாள்.

வினோத், கட்டில் பக்கம் போனான்.

நோயாளிகள், மயக்க மருந்தால் ஆழத் தூக்கத்தில் இருந்தார்கள்.

சுற்றிவர வினோத்தின் கண்கள் பாய்ந்தன.

ஏதாவது கிடைக்குமா?

கட்டிலின் ஓரம் ஒரு அட்டை தொங்கியது. அருகில் சென்று பார்த்தான்.

பெயர் சரவணன்.

சிறுநீரகம் உதவியவர் என்று போட்டிருந்தது.

அறுவை செய்து அவரது வலதுபுற சிறுநீரகம் அகற்றப்பட்ட செய்தியை அதில் குறித்திருந்தார்கள்.

சரவணன் யார்? நாம் ஊகித்த அதே நபர்தானா?

வினோத் யோசித்தான்.

பொதுவாக இதுபோன்ற அறுவை முடிந்த நிலையில் உறவினர்கள் முன் அறையில் இரவில் தூங்குவார்கள்.

இங்கேயோ அந்தக் கட்டில்கள் காலியாக இருந்தன.

நோயாளி தனியாக இருந்தார்.

அப்படியானால் அவன் ஊகித்தது சரிதான்!

படுத்திருப்பது நோயாளி அல்ல! நோயாளி ஆக்கப்பட்டவன்! மருத்துவத்திற்காக! மற்றொருவர் வாழுவதற்காக நோயாளி ஆக்கப்பட்டவன்! திரும்பவும் அட்டையைப் பார்த்தான்.

நோயாளியின் முகவரி?

'எம்.சி.' என்று போட்டிருந்தது.

இது, எதைக் குறிக்கிறது?

"வினோத்" என்று குரல்.

உள்ளே ரதிபிரியா பாய்ந்தாள்.

அவனைப் பற்றி இழுத்து அதே அறையிலிருந்த குளியலறைக்குள் கொண்டுபோனாள்.

கதவை மூடி, தாழ்ப்பாள் போட்டாள்.

'டக் டக்' என்று நர்ஸ் நடக்கும் ஒலி!

இருவர் இதயங்களும் 'தடும் தடும்' என்று அடித்தன.

பயம் தவிர வினோத்துக்கு மற்றொரு காரணமும் இருந்தது.

ரதிபிரியா அவனோடு மிக நெருக்கமாக இருந்தாள்.

தனிமையும் இளமையும் கலந்திருந்த நிலை.

சத்தம் நின்றது.

நர்ஸ் இங்கேயே தங்கிவிட்டாளா?

வினோத்துக்குக் கவலை.

நேரம் சண்டி மாடு போல் நகர்ந்தது.

தொடர்ந்து 'டக் டக்'குகள் இங்கும் அங்கும் நடமாடின.

குளியலறை வரை கூட வந்தன.

இருவருக்கும் மூச்சு உள்ளே எக்கியது.

ஒரு விநாடி. . .

இரு விநாடி. . .

மூன்று விநாடி. . .

சத்தம் திரும்பிச் சென்றது.

அறைக் கதவைத் திறந்து யாரோ வெளியே போய் மறைந்தது போலிருந்தது.

இருவரும் வெளியே வந்தார்கள்.

படிக்கட்டு வரை மெல்ல நகர்ந்தார்கள்.

வராந்தாவைப் பார்த்தார்கள்.

படி வரிசைகளில் இறங்கினார்கள்.

கீழே வந்ததும் எச்சரிக்கையுடன் வெளியே நழுவினார்கள்.

தெருவில் கலந்து சற்று தூரம் போனதும்தான் முழு மூச்சே விட முடிந்தது.

ஸ்கூட்டரில் ஏறும்வரை அடர்ந்த மௌனம்.

இரண்டு தெரு தாண்டியதும் ரதிபிரியா, பேசினாள்.

"வினோத். . . என்ன நடந்திருக்கு தெரியுமா?"

"மனநோயாளியோட சிறுநீரகம் பறிபோச்சு!" என்றான், வினோத்.

"ஆமாம்!"

"அப்போ என்ன நடக்குதுன்னு புரிஞ்சாச்சு!"

"ஆமாம்! கருணை இல்லம் என்று நடத்தி மனவளர்ச்சி குன்றியவர்களின் ரத்தத்தை எடுத்து விற்பனை செய்கிறார்கள். தியான மையம் என்று பெயர் வைத்து மனநோயாளிகளின் சிறுநீரகத்தைத் திருடி விற்பனை செய்கிறார்கள்!" என்றாள், ரதிபிரியா.

"சிறுநீரகம் மட்டுமல்ல! கண் விற்பனைகூட நடந்திருக்கு! அதுக்கு கௌரி ஒரு சாட்சி! இன்னும் எத்தனை உறுப்புகளை எடுத்து விற்கிறார்களோ?" என்றான், வினோத்.

"பெரிய கண்டுபிடிப்புதான்!" என்றாள், ரதிபிரியா.

"அடடே. . . இப்போ புரியுது!" என்றான், வினோத்.

மேலே பேசவில்லை. ஸ்கூட்டர் தானாகப் போவது போல ஒரு பிரமை.

திடீரென்று எதிரே அடர்ந்த வெளிச்சம், சூரியன் போல் குதித்து அவர்களை நோக்கி வந்தது.

25

அவசர அழைப்பு!

நள்ளிரவைத் தாண்டிய நிசப்தவேளை வினோத்தும், ரதிபிரியாவும் ஸ்கூட்டரில் சிட்டுக் குருவியாகப் பறந்தார்கள்.

ஒரு குறுக்குத் தெருவில் செல்லும்போது, காரின் முகப்பு விளக்கு திடீரென்று எதிரே வந்தது.

வினோத்தும் - ரதிபிரியாவும் ஓரம்கட்டினார்கள்.

ஆனால், வெளிச்சம் அவர்களையே நோக்கி வந்தது. ரதிபிரியா வினோத்தை எச்சரித்தாள். ஸ்கூட்டரை அவன் 'சர்ர்ர்'ரென்று பிரேக் அடித்து, பிளாட்பாரம் மீது ஏறி, ஒரு வீட்டுப் படியோரம் நிறுத்தினான். அரைக்கணம் தாமதியாது, வீட்டுத் திண்ணையில் தாவி ஏறினார்கள்.

கார், வந்த வேகத்தில் வீட்டின் படிகளில் போய் உராய்ந்தது.

ரதிபிரியா, வினோத்தின் கைகளைப் பற்றி மறுபுறம் குதித்து அடுத்த சந்தில் பாய்ந்து விருட்டென மறைந்தாள்.

காரில் உள்ளவர், என்ன நடந்தது என்று கவனிக்கு முன் இவர்கள் காததூரம் ஓடிவிட்டார்கள்.

தெருக்கள் பல தாண்டி நிற்க -

"வினோத்! இனி ரொம்ப கவனமாக இருக்கணும்! நம்மை நிறைய பேர் கவனிக்கத் தொடங்கியாச்சு!" என்றாள்.

"இந்தக் காரில் யார் வந்தாங்க?"

"எதிரியாதான் இருக்கும். . ."

"யாரைச் சொல்றே?"

"கிரி. . ."

"நம்மைக் கண்டுபிடிச்சிருப்பாரா?"

"ஆமாம். சும்மா விடுவாரா? நல்லவேளை! இந்நேரம் .ஆஸ்பத்திரியிலே நாம் சிக்கி இருந்தா, ஒழிந்திருப்போம்!"

"ஸ்கூட்டர். . ."

"அங்கேயே கிடக்கட்டும்."

இருப்பிடம் விரைந்தார்கள்.

❖ ❖ ❖

மறுநாள் காலையில் திரும்பி அதே இடத்திற்கு வந்தபோது, ஸ்கூட்டர் அதுங்கிப் பதுங்கிக் கேட்பாரற்றுக் கிடந்தது.

அதை ஆட்டோவில் ஏற்றிப் பழுது பார்க்க அனுப்பி வைத்தார்கள்.

"இனி" என்றான், வினோத்.

"அந்தச் சிறுநீரக தானக்காரர் யாருன்னு தெரியணும். . ."

"அதுதான் தெரிஞ்ச விஷயமாச்சே. . . சரவணன்!"

"அதுசரி, முகவரி இல்லையே?"

"நாம் விசாரிச்சு அவன் வீட்டைக் கண்டுபிடிக்கணும்!"

"அதுக்கு மனநோய் ஆஸ்பத்திரிதான் போகணும்!"

"திரும்பவுமா?"

"ஆமாம், போகலாமா?"

"என்ன ரதிபிரியா, விளையாடுறியா?"

"பின்னே... முகவரி எப்படி கண்டுபிடிக்க முடியும்?"

வினோத் ஆகாயத்தைப் பார்த்தான்.

"அங்கே முகவரி தெரியுதா?" என்றாள், ரதிபிரியா.

வினோத் சிரித்தான்.

"வாங்க! ஒருவழி பண்றேன்" என்றாள்.

இருவரும் பொது தொலைபேசியைத் தேடிப் போனார்கள்.

❖ ❖ ❖

"அலோ! இது தியான மையமா?" உச்சக்குரலில் ரதிபிரியா பேசினாள்.

"ஆமாங்க! யார் பேசுறீங்க?"

"நாங்க பூடான் லாட்டரி ஏஜென்சியிலிருந்து பேசுறோம்... உங்க மையத்திலே 'சரவணன்'னு யாராவது இருக்காரா?"

"சரவணனா?"

"ஆமாம். வயது இருபத்தஞ்சுன்னு போட்டிருக்கு!"

"ஓ! இருக்காருங்க! அவர் மனநோயாளிங்க!"

"மனநோயாளியா? இது தியான மையம் இல்லையா?"

"தியான மையம்தான். இங்கே மனநோய் ஆஸ்பத்திரியும் இருக்கு! என்ன விஷயம்?"

"சரவணனுக்கு 5 லட்சம் பரிசு விழுந்திருக்கு! அவர்கிட்டே கொடுக்கணும்!"

"அட ராமா! அவர் மனநோயாளிங்க!"

"அப்போ அவர் பேர்லே யாரோ லாட்டரி டிக்கெட் வாங்கி இருக்காங்களே! அவங்க பெற்றோரா இருக்குமா?"

"இருக்கலாங்க!"

"அப்போ அவங்க முகவரி கொடுங்க!"

"தரேன். . . எழுதிக்குங்க!"

ரதிபிரியா, வினோத்துக்குக் கண்ணைக் காட்டிக் கொண்டே பேனாவை எடுத்தாள்.

'பிரமாதம்!' என்று வினோத் அபிநயித்துக் காட்டினான்.

❖ ❖ ❖

சம்பந்தம் தெருவில் ஆறாம் எண் வீட்டை அடைந்தார்கள்.

கூடத்தில் இளம்பெண் சக்கர நாற்காலியில் இருந்த வாறு வரவேற்றாள்.

தன் பெயரை சுமனா என்று தெரிவித்தாள்.

வீட்டில் தாயாரும் - தாத்தாவும் இருந்தார்கள். தாத்தாவின் ஓய்வூதியத்தில் குடும்பம் நடந்தது.

சுமனா, கல்லூரி போகிறாள்.

"என்ன. . . கால் சரியில்லையா?" என்று வினோத் கேட்டான்.

"ஆமாம்! எலும்பு முறிவு!" என்றாள், சுமனா.

"விபத்தா?"

"சரியா சொல்லிட்டீங்களே. . . கார் மோதிடுச்சு!"

"எப்போ?"

"ஒரு ஆண்டுக்கு முன்னாடி!"

"யார் இடிச்சாங்க?"

"காரைக் கண்டுபிடிக்க முடியலை. . ."

"எப்படி நடந்தது சொல்லுங்க. . . ?"

"நானும், என் அண்ணன் சரவணனும் நடந்து வந்தோம். சாலையோரமா ஒதுங்கித்தான் வந்தோம். கார் மோதிடுச்சு. . ."

"அப்புறம்?"

"நாங்க அடிபட்டு விழுந்தப்ப, இன்னொரு கார் வந்திச்சு! அவங்க இரக்கப்பட்டு எங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாங்க! அங்கே ஊசி போட்டாங்க! சரியாயிடும் வீட்டுக்குப் போலாம்னாங்க!"

"வந்துட்டீங்களா?"

"ஆமாம். கால்வலி தீரலை. அடுத்தநாள் நான் எலும்பு சிகிச்சை ஆஸ்பத்திரிக்குப் போனேன். இப்போ குணமாகி வருது!"

"சரவணன் என்ன ஆனான்?"

"நல்ல ஆரோக்கியமா - திடகாத்திரமாகத்தான் இருந்தான். அவனைப்போல கலகலப்பானவனைப் பார்க்க முடியாது. விபத்துக்கு அடுத்த நாள் வீட்டிலே சோர்வோடு படுத்தான். எப்போதும் சிரிச்சுக்கிட்டே இருந்தான். மனப்பிரமை மாதிரி தெரிஞ்சுது. பயந்துட்டோம். நல்லவேளை, ஒரு பெரியவர் உதவிக்கு வந்தார். அவர்தான் அவனை ஒரு மனநோய் ஆஸ்பத்திரியிலே சேர்த்தார்."

வினோத்தின் நாடி உள்ளே சுண்டியது.

"யார் அந்தப் பெரியவர்?"

"தெரியாது!"

வினோத், ரதிபிரியாவைப் பார்த்தான். அவளும் யோசிப்பது தெரிந்தது.

"அப்புறம்?"

"ஆஸ்பத்திரியில் சேர்த்தப்புறம் அந்தச் சிரிப்பு குறைஞ்சது! ஆனா பழைய ஆளா இல்லை. சிகிச்சை கொடுக்கிறாங்க! எப்போதும் ஒரு சோர்வுப் பார்வை! ஒரு நாள் எங்கேயோ மோதிவிட்டானாம். உடம்பெல்லாம் காயமாம். ஏதோ அறுவை சிகிச்சை பண்ணணும்னு சொன்னாங்களாம்!"

"செஞ்சாங்களா?"

"இன்னும் செய்யலை. . . ஆனா ஒரு வாரத்துக்கு முன்னாடி அவனிடமிருந்து வந்த கடிதம் எங்களைக் கலக்கிடுச்சு!"

"என்ன எழுதி இருந்தது?"

"அம்மாவுக்கு எழுதியிருந்தான். 'நான் மனநோயாளி இல்லை! இப்போ சரியாத்தான் இருக்கேன். என்னைச் சீக்கிரம் அழைச்சுட்டுப் போங்க! இல்லாவிட்டால் என்னை இங்கே என்னவெல்லாமோ செய்யப்போறாங்க! பயமாக இருக்கு. . .' என்று எழுதியிருந்தான்."

"அந்தக் கடிதம் இருக்கா?"

"அலமாரியில் இருக்கு. . ."

சுமனா, சக்கர நாற்காலியைத் தள்ளிக்கொண்டு அலமாரி அருகே போனாள். அந்தக் கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

வினோத், ஒருமுறை படித்துவிட்டு ரதிபிரியாவிடம் கொடுத்தான்.

கனத்த நிசப்தம்.

ரதிபிரியா கண்களைத் தூக்கினாள். "அதே பாணியில் நடந்திருக்கு!" என்றான், வினோத்.

"ஆமா! முன்னாடி நடந்த மாதிரிதான்!" என்று மெல்ல கூறினாள், ரதிபிரியா.

"உங்க அண்ணனோட 'சிறுநீரகத்தை' யாராவது தானம் கேட்டாங்களா?" அந்தப் பெண்ணிடம் கேட்டனர்.

"இல்லையே!"

"நீங்க யாராவது உங்க அண்ணனைப் போய்ப் பார்க்கிறது உண்டா?"

"எப்பவாவது பார்ப்போம்."

"கடைசியா எப்போ பார்த்தீங்க?"

"நாலு மாசமாச்சு!"

"இந்தக் கடிதம் வந்தப்புறம் நீங்க ஏதாவது நடவடிக்கை எடுத்தீங்களா?"

"இல்லை! எங்களுக்கு என்ன செய்யணுமின்னே புரியலை!"

"உதவிக்கு வேறே பெரியவங்க இல்லையா?"

"தாத்தா தவிர, யாரும் கிடையாது."

அந்தப் பெண், அவர்களைப் பற்றி விசாரித்தாள்.

வினோத் தனது நிறுவனத்தின் முகவரியைக் கூறினான்.

தனது தொலைபேசி எண்ணையும், ரதிபிரியாவின் எண்ணையும் கூறினான்.

"நீங்க உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டாள், சுமனா.

“செய்யிறோம். . .”

“தயவுசெய்து ஏதாவது செய்யுங்க! எங்க அண்ணன் எங்க வீட்டுக்கு வந்திடணும்!”

“செய்யுறோம். . . ஆனா நாங்க இங்கே வந்ததையோ, பேசினதையோ யாரிடமும் சொல்ல வேண்டாம். . .”

“சொல்லமாட்டேன்!”

சுமனாவிடம் புன்னகை வந்தது.

ரதிபிரியா, வினோத் இருவரும் வெளியே வந்தார்கள்.

“இப்போ எல்லாம் தெளிவாகிப் போச்சு!” என்றாள், ரதிபிரியா.

“மூளைவளர்ச்சி இல்லாத குழந்தைகளுக்கு இல்லம். அப்புறம் மனநோயாளிகளுக்கு ஆஸ்பத்திரி. அவை மூலம் பொதுமக்களுக்கு சேவை நடக்கிறதுன்னு நினைச்சா, இப்படி ஒரு அநியாய வியாபாரம் நடத்துறாங்களே!”

“ரத்தம், சிறுநீரகம், கண் - இப்படி ஒவ்வொரு வியாபாரமா நடக்குது!”

26261

❖ ❖ ❖

அலுவலகத்தில் தாரா காத்திருந்தாள்.

நடந்ததை வினோத் அவளிடம் முழுதாகக் கூறினான். ரதிபிரியாவின் உதவிகளை வர்ணித்தான்.

“சரி! இப்போ அந்தப் பையன் சரவணனைக் காப்பாத்தணுமே! அது அவசரம்!” என்றாள், தாரா.

வினோத், யோசனையில் ஆழ்ந்தான். ‘ஆமாம்! எப்படிக் காப்பாற்ற. . . ?’

தொலைபேசி ஒலித்தது.

விணோத் எடுத்தான்.

"ரதிபிரியா பேசுறேன்! உடனே வாங்க! சுமனா கிட்டேயிருந்து ஒரு பயங்கரமான செய்தி வந்திருக்கு!" என்றாள்.

விணோத் விழுந்தடித்துப் புறப்பட்டான்.

26

மயங்கினாள் மாது!

"ரதிபிரியா பேசுறேன்! உடனே வாங்க! சுமனாகிட்டே யிருந்து ஒரு பயங்கரமான செய்தி வந்திருக்கு!" என்றாள்.

அவ்வளவுதான். . . வினோத், ஸ்கூட்டரில் பறந்தான்.

சில நிமிடங்களில் ரதிபிரியா வீட்டு வாசலில் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு உள்ளே விரைந்தான்.

கையில் பிரித்த கடிதம். அவள் முன்னறையில் காத்திருந்தாள்.

கடிதத்தை வாங்கினான். அதில் பார்வையை ஓட்டினான்.

"அம்மா,

இப்போது எனக்குப் புது அபாயம்! உடலில் கோளாறு என்று சொல்லி இன்னும் சில நாட்களில் எனக்கு அறுவை சிகிச்சை செய்யப் போகிறார்கள். சீக்கிரம் ஏதாவது செய்து என்னை விடுவியுங்கள்! சீக்கிரம். . . சீக்கிரம்! என்னைக் காப்பாற்றமாட்டீர்களா?"

அன்புடன்,
சரவணன்."

சுமனாவின் அண்ணன் சரவணன், மனநோய் மருத்துவமனையிலிருந்து எழுதியிருந்தான்.

"இது சுமனாவுக்கு வந்திருக்கிற இரண்டாவது கடிதம்!" என்றாள், ரதிபிரியா.

"இப்போ என்ன செய்யலாம்?"

"இது ஒரு பெரிய விசயமா விடியப் போகுது! ஒரு மாபெரும் மோசடியை நாம்ப கண்டுபிடிச்ச மாதிரி இருக்கு. . ." ரதிபிரியா சொன்னாள்.

வினோத்தின் கண்களில் வெப்பம் ஏறியது.

"சரி! இப்ப என்ன செய்ய?"

"ஒரு விஷயம் பாக்கி இருக்கு. . ."

"என்ன?"

"சுதாகர்தானே முதல்லே கார்லே அடிபட்டு இறந்தது?"

"ஆமாம்!"

ரதிபிரியாவின் கண்கள் அவள் அக்கா விஜய பிரியாவை நினைத்துக் கலங்கின.

"என்ன யோசனை ரதி?"

"ஒண்ணுமில்லை! சுதாகர் அண்ணன் ராமநாதன் இருக்காரே. . ." என்று இழுத்தாள்.

"ஆமாம்!"

"அவரைத் திரும்பவும் விசாரியுங்கன்னு ஒரு அனாமதேய தொலைபேசி வந்தது இல்லே!"

"ஆமாம்! ராமநாதனுக்குத் தம்பியைக் கண்டால் பிடிக்காது! அவரைச் சாதுன்னு நினைக்காதீங்க! அவரைப் பற்றி விசாரணை பண்ணுங்கன்னு சொன்னாள்!"

"வினோத்! இப்போ அவரைப் பற்றி அவர் மனைவி கிட்டேயே திரும்பவும் விசாரிக்கலாம்! நிச்சயம் ஏதாவது விஷயம் கிடைக்கும். என்ன சொல்றீங்க?"

"ஓ! விசாரிக்கலாம்! ஒரே ஒரு விஷயம்! அனாமதேய தொலைபேசியை நம்பலாமா?'' என்று வினோத் இழுத்தான்.

"கட்டாயம் நம்பலாம்."

''ராமநாதன் மனைவி அகிலா ரொம்ப அழகா இருந்தாங்க! அதனாலே யாராவது ஒரு பெண் பொறாமைப்பட்டு தொலைபேசியில் பேசியிருப்பா!"

"அழகுன்னாலே ஆபத்துதான் வினோத்!"

❖ ❖ ❖

இரண்டு மணி வெயில். ராமநாதன் வீட்டை நோக்கிப் பறந்தார்கள்.

ராமநாதன் இந்த வேளையில் வீட்டில் இருக்க மாட்டார் என்று தெரியும். எனவே அவர் மனைவி அகிலாவை நன்றாக விசாரிக்கலாம்.

வீட்டை அடைந்து உள்ளே போனார்கள்.

இருவரையும் பார்த்து அகிலா அதே புன்னகையில் வரவேற்றாள்.

"இவங்க என்கூட வேலை செய்யிறாங்க!" என்று ரதியை அறிமுகப்படுத்தினான், வினோத்.

ரதிபிரியாவிடம் இருமடங்கு புன்னகை காட்டினாள், அகிலா.

"ஓ! உட்காருங்க! சுதாகர் செத்துப் போனதுக்குக் காரணம் கண்டுபிடிச்சுட்டீங்களா?"

"ஒரு மாதிரி விசாரிச்சுட்டிருக்கோம். உங்க உதவியும் தேவை!" என்றாள், ரதிபிரியா.

"ஏற்கனவே வினோத் என்கிட்டே பேசிட்டாரே!"

"ஆமாம்! அதுக்கப்புறம் எங்களுக்கு ஒரு போன் வந்திச்சு!"

"என்ன?"

"இந்த வீட்டிலே இன்னும் விசாரிச்சா பல விஷயம் தெரியவரலாம்ன்னு சொன்னாங்க. . ."

"ஓ! அப்படியா? எனக்குத் தெரிஞ்சதைத்தான் சொல்லிட்டேனே. . ."

"இன்னும் ஏதாவது இருந்தா?"

அவளுக்கு ஏதோ சொல்ல மனம் இருப்பதுபோல் தோன்றியது. ஆனால் எங்கேயோ யோசனையில் சிக்குவது தெரிந்தது.

அவள் நிலைமையை உணர்ந்து ரதிபிரியா பேசினாள்.

"உங்க கணவர் ஒரு ஆஸ்பத்திரியிலே வேலை பார்க்கிறாரா?"

"ஆமாம்! தியான மையம் ஆஸ்பத்திரியிலே!"

"அங்கே அவரைப் பார்த்தேன். உங்ககிட்டே வெளிப்படையாப் பேசலாமா?"

"பேசலாங்க!"

"அந்த ஆஸ்பத்திரி நல்ல மாதிரி தெரியலையே!"

"அப்படியா?" என்று புருவம் தூக்கினாள், அகிலா.

"அங்கே என்னென்னவோ பயங்கரங்கள் நடக்கிறாப் போல இருக்கு. . ."

"என்ன?" என்று திடுக்கிட்டாள், அவள்.

"உங்க கணவர் உங்ககிட்டே சொல்லலையா?"

"இல்லைங்க!"

ரதிபிரியா, வினோத்தைப் பார்த்தாள்.

அகிலா, இன்னும் திக்பிரமையில் வெறித்துப் பார்த்தாள்.

அடிக்கடி கண்கள் மட்டும் அழகாகக் கொட்டின. எங்கும் நாட்டியம்தான் நெளிந்தது.

"என்ன விஷயம் சொல்லுங்க?" என்று படபடப்புடன் அகிலா கேட்டாள்.

வினோத்துக்கு தர்மசங்கடமாக இருந்தது.

'ஏதாவது சொல்ல வேண்டாததைச் சொல்லிவிடப் போகிறாளோ ரதி?' - யோசித்தான்.

ஏற்கனவே அகிலாவைப் பார்த்ததில் ஒன்றைக் கண்டுபிடித்திருந்தான்.

அவளுக்கும் அவள் கணவனுக்கும் பெரிய வித்தியாசம்.

அழகில் மட்டுமல்ல. . . அறிவு, குணம் என்று பல விஷயங்களைச் சேர்த்துக் கொண்டே போகலாம்.

இதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாமா?

"மனநோய் ஆஸ்பத்திரியிலே உள்ள நோயாளிகளை வேறு காரணத்துக்காக உபயோகப்படுத்துறாங்க!" என்றாள், ரதிபிரியா.

அகிலாவின் கண்கள் கூர்மையாகின.

"என்னது?"

"உங்க கணவர் இதுபற்றி எதுவும் சொல்லவில்லையா?" என்று மீண்டும் கேட்டாள், ரதிபிரியா.

"இல்லை மேடம். . . சத்தியமா இல்லை."

"சரி! நான் சொல்றதை உங்கள் மனசில் வச்சுப் பீங்களா?"

"நிச்சயமா."

"அப்படின்னா சொல்றேன்! மனநோயாளிகளின் உடல் உறுப்புகளை எடுத்து வித்துடுறாங்க!"

"என்ன?" என்று அதட்டுவதுபோல் கேட்டாள்.

"மனநோயாளியின் சிறுநீரகத்தை எடுத்து வேறு ஆளுக்குக் கொடுத்துடுறாங்க."

"அய்யோ. . ."

அவள் முகத்தில் ஒரு நிழல் ஒட்டியது! கண்கள் சுரத்தில்லாமல் பார்த்தன.

கலவரமான குரலில், "நீங்கள் சொல்றது உண்மையா?" என்று கேட்டாள்.

"ஆமாம்! இதுபோல அநியாயம் அங்கே நிறைய நடக்குது. . . இதோடு நிற்கலை! சில முக்கிய உறுப்புகளை சில நபர்கள்கிட்டேதான் எடுக்கணும்னு தோணினா, அந்த ஆளைப் பிடிச்சு பைத்தியமாக்கி ஆஸ்பத்திரி உள்ளே வச்சிடுறாங்க. . ."

"கொடுமை! அதெப்படி முடியும்?"

"வாயில்லாக் குடும்பங்களைத் தேர்ந்தெடுக்கிறாங்க! காரணம், அவங்களாலே அதிகமா போலீஸ் கீலீஸ்னு அலைய முடியாது. . ."

"ஓ. . . புரியுது!"

"யாரையாவது பிடிச்சு அவனுக்கு மனப்பிராந்தி உண்டாக்குற மாத்திரை கொடுத்து பைத்தியம் ஆக்கிடு வாங்க!"

"அப்போ. . ?" என்று கேள்விக்குறியோடு நிறுத்தினாள்.

அவள், எதையோ நினைத்து திகைப்பது தெரிந்தது.

"என்ன? சொல்லுங்க" என்றாள், ரதிபிரியா.

"இங்கே சுதாகர் இருந்தாரே, அவரையும்கூட. . ." என்று இழுத்து நிறுத்தினாள், அகிலா.

"ஆமாம். . . அவரைப் பற்றி முன்னாடியே கேள்விப் பட்டோம். . . ரத்ததானம் கொடுப்பார்னு. . ."

"ஆமாம்! அவர் ரத்தம் ஒரு அபூர்வ ரகம்! அது கிடைக்கிறது கஷ்டம்னு சொல்லுவாங்க!"

"புரியுது! அவரை அதற்காகத்தான் கடத்தி மனநோய் இருக்கிறதாக எல்லாரையும் நம்பவச்சு. . . அப்புறம் ஆஸ்பத்திரியிலே ரொம்ப வெறியா நடந்துகிட்டு உடம்பிலே காயப்படுத்திக்கிட்டாருன்னு பொய் சொன்னாங்க, சரிதானா?"

"காயப்பட்டது பொய்யா?" என்று அகிலா தவித்துக் கொண்டு கேட்டாள்.

"பொய்தான்! இவங்க ஆபரேஷன் பண்ணி அவர் சிறுநீரகத்தை எடுத்திருக்கணும்! அதுதான் நடந்திருக்கக் கூடிய உண்மை. பின்னாடி அவராலே உண்மை வெளியிலே தெரியறதுக்கு வாய்ப்பு உண்டுன்னு தெரிஞ்சதும் அவரை விபத்திலே சாகடிச்சுட்டாங்க!"

நெஞ்சை அமிழ்த்தினாள் அவள்.

"அப்புறம் அவரோட ஒரு பெண் பழகினாளே, விஜயபிரியா! அவள் இறந்தது?" என்று கேட்டாள்.

"அதுவும் விபத்து. கார் மோதிடுச்சு. அதுக்கும் இதுதான் காரணம்! அவள் மூலமா ஏதாவது விஷயம் வெளியே வந்துடப்போகுதுன்னு நினைச்சிருக்கலாம்!"

அகிலா அப்படியே இறுகிப் போனாள்.

சிறிது நேரம் பேசவில்லை. சிந்தனையிலேயே இருந்தாள்.

திடீரென்று அவள் கண்களில் நீர் துளிர்த்தது. மளமள என்று விழத் தொடங்கியது.

"மேடம்" என்றாள் திகைப்புடன் ரதிபிரியா. அவள் முகம் இரக்கத்தில் கனிந்தது. அகிலாவின் அருகில் அமர்ந்து அவள் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.

அகிலாவின் கண்களில் கண்ணீர் வடிந்தவண்ணம் இருந்தது.

"மேடம்!" என்றாள், ரதிபிரியா.

அகிலா மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

"அழாதீங்க" என்று தோளை மெதுவாக தட்டினாள்.

அது, அகிலாவின் மனதில் பெரிய இதத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

"இல்லே... எதையோ நினைச்சேன்... அழுதிட்டேன்" என்று அகிலா சுதாரித்தாள்.

சேலை நுனியால் கண்களைத் துடைத்துவிட்டுத் தொடர்ந்தாள்.

"மேடம்! இந்த விஷயம் எல்லாம் அந்த மனநோய் ஆஸ்பத்திரியிலேதானே நடக்குது?"

"ஆமாம்."

"அங்கேதான் என் கணவர் ராமநாதன் இருக்கார்?"

"ஆமா."

"அப்போ... அப்போ... அவரும் இதிலே ஈடுபட்டவர் தானோ?"

அப்படிக் கேட்கும்போதே அவள் முகத்தில் வலிகள் ஓடின.

"ஆமாம்மா" என்றாள், ரதிபிரியா மெதுவாக.

"இத்தனை விஷயமும் அவருக்குத் தெரியுமா?"

"தெரியுறது மட்டுமில்லை! அவரும் இதிலே உடந்தையா இருப்பாருன்னு தோணுது."

"உடந்தையா?"

"ஆமாம்! அந்த கிரி என்கிற அயோக்கியனுக்கு உடந்தையாக அவர் இருக்காருன்னு தோணுது."

"நீங்க உண்மையைத்தான் சொல்றீங்களா?"

"ஆமாம். உங்க கணவர் அந்த மையத்திலே ஒரு நல்ல பதவியிலே இருக்கார். அதனாலே அவருக்குத் தெரியாம எதுவும் நடக்க வாய்ப்பு இல்லை!"

அகிலா பேசவில்லை. வெறுமையாக வெறித்துப் பார்த்தாள்.

'பாவி. . . பாவி. . .' என்று அவள் சபிப்பது கேட்டது.

பிறகு என்ன நடக்கிறது என்று அறிவதற்குமுன், அவள் சுருண்டு தரையில் விழுந்தாள்.

ரதிபிரியாவும், வினோத்தும் அவசரமாக அவளை அள்ளினார்கள்.

27

காதல் விபத்து!

ரதிபிரியாவும் வினோத்தும் அகிலாவை சோபாவில் ஏற்றி வைத்தார்கள்.

வினோத், அங்குமிங்கும் பார்த்து ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டு வந்தான்.

அகிலாவின் முகத்தில் தெளித்தான். இதெல்லாம் செய்யும்போதே கம்மிய குரலில் கேட்டான்.

"ரதி! நீ அனாவசியமா அவளைத் தூண்டிவிடுறே?"

"என்ன செய்யிறேன்?"

"சில விஷயங்களைச் சும்மா அளந்துவிடுறே!"

ரதிபிரியா ஒரு பார்வை பார்த்தாள். "ஆமாம்! எதுக்குச் செய்யிறேன்! இந்தப் பெண்மணி எதையோ மூடி வச்சு, பேசத் தயக்கம் காட்டுறா! சொல்ல மனசு இருக்கு! அதனாலேதான் தூண்டி விடுறேன்! எனக்கு ஒரு சந்தேகம்?"

"என்ன?"

"யாரோ அனாமதேய போன் பண்ணி 'ராமநாதனை நல்லா விசாரியுங்க'ன்னு சொன்னாங்களே!"

"ஆமா."

"அது இவளாத்தான் இருக்கணும்!"

மேலே 'குசுகுசு' பேச்சு தொடரவில்லை. அதற்குள் அகிலா மெல்ல அசைவது தெரிந்தது.

அடுத்த கணம் திடுக்கிட்டதுபோல் எழுந்து உட்கார்ந்தாள்.

"மேடம்... மேடம்..." என்று வார்த்தைகளில் குழறினாள்.

"என்ன... திடீர்னு இப்படி..." என்று இழுத்தாள் ரதிபிரியா.

"எனக்கு எப்போதும் இப்படி ஏற்பட்டதில்லை. இப்போ... ரொம்ப உணர்ச்சிவசப்பட்டுட்டேன்" என்றாள், அகிலா.

"ஏன் அப்படி?" என்று ரதிபிரியா மெல்ல கேட்டாள்.

"அது..." என்று கண்ணை மூடிய அகிலா, எதுவும் சொல்லவில்லை.

ரதிபிரியா மேலே தொடர்ந்தாள்.

"இப்போ ஒரு பெரிய மோசக்காரக் கும்பலை நாங்க கண்டுபிடிச்சுட்டோம். இந்தக் கும்பல் தங்கள் சொந்த லாபத்துக்காக பல கொலைகளைச் செய்திருக்காங்க என்கிறதையும் கண்டுபிடிச்சாச்சு. இனிமே ஒண்ணுதான் பாக்கி..."

'என்ன?' என்பதுபோல் அகிலாவின் பார்வை உயர்ந்தது.

"போலீசில் சொல்லி, அத்தனை பேரையும் பிடிக்க வேண்டியதுதான்."

"யாரெல்லாம் அகப்படுவாங்க?"

"அந்த ஆஸ்பத்திரியைச் சேர்ந்த எல்லாருமே! உங்க கணவரும்கூட..."

"அவர் சிறைக்குப் போகவேண்டியவர்தான் சந்தேகமில்லை. ஆஸ்பத்திரியிலே எல்லோருக்கும் உதவுறதா சொல்வார். ஆனா, உதவியா அது?"

அவளிடமிருந்து ஒரு ஆவேசம் வெளிவந்தது.

"நிச்சயம் அவர் போலீஸ்லே அகப்படுவார் இல்லையா?" என்று கேட்டாள், அகிலா.

"ஆமாம்! தப்பமுடியாது."

"மேடம்! இப்போதான் தெரியுது. . . சுதாகர் தெரியுமில்லே. . . சுதாகர். . ."

"தெரியுமே! சுதாகர் - விஜயபிரியா ஜோடிக்காகத் தானே இந்த வழக்கில் நாங்க இறங்கினோம்."

"என் கல்யாணம் ஆகிறதுக்கு முன்னாடியே நான் அந்த சுதாகரை சந்திச்சிருக்கேன்."

ரதிபிரியாவின் ஒரு உள்நாடி இழுத்தது.

"அப்படியா! எப்போ? எங்கே?"

"அது ஒரு அபூர்வ சந்திப்பு! நானும் அவரும் கேரளாவிலே ஒரே ரெயிலில் போயிட்டிருந்தோம். எனக்கு எதிர்ல அவர். . ."

"சரி!"

"எதிர் எதிரே இருந்தாலும் அவர் பார்வை என் மேலே விழவேயில்லை! அவர் பாட்டுக்கு வெளியே பார்த்துக்கிட்டே இருந்தார். ஆனா, அவர் கண்ணும் முகமும் நல்ல கவர்ச்சியா இருந்திச்சு. என்னை அவர் பார்க்கக்கூடாதான்னு பலமுறை நினைச்சேன். . ."

"அவர் கொஞ்சம்கூடப் பார்க்கலியா?" என்றாள், ரதிபிரியா.

"இல்லை! அது ஒரு ஆண்கிட்டே இல்லாத அபூர்வ குணம். நான் ஒரு பெண் இருக்கிறேன்னு கவலையேபடலை! அது வேணுமின்னு செய்யிற மாதிரியும் தோணலை! ஒரு பெண் அவர் எதிரே இருக்கிறதைப் பற்றி அவருக்குப் பொருட்டேயில்லை. அவ்வளவுதான்!"

"ஓ!" என்றாள் ரதி!

அகிலா சொல்வதே அழகாயிருந்தது.

"அதனால்தான் அவர் என்னைப் பார்க்கணுங்கிற தாபம் அதிகமாகிப் போச்சு!"

". . . . ."

"என் அழகுக்கு எந்த ஆண்கிட்டேயும் அப்படித் தவிச்சதில்லை. அனேகமா என்னை ஏறிட்டுப் பார்க்காதவங்களே இருக்கமாட்டாங்க. அப்புறம் ஒரு சம்பவந்தான் அவரை என்னோடு பேச வச்சது."

"என்ன?"

"நான் கீழே இறங்கிப் பேசிட்டு வர்றதுக்குள்ளே என் பெட்டியைக் காணவில்லை. அதிலே பணம் இருந்திச்சுன்னு சொன்னேன். என் குரல் கேட்டு அவர் திரும்பினார். 'கைப் பெட்டியா'ன்னு கேட்டார். 'ஆமாம்'னேன்."

"இதோ என் பெட்டியைப் பார்த்துக்கன்னு சொல்லி சடார்னு எழுந்து வெளியே ஓடினார். போனவர் போனவர்தான். . . ஆளைக் காணவே இல்லை!"

"அட கஷ்டமே. . ." என்றாள் ரதிபிரியா.

"இப்போ பெட்டியை விட்டுட்டு ஆளுக்காகத் தவிச்சேன். பாவம்! அவருக்கு என்ன ஆச்சோ, ஏது ஆச்சோன்னு கவலையாப் போச்சு! பிளாட்பாரத்தைப் பழியா பார்த்துக்கிட்டுப் போனேன். என் மனசிலே

அன்னிக்குத்தான் இன்னொருத்தருக்காக அத்தனை தவிச்சேன். கண்ணிலே அழுகை வந்திடுச்சு."

ரதிபிரியாவுக்கு அவள் கூறும் விதமே ரசனையாக இருந்தது.

"அடுத்த ஸ்டேஷன் ஆறு நிமிஷத்திலே வந்தாச்சு! அந்த நேரத்திலே என் மனசு தவிச்சுப் போச்சு. திடீர்னு பெட்டிக்குள்ளே தடதடன்னு சத்தம்! திரும்பிப் பார்த்தா அவர்தான்! கையிலே அந்தப் பெட்டியோடு வந்தார்."

"அதெப்படி?"

"கடைசி பெட்டியிலே ஏறி வந்துட்டார். எனக்கு ஆனந்தத்துக்கு அளவு இல்லை. ரெண்டு பேருமே பேசினோம். ஆச்சரியமா ரொம்ப சீக்கிரம் அன்னியோன்யம் ஆயிட்டோம். அந்தச் சில நிமிடத்துக்குள்ளே நான் அவர் அடிமை ஆனது போல் இருந்திச்சு! இத்தனை நாளும் நான் காத்திட்டிருந்தது அவருக்குத்தான்னு தோணிச்சு! இவ்வளவுக்கு நாங்க அதிகம்கூடப் பேசல்லை! மென்மையா ஒரு வார்த்தை - ஒரு வாக்கியம்னு பேசினோம்."

". . . . ."

"மனசெல்லாம் மணந்தது. ஒவ்வொரு விநாடியும் ஒரு கவிதைச் சொட்டாக நழுவிச்சு. உள்ளம், உயிர், நினைப்பு மூணுமே ஒரே பரவசத்திலே திளைக்கிற மாதிரி உணர்வு... அப்படியே என்னை நீந்த வச்சது. அந்த ரெயில்தான் ராத்திரி ஒரு பாலத்து பக்கத்திலே விபத்தில் சிக்கிவிட்டது."

"ஓ. . . ஞாபகம் இருக்கு! எட்டு பெட்டிங்க தடம்புரண்டு பெரிய விபத்து ஆச்சே!"

"ஆமாம்! மழை! பெரிய மழை! வழியிலே சின்ன உடைப்பு எடுத்துப்போச்சு! அந்த விபத்திலே அதிசயமா உயிர் தப்பினவங்க நாங்க!"

"உங்க பெட்டிக்கு எதுவும் ஆகலையா?"

"ஐயோ. . . எங்க பெட்டிதான் தாறுமாறா உருண்டு ...யாச்சு! அதிலேதான் விதி எவ்வளவு விளையாடிடுச்சு. . . ...ழுந்த சில நிமிடங்களுக்கு எல்லாம் சூன்யமா இருந்திச்சு! ...ன்ன நடந்ததுன்னே தெரியவில்லை! கொஞ்சம் கொஞ்சம் ...ாசு அதை நினைச்சபோது, மழைத் தண்ணி மேலே ...ழுந்து ஓடுது. ஒரே குளிர். 'சுதாகர்'னு கூப்பிட்டேன். '...கிலா'ன்னு அவர் கூப்பிட்டார். இரண்டு பேரும் ...திசயமா பக்கத்திலே பக்கத்திலேதான் கிடந்தோம். ...வருக்கும் எனக்கும் இடையிலே சின்ன இடிபாடு இருந்திச்சு!"

"வண்டிக்குக் கீழே அகப்பட்டீங்களா?"

"ஆமாம்! அடியிலேதான்! வண்டி நொறுங்கி ...ங்களை மூடிட்டு இருந்தது. எங்களுக்கு இடையில் ஒரு ...லகை! சுதாகர் அதை அசைச்சு அசைச்சுப் பார்த்தார். அது ...ரிஞ்சது! நான் உருண்டு அவர் பக்கத்திலே விழுந்துட்டேன்!

"ரெண்டு பேரும் எழுந்திருக்கப் பார்த்தோம். மேலே யெல்லாம் இடிபாடு. இரும்புக்கழியும், கட்டைகளுமா கிடந்திச்சு! எங்களாலே அதைத் தள்ளிட்டு எழ முடியாது.

"கீழே தரை மாதிரி இருக்கு! அது வழியே தண்ணி ஓடுது. உடம்பு அதிலே பட்டுச் சிலிர்க்குது. குளிர் வெட வெடக்குது. அப்படியே கிடக்கிறோம்! அவரும் நானும் ஒருத்தரை ஒருத்தர் தொட்டுக்கிட்டு. . ."

". . . . ."

"ஆனா பயம்! அழுகையும் முனகலும் அப்பப்போ கேட்டது. மழைச் சத்தம் வேறு.

"நாங்க ரெண்டு பேரும் பயந்து ஒண்ணாயிட்டோம். அது ரொம்ப இயற்கையா நடந்திச்சு! எந்தத் தூண்டுதலும்

இல்லை. கீழே தண்ணீர் ஏறிக்கிட்டு வர்ற மாதிரி இருந்தது. அப்படியே கிடக்கிறோம். நேரம் போனது. ஆனா, எந்தவித உதவியும் கிடைக்கிற மாதிரி தெரியலை.

"நான் புலம்ப, அவர் என்னைச் சமாதானப்படுத்த... இருவரும் ஒருத்தரை ஒருத்தர் தழுவிப் பிடித்தோம். இது ரொம்ப நேரமா நடந்தது."

". . . . ."

"பிறகு, அப்படிப்பட்ட நிலையே ஒரு நிரந்தரமாகவும், விதிச்ச விதியாகவும் தோணிப்போச்சு!"

"கஷ்டத்தையும், துக்கத்தையும் மறந்தோம். ரெண்டு பேரும் சரசமாவே இருக்கத் தொடங்கினோம்.

"ஒருத்தருக்கொருத்தர் பாதுகாப்பா இருக்கிறோம் என்கிற அந்த நினைப்பிலே மெய்மறந்து போனோம்.

"அந்தக் கணங்களிலே நாங்க ஒருத்தருக்கு ஒருத்தர் அன்னியங்க! எந்த உறவு முறையும் இல்லாதவங்க என்ற நினைப்பெல்லாம் மலையேறிப்போச்சு. அந்த விபத்து வேளையிலே மரணத்துக்குப் பக்கத்திலே போராடிட்டிருந்த எங்களுக்கு உலகத்தைப் பற்றி - உறவைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை."

". . . . ."

"தண்ணி படிப்படியா ஏறி எங்களை மூழ்கடிச்சுடும்னு நினைச்சோம்! அல்லது விடாத மழையிலே இடிபாடு உலைஞ்சு விழுந்து எங்களை அமுக்கிக் கொன்னுடும்னு நினைச்சோம்.

"நாங்க பிணைஞ்சு இருக்கிற நினைப்பிலே உலகம், உறவு பற்றி அக்கறை இல்லைன்னு சொன்னேனே. . . மரணத்தைப் பற்றியும்... அக்கறை இல்லை! இருக்கப்போற கொஞ்ச நேரத்திலே நாங்க அப்படியே இருந்துடணும்னு

...ச்சோம். இருவரும் ஒருவரை ஒருவர் பிணைஞ்சு ...ந்தோமே. . . அது அந்தக் கணத்திலே சொர்க்கம் ...லவே இருந்திச்சு."

". . . . ."

"அந்த வேளையிலேதான் நாங்க பரவசத்திலே ...களை மறக்கத் தொடங்கினோம். என்னன்னு நினைக் ...துக்கு முன்னாடியே உடலும் உடலும் கலந்தாச்சு!

"எப்படி அது நடந்ததுன்னு தெரியாது. ஆனா, ...ந்தத் துக்கவேளையிலே இன்ப அலையை மட்டும் வாரி ...ரிப் பருகினோம். அது விகல்பமானதாவோ, நியதிக்குப் ...ம்பானதாவோ ரெண்டு பேரும் நினைக்கலை!"

". . . . ."

"எங்களுக்குத் தோன்றிய காதல் அற்ப நேரத்துக் ...தல்தான்!

"பிளாட்பாரத்திலே அவர் ஓடி அடுத்த ஸ்டேஷன் ...ற்றவரை ஆறு நிமிடம்தான் ஓடியிருக்கு! அந்த நேரத்திலே ...வர் மனசிலே அங்கே ஊமையான காதல் வளர்ந்தாச்சு! ...ன் மனசிலேயும் வளர்ந்தாச்சு! அப்புறம் பேசிக்கும்போது ...ான் ரெண்டு பேருக்கும் அது தெரியவந்திச்சு.

"ஆனா, இதுவே எங்களுக்கு ஆறு பிறவிக் காதல் போலத் தோணிப்போச்சு!'' - அவள் வார்த்தை அழுத்தத்தோடு வந்தன.

ரதிபிரியாவிடம் பெருமூச்சு வந்தது. அகிலா சொன்ன வார்த்தைகளில் அவள் மனம்கூட நெகிழ்ந்துவிட்டது.

வினோத்தும் அவளை ஆச்சரிய விழிகளால் பார்த்தான்.

இருவரும் அந்தப் பெண்ணைத் தாபத்துடன் பார்த்தார்கள்.

அகிலாவின் கண்கள் பிரமைக்குள் இருந்தன.

"மேடம்! இப்போகூட அவரோட கைகோர்த்துப் போற மாதிரி பிரமை வருது! அது என்னை அலைக் கழிக்குது. என்னை உருக்கி எடுக்குது. என்னை. . ." மேலே பேசவில்லை. குரல் அமிழ்ந்தது! அவள் எழுந்தாள். அலமாரியை நோக்கி நடந்தாள்.

ரதிபிரியாவுக்கு கலக்கம்.

சட்டென்று எழுந்து அவளைப் பின்தொடர்ந்தாள்.

ഇ○ഗ

28

திகில் காட்சி!

அகிலா, அலமாரியைப் போய்த் திறந்தாள்.

அவள் இருந்த விரக்தி நிலையில் எதுவும் செய்து விடுவாளோ என்ற கவலையில் வினோத் கண்ஜாடை காட்டினான்.

ரதிபிரியா உடனே அகிலாவைத் தொடர்ந்து சென்று, ஏதாவது அசம்பாவிதம் நடப்பதைத் தடுக்கத் தயாராக இருந்தாள்.

அலமாரியைத் திறந்ததும், அகிலா சற்றே திரும்பினாள்.

"இது அவர் அலமாரி" என்றாள்.

"எவ்வளவு விசுவாசமாக இருக்கிறீங்க!" என்றாள், ரதிபிரியா.

ஒரு வெறுப்பான புன்னகை அகிலாவின் உதட்டில் ஓடியது.

"இல்லை. அலமாரியை நான் திறந்தா அதைக் கண்டுபிடிக்க மிக நுணுக்கமா பொறி வச்சிருப்பார். உதாரணமா, ஒரு காகிதம் கிடக்கும்! அதை வேணுமின்னே அப்படி வச்சிருப்பார். இடம் மாறினா என்னைப் பிடித்து விடுவார்!"

"அப்போ அதை ஏன் திறக்குறீங்க?" என்றாள் ரதிபிரியா.

"இல்லை! இன்னிக்கு ஒண்ணு கண்டுபிடிச்சாகணும். உங்க முன்னாலே. . ."

அலமாரியில் இருப்பவைகளை அங்கும் இங்கும் நகர்த்தினாள். புத்தகங்கள், டயரிகள், இன்னும். . . இன்னும். . .

சட்டென்று ஒரு புதுச் சீட்டை எடுத்தாள்.

கண்களை விரித்துப் பார்த்துவிட்டு, ஏதோ முனகியவாறு அவசர அவசரமாக காகிதக் குவியல்களைத் தேடினாள்.

அவள் தேடியது கிடைத்துவிட்டது.

எடுத்துக்கொண்டு சோபாவில் அமர்ந்தாள்.

ஒரு ரசீதும், சில ஜெராக்ஸ் பக்கங்களும்!

"அகிலா!" என்றாள் ரதிபிரியா. "நான் ஒண்ணு கேட்கிறேன். மனம்திறந்து பதில் சொல்லுங்க!"

அகிலா தலையை அசைத்தாள்.

"ராமநாதனை எப்படித் திருமணம் செஞ்சீங்க?"

"வாழ்க்கை என்கிறது அதுதானே மேடம்! எது நம்ம மனசுப்படி நடக்காதோ அதுதான் வாழ்க்கை."

"இது எப்படி அகிலா நடந்தது? இவர் தம்பிதான் சுதாகர்னு உங்களுக்குத் தெரியாதா?"

"தெரிந்திருந்தால் சம்மதிச்சிருக்கமாட்டேன்! விதி என்னை விடலை."

"விபத்திலே ரெண்டு பேரும் தப்பிச்சீங்க! நீங்களும் சுதாகரும் முகவரிகளைப் பரிமாறிக்கொண்டீங்களா இல்லையா?"

"இல்லை."

"அப்படியா?"

"விபத்து நடந்தப்புறம், மூணு நாள் கழிச்சுதான் எங்களை வெளியே எடுத்தாங்க. ஒரே இடத்திலே குறுகிப் படுத்துகிட்டு இருந்ததாலே சரியா நடக்க முடியலை. அதனால எங்களைத் தனித்தனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயிட்டாங்க."

"அப்புறம்?"

"ஒருநாள் படுக்கையிலே இருந்தேன். ரெண்டாம் நாள் என்னை ஊரிலேருந்து வந்து அப்பா அழைச்சுட்டுப் போயிட்டார்."

"நீங்க சுதாகர் பற்றிக் கேட்கலியா?"

"ஆஸ்பத்திரியிலே கேட்டேன்! விசாரிச்சேன்! அவர் போயாச்சுன்னு தெரிஞ்சுது."

"உங்களைவிட்டு அவர் எப்படிப் போனார்?"

"நிச்சயம் என்னைத் தேடி இருப்பார். ஆனால், நான் இல்லைன்னு யாரோ தப்பா செய்தி கொடுத்துட்டாங்க!"

"அடப்பாவமே! அதனாலே போயிட்டிருக்கார்."

"ஆமா. பிறகு நான் எவ்வளவோ முயற்சி செஞ்சும் கண்டுபிடிக்க முடியலை!"

"துரதிருஷ்டம்தான்."

"தவிர, எங்க வீட்டிலே எல்லாம் பழமை! அதனாலே கண்டுபிடிச்சாகூட நாங்கள் திருமணம் செய்ய முடியாது. ரொம்ப கஷ்டம்."

"சரி, எப்படி ராமநாதன் கிடைச்சார்?"

"யாரோ தெரிஞ்சவங்க ஜாதகம் கொடுத்தாங்க. பெண் பார்த்தாங்க. நிச்சயமாகிப்போச்சு! திருமணத்

தன்னிக்குத்தான் சுதாகரைப் பார்த்தேன். என் மைத்துனர்னு அறிமுகமானவுடனே ஒரே அதிர்ச்சி! ராத்திரியெல்லாம் அழுதேன்."

". . . . ."

"அப்புறம் குடித்தனம் தொடங்கின பிறகு, அவரும் எங்களோடு இருக்கிறதா இருந்திச்சு. . . அது எனக்கு ரொம்ப வேதனையாப் போச்சு! காரணம், என் மனசு அவர் மீதே வட்டமடிச்சுட்டு இருந்தது."

". . . . ."

"இருந்தாலும். . . கடமைக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. கணவனோடுதான் நான் விசுவாசமா இருக்கணும்னு இருந்தேன். ஆனா, மனசு மட்டும்தான் இதிலே ரெட்டையா இருந்திச்சு!"

"சரி! உங்களுக்கு நடந்தது உங்க கணவருக்குத் தெரியவே தெரியாதா?"

"தெரியாது. ஆனா, சுதாகருக்கு விபத்து நடந்ததுன்னு முதல்லே தெரிஞ்சுபோச்சு."

"எப்படி?"

"சுதாகர் செத்துப் போயிட்டாரில்லே. அவர் உடமை களைக் குடைஞ்சு அவர் எழுதின சின்ன டயரியைக் கண்டுபிடிச்சு எடுத்துட்டாரு!"

"அந்த டயரியை நீங்க பத்திரப்படுத்தலையா?"

"என்னாலே எப்படி பத்திரப்படுத்த முடியும்? டயரி ரொம்பச் சின்னது. வச்சிருந்த இடமும் ரொம்ப ரொம்ப ரகசியமான இடம்! கண்டுபிடிச்சு எடுக்க முடியாதுன்னு நினைச்சேன்! கண்டுபிடிச்சு எடுத்துட்டாருன்னு கொஞ்ச நாள் முன்னாடி தெரிஞ்சுது!"

"டயரியிலே உங்க பெயர் இருக்கா?"

''நல்லவேளையாக இல்லை. விபத்தைப்பற்றி எழுதியிருக்கார். ஒரு பெண்ணோடு கிடந்தேன்னும் எழுதி இருந்தார்!"

"சரி! அவ்வளவுதானே! அதுக்கு மேலே தெரியாது இல்லையா?"

"நானும் அப்படித்தான் நினைச்சேன்! ஆனா, அவர் மனம் வேறே மாதிரி வேலை செஞ்சிருக்கு! தம்பி குறிப்பிடுற பெண் யாருன்னு கண்டுபிடிக்க நினைச்சிருக்கார்! இது ஒரு கொடூர புத்தி!"

"கண்டுபிடிச்சுட்டாரா?"

''பாருங்க'' என்று அலமாரியிலிருந்து அவள் எடுத்தவைகளை ரதிபிரியா முன்னால் நீட்டினாள்.

சில தினங்களுக்கு முன்னால் கன்னிமாரா நூலகம் வழங்கிய ரசீது.

நகல் எடுக்கப்பட்ட 1997-ம் ஆண்டின் பத்திரிகைச் செய்திகள்.

ரதிபிரியா படித்தாள்.

கேரளா ரெயில் விபத்தைப் பற்றிச் செய்திகள்!

அதில் படங்களும் இருந்தன.

ஒரு படத்தில் அகிலாவின் முழு உருவம் அழகாக வந்திருந்தது.

"ஓ! இது மூலம் அவர் விபத்தைப் பற்றி முழு விவரம் தெரிஞ்சுக்கிட்டாரா?"

"ஆமாங்க! நானும் சுதாகரும்தான் அதிலே மாட்டிக் கிட்டோம் என்கிறது அவருக்குத் தெளிவாகிப்போச்சு! அது என் கெட்ட காலம்தான்!" என்று அகிலா தலையில் கை வைத்தாள்.

ரதிபிரியாவுக்கு விசயங்கள் புரிந்துவிட்டன. பேச்சை மாற்ற நினைத்தாள்.

"உங்க கணவர் மனநோய் ஆஸ்பத்திரியிலே எப்போ சேர்ந்தாரு?"

"நாலு ஆண்டுக்கு மேலே ஆச்சு!"

"அதுக்கு அப்புறம்தான் சுதாகருக்குப் பைத்தியம் பிடிச்சுதா?"

"ஆமாம்!"

"அது உண்மைப் பைத்தியம்னு நீங்க நினைக் கிறீங்களா?"

"மேடம்! நீங்க இப்போ சொல்றதை நான் அப்போதே ஊகிச்சாச்சு! நீங்களும் விவரமா இப்போ சொன்னீங்க. உடனே ஊர்ஜிதமாயிடுச்சு! அவருக்கு மருந்து கொடுத்து தற்காலிகமாகப் பேச்சைப் பேதலிக்க வச்சுட்டாங்க!"

"ஏன் அப்படி செஞ்சாரு?"

"சொந்தத் தம்பியை எனக்காகப் பழிவாங்கிட்டார்!"

"கடைசியா கொன்னுட்டார் இல்லே?" என்றான், வினோத்.

"ஆமா சார்! கொன்னிருக்கணும்! சுதாகரின் உறுப்புகளை விற்கிறதுக்காக அவரைக் கொன்னிருக்கணும்! சுதாகருக்கு அபூர்வ ரத்த வகை! அதனாலே யாருக்காகவோ சுதாகரைக் கொன்னிருக்கணும். எங்கள் பழைய உறவைத் தாங்கமுடியாமல் அவர் அப்படிச் செஞ்சிருக்கணும்! இப்போ தெரிஞ்சுபோச்சு! சுதாகரைக் கொன்னவர் அவர்தான்! அல்லது கொல்ல சம்மதம் கொடுத்து ஏற்பாடு பண்ணினவர் அவர்தான்!" அகிலாவின் கண்களில் நீர் உருண்டது.

சிறிது நேரம் மயான நிசப்தம்!

அகிலா கண்களில் வெள்ளம்தான்!

பிரளய வெள்ளம் போல் தளும்பிக் கொண்டே இருந்தது.

ரதியின் மனசு தவித்தது.

ஒரு பரிசுத்தமான பெண்மை எவ்வளவு கஷ்டப் படுகிறது?

“மேடம்! உங்களுக்குப் பாதுகாப்பு வேணும்னா தர்றோம்” என்றாள், ரதிபிரியா.

“பாதுகாப்பா? எதுக்கு?”

“வேண்டாமா?”

மேலே சூனியமாய் அவள் பார்த்தாள்.

“வேண்டாம்! என் வாழ்க்கை முடிஞ்சா இனிமே என்ன கவலை? வாழுறதுக்கு இனி என்ன இருக்கு?”

“அப்படிச் சொல்லாதீங்க அகிலா! வாழ்க்கை தானா முடிஞ்சா பரவாயில்லை! இன்னொருத்தர் அதை முடிக்கக் கூடாது.”

அகிலா மெல்ல திரும்பினாள்.

“அப்படி யாரும் முடிக்கவிடாம பாதுகாப்பு கொடுக்கிறோம்” என்று தொடர்ந்தாள், ரதிபிரியா.

திரும்பி ஒரு விரக்திச் சிரிப்பு!

“நீங்க சொல்ற மாதிரி என் கணவர் என்னை சுலபமாகக் கொன்னுடமாட்டார்! என் சாவிலேயும் லாபம் சம்பாதிக்கப் பார்ப்பார்! என்னை ஒரு மனநோயாளின்னு சொல்லி ஆஸ்பத்திரியிலே தள்ளுவார்! அவங்களும் நோயாளிதான்னு உறுதிப்படுத்துவாங்க! ஆஸ்பத்திரியிலே வச்சு. . . என் ரத்தம், உறுப்புகளை எடுத்து விற்பார்.”

"அதை நிறுத்த வேண்டாமா?"

அகிலா விக்கித்துப் பார்த்தாள்.

"உங்க கணவரும் சரி, அந்த ஆஸ்பத்திரியை நடத்து றவங்களும் சரி, தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தானே?"

கேள்வி அந்தரத்திலேயே நின்றது.

பதில் இல்லை.

ரதிபிரியா எழுந்தாள்.

"வர்றோம் அகிலா! நாங்க உங்களை இழக்கத் தயாரில்லை."

அகிலாவின் வெறித்த பார்வைதான் அவர்கள் மீது விழுந்தது.

❖ ❖ ❖

இரவு வரை அந்த வட்டாரத்தில் வினோத்தும், ரதிபிரியாவும் காத்திருந்தார்கள்.

ராமநாதன் வரவில்லை.

இரவு இரண்டு மணிக்கு அவர்கள் அகிலாவின் வீட்டை நெருங்கியபோது திடுக்கிடும் திகில் காட்சி கண்ணில்பட்டது.

29

துப்பாக்கி பேசியது!

அகிலாவின் கணவர் ராமநாதன் அந்த வழியாகத் தான் வருவார் என்று வினோத்தும் ரதிபிரியாவும் இரவு இரண்டு மணிவரை காத்திருந்தார்கள்.

ஆனால், வரவே இல்லை.

எனவே, இருவரும் அகிலாவின் வீட்டை நெருங்கிப் பார்க்க, அங்கே தெரிந்த காட்சியைக் கண்டு திடுக் கிட்டார்கள்.

வீடு முழு வெளிச்சத்தில் இருந்தது. ஜன்னல் கண்ணாடிகள் பளிச்சிட்டன.

ராமநாதன் திரும்பிவிட்டாரா?

எப்படித் திரும்பி இருப்பார்?

வேறு வழி கிடையாதே? அவர்கள் நின்ற இடத்தின் வழியாகத்தானே போக முடியும்?

"அதோ. . ." என்று மெல்ல ரதிபிரியா சுட்டினாள். வீட்டுக்கு அப்பால் கண்ணாடி ஏற்றப்பட்ட கார் ஒன்று அடக்கமாக நின்றது.

"இந்தக் கார் பதினைந்து நிமிடத்துக்குமுன் வந்துச்சே! இதில்தான் ராமநாதன் வந்திருக்கார்! நாம் கோட்டை விட்டுட்டோம்" என்றாள், ரதிபிரியா.

வீட்டை அணுகியபோது சத்தங்கள் கேட்டன.

ஓடுவதும் சாடுவதுமான சத்தங்கள்!

இடையிடையே ஏதாவது விழுந்து ஓசைப்படுத்தும் சத்தம்!

உள்ளே என்ன நடக்கிறது?

இருவரும் பரபரப்பு அடைய, வினோத் ஜன்னல் வழியே உள்ளே பார்க்க முயன்றான்.

ஆனால், ஜன்னலின் கீழ்ப் பாதி 'சிக்'கென அடைத்திருக்க, மேல்பாதி எட்டாத உயரத்தில் இருந்தது.

என்ன செய்ய?

"வினோத் மன்னிச்சிடுங்க! உங்க தோள் மேலே ஏறி நான் பார்க்கிறேன்" என்றாள், ரதிபிரியா.

வினோத் அவளைத் தோளில் ஏற்றிக்கொள்ள, மேல் பாதி ஜன்னல் வழியே, ரதி மெல்ல தலை தூக்கிப் பார்த்தாள்.

உள்ளே கண்ட காட்சி, அவளை உறைத்திருக்க வேண்டும் என்பது வினோத்தின் தலையை அவள் அழுத்திப் பிடிப்பதிலிருந்து தெரிந்தது.

வினோத் அவசரமாக அவளைக் கீழே இறக்கினான்.

"வினோத்! உள்ளே ராமநாதன், அகிலாவைத் துரத்துகிறான்! கையிலே ஒரு ஊசி வச்சிருக்கான்!" என்று பரபரத்தாள்.

செய்தியின் சூடு வினோத்தைப் பற்றியது.

"நான் போய்க் கதவைத் தட்டி. . ." என்று வினோத் முன்னங்காலை எடுத்து வைக்க,

ரதிபிரியா அவனைப் பிடித்து இழுத்தாள்.

"போகாதீங்க! உள்ளே இன்னொரு ஆள் இருக்கணும்!" என்றாள்.

"ஓ. . ." என்று சொல்லி வினோத் நிற்க,

'தடால்' என்று உள்ளே சத்தம்.

வினோத்துக்கு நிற்க முடியவில்லை. தலைசுற்றும் பரபரப்பு.

வாய்க்குள் தன் இரு விரல்களைச் செலுத்தினான்.

'உய்ய்' என்று விசில் சத்தம் உண்டாக்கினான்.

மீண்டும் இரண்டுமுறை 'உய்ய். . . உய்ய்' என அடித்தான்.

பிறகு அவனும் ரதிபிரியாவும் பதுங்கி நின்றுகொள்ள, அகிலா வீட்டுக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

வெளியே கனத்த மண்டையுடன் ஒருவன் வந்தான். இருபுறமும் எட்டிப் பார்த்தான்.

அவன் பார்க்கும் வேகத்தில் யாரைப் பார்த்தாலும் பிடித்து, நொறுக்கிவிடுவான் போலிருந்தது. முகத்தில் அத்தனை அலட்சியமும் கோபமும் இருந்தன.

ரதிபிரியாவின் சுவாசம் நின்றது.

"இவன்கிரி இல்லையே?" கேட்டாள், அவள்.

"இல்லை! ஆஸ்பத்திரியில் வேலை செய்யிற ஆள்!"

"பார்த்த மாதிரி இருக்கே?"

"நம்மை ஒரு தரம் விரட்டி வந்தானே அவன்தான்!"

அந்த ஆள் வேண்டுமென்றே சிறிது நாழிகை நின்றுவிட்டு வீட்டுக்குள் திரும்பினான்.

"வினோத்! அகிலாவுக்கு ஊசிபோட்டு அவளை மயங்க வைக்கப் பார்க்கிறான்! அவள் தப்பிச்சு தப்பிச்சு

ஓடுறா! ஆபத்தான நிலை! போலீசைக் கூப்பிடலாமா?" என்றாள்.

"கூடாது! கிரிக்கு போலீஸ் உடந்தையா இருப்பாங்க!"

"இன்ஸ்பெக்டர் மட்டத்துவரை இருக்கலாம். அதுக்குமேல் நாம் உதவி தேடிப் போகலாம்" என்றாள், ரதிபிரியா.

"முடியாது."

"ஏன் வினோத்? மேஜர் மாணிக்கிட்டே சொல்லி மேல் மட்டத்தைப் பிடிக்கலாமே?"

"இப்போ அதுக்கு நேரமில்லை."

"அப்போ என்ன செய்ய?"

"வா, நாம போய் கைத்துப்பாக்கியை எடுத்திட்டு வரலாம்!"

"நான் இங்கே இருக்கேன் வினோத்!"

"தனியாவா?"

"பரவாயில்லை! நீங்க பத்து நிமிடத்திலே வந்துட மாட்டீங்க?"

வினோத் நீண்ட மூச்சுடன் வண்டியைக் கிளப்பினான்.

பறந்தான்.

ஆபீசில் போய் கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டான்.

வாசலில் வண்டியைக் கிளப்பியபோது அது கிளம்ப வில்லை.

பெட்ரோல் காலி. உடனே போட்டாக வேண்டும். சற்று எட்டத்தில் பங்க் இருந்தது. 'கேன்' ஒன்றை எடுத்துக் கொண்டு விரைந்தான்.

பெட்ரோல் ஊற்றி, வண்டியைக் கிளப்பினான்.

பறந்தடித்து ரதிபிரியா இருப்பிடம் வந்தபோது, அவளைக் காணவில்லை.

❖ ❖ ❖

'ரதிபிரியா என்ன ஆனாள்?'

மரத்தின் பின்னால் அவள் தன்னை மறைத்துக் கொண்டிருந்தாள்.

'லபக்'கென்று யாரோ தூக்குவதை உணர்ந்தாள்.

காலையும், கையையும் காற்றில் உதறினாள்.

தரையில் நின்றால்தானே பலம்!

அந்தரத்தில் தூக்கப்பட்டபோது. . . திணறினாள்.

கத்த முயன்றாள். துணி ஒன்று வாயில் அடைக்கப் பட்டது.

அந்தரத்திலேயே அவள் பயணம் செய்தாள்.

தான் கார் பக்கம் கொண்டு போகப்படுவது தெரிந்தது. அதன் பின்கதவு திறக்கப்பட்டு படுக்க விடப்படுவது புரிந்தது.

அவள் கையை அழுத்திப்பிடித்து 'சுருக்'கென்று ஊசி குத்துவது தெரிந்தது.

சில விநாடிகள்தான். பின்னர் எல்லாம் மறந்து விட்டாள்.

❖ ❖ ❖

வினோத், ரதிபிரியாவைத் தேடினான்.

அதிர்ச்சி அவனை உலுக்கியது.

"ரதிபிரியா. . . ரதிபிரியா. . ."

மரங்களிடையே புகுந்து குரல் கொடுத்துப் பார்த்தான்.

காலில் ஏதோ நெருடியது. எடுத்துப் பார்த்தால் அவள் வைத்திருந்த செல்போன்!

'ஆ! அவளுக்கு ஏதோ நடந்திருக்கிறது! போனைக் கீழே போட்டுவிட்டுப் போயிருக்கிறாள்.'

வினோத் போனை எடுத்து தனது பையில் போட்டான்.

கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டு மெதுவாக அகிலா வீட்டை நோக்கி நடந்தான். இருபது அடி போயிருக்கமாட்டான்.

அகிலா வீட்டு வாசல் கதவு திறக்கப்பட்டது.

ராமநாதனும், அந்த கனத்த தலையனும் ஒரு பெண்ணின் உடலை வெளியே கொண்டு வந்தனர்.

காரின் பின் கதவைத் திறந்தார்கள். அந்த உடலை ஏற்றினார்கள்.

அவள் அகிலாவாக இருக்க வேண்டும். மயக்கமாகி இருக்கிறாள்.

வினோத்தின் பல் இறுகியது.

காரின் பின்கதவை அடைத்துவிட்டு, ராமநாதன் முன்பக்கம் ஏறினார். டிரைவர் இருக்கையில் பின்னவன் ஏறினான்.

கார் சுரீரென்று கிளம்பியது.

வினோத் தலையில் வெப்பம் ஏறியது.

நரம்புகள் கொதித்தன.

இரண்டு தாவலில் காரை நெருங்கி, "நிறுத்து! நிறுத்து!" என்று பலமாய்க் கத்தினான்.

கார் வேகத்தில் வளைவாகத் திரும்பியது.

'படீர்' என்று வினோத்தின் துப்பாக்கி பேசியது.

குண்டு அடிபட்டு காரின் பின்புற டயர் பஞ்சராகி தரையோடு ஒட்டியது.

வினோத், கார் அருகில் சென்று கனத்த தலையனைக் குறி வைத்தான்.

"இந்தா! வெளியே வா! கையைத் தூக்கு!"

அவன் அமைதியோடு வெளியே இறங்கினான்.

"டேய்! நீயும் இறங்கு!" என்றான், வினோத்.

ராமநாதன் பதறிக்கொண்டே மறுபக்கம் இறங்கினார்.

"முதல்லே ரெண்டு பெண்களையும் வெளியே இறக்குங்க!"

"இரண்டு பெண்ணா?" என்றான், கனத்த தலையன்.

"ஆமாண்டா! தெரியாதா? இறக்கு!"

முதலில் அகிலாவை வெளியே இறக்கினார்கள்.

அடுத்து ரதிபிரியாவை இறக்குவதில் நேரம் ஏற்பட்டது.

"ஏய்! ஏன் நேரம்?" என்று அதட்டிக் கொண்டே வினோத் அருகில் போனான்.

"உடம்பு சிக்கிட்டிருக்கு! எடுக்க முடியலை!" என்றான்.

வினோத், கார் கதவு அருகில் போனான்.

மறுகணம் படீர் என்று கதவு அவன் முகத்தில் வந்து அடித்தது.

வினோத்தின் துப்பாக்கி எகிறி விழுந்தது.

அவனும் கீழே தடுமாறி விழ, கனத்த தலையன் ஒரே பாய்ச்சலில் வெளியே பாய்ந்து, வினோத்தை அமுக்கினான்.

இரண்டு மூன்று சாகச வேலைகளை வினோத் செய்ய, கனத்த தலையனும், ராமநாதனும் நெக்குவிடாமல் அவனை அடக்கிப் பிடித்தார்கள்.

'கும் கும்' என்று பல குத்துகள் அவன் மீது விழுந்தன.

வினோத் சோர்ந்து விழுந்தான்.

அவன் போட்ட திட்டங்கள் யாவும் அவனோடு பொடிந்து விழுந்தன.

ஸுபம்

30

போலீஸ் முற்றுகை!

வினோத் அந்தத் திடீர் நிகழ்ச்சிகளை எதிர்பார்க்க வில்லை! செப்படி வித்தைபோல் எவ்வளவு துரிதத்தில் நடந்துவிட்டன!

கையில் உள்ள துப்பாக்கி எகிறிப்போச்சு!

அது விழுந்தது புல், புதர்மண்டிய இடம்தான்! இப்போது அதை நினைத்துப் பயன் என்ன?

கும்கும்கள் முதுகிலும் முகத்திலும்பட்டு அவனைச் சிதறடித்துவிட்டன.

தலைக்குள் வெளிச்சங்கள் வட்டமடித்துப் பறந்தன.

நினைவுகள் கோர்வை இல்லாமல் குழம்பின.

அவன் உடம்பு மேலே தூக்கப்படுவதையும் அகிலா வீட்டுக்குள் எடுத்துச் செல்லப்படுவதையும் உணர்ந்தான்.

அதன்பிறகு நினைவுகள் சில்சில்லாக உடைந்து எல்லாமே இருண்டுவிட்டன.

திரும்பவும் நினைவு வந்தபோது, அகிலா வீட்டிலேயே இருப்பதை உணர்ந்தான்.

கால்கள் தனியாகவும், கைகள் பின்னாலும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன.

'அகப்பட்டோமே' என்று நினைத்தபோது வாசலில் சத்தங்கள் கேட்டன.

"இந்த மாற்று டயரை எடு."

"பெரிய ஸ்பானர் கொடு!"

"நட்டைக் காணலையே. . . கீழே பாரு!"

இந்தச் சத்தங்களிலிருந்து வினோத்துக்கு ஊகம் வந்தது.

பஞ்சராகப்போன டயருக்குப் பதிலாக வேறு டயர் மாற்றுகிறார்கள்.

காரைச் சரி செய்தபிறகு என்ன நடக்கப்போகிறது? ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் தன் நினைவைப் போக்கடித்து. . .

வினோத்துக்குப் பரபரப்பு ஏற்பட்டது. ஏதாவது செய்ய வேண்டும். இல்லாவிடில் ஆபத்தில் போய் முடியும்!

கையும் காலும் கட்டப்பட்டிருக்கும்போது என்ன செய்யமுடியும்?

திடீரென்று பாக்கெட்டில் இருக்கும் செல்போன் நினைவு வந்தது.

அதை வெளியில் தள்ள முடியுமா?

ஒரு வேகம் எகிற, கட்டிய கால்களைச் சேர்த்து மேலே தூக்கினான்.

தரையில் அப்படியும் இப்படியும் நகர்ந்து உடலை நெளித்து போனை வெளியே தள்ளப் பார்த்தான். வியர்வை ஒழுக பலமுறை செய்தபின் அதுநகர்ந்து வெளியே எட்டிப் பார்த்தது.

இன்னும் சில அசாத்திய பிரயாசைகள்.

'டொக்' என்று கீழே விழுந்தது.

அடுத்தது அதை இயக்குவது எப்படி? பட்டன்களை அமுக்க வேண்டுமே?

முயற்சி செய்து பார்த்தான். பட்டன் எதுவும் மசியவில்லை.

திரும்பவும் யோசனை. சட்டைப் பையில் உள்ள பேனா நினைவுக்கு வந்தது.

முயற்சிகள் செய்ய, அதுவும் கீழே விழுந்தது.

அதைக் கொண்டு எண்களை அழுத்த முடியுமா?

கைகளைப் பின்னால கட்டி இருக்கிறார்களே. . .

அப்படி அழுத்த முடிந்தால் ஒரு செய்தி அனுப்பி விடலாம்! சில சின்ன வரிகளைக் கொண்ட செய்தி! முடியுமா?

❖ ❖ ❖

கார் சித்தமாகிவிட்டது. மாற்று டயரைப் பொருத்திவிட்டார்கள்.

ராமநாதன் அங்கும் இங்கும் பார்த்தார். முகம் கலங்கிக் கிடந்தது.

"என்ன ராமநாதன். . . என்ன யோசனை?" ஒரு குரல் காரமாகக் கேட்டது.

"எதையோ மனசு நினைக்குது. . ." என்று இழுத்தார், ராமநாதன்.

"ஊசி போட்டுட்டீங்க இல்லே?"

"போட்டாச்சு!"

"அப்போ ஆள் 24 மணி நேரம் மயக்கமாகத்தான் கிடப்பான்! தூக்கிடலாம்!"

"தூக்கி எங்கே கொண்டுபோறோம்?"

"ஆஸ்பத்திரிக்கு!"

"பிரச்சினை வரும். . ."

"எப்படி?"

"இவன் துப்பறியும் நிறுவனத்தைச் சேர்ந்தவன்!"

"ஏன் கவலைப்படுறீங்க? ஊட்டியோ கொடைக்கானலோ இருக்கு! கொண்டுபோய்க் கீழே தள்ளிட்டு வந்துடலாம்!"

ராமநாதனிடம் பேச்சே இல்லை. முகத்தில் குழப்பம் கொந்தளித்தது.

"ம். . . வேலையைப் பாருங்க! நேரமாகுது! கார் இங்கே ரொம்ப நேரம் நின்னா, யாரேனும் சந்தேகப்படலாம்."

"ஒரு விசயம் கேளுங்க! ஊசி போடும்போது போதிய மருந்து இல்லே!"

"ஐயோ. . ." பெரிய குரல் எகிறி வந்தது.

"ஒருத்தருக்குத்தான் எடுத்திட்டு வந்தோம்! அதை மூணு பேருக்குப் போட வச்சுட்டீங்க!"

"மருந்து வேலை செய்யுமா, செய்யாதா?"

"செய்யும்! ஆனா மயக்கம் 24 மணிநேரம் இருக்காது! சீக்கிரமே நாம காரியத்தில் இறங்கணும்!"

"சரி வாங்க! ஆளைத் தூக்கிட்டு ஆஸ்பத்திரிக்குப் போவோம். தலைவர் ஏதாவது செய்யட்டும்!"

பெரிய உருவம் உள்ளே போக, ராமநாதன் பின்பற்றினார்.

கூடத்தில் வினோத் வாய் திறந்து கிடந்தான். அவன் மூச்சு இழுத்துக் கொண்டிருந்தது.

"இதென்ன செல்போன்?" வஸ்தாது குரலும் கண்ணும் விரிந்தன.

"அவனோட செல்போன்! அதான் என் கவலை. . ."

வஸ்தாது நறுக்காக நடந்து வினோத் அருகில் போய் கைகளைப் பார்த்தான். அவை பின்புறம் கட்டப் பட்டிருந்தன. கயிறு கட்டியதில் விரல்களும் சேர்ந்து அழுந்தி இருந்தன.

"பூ! இவ்வளவுதானா? போன்லே அவனாலே பேசி யிருக்க முடியாது! வாங்க வாங்க! ஆளைத் தூக்கிடலாம்!"

இரவு மூன்று மணிக்கு கார் கிளம்பி ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தது.

❖ ❖ ❖

வினோத், கருமையின் ஆழத்திலிருந்து மெள்ள மெள்ள மேலே நோக்கி நீந்தினான்.

இடை இடையே அந்திபோல் மந்த வெளிச்சங்கள் வந்துபோயின.

"நான் வினோத்" என்ற உணர்வு உள்ளே எழுந்ததும் விறுவிறு என்று நினைவோட்டம் ஏவுகணை வேகத்தில் எகிறியது.

இருள், சுருள் சுருளாக ஒதுங்கியது.

எங்கே இருக்கிறோம்?

ஆஸ்பத்திரி வாடை அதை அடையாளம் சொல்லியது!

கையும் காலும் தளர்ந்துகிடந்தன. இப்போது கயிற்றுக்கட்டை நீக்கிவிட்டார்கள் என்று தெரிந்தது.

ஆஸ்பத்திரிச் சத்தங்கள் ஏதோ கேட்டுக் கொண்டிருக்க, கதவு திறக்கப்படுவது தெரிந்தது. வினோத் கண்களை மூடினான்.

கிரியும் ராமநாதனும் பேசியபடி அவனருகில் வந்தனர்.

"இன்னும் மயக்கத்திலேதான் இருக்கான்!" என்று கிரியின் கனத்த குரல் கேட்டது.

வினோத்தின் மனசு தனது அதிருஷ்டத்தை நினைத்தது. அவனுக்கு ஊசி போடும்போது ராமநாதன், 'அட கஷ்டமே! மருந்து கொஞ்சமா இருக்கே' என்று வெளிப்படையாகக் கூறியது நினைவுக்கு வந்தது. அதனால் தான் அவன் மயக்கம் சீக்கிரம் முடிந்து நினைவு வந்துவிட்டது.

கிரி பேசினார்.

"மனம் மாறாதீங்க ராமநாதன்! போலீஸ் நம்ம கையிலே! கொடைக்கானல்கூடப் போக வேண்டாம். சாராயம் காய்ச்சுற ஒரு பாழாப்போன பங்களா ஐம்பது மைல் தூரத்தில் இருக்கு! அங்கே நான் கொண்டு போறேன்!"

ராமநாதனிடம் பதில் இல்லை.

"யோசனை வேண்டாம். கிளம்புங்க ராமநாதன்!"

❖ ❖ ❖

வாகனம் புறப்பட்டு ஓடியது. வினோத் டிக்கியில் திணிக்கப்பட்டிருந்தான்.

மனம் வெதும்பியது. அவன் பிழைக்கும் சாத்தியங்கள் குறைவாகிவந்தன.

அவன் செல்போன் செய்தி போனதா? இல்லையா?

அகிலா வீட்டுக்குள் கிடந்தபோது, சட்டையிலிருந்து நெகிழ்த்தி வெளித்தள்ளியது நினைவு இருக்கிறது.

பிறகு பேனாவை கால்விரலில் கவ்வி, செல்போனில் சுருக்கச் செய்தி அனுப்பியது எவ்வளவு பெரிய சாமர்த்திய வெற்றி!

"ஆபத்து. . . அகிலா வீட்டுக்கு வா!" என்று செய்தி.

அவன் அனுப்பிய அந்த செய்தியை இரவிலேயே தாரா எடுத்துப் பார்க்க வேண்டுமே!

உடனே அவள் மேஜர் மாணிக்கிடம் சொல்லியிருக்க வேண்டுமே. ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை?

ஒருவேளை அகிலா வீட்டிலேயே தேடிக்கொண்டு நிற்பார்களோ? அல்லது ஆஸ்பத்திரிக்குப் போய்த் தேடுகிறார்களோ?

வினோத்தின் நினைவுகள் ஓடி ஓடி மாய்ந்து விழுந்தன.

வாகனம் ஓடியது.

பாழடைந்த கட்டிடத்தில் கிடங்குகள் பல இருப்பது அவனுக்குத் தெரியும்.

அதில் தள்ளி பல கொலைகள் நடந்துள்ளன. அதில் அவனையும் தள்ளப் போகிறார்களோ?

கடவுளே. . . இன்னும் எனக்கு உதவி வரவில்லையே!

வாகனம் ஓட, நேரமும் ஓட, அவனது நினைவுகள் துக்கம் தாளாமல் ஒடுங்கத் தொடங்கின.

இரண்டு மணிநேரம் ஓடியிருக்கும். டிக்கி வெப்பமாகி, வியர்வை வழிந்தது. மூச்சு திணறியது.

நம்பிக்கைகள் குறைந்து கொண்டேவர, கண்களை மூடினான்.

மனம் ஒரு அழற்சியில் இருக்க, வாகனம் நின்றது!

டிக்கி திறக்கப்பட்டு வெளிச்சங்கள் கண்களை மறைத்தன.

"தூக்கு! உடனே காற்றோட்டமா வை. டாக்டர் வந்திருக்காரா?"

குரலைக் கேட்டு வினோத் திடுக்கிட்டான்.

யார் மேஜர் மாணிக்கா? அவரா வந்திருக்கிறார்?

புலன்கள் சுரீரென்று எழுந்தன.

ஆமாம்! மேஜர் மாணிக் வந்திருந்தார்.

ஒரு போலீஸ் பட்டாளமே வேனை மறித்துக் கொண்டு சாலையில் நின்றது.

கிரியும், ராமநாதனும் பிடிக்கப்பட்டார்கள்.

வாகனம், பூரண சோதனை செய்யப்பட்டது!

ரதிபிரியா வேனில் அடித்தளத்திலிருந்து விடுவிக்கப் பட்டாள்.

ஒரு உலகளாவிய மோசடி வெளிக்கொண்டு வரப்பட்டது.

கிரியும், ராமநாதனும், சில துணைகளும் சேர்ந்து சிறுநீரகம், கண் என மனித உறுப்புகளை வெளிநாட்டுக்கு அனுப்புவது அம்பலமாகியது. அவர்கள் சிறைக்குள் அடைக்கப்பட்டார்கள்.

❖ ❖

மறுநாள் பத்திரிகைகள் வீரிட்டுச் செய்திகளைப் பரப்ப, நாடே விழித்து எழுந்து இந்த ஏற்றுமதிச் சதியைப் பார்த்தது. . . அதிர்ந்தது.

வினோத்தையும், ரதிபிரியாவையும் பாராட்டினர். மேஜர் மாணிக், பதக்கம் அணிவித்தார்.

சீக்கிரம் அகிலா சிகிச்சை பெற்று வீடு திரும்புவாள்.

எல்லாம் சுபமாக முடியும் நிலையில் வினோத்தும், ரதிபிரியாவும் இனி எப்போதும் ஒன்றாகவேதானே இருப்பார்கள்.